செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–2

குறியிடம்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி 2

குறியிடம்

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com

கிளைகள்

திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-769-6 (Vol-2)

தனிப்பிரதி விலை ரூ. 450/-
(தொகுதி–2)

மொத்த விலை ரூ. 7200/-
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் xi

மதிப்புரை xvi

பதிப்புரை xvii

அகத்திணை xix

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 18	நீர்நிறம்	கபிலர்	215
அகநானூறு 30	நெடுங்கயிறு	முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்	14
அகநானூறு 58	இன்இசை	மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார்	189
அகநானூறு 62	அயத்துவளர்	பரணர்	252
அகநானூறு 68	அன்னாய்	ஊட்டியார்	133
அகநானூறு 80	கொடுந்தாள்	மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்	218
அகநானூறு 90	மூத்தோர்	மதுரை மருதனிளநாகனார்	41
அகநானூறு 120	நெடுவேள்	நக்கீரனார்	99
அகநானூறு 142	இலமலர்	பரணர்	145
அகநானூறு 148	பனைத்திரள்	பரணர்	116
அகநானூறு 152	நெஞ்சு	பரணர்	164
அகநானூறு 162	கொளக்குறை	பரணர்	149
அகநானூறு 182	பூங்கண்	கபிலர்	221
அகநானூறு 192	மதிஇருப்பு	பொதும்பில் கிழான் வெண்கண்ணனார்	233
அகநானூறு 198	கூறுவம்	பரணர்	152
அகநானூறு 208	யாம	பரணர்	155

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 212	தாஇல்	பரணர்	266
அகநானூறு 220	ஊரும்	மதுரை மருதனிளநாகனார்	237
அகநானூறு 238	மான்றமை	கபிலர்	176
அகநானூறு 240	செவ்வீ	எழுஉப்பன்றி நாகன் குமரனார்	224
அகநானூறு 258	நன்னன்	பரணர்	263
அகநானூறு 262	முதைபடு	பரணர்	159
அகநானூறு 280	பொன்அடர்ந்	அம்மூவனார்	162
அகநானூறு 298	பயம்கெழு	மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார்	168
அகநானூறு 300	நாள்வலை	உலோச்சனார்	102
அகநானூறு 308	உழுவையொடு	பிசிராந்தையார்	227
அகநானூறு 322	வயங்குவெயில்	பரணர்	258
அகநானூறு 338	குன்றுஓங்கு	மதுரைக் கணக்காயனார்	272
அகநானூறு 340	பல்நாள்	நக்கீரர்	105
அகநானூறு 342	ஒறுப்ப	மதுரைக் கணக்காயனார்	269
அகநானூறு 350	கழியே	சேந்தன் கண்ணனார்	109
அகநானூறு 360	பல்பூந்	மதுரைக் கண்ணத்தனார்	125
அகநானூறு 372	அருந்தெறல்	பரணர்	260
ஐங்குறுநூறு 60	பழனக்	ஓரம்போகியார்	188

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 206	அன்னாய்	கபிலர்	129
ஐங்குறுநூறு 207	அன்னாய்	கபிலர்	38
ஐங்குறுநூறு 237	காமம்	கபிலர்	251
ஐங்குறுநூறு 279	கல்இவர்	கபிலர்	51
ஐங்குறுநூறு 281	வெள்ள	கபிலர்	3
ஐங்குறுநூறு 282	சாரல்	கபிலர்	181
ஐங்குறுநூறு 288	நன்றே	கபிலர்	214
ஐங்குறுநூறு 290	அறம்புரி	கபிலர்	211
ஐங்குறுநூறு 293	சிலம்புகமழ்	கபிலர்	22
ஐங்குறுநூறு 296	கொடிச்சி	கபிலர்	196
ஐந்திணை எழுபது 60	மணிநிற	மூவாதியார்	139
ஐந்திணை எழுபது 61	கண்திரள்	மூவாதியார்	19
ஐந்திணை எழுபது 67	இவர்திரை	மூவாதியார்	17
ஐந்திணை ஐம்பது 41	தெண்கடல்	மாறன் பொறையனார்	249
கலித்தொகை 49	கொடுவரி	கபிலர்	229
கலித்தொகை 50	வாங்குகோல்	கபிலர்	275
கலித்தொகை 51	சுடர்த்தொடீஇ	கபிலர்	81
குறுந்தொகை 29	நல்உரை	ஔவையார்	241
குறுந்தொகை 42	காமம்	கபிலர்	58
குறுந்தொகை 47	கருங்கால்	நெடுவெண்ணிலவினார்	184
குறுந்தொகை 69	கருங்கண்	கடுந்தோட் கரவீரன்	59

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 73	மகிழ்நன்	பரணர்	235
குறுந்தொகை 74	விட்ட	விட்டகுதிரையார்	6
குறுந்தொகை 88	ஒலிவெள்	மதுரைக் கதக்கண்ணனார்	112
குறுந்தொகை 113	ஊர்க்கும்	மாதிரத்தன்	39
குறுந்தொகை 114	நெய்தல்	பொன்னாகன்	13
குறுந்தொகை 120	இல்லோன்	பரணர்	255
குறுந்தொகை 121	மெய்யோ,	கபிலர்	246
குறுந்தொகை 128	குணகடல்	பரணர்	256
குறுந்தொகை 150	சேணோன்	மாடலூர் கிழார்	115
குறுந்தொகை 153	குன்றக்	கபிலர்	200
குறுந்தொகை 177	கடல்பாடு	உலோச்சனார்	128
குறுந்தொகை 185	நுதல்பசப்பு	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	179
குறுந்தொகை 198	யாஅம்	கபிலர்	207
குறுந்தொகை 227	பூண்வனைந்	ஓதஞானி	248
குறுந்தொகை 294	கடல்உடன்	அஞ்சில் ஆந்தையார்	43
குறுந்தொகை 312	இரண்டுஅறி	கபிலர்	243
குறுந்தொகை 335	நிரைவளை	இருந்தையூர்க் கொற்றன் புலவன்	49
குறுந்தொகை 336	செறுவர்க்கு	குன்றியனார்	52
குறுந்தொகை 340	காமம்	அம்மூவனார்	113

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 345	இழைஅணிந்து	அண்டர் மகன் குறுவழுதி	97
குறுந்தொகை 346	நாகுபிடி	வாயில் இளங்கண்ணன்	77
குறுந்தொகை 355	பெயல்கண்	கபிலர்	182
கைந்நிலை 10	பொன்இணர்	புல்லங்காடனார்	171
கைந்நிலை 11	எறிகிளர்	புல்லங்காடனார்	204
கைந்நிலை 12	நாக	புல்லங்காடனார்	72
கைந்நிலை 57	கொடுவாய்ப்	புல்லங்காடனார்	122
சிலப்பதிகாரம், கானல்வரி 20	பவள	இளங்கோவடிகள்	25
சிலப்பதிகாரம், கானல்வரி 21	புன்னை	இளங்கோவடிகள்	24
சிலப்பதிகாரம், கானல்வரி 22	கள்வாய்	இளங்கோவடிகள்	23
திணைமாலை நூற்றைம்பது 6	மால்நீலம்	கணிமேதாவியார்	61
திணைமாலை நூற்றைம்பது 7	கறிவளர்பூஞ்	கணிமேதாவியார்	62
திணைமாலை நூற்றைம்பது 10	கருவிரல்	கணிமேதாவியார்	198
திணைமாலை நூற்றைம்பது 11	கரவில்	கணிமேதாவியார்	196
திணைமாலை நூற்றைம்பது 13	ஒருவரைபோல்	கணிமேதாவியார்	63

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமாலை நூற்றைம்பது 22	கொல்யானை	கணிமேதாவியார்	4
திணைமாலை நூற்றைம்பது 29	பலாஎழுந்த	கணிமேதாவியர்	8
திணைமாலை நூற்றைம்பது 44	கடும்புலால்	கணிமேதாவியார்	12
திணைமாலை நூற்றைம்பது 48	திரைமேல்போந்(து)	கணிமேதாவியார்	64
திணைமாலை நூற்றைம்பது 49	ளங்கு	கணிமேதாவியார்	65
திணைமாலை நூற்றைம்பது 51	கடும்புலால்	கணிமேதாவியார்	9
திணைமாலை நூற்றைம்பது 56	கடற்கானல்	கணிமேதாவியார்	120
திணைமாலை நூற்றைம்பது 58	மாயவனும்	கணிமேதாவியார்	10
திணைமாலை நூற்றைம்பது 61	அறி(கு)அரிது	கணிமேதாவியார்	66
திணைமொழி ஐம்பது 1	புகழ்மிகு	கண்ணஞ்சேந்தனார்	175
திணைமொழி ஐம்பது 4	ஏனல்	கண்ணஞ்சேந்தனார்	91
திணைமொழி ஐம்பது 9	பிணிநிறம்	கண்ணஞ்சேந்தனார்	90
திணைமொழி ஐம்பது 40	ஆம்பல்	கண்ணஞ்சேந்தனார்	123

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமொழி ஐம்பது 48	கறங்கு	கண்ணஞ்சேந்தனார்	73
திருக்குறள் 1115	அனிச்சப்பூக்	திருவள்ளுவர்	27
திருக்குறள் 1116	மதியும்	திருவள்ளுவர்	140
திருக்குறள் 1117	அறுவாய்	திருவள்ளுவர்	141
திருக்குறள் 1118	மாதர்	திருவள்ளுவர்	142
திருக்குறள் 1119	மலர்அன்ன	திருவள்ளுவர்	143
திருக்குறள் 1124	வாழ்தல்	திருவள்ளுவர்	26
நற்றிணை 6	நீர்வளர்	பரணர்	131
நற்றிணை 49	படுதிரை	நெய்தல் தத்தனார்	75
நற்றிணை 58	பெருமுது	முதுகூத்தனார்	78
நற்றிணை 82	நோயும்	அம்மள்ளனார்	136
நற்றிணை 85	ஆய்மலர்	நல்விளக்கனார்	186
நற்றிணை 102	கொடுங்குரல்	செம்பியனார்	212
நற்றிணை 104	பூம்பொறி	பேரிசாத்தனார்	201
நற்றிணை 156	நீயே	கண்ணங்கொற்றனார்	209
நற்றிணை 168	சுரும்புஉண	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	54
நற்றிணை 187	நெய்தல்	ஒளவையார்	29
நற்றிணை 192	குருதி	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	205
நற்றிணை 215	குணகடல்	மதுரைச் சுள்ளம்போதனார்	83

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 232	சிறுகண்	முதுவெங்கண்ணனார்	86
நற்றிணை 254	வண்டல்	உலோச்சனார்	93
நற்றிணை 276	கோடு	தொல்கபிலர்	88
நற்றிணை 287	விசும்புஉறழ்	உலோச்சனார்	45
நற்றிணை 292	நெடுங்கண்	நல்வேட்டனார்	56
நற்றிணை 307	கவர்பரி	அம்மூவனார்	20
நற்றிணை 319	ஓதமும்	வினைத்தொழில் சோகீரனார்	47
நற்றிணை 323	ஓங்கித்	வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்	118
நற்றிணை 331	உவர்விளை	உலோச்சனார்	95
நற்றிணை 334	கருவிரல்	ஐயூர் முடவனார்	68
நற்றிணை 336	பிணர்ச்சுவல்	கபிலர்	172
நற்றிணை 353	ஆள்இல்	கபிலர்	192
நற்றிணை 363	கண்டல்	உலோச்சனார்	31
நற்றிணை 383	கல்அயல்	கோளியூர் கிழார் மகனார் செழியனார்	194
நற்றிணை 389	வேங்கை	காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்	35
நற்றிணை 392	கடுஞ்சுறா	மதுரை மருதனிளநாகனார்	70
நற்றிணை 398	உருகெழு	உலோச்சனார்	33

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்



மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முபன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, "பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று" மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத் துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லு வதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்து களையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத் திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்பு களுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத் திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கி யுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஓவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளுறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது 'குறையிரத்தல்' எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல் களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத் தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித் திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலி யிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்" என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

குறியிடம்

பக்கம் 2 முதல் பக்கம் 278 வரை

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத் தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் கனவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு.)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்கு மிடம் 'இரவுக்குறி' எனப்படும்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்து விடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 281 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஆயத்தோடு விளையாட்டு விருப்பினால் பொழிலகம் புகுந்த தலைமகளை எதிர்ப்பட்டு ஒழுகுகின்ற தலைமகன், அவள் புனங்காவற்கு உரியளாய் நின்றது கண்டு, மகிழ்ந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் தோழியருடன் பொழிலில் விளையாடச் சென்ற தலைவியை எதிர்ப் பட்டு மகிழ்ந்திருந்த தலைவன், பின்பொரு நாள் அவள் தினைப்புனத் திடத்தே நிற்றலைக் கண்டு தலைவன் மகிழ்ந்து சொல்லியது.

வெள்ள வரம்பின் ஊழி போகியும்
கிள்ளை வாழிய, பலவே – ஒள்இழை
இரும் பல் கூந்தற் கொடிச்சி
பெருந்தோள் காவல் காட்டி யவ்வே.

தெளிவுரை

ஒளி பொருந்திய அணிகலன்களைப் பூண்டவளும் இருண்ட அடர்த்தியான கூந்தலைக் கொண்டவளுமான என் கொடிச்சி (தலைவி)யின் பருத்த தோள்களுக்குத் தினைப்புனங் காவலைத் தந்த கிளிகள், வெள்ளம் என்னும் பேரளவிலான ஊழிகள் பல கழிந்த பின்பும் வாழ்வனவாக!

கருத்து

என் தலைவியின் தோள்களைத் தழுவுவதற்கான வாய்ப்பினை உண்டாக்கியுள்ள கிளிகள் பன்னெடுங்காலம் வாழ்வனவாக!

விளக்கம்

தலைவியைக் கண்டு அளவளாவி மகிழ்தற்கு உதவினமையின், தன் நன்றிப் பெருக்கு வெளிப்படத் தலைவன் கிளியை வாழ்த் தினான்.

குறிப்பு

தலைவி தினைப்புனங் காவலுக்கு வந்துள்ளாள். தோழியை இரந்துபின் நின்று தலைவியைக் கூட ஏற்ற இடம் பெற்றுத்தர வேண்டிக்கொள்ள வேண்டும் என்று தலைவன் கருதுகிறான்.

சொற்பொருள்

1. வெள்ளம் - நூறாயிரம் பேரெண்ணுக்கு மேற்பட்டது - தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பன பேரெண்கள்; வரம்பு - எல்லை; ஊழி - நெடுங்காலம், யுகம்; போகியும் - கழிந்த பின்னும்.
2. கிள்ளை - கிளி; ஒள்இழை - ஒளி பொருந்திய அணிகலன்கள்.
3. இரும்பல் - இருண்ட அடர்த்தியான; கொடிச்சி - குறிஞ்சி நிலப் பெண், குறப்பெண் (தலைவி).
4. காவல் - (தினைப்புனங்) காவல்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 22 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் தலைமகள் குறிப்பின்றிச் சார்கிலாத தலைமகன் தன தாற்றாமை சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் கூடுதற்குத் தலைவியின் அனுமதியைப் பெற இயலாத தலைவன் தன் துன்பத்தைக் கூறியது.

கொல்யானை வெண்மருப்பும் கொல்வல் புலிஅதளும்
நல்யானை நின்ஐயர் கூட்டுண்டு – செல்வார்தாம்
ஓரம்பி னால்எய்து போக்குவர்,யான் போகாமல்
ஈரம்பி னால்எய்தாய் இன்று.

தெளிவுரை

"நல்ல யானையைப் போன்ற உன் அண்ணன்மார், கொல்லும் தன்மை கொண்ட யானையின் வெண்மையான கொம்புகளையும்,

கொல்லுதலில் வல்லமை கொண்ட புலியின் தோலையும் திறையாகப் பெற்றுச் செல்லும் இயல்பினர். அவர்கள் இத் தினைப்புனத்தில் வருகின்ற பிறரை ஓர் அம்பினால் தாக்கி ஒழிப்பர். ஆனால், நீயோ நான் இவ்விடத்தைவிட்டு நீங்காம லிருக்கும்படி, இப்போது உன் கண்களாகிய இரு அம்புகளால் தாக்கிவிட்டாய்" என்று தலைவன் தனதாற்றாமையைக் கூறினான்.

கருத்து

உன் தமையன்மார் இத்தினைப்புனத்திற்கு வருவாரை ஓர் அம்பினால் தாக்கி அழிப்பர்; நீயோ என்னை உன் கண்களாகிய இரண்டம்புகளால் தாக்கிவிட்டாய்.

குறிப்பு

'தலைவி தன் பார்வையால் என்னை இங்கிருக்கச் செய்கிறாள். ஆனால், அவளை இன்னும் கூடி மகிழ்ந்திட இயலவில்லையே' என்ற வருத்தத்தைக் கூறித் தலைவன் அவளைக் கூடுதற்கான குறியிடம் அறிவிக்க வேண்டுகிறான்.

சொற்பொருள்

1. மருப்பு - கொம்பு, தந்தம்; கொல்வல் - கொல்லும் வலிமையைக் கொண்ட; புலி அதள் - புலியின் தோல்.
2. நல் யானை - நல்ல யானையைப் போன்ற; நின் ஐயர் - உன் தமையன்மார்; கூட்டுண்டு - திறையாகக்கொண்டு; செல்வார் - நடப்பார்.
3. ஓர் அம்பினால் - ஓர் அம்பினாலே; எய்து - தாக்கி; போக்குவர் - ஒழிப்பர்; போகாமல் - (நான் இவ்விடத்தை விட்டு) நீங்காம லிருக்கும்படி.
4. ஈர்அம்பினால் - இரு அம்புகளால் (கண்களால்); எய்தாய் - தாக்கினாய்.

தோழி கூற்று

குறுந்தொகை 74 **விட்டகுதிரையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகன் குறை மறாதவாற்றால் கூறியது. (தலைவன் தலைவியைச் சந்திக்க விரும்புவதை மறுக்காதபடி தோழி தலைவியிடம் கூறியது.)

கூற்று விளக்கம்

தலைவன் குறியிடத்து எதிர்ப்படுதலை விரும்பினனாக, தோழி தலைவியிடம், 'நம்மால் விரும்பப்படும் தலைவன் நம்மை விரும்பி மெலிகின்றானாதலின் அவன் கருத்துக்கு உடன்பட வேண்டும்' என்று கூறியது.

விட்ட குதிரை விசைப்பின் அன்ன,
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாம்தன் படர்ந்தமை அறியான், தானும்
வேனில் ஆனேறு போலச்
5 சாயினன் என்பதம் மாண்நலம் நயந்தே.

தெளிவுரை

தலைவியே! நெடுநாள் பிணிக்கப்பட்டிருந்த கட்டினின்றும் அவிழ்த்துவிடப்பட்ட குதிரை துள்ளிப் பாய்ந்து எழும். அதைப் போன்று, வளைத்துப் பிடித்திருந்த பசிய மூங்கிலை விடும்போது அது துள்ளி எழுந்து வானத்தைத் தொடும். அத்தகைய பசிய மூங்கில்களைக் கொண்ட குன்றத்திற்குரியவன், நம் தலைவன். நாம் அவனை நினைத்து வருந்தியிருப்பதை அவன் அறியமாட்டான். அவனும் நமது சிறந்த இன்பத்தை விரும்பி, கோடை வெப்பத்தால் வருந்தும் காளையைப்போல மெலிந்தனன் என்று தோழி கூறுகிறாள்.

கருத்து

தலைவியே! நம் மெலிவு நீங்கவும் தலைவனின் மெலிவைப் போக்கவும் நீ அவன் கருத்துக்கு இசைந்து, அவனைச் சந்திக்க ஒரு குறியிடம் கூற வேண்டும்.

விளக்கம்

"நீயும் அவனை விரும்பி ஏங்கியிருக்கிறாய்; அவனும் உன்னை நினைந்து ஏங்கியிருக்கிறான். குறித்த ஓர் இடத்திலே குறித்த நேரத்தில் இருவரும் சந்திப்பதென்று ஏற்பாடு செய்து கொண்டால் இருவர் துன்பமும் ஒழியும்" என்னும் கருத்தைத் தோழி, தலைவியிடம் சொல்கிறாள்.

குறிப்பு

'மூங்கில் வளைவது களிற்றால் இழுப்புண்டு என்றாலும், தன் இயல்பால் அது வான்தோயும் தன்மையைக் கொண்டது; அதுபோல, தலைவனும் உன் எழில்நலத்தால் வளைந்து வந்து இரந்தனன்; நம்மிடம் பணிவுடைய வனாயினும் இயற்கையில் மேன்மையானவன், அவன்' என்று தோழி தலைவன் பெருமை கூறி, அவனை ஏற்க வேண்டுமென்கிறாள்.

'விட்ட குதிரையின்' விசைப்பினை உவமையாய்க் கூறியுள்ளமையால் இப்பாடலாசிரியர், **விட்டகுதிரையார்** என்றே வழங்கப்படுகிறார். இவர் இயற்பெயர் தெரிந்திலது.

சொற்பொருள்

1. விட்ட குதிரை - அவிழ்த்துவிடப்பட்ட குதிரை; விசைப்பின் அன்ன - துள்ளிப் பாய்ந்து செல்வதைப் போல.
2. விசும்பு - வானம்; கழை - மூங்கில்.
3. யாம்தன் படர்ந்தமை - நாம் அவனை நினைந்து துன்புறுவதை; தானும் - அவனும்.
4. வேனில் - கோடைக்காலம்; ஆனேறு - (கோடை வெப்பத்தைத் தாங்க இயலாத) காளை.
5. சாயினன் - மெலிந்தனன்; நலம் - அழகு; நயந்து - விரும்பி.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 29 **கணிமேதாவியர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் இடங்காட்டியது.

கூற்று விளக்கம்

பகற்குறி - தலைவனும் தலைவியும் பகற்காலத்தில் கூடும் இடம். இதனைத் தோழி தலைவனுக்குக் காட்டியது.

பலாஎழுந்த பால்வருக்கைப் பாத்தி; அதன்நேர்
நிலாஎழுந்த வார்மணல் நீடிச் – சுலாஎழுந்து
கான்யாறு கால்சீத்த காந்தள்அம்பூந் தண்பொதும்பர்
தான்நாறத் தாழ்ந்த இடம்.

தெளிவுரை

"பலா மரங்கள் மிக உயர்ந்து வளர்ந்திருக்கும். அவற்றிற்குப் பக்கத்தில் அப்பலாமரங்களால் பகுத்துப் பிரிக்கப்பட்டுள்ள ஒரு தோப்பு உள்ளது; அதற்கு நடுவே, ஒளி வீசும் மணல் உயர்ந்து வட்டமாய்ப் பரவியுள்ள மணல்மேடை உள்ளது; அதற்கு அருகே சுரட்டாற்றுப்பெருக்கினால் ஒழுங்குபடுத்தப்பட்டு, சுரந்தள் பூக்கள் மிகுந்து சுரணும் குளிர்ச்சி பொருந்திய சோலை உள்ளது. அச்சோலையே நானும் என் தலைவியும் பகற்பொழுதில் தங்கி விளையாடும் இடம்" என்று தோழி தலைவனுக்குப் பகற்குறியிடம் சுரட்டினாள்.

கருத்து

கானாறு; அருகே குளிர்ச்சி பொருந்திய சோலை; அதிலொரு பலாத்தோப்பு உள்ளது; அதற்கு நடுவேயுள்ள வெண்மையான உயர்ந்த மணல்மேடே பகற்குறியிடம்.

சொற்பொருள்

1. பலா - பலா மரங்கள்; எழுந்த - உயர்ந்துள்ள; பால் - பக்கத்தில்; வருக்கை - ஒருவகைப் பலாமரம் (அவற்றால்); பாத்தி - பகுத்துப் பிரிக்கப்பட்ட; அதன் நேர் - அதற்குமுன் (நடுவே.)

2. நிலா எழுந்த வார்மணல் - நிலாவைப் போன்ற வெண்மையான மணல்; நீடி - உயர்ந்துள்ள (மணல்மேடை); சுலா எழுந்து - வட்டமாய்ப் பரவியுள்ள.
3. கால் சீத்த - ஒழுங்கு பண்ணப்பட்ட; காந்தள் அம்பூந்தண் பொதும்பர் - காந்தள் பூக்கள் மிகுந்த சோலை.
4. தான்நாற - அச்சோலையே மணங்கொள்ளுமாறு; தாழ்ந்த - (நானும் என் தலைவியும் பகற்பொழுதில்) தங்கி; இடம் - விளையாடும் இடம்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 51 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்குத் தோழி குறைநேர்ந்து பகற்குறியிடம் அறியச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைக் கூடக் குறியிடம் வேண்டினான். தோழி தலைவியிடம் வேண்டிப் பகற்குறியிடம் பெற்று அதனைத் தலைவனிடம் கூறியது.

கடும்புலால் வெண்மணல் கானலுறு மீன்கண்
படும்புலால் பார்த்தும் பகர்தும் – அடும்(பு)எலாம்
சாலிகை போல்வலை சாலப் பலஉணங்கும்
பாலிகை பூக்கும் பயின்று.

தெளிவுரை

"கொடிய புலால் நாற்றம் வீசும் வெண்மணலைக் கொண்ட கடற்கரைச்சோலை. அச்சோலையில் காய வைக்கப்பட்டுள்ள மீனைப் பறவைகள் பற்றிச் செல்லாமல் யாம் அவற்றை ஓட்டிக் கொண்டும் விற்றுக்கொண்டுமிருப்போம்; அவ்விடத்தில் அடும்பங்கொடிகளெல்லாம் முளைப்பாலிகை போன்று ஒன்றாய்க் கூடிப் பூத்துக் கிடக்கும். பல்வகையான வலைகள், கவசத்தை விரித்து வைத்தாற்போல் அங்கு உலர வைக்கப் பட்டிருக்கும். அதுவே நீ சந்திக்க வேண்டிய பகற்குறியிடம்" எனத் தோழி கூறினாள்.

கருத்து

கடற்கரைச்சோலையில் மீன் உலர்த்தப்பட்டுள்ள இடத்திற்கு அருகே மீன் வலைகள் காயவைக்கப்பட்டிருக்கும் இடமே பகற்குறியிடம்.

சொற்பொருள்

1. கடும்புலால் - கொடிய புலால் நாற்றம்; கானல் - கடற்கரைச்சோலை; உறு - அடுத்து.

1-2. மீன்கண் படும் புலால் - காயவைக்கப்பட்டுள்ள மீனிடத்தே; பார்த்தும் - (பறவைகள் படியாமல்) பாதுகாத்தும்; பகர்தும் - விற்றும்; அடும்பு - அடும்பங்கொடிகள்.

3. சாலிகை - (மெய்புகு) கவசம்; வலை - மீன்வலை; சாலப் பல - மிகவும் பல; உணங்கும் - உலர்த்தப்பட்டிருக்கும்.

4. பாலிகை - முளைப்பாலிகை (போன்று); பயின்று - ஒன்றாய்க் கூடி; பூக்கும் - மலரும்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 58 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்குத் தோழி பகற்குறி நேர்ந்து இடங்காட்டியது.

கூற்று விளக்கம்

தலைவன், தோழியிடம் தலைவியைக் கூடுதற்குரிய பகற்குறியை வேண்டினான். அவளும் அதற்கிசைந்து பகற்குறிக்கான இடத்தைக் கூறியது.

மாயவனும் தம்முனும் போலே, மறிகடலும்
கானலும்சேர் வெண்மணலும் காணாயோ – கானல்
இடையெலாம், ஞாழலும் தாழையும் ஆர்ந்த
புடையெலாம் புன்னை புகன்று.

தெளிவுரை

"தலைவனே! மாயவனும் அவன் முன்னோனும் (கண்ணனும் பலராமனும்) போல அலைகடலும் கடற்கரைச்சோலையைச் சார்ந்த வெண்மணலும் இருப்பதைப் பார்! அச்சோலையின் நடுவிலெல்லாம் ஞாழல் மரங்களும் தாழை மரங்களுமாய் நிறைந்திருக்கும்; சுற்றிலும் புன்னை மரங்கள் நிற்கும்; இதுவே நீ தலைவியைச் சந்திப்பதற்குரிய இடம்" என்று தோழி, பகற்குறி இடத்தினைத் தலைவன் மனத்தில் பதிய வைக்கிறாள்.

கருத்து

கடற்கரைச்சோலையின் நடுவில் ஞாழல் மரங்களும், தாழை மரங்களும், மருங்கெலாம் புன்னை மரங்களும் நிற்கும்; அந்த இடமே பகற்குறியிடம்.

விளக்கம்

கடலும், கடற்கரைச்சோலையும் நீல நிறம் கொண்டவை; அவைபோல் திருமால் நீல நிறமுள்ளவன். கடற்கரை மணல் வெண்மையானது. அதுபோலப் பலராமன், வெண்ணிற முள்ளவன்.

சொற்பொருள்

1. மாயவன் - திருமால்; தம்முன் - அவன் அண்ணன் பலராமன்; மறி கடல் - அலைகடல்.
2. கானல் - கடற்கரைச்சோலை; சேர் - சார்ந்த.
3. இடையெலாம் - (கானலின்) நடுவிலெல்லாம்; ஆர்ந்த - நிறைந் துள்ளன.
4. புடையெலாம் - பக்கங்களிலெல்லாம்; புகன்று - விரும்பி (இவற்றை யெல்லாம் பார்த்து நினைவில் கொள்க.) தாழையையும் புன்னை யையும் புகன்று காணாய் எனக் கொள்க.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 44 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறியிடம் காட்டியது.

கூற்று விளக்கம்

தலைவன் பகலில் தலைவியைச் சந்தித்துக் கூடுதற்குரிய இடத்தைத் தோழி கூறியது.

கடும்புலால் புன்னை கடியுந் துறைவ!
படும்புலால் புள்கடிவான் புக்க – தடம்புலாம்
தாழை,மா, ஞாழல் ததைந்துயர்ந்த தாழ்பொழில்
ஏழை,மான் நோக்கி இடம்.

தெளிவுரை

"புலால் நாற்றத்தை நீக்கும் புன்னைப் பூக்கள் நிறைந்த நீர்த் துறையை உடையவனே! உலர வைத்துள்ள மீன்களில் படியும் பறவைகளை ஓட்ட, மான்போலும் கண்களைக்கொண்ட தலைவி வருவாள். அங்குத் தாழை மரங்களும் கோங்கு மரங்களும் நெருங்கி வளர்ந்துள்ள பூஞ்சோலையே அவள் விளையாடுமிடம்."

கருத்து

தாழை மரங்களும் பெரிய கோங்கு மரங்களும் நெருங்கி வளர்ந்துள்ள பூஞ்சோலையே பகற்குறி இடம்.

சொற்பொருள்

1. **கடும்புலால் - கொடிய புலால் நாற்றம்; புன்னை - புன்னை (மலரின் நறுமணம்); கடியும் - நீக்கும்; துறைவ - நீர்த் துறையை யுடையவனே!**
2. **படும் புலால் - மீன்களில் படியும்; புள் - பறவைகளை; கடிவான் - ஓட்டும் (பொருட்டு); புக்க - புகுந்த; தடம்புல்ஆம் - பெரிய புல் இனத்தைச் சார்ந்தது என்று சொல்லும்படியான.**

3. தாழை - தாழை மரம்; மா - பெரிய; ஞாழல் - ஞாழல் மரம்; தழைந்து - நெருங்கி; உயர்ந்த - ஓங்கி வளர்ந்துள்ள; தாழ் - (பலரும்) தங்குதற்குரிய; பொழில் - பூஞ்சோலை.
4. ஏழை - எளியவளான என் தலைவி; மான் நோக்கி - மான் போன்ற பார்வையினைக் கொண்டவள்; இடம் - (விளையாடும்) இடம்.

தோழி கூற்று

குறுந்தொகை 114 **பொன்னாகன்**

திணை : நெய்தல்

கூற்று

இடத்துய்த்து நீங்கும் தோழி தலைமகற்குக் கூறியது.

(இடத்து உய்த்து நீங்குதல் - தலைவியைக் குறியிடத்தில் கொண்டுவந்து விட்டுவிட்டுத் தோழி சென்றுவிடுதல்.)

கூற்று விளக்கம்

தலைவியைக் குறியிடத்தில் நிறுத்திவந்த தோழி, தலைவனிடம் சென்று அதனைக் குறிப்பாய்க் கூறியது.

நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி,
நின்குறி வந்தனென், இயல்தேர்க் கொண்க!
செல்கம்; செலவியங் கொண்மோ, அல்கலும்
ஆரல் அருந்த வயிற்ற
5. நாரை மிதிக்கும் என்மகள் நுதலே.

தெளிவுரை

"அழகிய தேரினையுடைய தலைவனே! நெய்தல்நிலக் கடற்கரையில் என் விளையாட்டுப் பதுமையைக் கிடத்திவிட்டு, நீ நிற்கும் இக்குறியிடத்திற்கு வந்துள்ளேன். இரவு வந்ததும், ஆரல் மீனை அருந்தியதால் பருத்த வயிற்றினைக்கொண்ட நாரைகள் என் மகளின் (பதுமையின்) நெற்றியை மிதித்துவிடும். அதனால் என் பாவையின் அழகு சிதையும்; ஆதலால், நீ தலைவியை எதிர்ப்பட்டுக் கூடி, அளவளாவி, இரவு வருமுன்

அவள் தன் இல்லத்திற்குச் செல்லும்படியாக அனுப்பி வை" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

(பாவை - பெண்கள் விளையாடப் பயன்படும் பொம்மை.)

கருத்து

தலைவ! தலைவியைக் கண்டு அளவளாவி இரவு வருமுன் அவளை அனுப்பி வை!

குறிப்பு

'என் தலைவியை அங்கே நிற்க வைத்துவிட்டு வந்தேன்' என்று சொல்லாமல், 'என் பாவையை அங்கே கிடத்திவிட்டு வந்தேன்' எனத் தோழி நயம்படக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பரப்பில் - நிலத்தில்; பாவை - பெண்கள் விளையாடப் பயன்படும் பொம்மை; கிடப்பி - கிடத்தி வைத்து.
2. நின் குறி - நீ நிற்கும் இடம்; இயல்தேர் - வேலைப்பாடமைந்த அழகிய தேர்; கொண்கன் - நெய்தல்நிலத் தலைவன்.
3. செல்கம் - செல்லுகின்றேன்; செலவியம் கொண்மோ - நீ தலைவியைச் சந்தித்த பின் அவளை அவளுடைய இல்லத்திற்கு அனுப்பி வை; அல்கலும் - இரவு வருமுன் (அல்கல் - இரவு).
4. ஆரல் - ஆரல் மீன்; வயிற்ற - வயிற்றைக் கொண்ட.
5. என் மகள் - என் பாவை; நுதல் - நெற்றி.

தோழி கூற்று

அகநானூறு 30 **முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்த தலைவனை நோக்கித் தோழி, 'தலைவ! உன் பிரிவால் தலைவி படும் துயரை ஒருநாள் வந்து வினவல் கூடாதோ' என்று கூறியது.

நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை,
கடல்பாடு அழிய, இனமீன் முகந்து,
துணைபுணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி,
உப்புஒய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன்பகடு ஒப்பக் குழீஇ,
அயிர்திணி அடைகரை ஒலிப்ப வாங்கி,
பெருங்களம் தொகுத்த உழவர் போல,
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசி,
பாடுபல அமைத்து, கொள்ளை சாற்றி,
கோடுஉயர் திணிமணல் துஞ்சும் துறைவ!
பெருமை என்பது கெடுமோ – ஒருநாள்
மண்ணா முத்தம் அரும்பிய புன்னைத்
தண்நறுங் கானல் வந்து,நும்
வண்ணம் எவனோ? என்றனிர் செலினே?

தெளிவுரை

நெடிய கயிற்றினால் பின்னிய குறுகிய கண்களைக் கொண்ட அழகிய வலையில், கடலின் பெருமை குறையுமாறு பலவகை மீன்களைப் பிடித்து வந்து, பரதவர் தம் துணையுடன் மகிழ்ந் திருப்பர்; இளையரும் முதியருமாய் அப்பரதவர் தம் சுற்றத் தாரோடு ஒன்றுசேர்ந்து, உப்பு வாணிகர்கள், இனிய கடற் கரையிலே ஓட்டிச் செல்லும் வண்டிகளில் பூட்டப்பட்டிருக்கும் கடாக்களைப் போலச் செருக்குடன் கூடுவர். நுண்மணல் செறிந்த கரையிலே மீன் நிறைந்த வலைகளை ஆரவாரத்துடன் இழுத்துக் கொணர்ந்து, மீன்களைத் தொகுப்பர். பெரிய களத்திலே நெல்லைத் தொகுத்த உழவர்களைப் போல, தம்மிடம் வந்து இரந்தவர்களுக்கெல்லாம் அவர்களுடைய வறிய கலங்கள் நிறையுமாறு மீன்களை வாரி வாரிச் சொரிவர்; எஞ்சிய மீன்களைப் பற்பல கூறுகளாய்ப் பகுத்து விலை கூறி விற்பர். அதன் பின்னர்க் கரை உயர்ந்த திண்மையான மணற்பரப்பிலே படுத்து உறங்குவர். அத்தகைய கடல்துறை நாட்டவனே, கேளாய்!

'கழுவப்பட்டுத் தூய்மை செய்யப்பெறாத முத்துகளைப் போல அரும்புகள் அரும்பியிருக்கும் புன்னை மரங்களைக் கொண்ட குளிர்ச்சியான நறுமணச் சோலையிலே, ஒரு நாள் நீயும் வந்து, 'உம் மேனியின் வண்ணம் என்னவாயிற்று?' என்று எம்மை வினவிச் சென்றால், உன் பெருமை கெட்டுப்போகுமா? (நீ, வாராதிருப்பது ஏன்?)

கருத்து

தலைவ! நீ பகற்குறியில் பல நாள் வாராததேன்?

விளக்கம்

"தலைவியைக் காண்பதற்கு நெடுநாள் வாராத தலைவன், ஒரு நாள் பகற்பொழுதில் வந்தான். அவனைக் கண்ட தோழி, 'புன்னை மரங்கள் அடர்ந்த நறுமணம் கமழும் கடற்கரைச் சோலைக்கு என்றேனும் ஒரு நாள் வந்து, அங்கு விளையாடும் எம்மைக் கண்டு, 'உம் அழகு என்னவாயிற்று?' என்று வினவிச் சென்றால் நும் பெருமை கெட்டா போய்விடும்? நீ வருவதுதான் என்றோ?" என்று தலைவன் வாராதிருப்பதைச் சுட்டிக்காட்டிப் பேசினாள்.

உள்ளுறை

"பரதவர், பெருங்கடலுள் கிடந்த மீன்களை நீக்கி, அவற்றின் உயிரைப் போக்கி, பலருக்கும் வழங்கி, உயிரை வருத்தினோம் என்ற இரக்கம் சிறிதுமில்லாமல் மணற்பரப்பில் உறங்குவர். அது போலப் பெருங்குலத்துப் பிறந்த இவளை உன் வசமாக்கி, அவர்கள் குடும்பத்திலிருந்து நீக்கி, உன் பிரிவால் அவளை வருத்தி, அதனால் அவளுக்குண்டான வேறுபாட்டால் பலரும் அவளைத் தூற்றுமாறு செய்துவிட்டு, நீ கவலையின்றி இருக்கிறாய்" எனத் தலைவனிடம் தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. வலந்த – கயிற்றினால் பின்னிய.
2. கடல்பாடு - கடலின் பெருமை; முகந்து - பிடித்து.
3. உவகையர் - மகிழ்ச்சி கொண்டவராய்.
4. துவன்றி – நெருங்கி.

5. உப்புஒய் - உப்பு மூட்டையினை ஏற்றி ஓட்டிச் செல்லும்; உமணர் - உப்பு வாணிகர்; போக்கும் - செலுத்தும்.
6. ஒழுகை - வண்டி; நோன் பகடு - வலிய எருது; குழீஇ - கூடி.
7. அயிர் - நுண்மணல்; தினி - செறிந்த; ஓலிப்ப - ஆரவாரம் பெருக; வாங்கி - இழுத்து.
8. பெருங்களம் - பெரிய களம்; தொகுத்த - (நெல்லைத்) தொகுத்த.
9. இரந்தோர் - தம்மிடம் வந்து கேட்போர்; வறுங்கலம் - வறிய கலங்கள்; மல்க - நிறைய; வீசி - (அம்மீன்களைச்) சொரிந்து.
10. பாடு பல - பல கூறுகளாய்; கொள்ளை - விலை; சாற்றி - கூறி.
11. கோடு - கரை; துஞ்சும் - உறங்கும்; துறைவ - துறையினைக் கொண்டவனே!
13. மண்ணா - தூய்மை செய்யப்பெறாத; முத்தம் - முத்து.
14. தண் நறுங்கானல் - குளிர்ச்சி பொருந்திய இனிய கடற்கரைச் சோலை.
15. வண்ணம் எவனோ? - அழகு என்னவாயிற்று?; என்றனிர் - என்று கேட்டு; செலின் - சென்றால்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 67 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் தன்னை அருமை செய்து தலைமகளை மறந்தகாலை தோழி அவனை எதிர்ப்பட்டுக் கூறியது. (அருமை செய்து அயர்த்தல் - களவுக் காலத்தில் ஓரிரு நாள் மறந்தவன்போலத் தலைவன் குறியிடத்து வாராதிருத்தல்.)

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியுடன் கொண்டிருந்த களவொழுக்கத்தைக் கைவிட்டு அவளை ஓரிரு நாள் மறந்திருந்த நிலையில், தோழி அவனைப் பார்த்துக் கூறியது.

இவர்திரை நீக்கியிட்(டு) எக்கர் மணல்மேல்
கவர்கால் அலவன் தன்பெடை யோடு
நிகரில் இருங்கழிச் சேர்ப்ப!என் தோழி
படர்பசலை ஆயின்று தோள்.

தெளிவுரை

கரைமேல் ஏறி வருகின்ற அலைகளினாலே கடலிலிருந்து கொண்டுவரப்பட்டு, மணல்மேட்டில் போடப்பட்ட, பிளவு பட்ட கால்களைக் கொண்ட ஆண்நண்டு, தன் பெடை நண்டோடு ஓடி விளையாடுகின்ற ஒப்பற்ற உப்பங்கழிகளைக் கொண்ட கடல் துறைத் தலைவனே! தலைவியின் தோளில் உன் பிரிவால் பசலை படர்ந்துவிட்டதால் அவள் பெரிதும் வருந்துகிறாள்.

கருத்து

'தலைவ! சில நாள் பிரிவால் தலைவியின் தோளில் பசலை படர்ந்து விட்டது. விரைந்து வந்து தலைவியின் வருத்தத்தைப் போக்கி அருள வேண்டும்' எனத் தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி கூறுகிறாள்.

விளக்கம்

ஆண்நண்டு தனக்குரிய பெண்நண்டுடன் சேர்ந்தே வாழ்ந் திருக்க, நீ உன் தலைவியைப் பிரிந்திருத்தல் தகுமோ?

சொற்பொருள்

1. இவர் திரை - கரை மேல் ஏறி வருகின்ற அலை; நீக்கியிட்டு - கடலினின்றும் கொண்டுவந்து போட்ட; எக்கர் - மேடு.
2. கவர்கால் - பிளவுபட்ட கால்களைக் கொண்ட; அலவன் - நண்டு; பெடை - பெண்.
3. நிகர் இல் - ஒப்பற்ற.
4. படர் பசலை - பசலை படரப்பட்டதாய்; ஆயின்று - ஆய்விட்டது.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 61 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள், பெரிதாகிய இடையீட்டினுள் அரிதாகத் தலைமகன் வந்த ஞான்றும், பெறாத ஞான்றைத் துன்ப மிகுதியால் பெற்றதனையும், களவு போன்று கொண்டு இகழ்ந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் நீண்ட நாள்களாகப் பிரிந்திருந்து பின் தலைவியைக் கண்டபோது, அவன் வராதபோது பெற்ற துன்பத்தையே வந்துள்ள இன்றும் பெறுவதாகத் தலைவி இகழ்ந்து கூறியது.

கண்திரள் முத்தம் பயக்கும் இருமுந்நீர்ப்
பண்டம்கொள் நாவாய் வழங்கும் துறைவனை
முண்டகக் கானலுள் கண்டேன் எனத் தெளிந்தேன்
நின்ற உணர்விலா தேன்.

தெளிவுரை

கண் விழிகளைப் போல் திரண்ட முத்துகளைக் கொடுக்கும் படியான பெரிய கடலில், பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்கின்ற பொருள்களைக் கொண்டுள்ள மரக்கலங்கள் உலவும் படியான துறைமுகத்தினைக் கொண்டவன், நம் தலைவன். அவனைத் தாழைச் செடிகள் சூழ்ந்த கடற்கரைச்சோலையில் இன்று அரிதாகக் கண்டேன். இவனைக் காணுதல் இன்பந்தரும் என்று முன்பு கொண்டிருந்த உணர்ச்சி இப்போது இல்லாத வளானேன். புணர்ச்சி, துன்பம் தரும் என்று அறியலானேன் எனத் தலைவி சொன்னாள்.

குறிப்பு

இன்று ஒருநாள் சேர்வது இன்பந்தான். ஆனால் பிறகு இடையீடுபட்டுக் காணாத நாள்கள் பலவாகும். அந்தத் துன்பத்தைப் பெறப்போகும் நமக்கு இந்த ஒரு நாள் இன்பம் எதற்கு? இன்றும் துன்ப நாளாகவே இருந்து விடட்டும்.

சொற்பொருள்

1. கண் திரள் முத்தம் - கண் விழிகளைப் போல் திரட்சியுற்றிருக்கும் முத்து; பயக்கும் - கொடுக்கும்; இருமுந்நீர் - பெரிய கடல்.
2. பண்டம் கொள் - ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் பண்டங்களைக் கொண்டுள்ள; நாவாய் - மரக்கலம்; வழங்கும் - வந்து போகும்படியான, உலவும்படியான.
3. முண்டகம் - தாழை; கானல் - கடற்கரைச் சோலை.
4. நின்ற - (இவனைக் காணுதல் இன்பம் தரும் என்று முன்பு) நிலை பெற்றிருந்த உணர்வு; இலாதேன் - (அவனைக் கண்ட) இப்பொழுது இல்லாதவள் ஆயினேன்.

தோழி கூற்று

நற்றிணை 307 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

குறி நீட ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

அடையாளமாய்த் தலைவி சொன்ன இடத்திற்குத் தலைவன் வாராது காலம் தாழ்த்தினான். அதனைத் தாங்காது தலைவி வருந்தினாள். அப்போது, தலைவன் வந்துகொண்டிருப்பதைத் தேரின் மணியோசை தெரிவிக்கிறது. 'வருகின்ற அவன் நம்மைக் காண இயலாதவாறு மறைந்துகொள்வோம். அவன் நம்மைக் காணாது சிறிது நேரம் தவிக்கட்டும்' எனத் தோழி தலைவியிடம் வற்புறுத்திச் சொல்லியது.

கவர்பரி நெடுந்தேர் மணியும் இசைக்கும்;
பெயர்பட இயங்கிய இளையரும் ஒலிப்பர்;
கடல்ஆடு வியல்இடைப் பேர்அணிப் பொலிந்த
திதலை அல்குல் நலம்பா ராட்டிய
5 வருமே – தோழி! வார்மணற் சேர்ப்பன்;
இற்பட வாங்கிய முழவுமுதற் புன்னை

மாஅரை மறைகம் வம்மதி – பானாள்,
பூவிரி கானல் புணர்குறி வந்து,நம்
மெல்இணர் நறும்பொழில் காணாது,அவன்
அல்லல் அரும்படர் காண்கம்நாம், சிறிதே.

தெளிவுரை

"தலைவியே! விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேரில் கட்டியுள்ள மணியின் ஓசை கேட்கிறது; உடன் வருகின்ற ஏவலாளரின் ஆரவார ஓசையும் கேட்கிறது. ஆதலின் தலைவன், மகளிர் நீராடும் கடல் துறைக்கு, அழகுடன் விளங்கும் தேமல் படர்ந்த உன் அல்குலின் சிறப்பைப் பாராட்ட இப்பொழுது வந்துகொண்டிருக்கிறான். ஆயினும், அவன் இதுவரை வாராமல் நம்மை நடுங்க வைத்தவன் அன்றோ? அதுபோல, அவனும் இக்கடற்கரைச்சோலையில் நாம் இணைகின்ற இடத்திற்கு வந்து, நம்மைக் காணாமல், இதுகாறும் அவன் அனுபவித்தறியாத துன்பத்தை அனுபவிப்பதைச் சிறிது நேரம் கண்டு மகிழ்வோம். ஆதலால், நம் மனையருகில் அடிவளைந்து நிழல்தந்து நிற்கும் புன்னை மரத்திற்குப் பின்னே சென்று மறைந்துகொள்வோம்; வா" எனத் தலைவியிடம் தோழி கூறுகிறாள்.

கருத்து

தலைவியே! நமக்கு வருத்தத்தை உண்டாக்கிய அவனும் அவ் வருத்தத்தை அனுபவிக்குமாறு நாம் சிறிது நேரம் மறைந்துகொள்வோம், வா.

விளக்கம்

தலைவன் குறியிடத்திற்குக் காலம் தாழ்த்தி வந்தான். அதனைத் தாங்காது தலைவி வருந்தினாள். அந்நிலையில் தலைவனின் தேர் வரும் ஓசை கேட்கிறது. தோழி தலைவியிடம், 'அவன் நம்மைக் காண இயலாதவாறு புன்னைமர நிழலில் மறைந்துகொள்வோம், வா! இச்செயலால், அவனைக் காணாத போது நாம் அடைந்த வருத்தத்தை இப்போது அவன் உணர்வான் அன்றோ?' என்கிறாள்.

சொற்பொருள்

1. கவர் - விருப்பம் தரும்; பரி - குதிரை; இசைக்கும் - ஒலிக்கும்.
2. பெயர்பட - பெயர்ந்து; இயங்கிய - செல்லும்; இளையர் - ஏவலாளர்.
3. கடல் ஆடு - கடலாடுகின்ற; வியல் இடை - அகன்ற இடத்தில்; பேர்அணி - பேரழகு; பொலிந்த - விளங்கும்.
4. திதலை - தேமல்; நலம் - அழகு; பாராட்டிய - பாராட்டிட.
5. வார் மணல் - நெடிதாய்ப் பரந்து கிடக்கும் மணல்.
6. இற்பட - மனையில்; வாங்கிய - அடி வளைந்த; முழவுமுதல் - முழவு போன்ற அடிப்பகுதி.
7. மாஅரை - பெரிய அடியிடத்தே; மறைகம் - மறைந்திருப்போம்; வம்மதி - வருக; பானாள் - நடு யாமம்.
8. புணர்குறி - புணர்கின்ற குறியிடம்.
9. மெல்இணர் - மெல்லிய பூங்கொத்துகள்; நறும் பொழில் - நல்ல சோலை; காணாது அவன் - நம்மைக் காணாதவனாய்.
10. அரும்படர் - அரிய துன்பம்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 293 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறியிடம் புக்க தலைமகன், தலைமகள் பின்னாக மறைய வந்து கண் புதைத்துழிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறியிடத்தில் தலைவன் தலைவியை எதிர்நோக்கியிருந்தான். அங்கு வந்த தலைவி அவன் அறியாமல் பின்புறமாக வந்து அவன் கண்களைப் பொத்தினாள். அப்போது தலைவன் கூறியது.

சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை அன்ன
நலம்பெறு கையின்,என் கண்புதைத் தோயே!
பாயல் இன்துணை ஆகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை!
5 நீஅலது உளரோ,என் நெஞ்சுஅமர்ந் தோரே?

தெளிவுரை

மலை முழுதும் மலர்ந்து மணக்கும் காந்தளின் பூங்கொத் தினைப் போன்ற அழகிய கைகளால் என் கண்களைப் பொத்திடும் நங்காய்!

நான் துயில்தற்கு இனிய துணையாகிய பருத்த தோளையும் மயில் போன்ற சாயலையும் கொண்டவளே!

என் நெஞ்சில் அமரும் காதற்பெண் உன்னைத் தவிர யாருளர்?

(என் கண்ணைப் புதைத்தால் நெஞ்சிலிருக்கிற ஒரே பெய ராகிய உன் பெயரைத் தவிர வேறு யார் பெயரைச் சொல்வேன்? இதைக்கூட அறியாத பேதைப்பெண்ணாய் இருக்கிறாயே என்று அவன், அவள் பேதைமையை உணர்த்தினான்.)

கருத்து

என் கண் புதைத்த நங்கையே! என் நெஞ்சு அமர்ந்தோர் நீ அலது உளரோ?

சொற்பொருள்

1. சிலம்பு - மலை; கமழ் - மணக்கும்; காந்தள் - காந்தள் பூ; குலை - கொத்து.
2. நலம்பெறு - அழகிய; புதைத்தோயே - பொத்தியவளே.
3. பாயல் - உறக்கம்; பணைத்தோள் - பருத்த தோள்.
4. தோகை மாட்சி - மயிலின் சாயல்.
5. அலது - அல்லாது; அமர்ந்தோர் - விரும்பித் தங்கியிருப்பவர்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 22 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறியில் தலைமகளைக் கூடி நீங்குகின்ற தலைமகன் ஆற்றானாய் அவள் அருமையைத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியோடு புணர்ந்து அவளைப் பிரிந்து செல்லும் தலைவன், அவள் கண்கள் தன்னை வருத்துவதைத் தன் நெஞ்சிற்குக் கூறியது.

கள்வாய் நீலம் கையில் ஏந்திப்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வேல் அல்ல! வெய்ய வெய்ய!

தெளிவுரை

தேன் கொண்ட நீலப்பூவைக் கையிலே ஏந்தி, மீன் வற்றலைத் தின்னவரும் பறவைகளை ஓட்டும் அவளின் சிவந்த கண்கள் வெள்ளிய வேல்களா? அல்லவே அல்ல! அவற்றினும் கொடியன, கொடியன!

கருத்து

என் நெஞ்சே! அவள் கண்கள் என்னை வேல்போல் வருத்துகின்றன.

சொற்பொருள்

1. கள்வாய் - தேன் கொண்ட; நீலம் - நீல மலர்.
2. புள் - பறவை; உணங்கல் - மீன் வற்றல்; கடிவாள் - ஓட்டுபவள்.

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 21 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறியில் தலைமகளைக் கூடி நீங்குகின்ற தலைமகன் ஆற்றானாய் அவள் அருமையைத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியோடு புணர்ந்து அவளைப் பிரிந்து செல்லும் தலைவன், அவள் கண்கள் தன்னை வருத்துவதைத் தன் நெஞ்சிற்குக் கூறியது.

புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய! கூற்றம் கூற்றம்!

தெளிவுரை

புன்னை மர நிழலில், புலால் நாறுகின்ற கடற்கரையில், அன்னம் நடப்பதுபோல நடக்கிறாளே! அவளின் சிவந்த கண்கள், கண்கள் அல்ல! அவை மிகவும் கொடுமை வாய்ந்த கூற்றமே! கூற்றமே!

கருத்து

என் நெஞ்சமே! அவள் கண்கள் கூற்றுவன்போல என்னைக் கொல்லும் தன்மையன.

சொற்பொருள்

1. புலவு - புலால் நாற்றம்; திரைவாய் - கடற்கரை.
4. கொன்னே வெய்ய - மிகவும் கொடுமை வாய்ந்த; கூற்றம் - (அவை கண்களல்ல) கூற்றுவனே!

தலைவன் கூற்று

சிலப்பதிகாரம், கானல்வரி 20 **இளங்கோவடிகள்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறியில் தலைமகளைக் கூடி நீங்குகின்ற தலைமகன் ஆற்றானாய் அவள் அருமையைத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியோடு புணர்ந்து அவளைப் பிரிந்து செல்லும் தலைவன், அவள் கண்கள் தன்னை வருத்துவதைத் தன் நெஞ்சிற்குக் கூறியது.

பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
குவளை அல்ல! கொடிய கொடிய!

தெளிவுரை

பவள உலக்கையைக் கையில் கொண்டு, வெண்மையான முத்துகளைக் குற்றுகிறாளே! செவ்வரி படர்ந்த அவள் கண்கள் குவளை மலர்களா? அல்லவே அல்ல! அவை மிகவும் கொடியன! கொடியன!

கருத்து

என் நெஞ்சே! தலைவியின் கண்கள் கொடியன.

சொற்பொருள்

2. தவள முத்தம் - வெண்மையான முத்து; குறுவாள் - குற்றுபவள்; செங்கண் - செவ்வரி படர்ந்த கண்.
4. குவளை அல்ல - குவளை மலர்கள் அல்ல; கொடிய - கொடியன.

தலைவன் கூற்று

திருக்குறள் 1124 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் புணர்ந்து நீங்கும் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் தலைவியோடு கூடியிருந்து அவளைப் பிரிந்து செல்லும் தலைவன், தலைவி தனக்கு உயிராய் விளங்குபவள் எனப் புகழ்ந்து கூறியது.

வாழ்தல் உயிர்க்(கு)அன்னள் ஆயிழை; சாதல்
அதற்(கு)அன்னள் நீங்கும் இடத்து.

தெளிவுரை

ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்துள்ள என் தலைவி, என்னுடன் கூடியிருப்பது, என் உயிர் உடலோடு கூடியிருப்பது போன்றது. பிரியும்போது, உயிர் உடலிலிருந்து பிரிவது போன்றது.

கருத்து

தலைவியோடு கூடியிருப்பது வாழ்வு; பிரிந்திருப்பதோ சாவு.

விளக்கம்

ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்துள்ள என் காதலி என்னுடன் கூடியிருக்கும்போது, உயிர் உடலுடன் கூடி வாழ்வது எத்தகைய இன்பமாய் இருக்குமோ, அத்தகைய இன்பத்தை அளிப்பவளாய் இருக்கிறாள்; பிரியும்போதோ, உயிர் உடலை விட்டு நீங்கும்போது ஏற்படும் சாவு போன்ற துன்பத்தைத் தருகிறாள்.

குறிப்பு

உயிர் உடலோடு சேர்ந்திருக்கும்போதுதான், வாழ்வு; பிரிந்தாலோ, சாவு. அதுபோல, அவளுடன் கூடியிருக்கும்போது, மகிழ்ச்சி; பிரிந்தாலோ, துன்பம். அவள், உயிர்; நான், உடல்.

சொற்பொருள்

1. ஆயினை - ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்தவள்; உயிர்க்கு வாழ்தல் அன்னள் - (என்னோடு கூடும்போது) உயிர் உடலோடு கூடியிருக்கும்போது ஏற்படும் வாழ்வு போன்றவள்.
2. நீங்கும் இடத்து - (என்னை விட்டுப்) பிரியும்போது.

2-1. அதற்குச் சாதல் அன்னள் - உயிர் (உடலிலிருந்து நீங்கும்போது ஏற்படும்) சாவு போன்றவள்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1115 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறிக்கண் தலைமகள் பூவணி கண்டு தலைமகன் சொல்லியது.

(பூவணி - பூவினைச் சூடியிருத்தல்.)

கூற்று விளக்கம்

பகற்குறியில் காதலியைக் கண்ட காதலன், அவள் இடை நலத்தைப் புகழ்ந்து கூறியது.

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

தெளிவுரை

இவள் தன் மென்மையைக் கருதிப் பாராமல், அனிச்சப் பூக்களைக் காம்பு நீக்காமல் சூடினாள். அவற்றின் சுமை தாங்காது இவள் இடை முரிய, அதன் காரணமாய்ச் சாவுப்பறை ஒலிக்குமேயன்றி, மங்கலப்பறை ஒலிக்க மாட்டாத நிலை ஏற்பட்டுவிட்டது.

கருத்து

காதலி, அனிச்சப்பூவை அதன் காம்பு களையாது சூடினாள்; அதன் சுமை தாங்காது அவள் இடை முரிய, அதனால் அமங்கலப்பறையே ஒலிக்கும்.

விளக்கம்

காம்புகளை நீக்காமலேயே காதலி அனிச்சப்பூக்களை அணிந்தாள். அது காரணமாய், மிக மெல்லிய அவள் இடை, அப்பூக்களின் சுமை தாங்கவியலாது முரியும். அதனால் அவள் சாவ நேரிடுமே என்று அஞ்சிய தலைவன் அவளிடம் தான் கொண்டுள்ள அன்பு தோன்ற, அவளது இடையின் மென்மை குறித்து நயம்படக் கூறி மகிழ்கிறான்.

குறிப்பு

அனிச்சப்பூ மிகமிக மென்மையானது. அப்பூவின் சுமையையும் தாங்க இயலாததாகும் தன் தலைவியின் இடை என அவள் இடைநலம் போற்றுகிறான், தலைவன்.

சொற்பொருள்

1. (இவள் தன் மென்மை கருதாது) அனிச்சப்பூ - அனிச்சப்பூவை; கால் களையாள் - காம்புகளை நீக்காமல்; பெய்தாள் - சூடினாள்; நுசுப்பிற்கு - (இவள்) இடைக்கு.

2. நல்ல பறை படாஅ - மங்கலப்பறை ஒலிக்க மாட்டா (அமங்கலப் பறை ஒலிக்கும்.)

தலைவி கூற்று

நற்றிணை 187 **ஔவையார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் பகற்குறி வந்து மீள்வானது செலவு நோக்கித் தலைமகள் தன்னுள்ளே சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பகற்குறி வந்து கூடிய தலைவன் தன்னூர்க்கு மீண்டு போக, அப்பிரிவினாலே தலைவியின் மனத்துயரம் பெரிதாகின்றது. அவள் நெஞ்சழிந்தவாறு தனக்குள் கூறிக்கொள்வது.

நெய்தல் கூம்ப, நிழல்குணக்கு ஒழுகக்
கல்சேர் மண்டிலம் சிவந்துநிலம் தணியப்
பல்பூங் கானலும் அல்கின் றன்றே;
இனமணி ஒலிப்பப் பொழுதுபடப் பூட்டி,
மெய்ம்மலி காமத்து யாம்தொழுது ஒழியத்
தேரும் செல்புறம் மறையும் ஊரொடு
யாங்கு ஆவதுகொல் தானே தேம்பட
ஊதுவண்டு இமிரும் கோதை மார்பின்,
மின்இவர் கொடும்பூண் கொண்கனொடு
இன்நகை மேவிநாம் ஆடிய பொழிலே.

தெளிவுரை

"நெய்தல் மலர்கள் கூம்பின; நிழல்களெல்லாம் கிழக்கு நோக்கி நீண்டு சாய்ந்தன; மேற்கு மலையைச் சேர்ந்த ஞாயிறு, சிவந்து தோன்றுகின்றது. பகற்போதில் வெம்மையுற்றிருந்த நிலம் வெம்மை முழுதும் தணியப் பெற்றுள்ளதால் குளிர்ச்சி பெற்றுள்ளது. பூக்கள் நிறைந்த கடற்கரைச்சோலையும் இருள்

பரவுதலால் பொலிவிழந்திருக்கிறது. நாம் கைகூப்பி நிற்க, தலைவன் ஏறிச்செல்லும் தேரும் தொலைவில் ஒரு புள்ளி போலத் தோன்றி மறைகிறது. வண்டுகள் ஒலிக்கும் மாலை யினையும், மார்பிடத்தே ஒளிவிடும் வளைந்த பூணினையும் அணிந்துள்ள நம் தலைவனுடன் மகிழ்ச்சி பெருக விளையாடிக் கொண்டிருந்த இனிய சோலையும் இனி நமக்கு எவ்வாறு அமையுமோ? அறியேன்."

கருத்து

தலைவனோடு கூடியிருந்தபோது மகிழ்ச்சி அளித்த சோலை, அவனோடு தங்கியிராதபோது தலைவிக்கு வெறுப்பை அளிக்கின்றது.

சொற்பொருள்

1. நெய்தல் - நெய்தல் மலர்கள்; கூம்ப - குவிய; குணக்கு - கிழக்கு; ஒழுக - சாய.
2. கல்சேர் - (மேற்கு) மலையை அடைந்த; மண்டிலம் - சூரிய மண்டிலம், தணிய - குளிர.
3. அல்கின்று - இருளடைந்தது (அல் - இருள்).
4. இனமணி - மணி இனம்; பொழுதுபட - பொழுது சாய; பூட்டி - குதிரையை வண்டியில் பூட்டி.
5. மெய்ம்மலி - உடல் நிறைந்த; தொழுது ஒழிய - கைகூப்பி நிற்க.
6. செல் புறம் - தேர் செல்லும் பக்கம்; மறையும் - பார்வையிலிருந்து மறையும்; ஊரொடு - ஊருடன்.
7. யாங்கு ஆவது கொல் - என்ன ஆகுமோ?; தேம்பட - தேன் உண்ணும்.
8. வண்டு இமிரும் - வண்டு இசை பாடும்; கோதை - மாலை.
9. மின் இவர் - மின்னுதல் பொருந்திய; கொடும்பூண் - வளைந்த அணி கலன்; கொண்கனொடு - தலைவனொடு.
10. இன்நகை - இனிய மகிழ்ச்சி; ஆடிய - விளையாடிய; பொழில் - சோலை.

தோழி கூற்று

நற்றிணை 363 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி, 'தலைமகளை என்னை ஆற்றுவிக்குமென்று ஆகாதோ, எம்பெருமான் கவலாது செல்வது? யான் ஆற்றுவிக்குமிடத்துக் கவன்றால் நீ ஆற்றுவி' எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்து நீங்கும் தலைவனிடம், "தலைவியின் ஆற்றாமையை நான் போக்குவேன் என்றெண்ணிக் கவலையுறாமல் இருக்கின்றனையோ? என்னால் அவளை ஆற்றுவிக்க இயலவில்லை; நீயே வந்து அவளை ஆற்றுவிக்க வேண்டும்" என்று தோழி கூறியது.

'கண்டல் வேலிக் கழிசூழ் படப்பைத்
தெண்கடல் நல்நாட்டுச் செல்வன் யான்'என
வியம்கொண்டு ஏகினை ஆயின், எனையதூஉம்
உறுவினைக்கு அசாவா உலைவுஇல் கம்மியன்
பொறிஅறுபு இணைக்கூட்டும் துறைமணல் கொண்டு
வம்மோ தோழி! மலிநீர்ச் சேர்ப்ப!
பைந்தழை சிதைய, கோதை வாட,
நன்னர் மாலை, நெருநை, நின்னொடு
சிலவிளங்கு எல்வளை ஞெகிழ,
அலவன் ஆட்டுவோள் சிலம்புஞெமிர்ந்து எனவே.

தெளிவுரை

"கடற்கரை நாட்டுத் தலைவனே! நேற்று மாலைப்பொழுதிலே உன்னொடு விளையாடியதால் தழையாடை சிதைந்தது; தலைமாலை ஆடியது; தலைவியின் கை வளைகள் நெகிழ்ந்தன; நண்டுகளை அலைத்து ஆட்டியதால் காற்சிலம்பு உடைந்தது. (சிலம்பு உடைந்திருப்பதைக் கண்டால் அன்னை தலைவியை வீட்டைவிட்டு வெளியே செல்லவிடாது தடுத்துவிடுவாள். உடைந்த சிலம்பைக் கம்மியரிடம் கொடுத்தால், அதனைச் சந்து ஊதி, உருக்குமண் கட்டுவர்.) ஆதலின், தாழைகளை வேலியாய்க்

கொண்ட கொல்லைகளுக்குரிய நெய்தல்நிலத் தலைவனே! நீ இப்போது செல்ல வேண்டுமாயின், சிலம்பினைச் சீர் செய்த தற்குரிய மண்ணினைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் செல்.”

கருத்து

“ஐயனே! உன் பிரிவாற்றாது வருந்தும் தலைவியிடம் தகுவன கூறி நான் ஆற்றுவிப்பேன் என்பது உம் எண்ணம் போலும்! பகலில் உன்னோடு கூடி விளையாடியதால் அவளிடம் ஏற்பட்டுள்ள மாறுதலைக் கண்டதும் அன்னை வெகுண்டு தன்னை வீட்டைவிட்டு வெளியே செல்லவிடாது தடுப்பாள் எனக் கருதியிருக்கும் தலைவியை நீயே ஆற்றுவித்தல் வேண்டும்” என்கிறாள், தோழி.

விளக்கம்

தலைவன் தலைவியை ஆற்றுவிக்க வேண்டும் என்பதைத் தோழி வெளிப்படையாய்க் கூறாது குறிப்பாய்க் கூறுகிறாள். “தலைவ! பகலில் உன்னோடு கூடி விளையாடியதால் தலைவியின் காற்சிலம்பு உடைந்துபோயிற்று. இதனைக் கம்மியனிடம் தந்துதான் புதுப்பிக்க வேண்டும். அவன் இதனைச் சரி செய்ய அச்சுச் செய்வதற்குத் துறைமணல் (உருக்கு மண்) வேண்டும்; நீயே துறைக்குச் சென்று, மண் கொண்டுவந்து, கொல்லனிடம் கொடுத்து இச்சிலம்பினைச் சரி செய்து தந்துசெல்” எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

குறிப்பு

கொல்லனிடம் மண் கொணர்ந்து தருவது சிறப்பன்று; வேறு சிலம்பு கொணர்ந்து அணிவதே சிறப்பாம். புதிய சிலம்பணிவது, ‘சிலம்புகழீஇய செல்வம்’ எனப்படும். அது திருமணத்தின்போது நடைபெறுவது. புதிய சிலம்பு அணிவிக்கின்ற ‘வரைவுக்கு ஆவன செய்’ எனக் குறிப்பாய்த் தோழி உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

1. கண்டல் வேலி - தாழை மரங்களை வேலியாய்க் கொண்டது; படப்பை - தோட்டம்.
2. தெண்கடல் - தெளிந்த கடற்கரையைக் கொண்ட; நல் நாட்டு - நல்ல நாட்டுக்கு; செல்வன் யான் - தலைவன் நான்.

3. வியம் கொண்டு ஏகினை - தேரைச் செலுத்தி வழியிடையே செல்கின்றாய் (வியம் - வழி); எனையதூஉம் - எத்துணையும்.
4. உறுவினைக்கு - செய்தற்கான தொழிலைச் செய்வதற்கு; அசாவா - வருத்தமுறாத; உலைவில் - ஊக்கக்குறைவு இல்லாத; கம்மியன் - பொற்கொல்லன்.
5. பொறிஅறுபு இணைக் கூட்டும் - உருக்குப்பொறி சிதைந்தவிடத்து மண் அணைத்து நிறைத்துக்கொள்ளும்; துறைமணல் - நீர்த்துறையில் அகப்படும் உருக்கு மண்; கொண்டு வம்மோ - கொண்டு வருக.
6. மலிநீர்ச் சேர்ப்ப - நீர் நிறைந்த கடற்கரை நாட்டுக்குத் தலைவனே!
7. பைந்தழை - (அரையில் உடுத்துள்ள) பசிய தழை; கோதை - மாலை.
8. நன்னர் மாலை - நல்ல மாலைப்பொழுது; நெருநை - நேற்று.
9. சில விளங்கு - சிலவாய் விளங்குகின்ற; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; ஞெகிழ - ஞெகிழ்ந்தன.
10. அலவன் - நண்டு; ஆட்டுவோள் - அலைத்து விளையாடுபவள்; ஞெமிர்ந்தன - உடைந்தன.

தோழி கூற்று

நற்றிணை 398 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

முன்னுற உணர்ந்து பகற்குறி வந்து மீளும் தலைமகனை, 'நீதான் இவளது தன்மையை ஆற்றுவி' எனச் சொல்லியது. (முன்னுற உணர்ந்து - தான் பிரியின் தலைவி உயிர் வாழாள் என முன்னமே அறிந்துள்ள தலைவன்.)

கூற்று விளக்கம்

பகற்குறி வந்து திரும்புகின்ற தலைவனிடம், "உன் காதலியிடம், 'மாலை வந்துவிட்டது; செல்வோம்' என்று நாங்கள் கூறினோம். அவள், நீ பிரிந்த தனை நினைந்து அழுது நின்றாள்; அவளை நீயே ஆற்றுவிக்க வேண்டும்" என்று தோழி கூறியது.

உருகெழு தெய்வமும் கரந்துறை இன்றே;
விரிகதிர் ஞாயிறும் குடக்குவாங் கும்மே;
நீர்அலைக் கலைஇய கூழை வடியாச்
சாஅய் அவ்வயிறு அலைப்ப, உடன்இயைந்து,
ஒரை மகளிரும், ஊர்எய் தினரே,
பல்மலர் நறும்பொழில் பழிச்சி, 'யாம்முன்,
சென்மோ, சேயிழை?' என்றனம்; அதன்எதிர்
சொல்லாள் மெல்லியல் சிலவே நல்அகத்து
யாணர் இளமுலை நனைய,
மாண்எழில் மலர்க்கண் தெண்பனி கொளவே.

தெளிவுரை

"அச்சம் தரும் தெய்வமும் வெளிப்பட இயங்கும்; விரிந்த கதிர்களைக் கொண்ட ஞாயிறும் மேலைத்திசையில் சென்று மறையும்; ஓரையாடிய மகளிரும் நீராடியதால் அலைப்புண் டிருந்த கூந்தலைக் கையில் பிடித்து நீரை வடித்தும், தளர்ந்த வாறு அழகிய வயிற்றில் அறைந்துகொண்டும் ஒருசேரக் கூடித் தம் ஊரை அடைவர். இத்தகைய பொழுதிலே யாம் பல்வேறு மலர்களைக் கொண்ட சோலையிலே உன் காதலியைப் பாராட்டி, 'சேயிழாய்! நாங்கள் முன்னே செல்கின்றோம்!' என்று கூறினோம். அதற்கு மறுமொழி கூறாதவளாய் மென்மைத் தன்மை வாய்ந்த உன் காதலி, நல்ல மார்பினிடத்தே புத்தெழில் பெற்றுள்ள இளைய கொங்கைகள் நனையுமாறு, குவளை மலர் போன்ற தன் கண்களிலிருந்து நீரை வடித்து அழுதாள். அவளை நீதான் ஆற்றுவித்தல் வேண்டும்" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! மறுநாள் நீ வரும்வரை பிரிவை ஆற்ற வேண்டுமே என்னும் கவலையால் ஒவ்வொரு நாளும் தலைவி கண்ணீர் வடிக்கின்றாள்; நீதான் அவளை ஆற்றுவிக்க முடியும்.

சொற்பொருள்

1. உருகெழு - அச்சம் பொருந்திய; கரந்துறை இன்று - மறைந்திராது (வெளிப்பட) இயங்கும்.

2. குடக்கு வாங்கும் - மேற்கில் மறையும்.
3. நீர் அலை - நீராடியதால் அலைப்புண்டு; கலைஇய - கலைந்த; கூழை - கூந்தல்; வடியா - வடித்து.
4. சாஅய் - தளர்ச்சியுற்று; அவ்வயிறு - அழகிய வயிறு; அலைப்ப - அறைந்துகொண்டு; இயைந்து - ஒருசேரக் கூடி.
5. ஓரை மகளிர் - ஓரை ஆடிய பெண்கள். (ஓரை - மகளிர் விளையாட்டு களுள் ஒன்று).
6. பழிச்சி - பாராட்டி.
7. சென்மோ - செல்கின்றோம்.

7-8.அதன் எதிர் சொல்லாள் - அதற்கு மறுமொழி எதுவும் கூறாமல்.

8. மெல்லியல் - மென்மைத்தன்மை வாய்ந்த தலைவி; சிலவே - சில சொற்களேனும்; நல்அகத்து - நல்ல மார்பில்.
9. யாணர் - புதிதாய் எழுந்த.
10. மாண்எழில் - மிக்க அழகு படைத்த; தெண்பனி - தெளிந்த நீர்; கொள - நிறைந்து நிற்குமாறு.

தோழி கூற்று

நற்றிணை 389 **காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறி வந்து ஒழுகாநின்ற காலத்துத் தோழி தலைமகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறி வரும் தலைவன் விரைந்து மணம் முடிக்க வேண்டும் என்னும் கருத்தினளாய், 'வேங்கை பூத்துவிட்டதால் தினை அறுக்கப்பட்டுத் தினைக் காவல் முடிவு பெறும். அதனால் நாம் தலைவனுடன் கொண்டுள்ள தொடர்பு என்ன ஆகுமோ?' என்று தலைவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் கூறியது.

வேங்கை யும்புலி ஈன்றன; அருவியும்
தேம்படு நெடுவரை மணியின் மானும்;
அன்னையும் அமர்ந்துநோக் கினளே, என்ஐயும்
களிற்றுமுகம் திறந்த கல்லா விழுத்தொடை

ஏவல் இளையரொடு மாவழிப் பட்டென,
'சிறுகிளி முரணிய பெருங்குரல் ஏனல்
காவல் நீயென் றோளே?' சேவலொடு
சிலம்பில் போகிய சிதர்கால் வாரணம்
முதைச்சுவல் கிளைத்த பூழி, மிகப்பல
நன்பொன் இமைக்கும் நாடனொடு
அன்புறு காமம் அமைந்தநம் தொடர்பே!

தெளிவுரை

தந்தை, யானையின் முகத்தைப் பிளக்குமாறு அம்பெய்யும் ஆற்றலுள்ள இளையருடன் விலங்கு வேட்டைக்குச் சென்றுள்ளான்; தாயும், 'சிறிய கிளிகள் கொய்தழிக்குமாறு பெரிய கதிர்களுடன் விளங்கும் தினைப்புனத்திற்குக் காவலாய்ச் செல்லுங்கள்' என்று நம்மை அனுப்பியுள்ளாள். அன்றுமுதல் நாம் புனத்தைக் காவல் செய்து வருகிறோம். மலையில் கோழி, தன் சேவலுடன் சென்று பழங்கொல்லையின் மேற்புறத்தைக் கிளறியதால் எழும் புழுதி, பொன்னொளி வீசித் தோன்றுகிறது. அத்தகைய மலைநாட்டிற்கு உரியவனுடன் அன்பு பெருகும் காதல் தொடர்பு கொண்டுள்ளோம். அத்தொடர்பு விரைவில் நீங்குமாறு வேங்கை மரங்களும் (மகளிர் அதன் பூக்களைப் பறிக்கப் புலி புலி என்று கூவுமாறு) பூத்துவிட்டன. நெடிய மலையில் அருவியும் நீலமணிபோலத் தெளிந்து விளங்குகின்றது. அன்னையும் எதனாலோ என்னைக் கூர்ந்து நோக்கி நின்றனள். நாம் தலைவனுடன் கொண்ட தொடர்பு என்ன ஆகுமோ எனக் கலங்கி நிற்கிறோம்.

கருத்து

'தலைவியே! தினைக்காவல் முடிவு பெறுதலால் இனிப் பகற்குறியில் தலைவனைக் காண்பது எவ்வாறு?' என்று தோழி தலைவியை வினவுகிறாள்.

விளக்கம்

பகற்குறியிடத்தில் தலைவன் வந்து நிற்கிறான். அவனைப் பாராததுபோல, அவன் கேட்குமாறு தோழி தலைவியிடம் பேசுகிறாள்.

"வேங்கை மலரும் காலத்தில் தினை கொய்வது மரபு. தினை கொய்யப்படின் நாம் வீடு சென்றுவிடுவோம்; தலைவனுடன் கூடுவது தடைப்பட்டுவிடும். அன்னையும் நம் களவொழுக் கத்தை அறிந்திருப்பாள் எனத் தோன்றுகிறது. அதனாற்றான் நம்மை ஒருவகையாய் நோக்குகிறாள். இந்நிலையில் உன்னைத் தலைவன் மணம் புரிந்துகொள்ளுதலே தக்கது" என்பதுபடத் தோழி பேசுகின்றாள்.

குறிப்பு

வேங்கை பூத்திருக்கும்போது அப்பூக்களைப் பறிக்க விரும்பும் மகளிர், அம்மரத்தின் கீழிருந்து, 'புலி புலி' என்று கூவினால், அம்மரம் தாழ்ந்து அவர்கள் பூப்பறிக்க ஏதுவாய் வளைந்து நிற்கும் என்பர்.

இறைச்சி

சேவலுடன் சென்ற கோழி கிளறி எழுப்பிய புழுதிமண்ணும் பொன்போலத் தோன்றும் நாட்டிற்கு உரியவன், தலைவன். இத்தொடர்மூலம், தலைவன் வளமான குடியினனாய் இருந்தும், பெண் வீட்டார் வேண்டும் வரைபொருளைத் தந்து விரைவில் மணந்துகொண்டானிலன் என்னும் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. வேங்கையும் - வேங்கை மரமும்; புலி - மகளிர் 'புலி புலி' என்று கூறும்படியாய்; ஈன்றன - பூத்துள்ளன.
2. தேம்படு - தேன் மிகுந்த; நெடுவரை - நெடிய மலைத்தொடர்; மணி - நீல மணி; மானும் - தோன்றும்.
3. அமர்ந்து - மனம் ஒன்றி, கூர்ந்து; என் ஐ - என் தந்தை.
4. திறந்த - பிளந்த; தொடை - அம்பு.
5. மா - விலங்கு; வழிப்படல் - துரத்திப் பின் செல்லல்.
6. முரணிய - நமக்கு எதிராய்ப் படிந்துண்ணும்; பெருங்குரல் - பெரிய கதிர்; ஏனல் - தினைப்புனம்.
8. சிலம்பு - மலை; சிதர்கால் - வலிய நகங்கள் பொருந்திய கால்; வாரணம் - கோழிப் பேடை.
9. முதை - பழைய கொல்லையின்; சுவல் - மேற்புறம்; பூழி - புழுதி.
10. நன்பொன் - நல்ல பொன் துகள்; இமைக்கும் - மிளிரும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 207 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

'மழையின்மையால் தினை உணங்கும்; விளைய மாட்டா; புனங்காப்பச் சென்று அவரை எதிர்ப்படலாம் என்று எண்ணியிருந்த இது கூடாதாயிற்று' என வெறுத்திருந்த தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

மழையின்மையால் தினைப்புனம் கரியும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் தினைப்புனத்தைக் காவல் செய்யும் நிலை இராது; மேலும், தினைக்காவலைக் காரணமாய்க்கொண்டு அங்கே செல்லவும், தலைவனைக் கூடவும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுமே எனத் தலைவி கவலையுற்றாள். அப்போது தோழி, தலைவியிடம், 'மழை பெய்து புனம் செழிக்கும்; காவலுக்குச் செல்வோம்' என ஆறுதல் கூறியது.

அன்னாய், வாழி!வேண்டு அன்னை! நன்றும்
உணங்கல கொல்லோ, நின்தினையே! உவக்காண்
நிணம்பொதி வழுக்கின் தோன்றும்,
மழைதலை வைத்து,அவர் மணிநெடுங் குன்றே.

தெளிவுரை

"தலைவியே! நீ வாழி! நான் சொல்வதைக் கேள்! (மழை யின்மையால்) தினைப்பயிர் வாடிவிடும் எனக் கருதாதே! அதோ பார்! தசையை மூடியிருக்கும் கொழுப்புப் போன்ற வெண் மேகங்கள், காதலரின் நீலமணியொத்த நெடுமலைமீது கவிந்து தோன்றுகின்றன," (அதனால் மழை பொழியும்; பயிர் விளையும்; காவல் தொடரும்; அவரைக் காண்பதும் உறுதி) எனத் தலைவியைத் தேற்றுகிறாள், தோழி.

கருத்து

தலைவனைக் காணவியலாது என்று வருந்தியிருக்கும் தலைவியிடம், 'தலைவனது மலையில் முகில் கவிழ்ந்துள்ளது; மழை பெய்வது உறுதி; அதனால் புனம் செழிக்கும்; நாமும் காவலுக்குச் செல்வோம்; தலைவனைக் காண்போம்' என்கிறாள், தோழி.

உவமை

நீலமணிபோலும் மலை உச்சியில் மேகங்கள் படிந்திருப்பது, இறைச்சித்துண்டினைக் கொழுப்பு மூடியிருப்பதுபோலுள்ளது.

உள்ளுறை

'அவர் மலையில் பொழியும் மழையாலே நம் தினைப்பயிர் பிழைக்கும் என்பதாம். இத்தொடர்மூலம், தலைவன் அருளுதலாலே தலைவியும் மனையறம் பேணிச் சிறப்படைவாள்' என்னும் உள்ளுறை பெறப்படுகிறது.

சொற்பொருள்

2. **உணங்கல் - உலருதல், வாடுதல்; உவக்காண் - அதோ பார்.**
3. **நிணம் - தசை; பொதி - மூடியிருக்கும்; வழுக்கு - கொழுப்பு.**
4. **மழை - மேகம்; தலைவைத்து - உச்சியிலே கொண்டுள்ளது; மணி நெடுங்குன்று - நீலமணிபோலும் நெடுமலை.**

தோழி கூற்று

குறுந்தொகை 113 **மாதிரத்தன்**

தினை : மருதம்

கூற்று

பகற்குறி நேர்ந்த தலைமகற்குக் குறிப்பினால் குறியிடம் பெயர்த்துச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பகற்போதில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் தலைவியைக் கூடி இன்புறுவது வழக்கமாயிருந்தது. அந்த இடத்தை மாற்றி, மாற்றப்பட்ட இடம் எங்குள்ளது என்பதைத் தோழி தலைவனிடம் சொல்லியது.

ஊர்க்கும் அணித்தே, பொய்கை; பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே, சிறுகான் யாறே;
இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்
துன்னல்போ கின்றால், பொழிலே; யாம்எம்
கூழைக்கு எருமண் கொணர்கம் சேறும்;
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.

தெளிவுரை

தலைவ! பொய்கை ஒன்று ஊர்க்கு மிகவும் அண்மையில் உள்ளது; சிறிய காட்டாறு ஒன்று அப்பொய்கைக்குச் சிறிது தொலைவிலேயே உள்ளது. அவ்வாற்றின் கரையில் ஒரு பொழில் உண்டு. இரைதேடித் திரியும் வெண்கொக்குத் தவிர வேறு எவ்வுயிரும் அப்பொழிலில் நுழைவதில்லை. நாங்கள் எம் கூந்தலின் அழுக்கைப் போக்க உவர் மண் எடுத்துவர அவ்வாற்றுக்குச் செல்வோம். பேதைமை கொண்ட எங்கள் தலைவியும் அவ்விடத்திற்கு வருவாள்.

கருத்து

பகற்குறி இடத்தைப் பெயர்த்துச் சுட்டி, 'நீயும் அங்கு வருக' எனத் தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

குறிப்பு

ஆற்றங்கரையில் உள்ள தனிமை நிறைந்த சோலையைத் தலைவனுக்குப் பகற்குறி இடமாய்க் காட்டுகிறாள், தோழி!

முன்னர்ச் சந்தித்த இடத்தே களவு வெளிப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டதால் குறியிடத்தை மாற்றிக் குறிப்பிடுகின்றாள்.

சொற்பொருள்

1. அணித்து - அண்மையில் உள்ளது; பொய்கை - குளம்.
2. சேய்த்தும் அன்று - நெடுந்தொலைவில் இருப்பதும் அன்று (சிறிது தொலைவிலேயே உள்ளது); சிறுகான் யாறு - சிறிய காட்டாறு.
3. இரை தேர் - இரை தேடும்; குருகு - நாரை; யாவதும் - எந்த உயிரும்;
4. துன்னல் போகின்று - நெருங்குதல் அரிது; பொழில் - சோலை.
5. கூழை - கூந்தல்; எருமண் - கூந்தலில் உள்ள அழுக்கை நீக்கப் பயன்படுத்தும் ஆற்றோரத்திலுள்ள வண்டல் மண் (உவர் மண்); கொணர்கம் - எடுத்து வர; சேறும் - செல்வோம்.
6. ஆண்டு - அங்கே; பெரும் பேதை - பேதைமை கொண்ட தலைவி.

தோழி கூற்று

அகநானூறு 90 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்து கண்ணுற்று நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு நின்று இற்செறிப்பு அறிவுறீஇயது.

(இற்செறிப்பு - தலைவியின் தோற்ற மாறுபாடு கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், தலைவி தன் இல்லத்தைவிட்டு விளையாடல் முதனானவற்றிற்கு வெளியே செல்ல இயலாதவாறு, செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்தல்.)

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்ளும் விருப்பமின்றிக் களவு ஒழுக்கத்திலேயே நாட்டமுள்ளவனாய் நாளும் பகற்குறியிலே வந்து மீளும் தலைவனை, தோழி ஒரு நாள் எதிர்ப்பட்டு, உறவினர் தலைவியை இல்லக்காவலில் வைத்துள்ள செய்தியை உணர்த்தி, மணந்துகொள்ளுமாறு வேண்டுதல்.

மூத்தோர் அன்ன வெண்தலைப் புணரி
இளையோர் ஆடும் வரிமனை சிதைக்கும்
தளைஅவிழ் தாழைக் கானல்அம் பெருந்துறை,
சில்செவித்து ஆகிய புணர்ச்சி அலர்எழ,
இல்வயின் செறித்தமை அறியாய்; பல்நாள்
வருமுலை வருத்தா அம்பகட்டு மார்பில்,
தெருமரல் உள்ளமொடு வருந்தும், நின்வயின்,
நீங்குக என்றுயான் யாங்ஙனம் மொழிகோ,
அருந்திறல் கடவுள் செல்லூர்க் குணாஅது
பெருங்கடல் முழக்கிற்று ஆகி, யாணர்,
இரும்புஇடம் படுத்த வடுவுடை முகத்தர்,
கருங்கண் கோசர் நியமம் ஆயினும்,
'உறும்'எனக் கொள்ளுநர் அல்லர்–
நறுநுதல் அரிவை பாசிழை விலையே.

தெளிவுரை

தலைவ! முதியோரின் தலையைப் போன்று வெண்மையான அலைகளைக் கொண்ட கடல், இளமகளிர் வண்டல் மண்ணால் கட்டிய சிறு வீடுகளை அழிக்கும். மடல் விரிந்து வளரும் தாழை மரங்களுள்ள அக்கடற்கரைச்சோலையில் சிலர் மட்டுமே அறிந்த உங்கள் களவொழுக்கமானது பலர் அறிய அலராகிய தால் தலைவியை வீட்டுக்காவலில் வைத்ததை நீ அறியாய்!

அழகிய பெருமை பொருந்திய உன் மார்பினால், வளரும் முலையினைக் கொண்டுள்ள எம் தலைவியைத் தழுவப் பல நாள் வந்து வந்து செல்லும் உன்னிடம், 'இக்களவொழுக்கத் தினின்றும் நீங்குக' என்று நான் எவ்வாறு கூற இயலும்?

தலைவியைப் பெற்றோர், நறிய நுதலினைக் கொண்ட இவளின் பசிய அணிகலன்களுக்கு விலையாய், அரிய தெய்வங் களுள்ள செல்லூருக்குக் கிழக்கே, கடல்போலும் ஆரவாரம் மிக்கதும், படைக்கலப்பெருமை வாய்ந்ததும், வீரம் மிக்க கோசர்களுக்குச் சொந்தமானதுமான புதுப்புது வருவாயினைப் பெறும் நியமம் என்னும் ஊரையே தந்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

கருத்து

தலைவியை அவள் பெற்றோர் இல்லக்காவலில் வைத்துள்ளனர்; ஆதலின், நீ அவளைக் காண இயலாது. மனம் நிறைவடையும்படியான பரிசத்துடன் அவளை வரைய முற்படு.

விளக்கம்

தலைவ! கடற்கரைச்சோலையிடத்தே சிலர் மட்டுமே அறியும் படி நிகழ்ந்த உம் களவுப்புணர்ச்சி, பலர் அறிய அலராகியதால் தலைவியை அவள் இல்லத்தார் இற்செறிப்புச் செய்துவிட்டனர்.

அதனால், 'இக்களவொழுக்கத்தினை விட்டுவிடு' என உம்மிடம் எங்ஙனம் கூற இயலும்?

தலைவியைப் பெற்றோர் அவளுடைய பசிய அணிகலன் களுக்கு விலையாய்க் கோசர்கள் வாழும் நியமம் எனும் வருவாய் மிக்க இடத்தையே தந்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஆகுவே, தக்க பரிசத்துடன் மணம் பேச வருக!

சொற்பொருள்

1. மூத்தோர் - முதியோர்; தலை - உச்சி; புணரி - கடல்.
2. வரிமனை - மகளிர் விளையாடும் வண்டல் மனை; சிதைக்கும் - அழிக்கும்.
3. தளை அவிழ் - கட்டு விரிந்த; தாழை - தாழை மரம்.
4. சில் செவித்து ஆகிய - மிகச்சிலர் மட்டுமே அறிந்த; புணர்ச்சி - (உங்கள் களவொழுக்கக்) கூட்டம்; அலர் - பழிச்சொல்.
5. இல்வயின் செறித்தல் - வீட்டினுள்ளேயே இருக்குமாறு செய்தல்.
6. அம் பகட்டு மார்பில் - பெருமைமிக்க உன் அழகிய மார்பினால்; வருமுலை - வளரும் முலை (யினைக் கொண்ட தலைவியை); வருத்தா - வருத்தி.
7. தெருமரல் - கலங்குதல்; நின்வயின் - உன் இடம்.
8. நீங்குக - (இக்களவொழுக்கத்தினின்றும்) நீங்கியிரு; யாங்ஙனம் - எவ்வாறு?
9. செல்லூர் - ஓர் ஊர்; குணாஅது - கிழக்கு.
10. முழக்கிற்று ஆகி - ஆரவாரம் மிக்கதாகிய; யாணர் - புது வருவாய்.
11. இரும்பு - படைக்கலம்; இடம்படுத்த - உண்டாக்கிய.
12. கோசர் - ஓர் இனத்தவர்; நியமம் - (கோசர்களது) ஊர்.
13. உறும் - அமையும்; கொள்ளுநர் - கொள்ளுபவர்.
14. அரிவை - பெண் (தலைவி); பாசிழை - பசிய அணிகலன்; விலை - விலையாய்.

தோழி கூற்று

குறுந்தொகை 294 **அஞ்சில் ஆந்தையார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிக்கண் தலைமகன் வந்தவிடத்துத் தோழி, செறிப்பு அறிவுறீஇயது.

கூற்று விளக்கம்

பகற்குறி இடத்தில் தலைவன் வந்து ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்றான். தோழி, அவன் காதில் விழும்படி தலைவியிடம், 'நீ வீட்டுக்காவலில் வைக்கப்படுவாய்' என்னும் செய்தியைச் சொல்லியது.

கடல்உடன் ஆடியும், கானல் அல்கியும்,
தொடலை ஆயமொடு தழுவணி அயர்ந்தும்,
நொதுமலர் போலக் கதுமென வந்து,
முயங்கினன் செலினே, அலர்ந்தன்று மன்னே;
துத்திப் பாந்தள் பைத்துஅகல் அல்குல்
திருந்துஇழைத் துயல்வுக்கோட்டு அசைத்த பசுங்குழைத்
தழையினும், உழையின் போகான்;
தான்தந் தனன்,யாய் காத்துஓம் பல்லே.

தெளிவுரை

"கடலில் பலருடன் சேர்ந்து ஆடியும், கானற்சோலையில் தங்கியும், மாலையணிந்த மகளிர் கூட்டத்தோடு குரவைக்கூத்து ஆடியுமிருப்போம். அக்காலத்தே, அயலாரைப்போலத் தலைவன் திடீரென வந்து தழுவிச் சென்றதால் எல்லோரும் அலர் தூற்றலாயினர். இப்போதோ, திருத்தமுறச்செய்யப்பட்ட அணிகலன்கள் அசைதலைக் கொண்ட, புள்ளிகள் பொருந்திய, பாம்புப்படத்தைப் போல விரிந்து அகன்ற அல்குலினுக்குப் பக்கத்தே கட்டப்பட்டுள்ள பசுமையான தளிரால் செய்யப் பட்ட தழையுடையினைக் காட்டிலும் நம்முடன் நெருக்கமா யிருந்து அகன்று போகாதவனாயுள்ளான். அதனால், தாய் நம்மை இற்செறித்துக் காவல் செய்வாள். தலைவன் இக் காவலையே நமக்குத் தந்துள்ளான்" என்று, தலைவன் காதில் விழுமாறு தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

கருத்து

'தலைவியே! தலைவனோடு கொண்டுள்ள நட்பு நமக்கு வீட்டுக் காவலையே தந்துள்ளது.'

விளக்கம்

நாம் பல மகளிரொடு கூடிக் கடலில் நீராடியும், பொழிலில் தங்கியும், குரவைக்கூத்து ஆடியுமிருந்த காலத்தில் அயலானைப் போலத் தலைவன் வந்து சென்றதால் அலருண்டாயிற்று. இப்போது, தலைவன் எப்போதும் நம் உடனிருப்பதைத் தாய் அறிந்தாள்; இனி அவள் நம்மை இல்லக்காவலில் வைப்பாள்; தலைவன் அன்பு நமக்கு இதைத்தான் தந்துள்ளது.

சொற்பொருள்

1. உடன் - ஒன்றுசேர்ந்து; அல்கியும் - தங்கியும்.
2. தொடலை - மாலை; ஆயம் - தோழியர் கூட்டம்; தழுவணி - தழுவி ஆடும் குரவைக்கூத்து; அயர்தல் - ஆடுதல்.
3. நொதுமலர் - அயலார்; கதுமென - விரைவாய்.
4. முயங்குதல் - தழுவுதல்; செலினே - சென்றானானதால்; அலர்ந்தன்று - அலருண்டாயிற்று.
5. துத்தி - தேமல் புள்ளிகள்; பாந்தள் - பாம்புப்படம்; பைத்து அகல் - விரிந்து அகன்ற.
6. திருந்து இழை - திருத்தமுறச் செய்யப்பட்ட அணிகலன்கள்; துயல்வு - அசைதல்; அசைத்த - கட்டிய; பசுங்குழை - பசிய தளிர்கள்.
7. தழை - தழையுடை; உழையின் - அண்மையிலிருந்து.
8. தான் - தலைவன்; யாய் - தாய்; காத்து ஓம்பல் - இற்செறித்துக் காவல் செய்தல்.

தலைவி கூற்று

நற்றிணை 287 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி களவுறவு கொண்டிருப்பாளோ என ஐயுற்றதனால் அவளை இல்லத்தை விட்டு வெளியே செல்லாது காவல் செய்தனர். அதனால் தன் நெஞ்சு மிகவும் நோவதை அவள், தன் தோழியிடம் கூறியது.

'விசும்புஉறழ் புரிசை வெம்ப முற்றிப்
பைங்கண் யானை வேந்துபுறத்து இறுத்த
நல்எயி லுடையோர் உடையம்' என்னும்
பெருந்தகை மறவன் போலக் கொடுங்கழிப்
பாசடை நெய்தல் பனிநீர்ச் சேர்ப்பன்,
நாம முதலை நடுங்குபகை அஞ்சான்,

காமம் பெருமையின், வந்த ஞான்றை
அருகாது ஆகிய வன்கண் நெஞ்சம்
நள்ளென் கங்குல் புள்ஒலி கேட்டொறும்
தேர்மணித் தெள்இசை கொல்ல,
ஊர்மடி கங்குலும் துயில்மறந் ததுவே.

தெளிவுரை

வானத்தைத் தோய்வது போன்று உயரமாய் அமைந்த கோட்டைப்புறமதிலைச் சூழ்ந்து முற்றுகையிட்டனன், பசிய கண்கள் வாய்ந்த யானைப்படையினைக் கொண்ட பகை மன்னன். அதுகாறும், 'வலிமையமைந்த கோட்டையைப் பகைவர் கைப்பற்றாதபடி காத்து நிற்கும் மதில்காவல் செய்பவரான சிறந்த வீரரை நாம் பெற்றிருக்கின்றோம்' என்று செருக்கிக் கூறிக் கொண்டிருந்தான், பெரிய தகைமையாளனாகிய மறவர்குடித் தலைவன்.

அவனைப் போலவே நானும், வளைந்த கழியிடத்துப் பசிய இலைகளைக்கொண்ட நெய்தல்கள் மிகுந்திருக்கும் குளிர்ந்த கடல்நிலத்தவனாகிய நம் தலைவன், அச்சத்தைச் செய்கின்ற முதலைகளுக்கும் அஞ்சாதவனாய் நம்மீது கொண்டுள்ள காதலின் மிகுதியால் நம்மைத் தேடி வந்தபொழுது உறுதி கொண்ட நெஞ்சினோடு இருந்தேன்!

ஆனால், இப்போதோ, நள்ளென்னும் இரவுப்போதிலே ஆரவாரிக்கும் புள்ளொலியைக் கேட்கும் போதெல்லாம், அது நம் தலைவனின் தேரில் கட்டப்பட்டுள்ள மணிகளின் தெளிந்த ஓசை என என் மனம் மயங்குகிறது; ஊராரெல்லாம் உறங்கியிருக்கும் இந்த இரவுப்போதிலும் என் கண்கள் துயில் கொள்ளுதலை மறந்துவிட்டன.

கருத்து

"தோழியே! காவல் மிகுதியால் காதலனைக் காண இயலவில்லை; கண்களும் உறக்கம் துறந்தன" என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

விளக்கம்

'வானுற உயர்ந்த மதிற்புறத்தே வேந்தன் ஒருவன் போந்து முற்றுகை இட்டான். அதுவரை கோட்டையுள்ளிருந்த பெரு

மறவன், 'மதிலை விடாது காக்கும் வலிமைமிக்க படையுடை யேம்' எனப் பெருமிதத்தோடு கூறிக்கொண்டிருந்தான். அது போல, உப்பங்கழியில் வாழும் முதலையாகிய பகைக்குஞ்சாது தலைவன் வந்த போதெல்லாம் உறுதி கொண்ட நெஞ்சினோடு இருந்தேன். இப்போது அவனைக் காண இயலாது இல்லக் காவலில் இருப்பதால் இரவில் புள்ளினத்தின் ஒலியைக் கேட்கும்போதெல்லாம், அது நம் தலைவன் தேரில் கட்டப் பட்டுள்ள மணிகளின் ஒலியெனக் கருதி நள்ளிரவிலும் கண்ணுறக்கம் பெறாது வருந்தியிருக்கிறேன்.

சொற்பொருள்

1. விசும்பு உறழ் - வானத்தில் தோயும்; புரிசை - கோட்டை; வெம்ப - வருந்த; முற்றி - முற்றுகையிட்டு.
2. வேந்து - அரசன்; புறத்து இறுத்த - வெளியே தங்க.
3. எயில் - கோட்டை.
4. கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி.
5. பாசடை - பசிய இலை; சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்.
6. நாமம் - அச்சம்.
7. ஞான்றை - பொழுது.
8. அருகாது - அஞ்சாது.
9. நள்ளென் கங்குல் - நடு யாம இரவு; புள் - பறவை.
10. தெள்இசை - தெளிந்த இசை.
11. ஊர் மடி - ஊர் துயிலும்; கங்குல் - இரவு; துயில் - தூக்கம்.

தலைவன் கூற்று

நற்றிணை 319 **வினைத்தொழில் சோகீரனார்**

திணை : நெய்தல்

கூற்று

காப்பு மிகுதிக்கண் ஆற்றானாகிய தலைமகன், தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பெற்ற தாய் தலைவியின் களவொழுக்கத்தை அறிந்து, அவளை இல்லத்தில் கடுமையான காவலுக்குட்படுத்தினாள். அதனை

அறிந்த தலைவன், நள்ளிரவிலும் துயில் பெறாதவனாய் வருந்தித் தன் உள்ளத்தினிடம் கூறியது.

ஓதமும் ஒலிஓ வின்றே, ஊதையும்
தாதுஉளர் கானல் தவ்வென் றன்றே,
மணல்மலி மூதூர் அகல்நெடுந் தெருவில்,
கூகைச் சேவல் குராலோடு ஏறி,
ஆர்இருஞ் சதுக்கத்து அஞ்சுவரக் குழறும்,
அணங்குகால் கிளரும், மயங்குஇருள் நடுநாள்;
பாவை அன்ன பலர்ஆய் வனப்பின்,
தடமென் பணைத்தோள், மடம்மிகு குறுமகள்
சுணங்குஅணி வனமுலை முயங்கல் உள்ளி,
மீன்கண் துஞ்சும் பொழுதும்,
யான்கண் துஞ்சேன்; யாதுகொல் நிலையே?

தெளிவுரை

கடலின் ஒலியும் அடங்கிவிட்டது. மகரந்தத்தைப் பரப்பும் கடற்கரைச்சோலையும் ஊதைக்காற்றால் பொலிவிழந்து விட்டது. இப்பழைய ஊரில் உள்ள அகன்ற நீண்ட தெருவிலே, கோட்டான் சேவல் தன் பெண் பறவையோடு சென்று, மக்கள் புழக்கமில்லாத பெரிய நாற்சந்தி கூடுமிடத்தில், அனைவருக்கும் அச்சம் உண்டாகும்படி கத்தும். பேய்களும் வெளிப்பட்டு எம்மருங்கும் உலவியபடி இருக்கும். ஒருவரையொருவர் அறிதற்கு இயலாத வகையில் இருளும் அடர்ந்திருக்கும். இத்தகைய நள்ளிரவில், கொல்லிப்பாவை போன்றதும், பலராலும் ஆராயப்படுகின்ற பேரழகையும், அகன்ற மெல்லிய பருத்த தோள்களையும் கொண்டவளான இளமடந்தையினது தேமல் படர்ந்த மார்பைத் தழுவுதலைக் கருதியவனாய், மீன் களும் உறங்கும் இந்த இரவுப்பொழுதிலும் நான் உறங்காதிருக் கின்றேன். ஆதலின், இனி என் நிலை என்ன ஆகுமோ? அறியேன்.

கருத்து

'தலைவி இல்லக்காவலில் இருப்பதால் அவளைக் காண இயலாது நள்ளிரவிலும் உறக்கமின்றி இருக்கிறேன்' எனத் தலைவன் வருத்த முறுகிறான்.

விளக்கம்

"கடலின் ஓசையும் அடங்கியது; ஊதைக்காற்று அலைத்தலால் பூவும் தாதும் உதிர்ந்தமையால் கானற்சோலையும் பொலிவிழந்தது. இம்மூதூரின் அகன்ற சதுக்கத்தில், எவர்க்கும் அச்சமுண்டாகும்படி கூகை தன் பேடையோடு குழறுகிறது. பேய்கள் இயங்கும் இந்த நள்ளிரவில் தலைவியை முயங்க எண்ணி, மீன்களும் கண்ணுறங்கும் இப்பொழுதிலும் உறக்கமில்லாதவனாய் இருக்கிறேன். என் நிலை இனி என்னாகுமோ?" எனத் தலைவன் ஏங்கிக் கூறினான்.

சொற்பொருள்

1. ஓதம் - கடல்; ஓவின்று - அடங்கிவிட்டது; ஊதை - ஊதைக்காற்று.
2. தாது - பூந்தாது; தவ்வென்றன்றே - பொலிவிழந்தது.
3. மலி - மிகுந்த; மூதூர் - முதுமையான ஊர்.
4. கூகை - கோட்டான்; குரால் - கோட்டானது பெட்டை.
5. சதுக்கம் - நாற்சந்தி.
6. அணங்கு - பேய்; கால் கிளர்தல் - வெளிப்பட்டு உலவுதல்.
7. பாவை - கொல்லிப்பாவை.
8. மடம்மிகு - இளமை மிக்க.
9. சுணங்கு - தேமல்; முயங்கல் - தழுவுதல்; உள்ளி - நினைந்து.

தோழி கூற்று

குறுந்தொகை 335 **இருந்தையூர்க் கொற்றன் புலவன்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி நயவாமைத் தோழி செறிப்பு அறிவுறீஇயது. (நயவாமை - விரும்பாதபடி.)

கூற்று விளக்கம்

தலைவியைப் பகலில் சந்திக்க இயலாத நிலை தலைவனுக்கு ஏற்பட்டது. அப்போது, தலைவன் தோழியிடம், தான் தலைவியை இரவுக்குறியில் காண விரும்புவதாய் வேண்டிக்கொண்டபோது தோழி, இரவுக்குறி இயலாதது என்பதை உரைத்தது.

நிரைவளை முன்கை நேர்இழை மகளிர்
இருங்கல் வியல்அறைச் செந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்வுஇடை நோக்கிச் சினைஇழிந்து,
பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்
வெற்புஇடை நண்ணி யதுவே வார்கோல்
வல்விற் கானவர் தங்கைப்
பெருந்தோள் கொடிச்சி இருந்த ஊரே.

தெளிவுரை

"பெரிய தோள்சுளைக் கொண்ட தலைவி, நீண்ட அம்பையும் வலிய வில்லையுமுடைய வேட்டுவருக்குத் தங்கை. அவள் வாழும் ஊர் பெரிய மலையினிடையே இருக்கின்றது. அம்மலையில் குரங்குகள் நிறைந்திருக்கின்றன. வரிசையாய் முன்கையிலே வளையல்களையும், அழகான அணிகலன்களையும் அணிந்துள்ள மகளிர், மலையில் அகன்ற பாறையில், செந்நிறத் தினையைப் பரப்பிக் காய வைத்துவிட்டுச் சுனைநீரில் நீராட இறங்கிச் செல்வர். இந்த இடைவெளியில், மரக்கிளைகளில் இருக்கும் பெண்குரங்குகள் தம் குட்டிகளுடன் இறங்கி வந்து, காவலின்றிக் காய வைக்கப்பட்டிருக்கும் தினைகளைக் கவர்ந்து செல்லும். இத்தகைய மலையிடையேதான் தலைவியின் ஊர் உள்ளது" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! தலைவியின் ஊரும் நெருங்குதற்கரியது; அவள் தமையன்மாரும் வலிய விற்படையினர். எனவே, இரவுக்குறி இயலாத ஒன்று.

விளக்கம்

தலைவியின் ஊரோ மலையிடையே இருக்கின்றது; நெருங்குதற்கு அரியது. அவள் அண்ணன்மார்களோ நீண்ட அம்புகளையும் வலிய வில்லையும் உடையவர். உன்னை அவர்கள் கண்டால் பெருங்கேடு விளையும். ஆதலால், இரவில் வந்து நீ தலைவியைக் காண்பது இயலாது.

சொற்பொருள்

1. நிரைவளை - வரிசையான வளையல்; நேர்இழை - அழகான அணிகலன்.

2. இருங்கல் - பெரிய மலை; வியல் அறை - அகன்ற பாறை; செந்தினை - செந்நிறத் தினை.
3. சுனைபாய் - சுனையிலே இறங்கி நீராடுகின்ற; சோர்வு இடை நோக்கி - காவலற்ற நேரத்தைப் பார்த்து; சினை - கிளை; இழிந்து - இறங்கி.
4. பைங்கண் - பசுமையான கண்களைக் கொண்ட; மந்தி - பெண்குரங்கு; பார்ப்பு - குட்டி; கவரும் - கவர்ந்து செல்லும்.
5. வெற்பு இடை - மலையிடையே; நண்ணியது - அமைந்தது; வார் கோல் - நீண்ட அம்பு.
6. வல்வில் - வலிமையான வில்; கானவர் - வேடர்கள்.
7. கொடிச்சி - குறிஞ்சிநிலத் தலைவி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 279 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வேண்டுந் தலைமகனைத் தோழி வரவருமை கூறி மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியில் தலைவியைக் காணக் குறியிடத்தைக் குறிப்பிடுமாறு தோழியிடம் வேண்டினான். அவனிடம் தம் ஊர்க்கு வருதல் இயலாது என்று கூறித் தோழி இரவுக்குறியை மறுத்துக் கூறுவது.

கல்இவர் இற்றி புல்லுவன ஏறிக்
குளவி மேய்ந்த மந்தி துணையொடு
வரைமிசை உகளும் நாட! நீவரின்,
கல்அகத் ததுஎம் ஊரே;
5 அம்பல் சேரி அலராங் கட்டே.

தெளிவுரை

மலையினைத் தன் வேரால் பற்றிக்கொண்டு வளரும் இற்றி மரத்தினைப் பிடித்து, அதன் மேலேறி, அங்குப் படர்ந் திருக்கும் காட்டுமல்லிகையின் துளிர்களை மேய்ந்து, மந்தி தன்

துணையுடன் துள்ளிக் குதித்து விளையாடுகின்ற நாட்டை உடையவனே! நான்கு திசைகளிலும் சூழ்ந்துள்ள மலைகளுக்கு நடுவே எங்கள் ஊர் உள்ளது; அன்றியும், அங்குள்ள சேரி, அலர் கூறும் மக்களைக் கொண்டது.

கருத்து

'பிறர் பழி தூற்றும் மக்கள் வாழும் சேரி, எம் ஊர்; அதனாலே நீ அங்கு வருதல் இயலாது; ஊரைச் சுற்றி மலை சூழ்ந்துள்ளதால் வரும் வழியும் துன்பமிக்கது' எனக் கூறித் தோழி இரவுக்குறி மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. கல்இவர் - கற்களைப் பற்றி வேர் ஓடும்; இற்றி - இற்றி மரம்; புல்லுவன - தழுவிக்கொள்வனவாய்.
2. குளவி - காட்டுமல்லிகை; மந்தி - பெண்குரங்கு.
3. வரைமிசை - மலையின்மேல்; உகளும் - துள்ளி விளையாடும்.
4. கல்அகத்தது - மலைகளுக்கு இடையே உள்ளது.
5. அம்பல் - முணுமுணுத்தல்; அலராங்கட்டே - அலர் பேசுவோர் வாழும் இடத்தைக் கொண்டது; கட்டு - கண்+து (கண்ணது) - இடத்தது.

தோழி கூற்று

குறுந்தொகை 336 **குன்றியனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் இரவுக்குறி நயந்தானைத் தோழி சொல்லி மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறி வேண்டியபோது தோழி, 'நீ இரவில் வருதல் கூடாது; அதனால் இவள் வருந்துவாள்' என்று தலைவனின் வேண்டுகோளை மறுத்துக் கூறியது.

செறுவர்க்கு உவகை ஆக, தெறுவர,
ஈங்கனம் வருபவோ? தேம்பாய் துறைவ!
சிறுநா ஒண்மணி விளரி ஆர்ப்பக்

கடுமா நெடுந்தேர் நேமி போகிய
5. இருங்கழி நெய்தல் போல,
வருந்தினள், அளியள்,நீ பிரிந்திசி னோளே.

தெளிவுரை

தேன்பாய் துறைவ! உம் பகைவர்க்கு மகிழ்வுண்டாகுமாறும், எமக்கு வருத்தமுண்டாகுமாறும் இங்கே நீ இரவில் வரலாமா? சிறிய நாவினைக் கொண்ட ஒள்ளிய மணிகள் விளரிப் பண்ணைப்போல் ஒலிக்க, விரைந்து செல்லும் குதிரை பூட்டப் பட்ட தேரின் சக்கரம் ஏறிச் செல்வதால் கருநிறக் கழியில் உள்ள நீலமலர் சிதைந்ததுபோலத் தலைவி வருந்தியுள்ளாள். அதனால் அவள் இரங்கத்தக்கவள்.

கருத்து

'நீ இரவில் வருதலை நினைந்து தலைவி வேதனைப்படுகிறாள்; அதனால் வரவேண்டா' எனத் தலைவனிடம் கூறித் தோழி இரவுக்குறி மறுத்தாள்.

குறிப்பு

உன் தேர் வந்து போவதால் கழியிடத்து நெய்தல் சிதைவதுபோல உன்னால் அருள் செய்யப்பெற்றுக் கைவிடப்பட்ட தலைவியும் சிதைந்து உயிரழிவாள். ஆதலால், அவள் இரங்கத்தக்கவளானாள் என்கிறாள், தோழி.

'நீ இரவிலே தலைவினையத் தேடி வருதலால், வழியிலே உனக்குத் துன்பம் நேரலாம். அஃது உன் பகைவர்க்கு மகிழ்ச்சியைத் தரும். உன் பகைவர்க்கு மகிழ்வளிக்கும் செயலை நீ செய்யலாமா?' என்று தோழி தலைவனிடம் வினவுகிறாள்.

சொற்பொருள்

1. செறுவர் - பகைவர்; தெறுவர - (எமக்கு) வருத்தமுண்டாகும்படி.
2. ஈங்கனம் - இவ்வாறு.
3. விளரி ஆர்ப்ப - விளரிப்பண்ணைப் போல ஒலிப்ப.
4. கடுமா - விரைந்து செல்லும் குதிரை; நேமி - தேர்ச்சக்கரம்.
6. அளியள் - இரங்கத்தக்கவள்.

தோழி கூற்று

நற்றிணை 168 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி இரவுக்குறி மறுத்தது.

கூற்று விளக்கம்

'தலைவனே! இவள் உயிர் வருந்தும்வண்ணம் இரவிலே நீ வருவது பண்பாகாது' எனத் தோழி தலைவனிடம் கூறி, இரவுக்குறி மறுத்தது.

சுரும்புஉண விரிந்த கருங்கால் வேங்கைப்
பெருஞ்சினைத் தொடுத்த கொழுங்கண் இறாஅல்,
புள்ளுற்றுக் கசிந்த தீந்தேன் கல்அளைக்
குறக்குறு மாக்கள் உண்ட மிச்சிலைப்
புன்தலை மந்தி வன்பறழ் நக்கும்
நன்மலை நாட! பண்புஎனப் படுமோ?
நின்நயந்து உறைவி இன்உயிர் உள்ளாய்,
அணங்குடை அரவின் ஆர்இருள் நடுநாள்
மைபடு சிறுநெறி எஃகுதுணை ஆக
ஆரம் கமழும் மார்பினை,
சாரல் சிறுகுடி ஈங்குநீ வரலே.

தெளிவுரை

கரிய அடியைக்கொண்ட வேங்கை மரத்தில் வண்டுகள் உண்ணுமாறு மலர்கள் பூத்துள்ளன. அதன் பெரிய கிளையிலே தொடுக்கப்பட்டுள்ள தேனடைகளிலிருந்து தேன் கசிந்து கீழேயுள்ள கல்லின் குழிகளிலே வடியும். குறவரின் இளமக்கள் அதனை உண்பர். அவர்கள் உண்டு எஞ்சியதை, மென்மையான தலையைக் கொண்ட மந்தியின் குட்டிகள் உண்ணும். அத்தகைய நல்ல மலைநாட்டுத் தலைவனே! உன்னை விரும்பி வாழும் இத்தலைவியின் உயிர்படுகின்ற துன்பத்தை நீ கருதவில்லை. வருத்துகின்ற பாம்புகள் மிகுதியாய் இயங்கும் நள்ளிரவுப் போதிலே, மயக்கம் தருகின்ற சிறு வழியில், உன் கையில் ஏந்திய வேலையே துணையாய்க்கொண்டு, சந்தனம் பூசப்பெற்ற மணங்

கமழும் மார்பினைக் கொண்டவனாய், மலைச்சாரலிலுள்ள இச்சிறுகுடிக்கு நீ தனியே வருதல் நன்றாகாது. ஆகவே, இனி இரவில் வாராதே!

கருத்து

'தலைவ! கொடிய காட்டுவழியில் இனி இரவில் வாராதே!' எனக் கூறித் தோழி இரவுக்குறி மறுக்கிறாள்.

குறிப்பு

எஃகினாலான வேலினைத் துணையாய்க்கொண்டு வருவதை விடுத்துச் சான்றோர் துணையுடன் வரைவொடு வருதலே முறையாகும் என்பதைத் தோழி நயம்பட எடுத்துரைக்கிறாள்.

சொற்பொருள்

1. சுரும்பு - வண்டுகள்; உண - உண்ணுமாறு; விரிந்த - பூக்கள் மலர்ந்த.
2. கொழுங்கண் - கொழுவிய கண்; இறாஅல் - தேனடை.
3. புள் - தேனீக்கள்; உற்று - நெருக்குதலால் (கிழிந்து); அளை - குழி.
4. மிச்சிலை - எஞ்சியதை.
5. வன்பறழ் - வலிய குட்டி.
7. நின் நயந்து - உன்னை விரும்பி; உறைவி - உறைபவள், வாழும்; இன்உயிர் - (தலைவியின்) இனிய உயிர்க்கு; உள்ளாய் - (உண்டாகும் தீங்கினை) எண்ணாய்.
8. அணங்குடை - வருத்துகின்ற; ஆர்இருள் - நிறைந்த இருள்; நடுநாள் - நள்ளிரவு.
9. மைபடு - மயக்கம் தருகின்ற; எஃகு - வேல்.
10. ஆரம் - சந்தனம்; கமழும் - மணம் வீசும்.
11. சிறுகுடி ஈங்கு நீ வரல் பண்பு எனப்படுமோ?

தோழி கூற்று

நற்றிணை 292 **நல்வேட்டனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி மறுத்தது.

கூற்று விளக்கம்

'இரவில் துன்பம் தரும் வழியில் நீ வந்தால் தலைவி உயிர் வாழ மாட்டாள்' என்று கூறித் தலைவனுக்குத் தோழி இரவுக்குறி மறுத்தது.

நெடுங்கண் ஆரத்து அலங்குசினை வலந்த
பசுங்கேழ் இலைய நறுங்கொடித் தமாலம்
தீம்தேன் கொள்பவர் வாங்குபு பரியும்,
யாணர் வைப்பின், கானம் என்னாய்;
களிறுபொரக் கரைந்த கயவாய்க் குண்டுநீர்
ஒளிறுவான் பளிங்கொடு செம்பொன் மின்னும்
கருங்கல் கான்யாற்று அருஞ்சுழி வழங்கும்
கராஅம் பேணாய்; இரவரின்,
வாழாள் ஐய! என்தோழி இனியே.

தெளிவுரை

ஐயனே! நெடிய கணுக்கள் கொண்ட சந்தன மரங்களைச் சுற்றிப் பசிய நிற இலைகளைக் கொண்ட நறிய முசுண்டைக் கொடிகள் படர்ந்திருப்பதைக் காண். அக்கொடிகளை அறுத்தெறிந்து அம்மரங்களில் உள்ள தேனைக் குறவர்கள் கவர்ந்து செல்வர். அத்தகைய காட்டினை இரவுப்போதில் கடந்து வருவது அரிது. அக்காட்டிலுள்ள களிறுகள் நீரருந்த வருதலால், இடிந்த கரையில் உண்டான ஆழமான பள்ளங்களில் வெள்ளைப் பளிங்குக் கற்களோடு செம்பொன்னும் மின்னிக்கொண்டிருக்கும். இடையிடையே கருங்கற்களிடையே ஓடும் காட்டாற்று நீர்ச் சுழிகளில் முதலைகள் திரிந்தபடி இருக்கும். இவற்றையெல்லாம் கருதாமல் இரவு நேரத்தில் நீயும் வந்துகொண்டிருக்கின்றாய். ஆபத்துகளிடையே நீ இவ்வாறு வருவதைத் தொடர்ந்தால்

தலைவி, உனக்கு ஏதேனும் நேர்ந்துவிடுமோ என்னும் அச்சத்தால் உயிர் வாழாள். ஆதலின், இரவில் வருவதைத் தவிர்!

கருத்து

"வழியிலே துன்பங்கள் பல உள்ளன. இரவிலே வந்தால் உனக்கு ஏதேனும் நேர்ந்துவிடுமோ என்றஞ்சித் தலைவி உயிர் வாழாள்" எனக் கூறித் தலைவனுக்குத் தோழி இரவுக்குறி மறுக்கிறாள்.

குறிப்பு

சந்தன மரத்தைச் சுற்றியிருப்பதாலேயே முசுண்டைக்கொடி மணம் பெறுகிறது. அதுபோலத் தலைவியும் தலைவனது உறவால் வாழ்ந்துகொண்டிருக்கிறாள். முசுண்டைக்கொடி அறுத்தெறியப்படுவதுபோல, வழியிலுள்ள இடர்ப்பாடுகளால் அவனுக்கு ஊறு விளையும் என்பதை நினைக்கு மளவிலேயே அவள் உயிர் வாழ்ந்திராள் எனும் குறிப்பினைத் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கண் - கணுக்கள்; ஆரம் - சந்தனம்; அலங்கு சினை - அசைகின்ற கிளை; வலந்த - பின்னிக் கிடக்கும்.
2. பசுங்கேழ் - பசுமை நிறம் பொருந்திய; தமாலம் - முசுண்டைக்கொடி.
3. வாங்குபு பரியும் - வளைத்து அறுக்கப்படும்.
4. யாணர் வைப்பின் - புதுமையான இடங்களைக் கொண்ட; என்னாய் - கருதுகின்றாய் இல்லை.
5. பொர - நடக்க; கரைந்த - இடிந்த; கயவாய் - அகன்ற வாய்; குண்டு நீர் - ஆழமான பள்ளங்களில் பொருந்திய நீர்.
6. ஒளிறுவான் - ஒளி வீசும்; மின்னும் - மின்னியொளிரும்.
7. கருங்கல் கான்யாறு - கரிய பாறைகளைக் கொண்ட காட்டாறு; அருஞ்சுழி - பெரிய நீர்ச்சுழி; வழங்கும் - திரியும், வாழும்.
8. காதம் - முதலை; பேணாய் - அஞ்சாமல்; இரவரின் - இரவிலே வந்தால்.

தோழி கூற்று

குறுந்தொகை 42 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வேண்டிய கிழவற்குத் தோழி நேர்ந்த வாய்பாட்டான் மறுத்தது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்து தலைவியோடு அளவளாவியிருக்க விரும்பிய தலைவனிடம் தோழி, 'நீ நெருங்கிப் பழகாவிடினும் உன் நட்பு ஒழியாது' என்று குறிப்பால் இரவுக்குறி மறுத்தது. (நேர்ந்த வாய்ப்பாட்டான் மறுத்தலாவது, உடன்பட்டாற்போன்ற சொல் அமைதியும், மறுத்தமையைக் குறிப்பாற் புலப்படுத்தும் பொருளமைதியும் பொருந்தும்படியாய்க் கூறுதல்.)

காமம் ஒழிவது ஆயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென, அருவி
விடரகத்து இயம்பும் நாட!எம்
தொடர்பும் தேயுமோ, நின்வயி னானே?

தெளிவுரை

நள்ளிரவில் மின்னல், இடி ஆகியவற்றுடன் பெருமழை பெய்ததனால் பெருகிய அருவிநீர் பின்நாளும் மலைப்பிளவு களில் விழுந்து ஒலித்துக்கொண்டிருக்கும் மலைநாட்டை உடையவனே! இரவிலே நீ கூடித் துய்க்கும் காம இன்பத்தைப் பெறாவிட்டாலும் எம் உள்ளத்தில் கொண்ட நட்பு ஒழியுமோ? ஒழியாது காண்!

கருத்து

'நீ இரவுக்குறி வாராவிடினும் உனக்கும் தலைவிக்கும் இடையே உள்ள ஆழ்ந்த நட்பு அழியாது' எனக் கூறித் தோழி இரவுக்குறி மறுக்கிறாள்.

இறைச்சி

நீர், அருவியாய் வீழ்தலினாலே இரவிலே மழை பெய்தமை அறியப்படுகிறது என்னும் தொடர்மூலம், தலைவியின் மேனி

வேறுபாட்டால் களவுக்கூட்டம் பிறரால் அறியப்படுதற்கும், அலர் பிறத்தற்கும் ஏதுவாயிற்றென்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுதலை அறிக.

சொற்பொருள்

1. (1, 4) 'காமம் ஒழிவதாயினும் நின் வயின் எம் தொடர்பும் தேயுமோ?' என்று கூட்டிப் பொருள் காண்க.
2. கருவி - (மின்னல், இடி முதலான) தொகுதியுடன்; மாமழை - மிகுதியான மழை; வீழ்ந்தென - பெய்ததால்.
3. விடர் - மலைப்பிளவு; இயம்பும் - ஒலிக்கும்.
4. நின்வயின் - உன்னிடம்.

தோழி கூற்று

குறுந்தொகை 69 **கடுந்தோட் கரவீரன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி இரவுக்குறி மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுப்பொழுதில் துன்பம் பலவும் கடந்து வருதலைக் கண்ட தோழி, அவ்வாறு இரவில் வர வேண்டா எனக் கூறி இரவுக்குறி மறுத்தது.

கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர் செகுக்கும்
சாரல் நாட! நடுநாள்
வாரல்; வாழியோ! வருந்துதும் யாமே!

தெளிவுரை

பெரிய கண்ணையும் வலிமையையும் கொண்ட ஆண்குரங்கு இறந்துபட்டது கண்டு அழகிய பெண்குரங்கு கைம்மையுடன்

பிழைத்திருத்தலை விரும்பவில்லை. ஆதலின், அது (மரமேறிப் பாய்தலைக் கல்லாத) தன் வலிய குட்டியைத் தன் சுற்றத்தாரிடம் ஒப்படைத்தது; பின், உயர்ந்த மூங்கிலைக் கொண்ட மலையிலிருந்து கீழே பாய்ந்து தன் உயிரைப் போக்கிக்கொண்டது. அத்தகைய மலைச்சாரல் பொருந்திய நாட்டையுடையவனே! நடு இரவில் வாராதே! வந்தால் உனக்குத் துன்பமுண்டாகுமோ என்று கருதி யாம் வருந்தியிருப்போம்.

கருத்து

"நீ இரவில் வாராதே! வந்தால் உனக்கு நேரும் துன்பம் கருதி வருந்துவோம்" எனக் கூறித் தோழி இரவுக்குறி மறுக்கிறாள்.

இறைச்சி

தலைவன் மலையில் உள்ள அஃறிணையான பெண்குரங்கும் கைம்மையை விரும்பாது தன்னை மாய்த்துக்கொள்ளும் என்னும் தொடர்மூலம், "தலைவனுக்கு ஏதேனும் நேரிடின் தலைவி உயிரோடிருக்க மாட்டாள்; ஆதலால், அச்சத்தையுண்டாக்கும் இரவுக்குறியைக் கைவிட்டு, நல்லறமாகிய இல்லறத்தினைக் கைக்கொண்டு தலைவன் தலைவியைக் காப்பாற்ற வேண்டும்" என்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது.

உனக்கோர் இடையூறெனின் தலைவி உயிர் வாழாள்.

சொற்பொருள்

1. தாக்கலை - தாவும் ஆண்குரங்கு; பெரும்பிறிது - சாதல்.
2. உய்யா - தாங்க இயலாத; காமர் - அழகிய; மந்தி - பெண்குரங்கு.
3. கல்லாத - தன் தொழிலைக் கல்லாத; பறழ் - குட்டி; கிளை - உறவு.
4. வரை - மலை; செகுக்கும் - மாய்த்துக்கொள்ளும்.
5. நடுநாள் - நடு இரவு.
6. வாரல் - வாராதே.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 6 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வேண்டிய தலைமகற்குத் தோழி மறுத்துச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வேண்டிய தலைவனிடம் தோழி மறுத்து மொழிந்தது.

மால்நீலம் மாண்ட துகில்உமிழ்வ(து) ஒத்தருவி
மால்நீலம் மால்வரை நாட!கேள் – மாநீலம்
காயும்வேல் கண்ணாள் கனையிருளின் நீவர
ஆயுமோ? மன்ற,நீ ஆய்.

தெளிவுரை

"பெரிய நீலமணி போன்ற மலையிலே நேர்த்தியான வெள் ளாடையினை வீழ விட்டதுபோல, வெள்ளிய அருவிகள் வீழும் நீல நிறங்கொண்ட பெரிய மலையினை உடைய தலைவனே! நான் சொல்வதைக் கேள்! கரிய நீல மலர்களும் தோற்று நாணும்படியாய் (நீல மலர்களையும் வெல்லும்) வேல் போன்ற கண்களைக் கொண்ட தலைவி, அடர்ந்த இரவில் நீ வருதலால் உனக்கு நேரிடும் இடையூறுகளை ஆராய்ந்து துன்புறுகின்றாள். நீ இதனை எண்ணிப் பார்!" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'வழியில் உனக்கு நேரும் இடையூறுகளைக் கருதித் தலைவி அஞ்சு கின்றாளாதலின், நீ இரவில் வாராதே' எனத் தோழி தலைவனிடம் கூறினள்.

சொற்பொருள்

1. மால் நீலம் - பெரிய நீல மணி போன்ற மலை; துகில் - (வெள்ளை) ஆடை; உமிழ்வது - ஒழுக விடுவது; ஒத்து - போன்று.
2. மால் நீலம் - மயங்கிக் காணப்படும் நீல நிறத்தோடு கூடிய; மால் வரை - பெரிய மலை; மா நீலம் - கரிய நீலோற்பல மலர்.

3. காயும் - தோற்று நாணும்; வேல்கண்ணாள் - வேல் போன்ற கண்களைக் கொண்ட தலைவி; கனை இருள் - மிகுந்த இருள்.
4. ஆயுமோ - ஆராய்ந்து அமைதி கொள்வளோ?; நீ ஆய் - நீ எண்ணிப் பார்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 7 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வேண்டிய தலைமகற்குத் தோழி மறுத்துக் கூறியது.

கூற்று விளக்கம்

இரவில் தலைவியைக் கூட விரும்பிய தலைவனிடம் தோழி மறுத்துச் சொல்லியது.

கறிவளர்பூஞ் சாரல் கைந்நாகம் பார்த்து
நெறிவளர் நீள்வேங்கை கொட்கும் – முறிவளர்
நல்மலை நாட! இரவரின் வாழாளால்,
நல்மலை நாடன் மகள்.

தெளிவுரை

"பல்வகையான தளிர்கள் தளிர்த்துக் காணப்படும் நல்ல மலைநாட்டிற்குரிய தலைவனே! மிளகுக்கொடிகள் படர்கின்ற அழகிய மலைச்சாரலில் துதிக்கையினைக் கொண்ட யானைகளை எதிர்பார்த்து நெடிய வேங்கைப்புலிகள் திரியும். இந்நிலையில் இரவில் நீ வருவதைத் தலைவி பொறுத்துக்கொள்ளமாட்டாள். ஆதலின், நீ வரல் வேண்டா" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ! வழியில் நேரிடும் துன்பங்களைக் கருதித் தலைவி அஞ்சுகிறாளாதலின் நீ இரவில் வராதே!'

சொற்பொருள்

1. கறி - மிளகுக்கொடிகள்; வளர் - படர்கின்ற; கைந்நாகம் - துதிக்கை யினைக் கொண்ட யானை; பார்த்து - எதிர்பார்த்து.
2. நெறி - வழி; நீள் வேங்கை - நெடிய வேங்கைப்புலி; கொட்கும் - திரிதரும்; முறி - தளிர்.
3. இரவரின் - நீ இரவில் வந்தால்; வாழாள் - வாழ மாட்டாள்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 13 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

நெறியினதருமை கூறித் தோழி இரவுக்குறி மறுத்தது.

கூற்று விளக்கம்

இரவில் தலைவன் வரும் வழியில் நேரிடக்கூடிய இடையூறுகளை எடுத்துச் சொல்லி, தோழி தலைவனுக்கு இரவுக்குறி மறுத்தது.

ஒருவரைபோல் எங்கும் பல்வரையும் சூழ்ந்த
அருவரை உள்ளதாம் சீறூர் – வருவரையுள்
ஐவாய நாகம் புறமெல்லாம் ஆயுங்கால்
கைவாய நாகம்சேர் காடு.

தெளிவுரை

"ஒரு மலையைப் போலவே எல்லா மலைகளும் தம்முள் அளவொத்து உயர்ந்து சூழ்ந்த அரிய எல்லையுள் உள்ளது, எம் சிற்றூர். நீ கடந்து வரவேண்டிய அவ்வெல்லையின் உட்பகுதி யில் ஐந்துதலை நாகங்கள் நிறைந்துள்ளன. ஆராய்ந்து பார்த்தால் அவ்வெல்லையின் வெளிப்பக்கங்களில் தும்பிக்கை கொண்ட யானைகள் நிறைந்த காடுகளும் உள்ளன" என்று, வழி அருமை கூறித் தலைவனுக்குத் தோழி இரவுக்குறி மறுத்தாள்.

கருத்து

'நீ வரும் வழியில் பாம்புகள் ஊரும்; யானைகள் திரியும்' என வழி அருமை கூறித் தோழி தலைவனுக்கு இரவுக்குறி மறுத்தாள்.

சொற்பொருள்

1. வரை - மலை; பல்வரை - பல மலைகள்.
2. அருவரை - கடத்தற்கரிய வழி; வருவரையுள் - நீ வரவேண்டிய அவ் வழியும்.
3. ஐவாய - ஐந்து வாய்களைக் கொண்ட; நாகம் - நாகப்பாம்புகள் (நிறைந்துள்ளன); புறமெல்லாம் - வழியின் வெளிப்புறமெல்லாம்; ஆயுங்கால் - ஆராய்ந்து பார்த்தால்.
4. கைவாய - கையை வாயாய்க் கொண்டுள்ள; நாகம் - யானை; சேர் - நிறைந்த.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 48 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்கு இரவுக்குறி மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவில் வர வேண்டா எனத் தோழி மறுத்தது.

திரைமேல்போந்(து) எஞ்சிய தெண்கழிக் கானல்
விரைமேவும் பாக்கம் விளக்காக் – கரைமேல்
விடுவாய்ப் பசும்புற இப்பிகால் முத்தம்
படுவாய் இருளகற்றும் பாத்து.

தெளிவுரை

“திறந்த வாயினையும் பசுமையான வெளிப்பக்கத்தையும் கொண்ட முத்துச்சிப்பிகள் அலைகளால் கொண்டுவரப்பட்டு, கரையோரங்களில் ஒதுங்கிக் கிடக்கும். அச்சிப்பிகளில் உள்ள முத்துகள், தெளிந்த உப்பங்கழிகளும் சோலைகளும் சூழ்ந்துள்ள மணம் பொருந்திய கடற்கரைப்பாக்கத்திற்கு விளக்குகளாய் அமைந்து, இருள்படும் இடங்களிலெல்லாம் அவ்விருளை அகற்றும். ஆதலால், உன் வரவினை அனைவரும் அறிந்து கொள்வர் என்பதால் நீ இரவில் வாராதே” என்று தலைவனிடம் தோழி கூறினாள்.

கருத்து

'முத்தொளி இரவைப் பகலாக்கும்; உன் வரவை அனைவரும் அறிவர்; ஆதலின், நீ இரவில் வரவேண்டா.'

சொற்பொருள்

1. எஞ்சிய - ஒதுங்கி நின்ற.

1-2.திரைமேல் போந்து கரைமேல் எஞ்சிய எனக் கூட்டிக்கொள்க.

2. விரைமேவும் - மணம் பொருந்திய; பாக்கம் - கடற்கரைப்பட்டினம்.
3. விடுவாய் - பிளந்த வாய்; பசும்புறம் - பசிய வெளிப்பக்கம்; இப்பி - சிப்பி; கால் - வெளியிட்ட; முத்தம் - முத்து.
4. படுவாய் - இருள்படும் இடங்களிலெல்லாம்; பாத்து - (இருளைப்) பிரித்து.

3-4.முத்தம் படுவாய் பாத்து இருளகற்றும்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 49 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்கு இரவுக்குறி மறுத்தது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வேண்டிய தலைவனிடம் தோழி மறுத்துக் கூறியது.

எங்கு வருதி இருங்கழித் தண்சேர்ப்ப!
பொங்கு திரையுதைப்பப் போந்தொழிந்த – சங்கு
நரன்றுயிர்த்த நித்திலம் நள்ளிருள்கால் சீக்கும்
வரன்(று)உயிர்த்த பாக்கத்து வந்து.

தெளிவுரை

"பெரிய உப்பங்கழிகளைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய கடற்கரைக்குத் தலைவனே! பொங்கிவரும் அலைகள் உந்தித் தள்ளுதலால் கரையில் வந்து தங்கிய சங்குகள் ஒலித்து முத்துகளை ஈன்றெடுக்கும். அம்முத்துகளின் ஒளி, கடல்வளங் களை வாரி வந்து வாழ்க்கை நடத்தும் மக்கள் நிரம்பிய பட்டினம்

முழுவதிலும் செறிந்துள்ள இருளினை நீக்கும். அங்ஙனமிருக்க நீ எவ்விதம் மறைந்து வர இயலும்?" எனத் தோழி தலைவனிடம் கேட்டாள்.

கருத்து

"இரவில் முத்தொளி வீசுவதால் நீ வருவதைப் பலரும் அறிவர்; அதனால் அலர் பெருகும். ஆகையால், இரவுக்குறியினை நீ கைவிடு" என்று தோழி இரவுக்குறி மறுத்துத் தலைவனிடம் உரைத்தாள்.

சொற்பொருள்

1. எங்கு வருதி - எவ்வாறு வருவாய்?
2. திரை - அலை; உதைப்ப - உந்தித் தள்ளுதலால்; போந்து - கரைக்கு வந்து; ஒழிந்த - தங்கிய.
3. நரன்று - ஒலித்து; உயிர்த்த - ஈன்ற; நித்திலம் - முத்து; கால் சீக்கும் - நீக்கும்.
4. வரன்று - அலைகள் வாரிக்கொண்டு சென்று; பாக்கம் - கடற்கரைப் பட்டினம்.

நித்திலம் பாக்கத்து வந்து இருள்கால் சீக்கும்; ஆதலான், எங்ஙனம் வருதி எனக் கூட்டுக.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 61 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்குத் தோழி இரவுக்குறி மறுத்தது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வேண்டிய தலைவனிடம் தோழி மறுத்து உரைத்தது.

அறி(கு)அரிது யார்க்கும் அரவநீர்ச் சேர்ப்ப!
நெறிதிரிவார் இன்மையால் இல்லை – முறிதிரிந்த
கண்டலந்தண் தில்லை கலந்து கழிசூழ்ந்த
மிண்டலம்தண் தாழை இணைந்து.

தெளிவுரை

"அலைகள் ஆரவாரிக்கும் கடல்துறைக்குத் தலைவனே! தளிர்கள் சுருண்ட நீர்முள்ளிச்செடிகளும், அழகிய குளிர்ந்த தில்லை மரங்களும் செறிந்து சூழ்ந்துள்ள இடம்; அழகிய குளிர்ந்த தாழை மரங்களும் அப்பகுதியில் நெருக்கமாய் வளர்ந்து இணைந்திருக்கும். இந்த இடத்திற்கு வழி அறிதல் எவராலும் இயலாது. அங்கு மக்கள் நடமாட்டம் அதிக மில்லாததால் நல்லதொரு வழியும் இல்லை. ஆதலின், நீ இரவுக்குறியிடத்திற்கு வருதல் துன்பம் தரும்" எனத் தோழி இரவுக்குறி மறுத்துத் தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'இரவுக்குறியிடத்திற்கு வரும் வழி இடையூறு மிக்கது; ஆதலின், தலைவ! நீ இரவில் வரவேண்டா.'

சொற்பொருள்

1. அறிகு அரிது - (வழியினைத்) தெரிதல் யார்க்கும் அரிது; அரவம்நீர் - ஆரவாரிப்பினைக் கொண்ட கடல்நீர்.
2. நெறி - வழி; திரிவார் - (அடிக்கடி) நடந்து செல்வார்; இல்லை - (நல்லதொரு வழி) இல்லை; முறி - தளிர்; திரிந்த - சுருண்ட.
3. கண்டல் - நீர்முள்ளிச்செடிகள்; தில்லை - தில்லை மரங்கள்; கழி - உப்பங்கழி.
4. மிண்டல் - நெருக்கமான; மிண்டல் அம் தண் தாழை - நெருக்கமாயுள்ள அழகிய குளிர்ந்த தாழை மரங்கள்.

தோழி கூற்று

நற்றிணை 334 **ஐயூர் முடவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி இரவுக்குறி முகம்புக்கது. (முகம்புகல் - ஒரு செய்தியைக் கூறிக் கேட்பவர் கருத்தறிய அவர் முகத்தைப் பார்த்து நிற்பது.)

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறி வேண்டித் தலைவியை இரந்தனன். தலைவி அதனை மறாது ஏற்க வேண்டும் என்று கருதிய தோழி, தன் கருத்தாய் உரையாமல், 'தலைவன் இரவில் வந்தால் நம் நிலை என்னாவது?' என்னும் வினாவைத் தொடுத்துத் தலைவியின் கருத்தறிய அவள் முகம் பார்த்து நிற்றல்.

கருவிரல் மந்திச் செம்முகப் பெருங்கிளை
பெருவரை அடுக்கத்து அருவி ஆடி,
ஒங்குகழை ஊசல் தூங்கி, வேங்கை
வெற்புஅணி நறுவீ கற்சுனை உறைப்ப,
கலையொடு திளைக்கும் வரையக நாடன்,
மாரி நின்ற ஆர்இருள் நடுநாள்,
அருவி அடுக்கத்து ஒருவேல் ஏந்தி,
மின்னுவசி விளக்கத்து வரும்எனின்,
என்னோ தோழி!நம் இன்உயிர் நிலையே?

தெளிவுரை

தலைவியே! பெரிய மலைச்சாரலில் கரிய விரலையும் சிவந்த முகத்தையும் கொண்ட மந்தி அருவியில் நீராடும்; உயர்ந்த மூங்கிலில் ஏறி ஊஞ்சலாடித் தொங்கும்; வேங்கைமரமீதேறி அதன் பூக்கள் சுனைநீரில் உதிருமாறு கடுவனுடன் புணரும். இத்தகைய மந்திகள் உள்ள மலைநாட்டைச் சேர்ந்த தலைவன், மழை பெய்து, விளங்கும் அரிய இருளினைக் கொண்ட நடு யாமத்தில், அருவி வீழும் மலைச்சாரலில், மின்னல் ஒளி யினையே வழியறியும் விளக்காய்க் கொண்டு கையில் வேலேந்தி

வருவான். அங்ஙனம் வரின் நம் இனிய உயிரின் நிலை என்ன ஆகும்?

கருத்து

'இரவில் வரும் தலைவனுக்கு இரங்காதிருந்தால் நம் இனிய உயிரன்றோ வருந்தும்' எனக்கூறி, தலைவி இரவுக்குறிக்கு உடன்பட வேண்டுமெனும் தன் கருத்தைத் தோழி கூறினள்.

உள்ளுறை

மந்தி அருவியாடி, ஊசலிலே தொங்கி, சுனையில் நறுமலர் விழுமாறு மரத்திலேறிக் கலையொடு புணருமென்றது, நீயும் பகலில் அருவியாடி, ஊசலில் அசைந்து, இரவில் நின் காம வேட்கை முற்றும் ஒழியத் தலைவனொடு முயங்குக என்னும் உட்பொருளைக் கொண்டதாம்.

சொற்பொருள்

1. கருவிரல் - கரிய விரல்; மந்தி - பெண்குரங்கு; செம்முக - சிவந்த முகத்தைக் கொண்ட; பெருங்கிளை - பெரிய சுற்றம்.
2. வரை - மலை; அடுக்கம் - பக்கமலை, சாரல்.
3. ஓங்கு கழை - உயர்ந்த மூங்கில் கோல்; தூங்கி - ஆடித்தொங்கும்.
4. வெற்பு அணி - மலையில் அழகுண்டாக; நறு - நல்ல; வீ - மலர்; கற்சுனை - பாறையிலுள்ள நீர்ச்சுனை; உறைப்ப - உதிர.
5. கலை - ஆண்குரங்கு; திளைக்கும் - இன்புறும்.
6. மாரி நின்ற - மழை பெய்துகொண்டிருக்கும்; ஆர் இருள் - மிகுதியான இருள்; நடுநாள் - யாமம்.
7. அருவி அடுக்கத்து - அருவி வீழும் மலைச்சாரலில்.
8. மின்னுவசி - மின்னல் ஒளி; விளக்கத்து - வழியறியும் விளக்கமாய்க் கொண்டு; வரும் எனின் - நம்மைக் காண வருகின்றான் என்றால்.
9. நம் இன்னுயிர் நிலை - நமது இனிய உயிரின் நிலை; என்னோ - என்ன ஆகும்?

தோழி கூற்று

நற்றிணை 392 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி இரவுக்குறி முகம் புக்கது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறிக்கு வர இசைந்த தோழி, அதனைத் தலைவியிடம் கூறி அவள் முகக்குறிப்பை நோக்கியது.

கடுஞ்சுறா எறிந்த கொடுந்தாள் தந்தை
புள்இமிழ் பெருங்கடல் கொள்ளான் சென்றென,
மனைஅழுது ஒழிந்த புன்தலைச் சிறாஅர்
பாங்கரின் நின்ற தீம்கள் நுங்கின்
பணைகொள் வெம்முலை பாடுபெற்று உவக்கும்,
பெண்ணை வேலி, உழைகண் சீறூர்
நன்மனை அறியின், நன்றுமன் தில்ல,
செம்மல் நெஞ்சமொடு தாம்வந்து பெயர்ந்த
கானலொடு அழியுநர் போலாம் – பானாள்,
முனிபடர் களையினும் களைப;
நனிபேர் அன்பினர் காத லோரே.

தெளிவுரை

கடலில் சுறாமீன் வேட்டைக்குச் சென்ற தந்தையர் உடன் அழைத்துச் செல்லாததால் வீட்டில் அழுது ஓய்ந்த பரதவச் சிறுவர், பக்கத்தே நின்ற பனைமரத்தின் இனிய நீர் நிறைந்த நுங்கினைப் பெற்றுத் தாயரின் பருத்த விருப்பம் பொருந்திய முலையை உண்ணுவதுபோலச் சுவைத்துண்டு மகிழ்வர். அத்தகைய பனைமரங்கள் வேலிபோல அமைந்துள்ள அகன்ற இடத்தைக் கொண்ட சிற்றூரில் அமைந்துள்ள நம் வீட்டினைக் காதலரும் அறிந்திருந்தால் மிகவும் நன்றன்றோ? அவர் நம்மிடம் மிக்க அன்பு கொண்டவர். ஆதலின், இரவின் நடுயாமத்தில் நாம் படும் துன்பம் நீங்க வேண்டி வந்து செல்ல வல்லவர். அவர் செம்மாப்புற்ற உள்ளத்துடனே முன்பு வந்து உன்னைத் தழுவிய

அகன்ற கடற்கரைச்சோலையில் பகற்குறியிடத்தில் இப்பொழுது வந்து நின்று உன்னைக் காணாது பெரிதும் நெஞ்சழிகின்றார் போலும்!

கருத்து

'அவர் பகற்குறியில் உன்னைக் காணாது வருந்தியிருப்பார்; நீ உடன்படின் அவர் இரவு நேரத்தில் நம் மனைப்பக்கம் வந்து உன் துயர் தணிப்பார்' என்று குறிப்பால் தோழி தலைவிக்கு உணர்த்துகிறாள்.

உள்ளுறை

'தந்தை தன்னுடன் அழைத்துச் செல்லாததால் உண்டான துன்பம் வழியில் நின்ற பனைமரத்தின் நுங்கைத் தின்றதால் மாறியதுபோல, இடையீடுகளால் தலைவரின் கூட்டத்தைப் பெறாமையால் நமக்கு உண்டாகும் துன்பத்தை நம் மனைப்புறம் அவர் வரக் காண்பதால் மாற்றிக்கொள்ளலாம்' என உள்ளுறை அமையத் தோழி உரைக்கிறாள்.

சொற்பொருள்

1. கடுஞ்சுறா - கொடிய சுறா மீன்; எறிந்த - கொன்ற; கொடுந்தாள் - கடுமையான முயற்சியைக் கொண்ட.
2. புள் இமிழ் - பறவைகள் ஒலிக்கின்ற; கொள்ளான் சென்றென - (தம்மையும்) உடன் அழைத்துச் செல்லான் என்பதால்.
3. மனை அழுது ஒழிந்த - வீட்டிலேயே அழுது ஓய்ந்த; புன்தலை - மெல்லிய தலையைக் கொண்ட; சிறார் - பரதவச்சிறுவர்.
4. பாங்கரின் - பக்கத்தே; தீம் கள் - இனிய நீர்; நுங்கு - பனை நுங்கு.
5. பணைகொள் வெம்முலை - பருத்த விருப்பம் பொருந்திய இனிய முலை; பாடு பெற்று உவக்கும் - உண்ணுவதுபோலச் சுவைத்துண்டு மகிழ்வர்.
6. பெண்ணை - பனை மரம்; வேலி - வேலியாய்க் கொண்ட; உழைகண் - அகன்ற இடமுள்ள; சீறூர் - சிற்றூர்.
7. நன்மனை - நல்ல வீடு; அறியின் - அறிந்திருந்தால்.
8. செம்மல் நெஞ்சமொடு - செம்மாந்த நெஞ்சத்தோடு; பெயர்ந்த - மீண்ட.
9. கானலொடு - பகற்குறியாகிய கடற்கரைச்சோலையிடத்தில்; அழியுநர் போலாம் - நெஞ்சழிவர்போலும்; பானாள் - நள்ளிரவில்.

10. முனிபடர் - (நாம் படும்) பெரிய துயரை; களையினும் - நீக்கினாலும், களைப - நீக்குவர்.
11. நனி - மிகுந்த; பேர் - பெரிய; அன்பினர் - அன்பு கொண்டவர்.

தலைவி கூற்று

கைந்நிலை 12 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் இரவுக்குறி ஏதமுடைத்து என்று அஞ்சித் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்துத் தலைவன் வர விரும்பியபோது, அஃது ஆபத்தானது எனத் தோழியிடம் தலைவி கூறுதல்.

நாக நறுமலர் நாள்வேங்கைப் பூவிரவிக்
கேசம் அணிந்த கிளர்எழிலோள் ஆகம்
முடியுங்கொல்? என்று முனிவான் ஒருவன்
வடிவேல்கை ஏந்தி வரும்.

தெளிவுரை

மணமிக்க புன்னை மலரையும், அன்று அலர்ந்த வேங்கை மலரையும் ஒன்றுசேர்த்துத் தன் கூந்தலில் அணிந்துள்ளதால் அழகு பொருந்தப் பெற்றுள்ள தலைவியின் உடல் அழியுமோ என்று ஐயம் கொண்டு, நம் தலைவன் தன்னுயிரை வெறுத்து, தலைவியின் உயிரைக் காப்பதற்காகக் கூர்மையான வேலை ஏந்தி வருவான்.

கருத்து

தலைவன் இரவில் வருவதால் அவன் உயிருக்கு என்னாகுமோ என்று தலைவி அஞ்சுகிறாள்.

விளக்கம்

தலைவி இங்குத் தன்னைப் படர்க்கையில் கூறுகின்றாள். 'வேலேந்தி வரும்' என்பதனால் இரவில் வருகின்றான் என்பது குறிப்பு. அதனால் அவன் உயிருக்கு என்ன நேருமோ என்று தலைவி அஞ்சி இவ்வாறு கூறுகின்றாள்.

சொற்பொருள்

1. நாகம் - புன்னை; நாள் வேங்கைப்பூ - அன்றலர்ந்த வேங்கை மலர்; விரவி - ஒன்றுசேர்த்து.
2. கேசம் - கூந்தல்; எழிலோள் - அழகு பொருந்திய தலைவி; ஆகம் - உடல்.
3. முடியுங்கொல் - அழியுமோ?; முனிவான் - வெறுத்து.
4. வடிவேல் - கூர்மையான வேல்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 48 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி தலைமகளை இரவுக்குறி நயப்பித்தது.

கூற்று விளக்கம்

தோழி, இரவுக்குறியில் தலைவன் வருதலைத் தலைவி விரும்புமாறு செய்வது.

கறங்கு மணிநெடுந்தேர் கண்வாள் அறுப்பப்
பிறங்கு மணல்மேல் அலவன் பரப்ப
வறங்கூர் கடுங்கதிர் வல்விரைந்து நீங்க
நிறங்கூரும் மாலை வரும்.

தெளிவுரை

"ஒலிக்கின்ற மணிகளைக் கொண்ட நம் தலைவனின் தேர், காண்போர் கண் ஒளி மழுங்க, மணல் நிறைந்த கடற்கரை வழியாய், அங்குள்ள நண்டுகள் நாற்புறமும் பரவி ஓடும்படியாய் வருகிறது. அது, வெம்மை மிக்க கொடிய வெயில் விரைந்து

மறைகின்ற செக்கர் நிற மாலைப் பொழுதில் இங்கு வரும்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

"தலைவனின் தேர் மாலையில் நாமிருக்கும் இவ்விடத்திற்கு வந்தால் பலரும் அதைக் காண்பாராதலின், பழிச்சொல் ஏற்படும்; அதனால் இரவுக்குறி நல்லது" என்று தோழி தன் கருத்தினைத் தலைவியிடம் உரைக்கிறாள்.

விளக்கம்

"மாலையில் தேர் வருவதைப் பலரும் காண்பாராதலின், பழிச் சொல் ஏற்படும்; அதனால் இரவுக்குறியே நல்லது" என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

தலைவனுக்கு இரவுக்குறி நேர்ந்த தோழி, தலைவியை அதற்கு இணங்கும்படி அவளிடம் கூறுகிறாள். ஒருவர்க்கு ஒரு நன்மையைச் செய்ய விரும்புவார், அவர் மறுத்துவிடாதிருக்கும் வகையில், முன்னரே அவர் அறியாதவாறு அதனைச் செய்து முடித்துப் பின்னர்க் கூறுவது மரபு. அதன்படி தோழி தலைவன் மாலையில் வருவன் எனத் தலைவியிடம் கூறுவதன்வழி இரவுக்குறி நயப்பிக்கலானாள்.

சொற்பொருள்

1. கறங்கு - ஒலிக்கின்ற; கண் வாள் அறுப்ப - கண்களின் பார்வை ஒளி மழுங்க (வாள் - ஒளி).
2. பிறங்கு - விளங்குகின்ற; அலவன் - நண்டு; பரப்ப - நாற்புறமும் பரவியோட.
3. வறங்கூர் - வெம்மை மிக்க; கடுங்கதிர் - கொடிய வெயில்; வல் விரைந்து - மிக விரைந்து.
4. நிறம் கூரும் - மிகுந்த செக்கர் நிறம்.

தோழி கூற்று

நற்றிணை 49 **நெய்தல் தத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி தலைமகளை இரவுக்குறி நயப்பித்தது.

கூற்று விளக்கம்

'இரவில் தலைவனைக் காணுதல் தக்கது' என்று தோழி தலைவியிடம் கூறி, அதற்கு அவளை இசையச்செய்தது.

படுதிரை கொழீஇய பால்நிற எக்கர்த்
தொடியோர் மடிந்தெனத் துறைபுலம் பின்றே;
முடிவலை முகந்த முடங்குஇறாப் பரவைப்
படுபுள் ஒப்பலின் பகல்மாய்ந் தன்றே;
கோட்டுமீன் எறிந்த உவகையர் வேட்டம்மடிந்து
எமரும் அல்கினர்; ஏமார்ந் தனம்,எனச்
சென்றுநாம் அறியின் எவனோ தோழி!
மன்றப் புன்னை மாச்சினை நறுவீ
முன்றில் தாழையொடு கமழும்
தெண்கடற் சேர்ப்பன்வாழ் சிறுநல் ஊர்க்கே.

தெளிவுரை

"*தலைவியே! பரதவர்கள் வாழும் கடற்றுறை ஊர்மன்றத்தில் உள்ள புன்னை மரத்தில் பூத்துள்ள மலர்கள், பக்கத்திலுள்ள தாழைமடலோடு கூடி மணம் வீசும். அத்தகைய பகுதியினைக் கொண்ட கடற்சேர்ப்பன், நம் தலைவன். நாம் அவன் வாழ்ந் திருக்கும் சிற்றூருக்குச் சென்று, அவனிடம், 'ஐய! அலைகள் தவழும் மணல்மேட்டில் விளையாடிய பரதவப்பெண்டிர் அனை வரும் உறங்குதற்காகத் தம் இல்லங்கட்குத் திரும்பிவிட்டனர். அதனால் கடற்கரை தனிமை கொண்டது; கடலின்றும் பிடித்து வந்து காயப்போட்டிருந்த இறால் மீன்களைக் கவர வரும் பறவைகளை ஓட்டிக்கொண்டிருந்த பகற்பொழுதும் கழிந்துவிட்டது. சுறாமீன்களை வேட்டையாடி வந்த மகிழ்ச்சி யில் எம் ஐயன்மாரும் இரவில் வேட்டைமேல் செல்வதை*

விடுத்து இல்லத்திலேயே தங்கிவிட்டனர். யாமும் நீ இல்லாத தனிமையில் மயக்கம் கொண்டு நின்றனம்' என்று கூறி, அவன் கருத்தை அறிந்து வருதல் குற்றமாகுமா? கூறுக" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

'தலைவனிடம் சென்று, பாக்கம் தனிமை கொண்டது; ஆதலின், நீ இரவில் வந்து தலைவியைக் காணலாம் என்று அறிவித்தால் என்ன?' எனத் தலைவியிடம் கேட்பதுபோல இரவுக்குறிக்கு அவள் இசையுமாறு வேண்டுகிறாள், தோழி.

குறிப்பு

புன்னை மலர் தாழை மலரோடு கமழும் என்று கூறுவதிலிருந்து தலைவனுடன் கூடி நீ மணம் பெறுவாய் என்னும் குறிப்புப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. படுதிரை - பெரிய அலைகள்; கொழீஇய - கொழிக்கும்; எக்கர் - மணல்மேடு.
2. தொடியோர் - வளைகளணிந்த பெண்கள்; மடிந்தென - (இல்லத்தில்) துயின்றதால்; புலம்பின்று - தனிமை கொண்டது.
3. முடிவலை - முடிக்கப்பட்ட வலை; முகந்த - அள்ளிவந்த; முடங்கு - வளைந்த; இறா - இறா மீன்; பரவை - பரப்பின்.
4. படுபுள் - வந்து விழுகின்ற பறவைகளை; ஓப்பலின் - ஓட்டுதலின்; மாய்ந்தது - கழிந்தது.
5. கோட்டுமீன் - கொம்புகளைக் கொண்ட சுறா மீன்; எறிந்த - எறிந்து கொன்று பிடித்தலால்; வேட்டம் - மீன் வேட்டை; மடிந்து - நீங்கி.
6. எமரும் - எம் உறவினரும்; அல்கினர் - (வீட்டில்) தங்கிவிட்டனர்; ஏமார்ந்தனம் - யாமும் மயக்கங்கொண்டு நிற்கிறோம்.
7. அறியின் - (அவன் கருத்தை) அறிவதால்; எவன் - என்ன (குற்றம்).
8. மாச்சினை - பெரிய கிளை; நறுவீ - நறிய பூ.
9. கமழும் - மணம் வீசும்.
10. தெண் - தெளிந்த; கடற்சேர்ப்பன் - கடல்நிலத் தலைவன்; ஊர்க்கே சென்று நாம் அறியின் எவனோ? என முடிவு கொள்க.

தோழி கூற்று

குறுந்தொகை 348 **வாயில் இளங்கண்ணன்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பக் கூறியது.

கூற்று விளக்கம்

'தலைவனோடு இனி இரவுக்குறியில் சேர்தலே நன்று' என்னும் தன் கருத்தினைத் தலைவி விரும்புமாறு அவளிடம் தோழி கூறியது.

நாகுபிடி நயந்த முளைக்கோட்டு இளங்களிறு,
குன்றம் நண்ணி, குறவர் ஆர்ப்ப,
மன்றம் போழும் நாடன் தோழி!
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்தும்,
5 தினைப்புன மருங்கில் படுகிளி ஓப்பியும்,
காலை வந்து, மாலைப் பொழுதில்
நல்அகம் நயந்துதான் உயங்கிச்
சொல்லவும் ஆகாது அஃகி யோனே.

தெளிவுரை

தலைவியே! இளமையான பெண்யானையைச் சேர விரும்பிய மூங்கில் முளை போன்ற கொம்பினைக் கொண்ட இளைய களிற்றியானை மலையை அடைய, அதனைக் கண்டு குறவர்கள் ஆரவாரம் செய்ததனாலே, அஃது ஊர்ப் பொதுமன்றத்தினைக் குறுக்கே பிளந்து ஓடும். இத்தகைய காட்சிக்குரிய நாட்டினை யுடையவன், தலைவன். அவன் பகற்பொழுதிலே நம்மிடம் வந்து, சுனையில் மலர்ந்த குவளைப்பூக்களால் மாலை தொடுத்துத் தந்தவன்; தினைப்புனத்தில் வந்து விழும் கிளிகளை நம்மோடு சேர்ந்து ஓட்டியிருந்தவன். அவன் மாலைப்பொழுதில் தன் மனத்தில் ஏதோ ஒன்றைக் கூற விரும்பி, அதனை நம்மிடம் சொல்லவும் இயலாது வருந்தியுள்ளான்.

கருத்து

'தலைவன் உன்னோடு இரவிலும் தங்கியிருக்க விழைகிறான் என்பதைக் குறிப்பினால் உணர்ந்தேன்' எனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

இறைச்சி

பிடியை விரும்பிய களிறு மலையைச் சேரும் என்னும் தொடர்மூலம், 'தலைவியை விரும்பும் தலைவனும் தலைவியின் மனையிடத்தே இரவிலும் வருவான்' என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. நாகுபிடி - இளமையான பெண்யானையை; நயந்த - விரும்பிய; முளைக்கோட்டு - மூங்கில் முளை போலும் கொம்பினைக் கொண்ட; இளங்களிறு - இளைய ஆண்யானை.
2. நண்ணி - சேர; ஆர்ப்ப - ஆரவாரிக்க.
3. போழும் - ஊடறுத்துச் செல்லும்.
4. தொடலை - மாலை; தந்தும் - தொடுத்துத் தந்தும்.
5. படுகிளி - வந்து படியும் கிளிகள்; ஓப்பியும் - ஓட்டியும்.
7. நல் அகம் நயந்து - தன் நல்ல உள்ளத்திலே ஏதோ ஒன்றை விரும்பி; தான் உயங்கி - தான் அதனால் வருந்தி.
8. சொல்லவும் ஆகாது - அதை வாய்விட்டுச் சொல்லவும் இயலாமல்; அஃகியோன் - குறைவுற்றுள்ளான்.

தோழி கூற்று

நற்றிணை 58 **முதுகூத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்து நீங்கும் தலைமகன் போக்கு நோக்கித் தோழி மாவின்மேல் வைத்துச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்த தலைவனை, 'இன்று நீவிர் இங்குத் தங்கிச் செல்க' என்று தோழி கூற, அவன் உடன்படாது தேரின்மீது ஏறிப் புறப்பட, அது கண்ட தோழி, 'இவன் தேர்க்குதிரைகள் தண்டிக்கப்படுவன ஆகுக' என்று கூறியது.

பெருமுது செல்வர் பொன்னுடைப் புதல்வர்
சிறுதோள் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத்து எழுதிய குரீஇப் போலக்
கோல்கொண்டு அலைப்பப் படீஇயர் மாதோ
வீரை வேள்மான் வெளியன் தித்தன்
முரசுமுதற் கொளீஇய மாலை விளக்கின்
வெண்கோடு இயம்ப, நுண்பனி அரும்ப,
கையற வந்த பொழுதொடு மெய்சோர்ந்து,
அவல நெஞ்சினம் பெயர, உயர்திரை
நீடுநீர்ப் பனித்துறைச் சேர்ப்பன்
ஓடுதேர் நுண்நுகம் நுழைத்த மாவே!

தெளிவுரை

உறையூரை ஆட்சி செய்யும் வீரை வேள்மான் வெளியன் என்னும் பெயர் கொண்ட தித்தன் என்பானுடைய நாட்டில், மாலை நேரத்தில் பனி பெய்யத் தொடங்கியது; முரசு முதலியன சங்குகளுடன் ஒலித்தன; விளக்குகள் ஏற்றப்பட்டன; தலைவரைப் பிரிந்திருந்த மகளிர் வாடினர். அத்தகைய மாலைப்பொழுதில் தலைவன் எம்மைப் பிரிந்து செல்லக் கருதுகிறான். எங்கள் உள்ளமும் உடலும் பிரிவுத்துயரால் சோர்வுற்றன. இரவு தங்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினாலும் தலைவன் உடன் படாமல் தேரின்மீது ஏறுகின்றான். பெருஞ்செல்வர் வீட்டுப் பிள்ளைகளின் சிறிய தோளில் மாட்டப்பட்டிருக்கும் பறையில் எழுதப்பட்டுள்ள ஓவியக்குருவிகள் அச்சிறுவர்களின் கோல் களால் இடைவிடாது புடைக்கப்படுவதுபோல, தலைவனின் தேரில் பூட்டிய குதிரைகளும் அடிபட்டுத் துன்பப்படட்டும்.

கருத்து

பகற்குறியில் வந்து ஒழுகுங்காலத்தில், ஒரு நாள் தலைவியைக் கண்டு நீங்கும் தலைவனை அணுகி, 'இங்கு இன்று தங்கிச் செல்லலாம்' எனத் தோழி வேண்டினாள். ஆனால், அவன் தேர் புறப்பட்டது. அதனால் வருத்த முற்ற தோழி, அவன் தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரைகள் கோல்கொண்டு தாக்கப்படட்டும் என்றாள்.

விளக்கம்

பறையில் பொருத்தப்பட்டுள்ள தோலில் குருவி, கிளி ஆகிய உருவங்கள் எழுதப்பட்டிருக்கும். பறையைக் கோல்கொண்டு இடைவிடாது அடிப்பதால் அப்பறையிலுள்ள உருவங்கள் கால இடைவெளியின்றித் தொடர்ந்து அடிபடும். தலைவன் தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரைகள் அப்படங்களிலுள்ள உருவங் களைப் போல அடிபட வேண்டுமென்கிறாள், தோழி.

குறிப்பு

தலைவன் இரவில் தலைவியோடு தங்குவதென்பது, அவன் தலைவியை மணந்துகொண்டதன் பின்னரன்றி இயலாதாதலின், தோழி வரைவினை விரும்பியே இவ்வாறு கூறுகின்றாள்.

சொற்பொருள்

1. பெருமுது செல்வர் - பெருஞ்செல்வமுடையோராய் நீண்ட காலம் வாழ்வோர்.
2. கோத்த - மாட்டிய; அரிப்பறை - ஒலிக்கும் பறை.
3. கண் அகம் - அடிக்கப்படும் இடம்; குரீஇ - குருவி.
4. அலைப்பப் படீஇயர் - சிறிதும் இடைவெளியின்றித் தொடர்ந்து அடிபட்டுத் துன்புறட்டும்.
5. வீரை - வீரை நகர்; வேள்மான் - வேளிர்குலத் தலைவன்; வெளியன் தித்தன் - வெளியன் மகனாகிய தித்தன்.
7. வெண்கோடு - வெண்சங்கு.
8. கையற - செயலற; மெய் - உடல்.
9. அவலம் - துன்பம்; பெயர - நீங்கிச் செல்ல.
9-10. உயர்திரை நீடுநீர் - உயர்ந்த அலைகளைக் கொண்ட நெடுங்கடல்.
10. பனித்துறைச் சேர்ப்பன் - குளிர்ந்த கடல் துறையினையுடைய தலைவன்.
11. நுழைத்த மா - பூட்டப்பட்ட குதிரைகள்.

தலைவி கூற்று

கலித்தொகை 51 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

"புகாஅக் காலைப் புக்கு எதிர்ப்பட்டுழிப் பகாஅ விருந்தின் பகுதிக்கண்" தலைமகள் தோழிக்குக் கூறியது.

('புகாஅக் காலை.... பகுதிக்கண்' என்பது தொல்காப்பிய நூற்பா. (தொல்.பொருள்.கள. 15); தலைமகள் எவ்வெப்போது பேசுவாள் என்பதை வரையறுத்துச் சொல்லும் சூத்திரம் அது.)

கூற்று விளக்கம்

தலைவன் உணவு வேளையில் தலைவியின் மனையில் புகுந்து, அவளை எதிர்ப்பட்டான். அவள் அவனை வீட்டார் அறியாமல் விருந்துபசரித்தாள். அதனைப் பற்றி அவள் தோழியிடம் கூறுகின்றாள். (புகவு - உணவு; பகா - விலகாத; போ என்று கூறாத பகலுணவு நேரத்தில் வந்தால், போ என்று கூறாமல் புதியவன் வேண்டியதை அளிப்பர்; ஆதலின், பகா விருந்து எனப்படுகிறது.)

சுடர்த்தொடீஇ! கேளாய், தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டுஓடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன்' எனவந்தாற்கு, அன்னை
'அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் 'சுடரிழாய்!
உண்ணுநீ ரூட்டிவா' என்றாள்; என,யானும்
தன்னை அறியாது சென்றேன்,மற்று என்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
'அன்னாய்! இவனொருவன் செய்ததுகாண்' என்றேனா,
அன்னை அலறிப் படர்தரத், தன்னையான்
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ,மற்று என்னைக்
கடைக்கணால் கொல்வான்போல் நோக்கி, நகைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்.

தெளிவுரை

தோழியைப் பார்த்துப் பேசுகிறாள், தலைவி. "ஒளி வீசும் வளையல்களை அணிந்தவளே! கேள். தெருவிலே நாம் மணலால் சிறு வீடு கட்டி விளையாடும்போது தன் காலால் சிற்றிலைச் சிதைத்து, நாம் அணிந்த மாலையை அறுத்து, வரிகள் அமைந்த நம் பந்தை எடுத்துக் கொண்டு ஓடி, நாம் வருந்தத்தக்க செயல்களைச் செய்வானே - சின்ன போக்கிலி - அவன் முன்னொரு நாள் நானும் அன்னையும் வீட்டில் இருந்தபோது வந்தான். வந்து, வாயிலில் நின்று, 'வீட்டினுள் இருப்போரே! நீர் வேட்கையோடு நிற்கிறேன். குடிக்க நீர் தருக' என்று ஒலி கொடுத்தான். அதைக் கேட்ட தாய், அழகிய பொற்செம்பில் தண்ணீர் ஊற்றி, 'அவனுக்கு வார்த்து வா' என்று சொன்னாள். எவ்வகைக் கட்டுப்பாடும் இல்லாது வந்திருப்பவன் அந்தப் 'பட்டி'தான் என்பதை அறியாமல் நானும் தண்ணீர் கொண்டு சென்றேன். அவன் வளையல் அணிந்த என் முன்கையைப் பிடித்து இழுத்துத் துன்புறுத்தினான். நான் கலங்கிப்போய், 'அம்மா! இங்கே ஒருவன் செய்ததைப் பார்' என்று கூவினேன். என் கூச்சலைக் கேட்ட அன்னை அலறியவாறு ஓடி வந்தாள். நான் அவன் செய்த குறும்பை மறைத்து, 'தண்ணீர் குடிக்கும் போது இவன் விக்கினான்' என்று ஒரு பொய்யைக் கூறினேன். அன்னை, அதை நம்பி 'மெல்லவே பருகலாகாதா' என்று கோபித்துக் கொண்டவள்போல அவன் முதுகைப் பல முறை தடவிக் கொடுத்தாள். அன்னை அப்படிச் செய்தபோது, (அன்னை அறியாமல்) அந்தக் கள்வன் மகன் (திருட்டுப் பயல்) தன் கடைக்கண்ணால் கொல்வான்போல என்னை நோக்கிச் சிரித்தான்." (இத்தகைய அவனது குறும்பால் ஒரு மகிழ்ச்சி தரும் சந்திப்பு நடந்தது.)

கருத்து

களவொழுக்கக் காலத்தில் தலைவியின் வீட்டில் புகுதற்கு அல்லாத ஒரு சமயத்தில் அவள் வீட்டிற்கு வருகிறான், தலைவன். தாகத்திற்குத் தண்ணீர் தருமாறு கேட்டு வாயிலிலே நின்றான். அப்போது நடந்த நிகழ்ச்சிகளைத் தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

கடைக்கண்ணால் கொல்வான்போல் தன்னைத் தலைவன் நோக்கினான் என்றது, 'அவனின்றித் தான் உயிர் வாழ இயலாது' என்று தலைவி, தோழிக்குக் குறிப்பறிவுறுத்தினாள்.

சொற்பொருள்

2. சிற்றில் - சிறு வீடு; சிதையா - சிதைத்து; அடைச்சிய - பொருந்திய.
3. கோதை - மாலை; பரிந்து - அறுத்து.
4. நோதக்க - வருந்தும்படி; சிறுபட்டி - சின்ன போக்கிலி, குறும்புக்காரன், எவ்வகைக் கட்டுப்பாடும் இல்லாமல் நடந்து கொள்பவன்.
5. இல்லிரே - வீட்டினுள் இருப்போரே; வேட்டேன் - விரும்பினேன்.
6. அடர்பொற் சிரகம் - பொன் தகட்டால் செய்த கலம்; வாக்கி - நீரை ஊற்றி.
8. தன்னை அறியாது - அவன் அந்தப் பட்டிதான் என்று அறியாது.
9. நலிய - துன்புறுத்த; தெருமருதல் - அஞ்சுதல்.
10. படர்தர - ஓடி வர.
14. புறம் பழித்தல் - மேலுக்குக் கோபித்தல்.
15. நகைக் கூட்டம் - மனகிழ்ச்சி தரும் கூட்டம்.

தோழி கூற்று

நற்றிணை 215 **மதுரைச் சுள்ளம்போதனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்து மீள்வானை, 'அவள் ஆற்றும் தன்மையள் அல்லள்; நீயிர் இங்குத் தங்கற்பாலீர்; எமரும் இன்னதொரு தவற்றினர்' எனத் தோழி தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்து நீங்கும் தலைவனிடம் தோழி, 'மாலைப்பொழுதில் உன்னைப் பிரிந்திருக்கத் தலைவி ஆற்றாள்; நீயும் எம்முடன் தங்குக. எம் உறவினரும் வேட்டைக்குச் சென்றுள்ளனர்' என்று கூறியது.

குணகடல் இவர்ந்து, குரூஉக்கதிர் பரப்பி,
பகல்கெழு செல்வன் குடமலை மறைய,
புலம்புவந்து இறுத்த புன்கண் மாலை,
இலங்குவளை மகளிர் வியல்நகர் அயர,
மீன்நிணம் தொகுத்த ஊன்நெய் ஒண்சுடர்
நீல்நிறப் பரப்பில் தயங்குதிரை உதைப்ப,
கரைசேர்பு இருந்த கல்லென் பாக்கத்து,
இன்றுநீ இவணை ஆகி, எம்மொடு
தங்கின் எவனோ தெய்ய? செங்கோல்
கொடுமுடி அவ்வலை பரியப் போகிய
கோட்சுறாக் குறித்த முன்பொடு
வேட்டம் வாயாது எமர்வா ரலரே.

தெளிவுரை

சேர்ப்பனே! கீழ்க்கடலினின்றும் எழுந்து செந்நிறக் கதிர்களைப் பரப்பிப் பகற்பொழுதினைச் செய்த கதிரவன் மேற்கு மலையில் மறைந்தனன். தனிமையால் வருத்தமிகுதியைத் தோற்றுவிக்கும் மாலைப்பொழுதும் வந்தது. தத்தம் இல்லிலிருந்து வளையணிந்த மகளிர், வருவிருந்தை முகமலர்ந்து வரவேற்கின்றனர்; மீன் கொழுப்பைக் காய்ச்சி உருக்கிய நெய்யினை ஊற்றி விளக்கேற்றி வைக்கின்றனர். நீலநிறக் கடலின் அலைகள் மோதும் கரையில் அமைந்திருப்பதும், கல் என்னும் ஆரவாரத்தைக் கொண்டதுமான எமது பாக்கத்தில் இன்று நீ எம்மொடு தங்கினால் என்ன குறையுண்டாம்? செவ்விய கோலொடு பிணித்து, வளைவான முடிச்சுகளைக் கொண்ட வலையைக் கிழித்து அறுத்துக்கொண்டு தப்பிய, கொல்லும் இயல்பு வாய்ந்த சுறா மீனைப் பிடிக்கக் கருதி, வலிமை கொண்ட எம் சுற்றத்தார் சென்றுள்ளனர். சுறா மீனைப் பிடிக்காது அவர்கள் திரும்பார்.

கருத்து

'தலைவ! இரவில் நீ எம்முடன் தங்குக.'

விளக்கம்

'தங்கினால் என்ன குறையுண்டாகும்?' என்பதால், 'இரவிலும் தலைவியுடன் கூடி இன்பம் பெறுக' என்பதனையும், 'எம் உறவினர் வரமாட்டார்' என்பதால், 'நீ இடையூறின்றி இன்பம் பெறலாம்' என்பதனையும் தோழி குறித்தனள்.

குறிப்பு

'தங்குக' என்று உடன்பாட்டில் கூறினாலும், தங்க இயலாதென்னும் நடை முறையைக் குறிப்பாய்ச் சொல்லி, தனிமையால் தலைவி தவித்து வருந்தா திருக்கத் திருமண முயற்சியை மேற்கொள்ளுமாறு தலைவனைத் தோழி வற்புறுத்துகிறாள்.

சொற்பொருள்

1. குணகடல் இவர்ந்து - கிழக்குக் கடலிலிருந்து எழுந்து; குரூஉக் கதிர் - சிவந்த கதிர்.
2. பகல்கெழு செல்வன் - பகற்பொழுதைச் செய்யும் செல்வனாகிய ஞாயிறு; குடமலை - மேற்கு மலை.
3. புலம்பு - தனிமை; இறுத்த - தங்கிய; புன்கண் - வருத்தம்.
4. இலங்கு - விளங்குகின்ற; வியல் - விரிவு; நகர் - இல்லம்; அயர - (விருந்து பேண) விரும்ப.
5. மீன் நிணம் தொகுத்த ஊன் நெய் - மீன்களின் கொழுப்பைக் காய்ச்சிப் பெற்ற ஊனாகிய நெய்; ஒண்சுடர் - ஒள்ளிய விளக்குச்சுடர்.
6. நீல்நிறப் பரப்பில் - நீல நிறமுள்ள கடற்பரப்பில்; தயங்குதிரை - அசையும் அலைகள்; உதைப்ப - கரையில் மோத.
7. கல்லென் பாக்கம் - 'கல்' என்னும் ஆரவாரத்தைக் கொண்ட பாக்கம்.
8. இவணை ஆகி - இங்கே இருந்து.
9. எவனோ - என்ன குற்றமுண்டாகும்; செங்கோல் - சிவந்த கோல்களோடு (பிணிக்கப்பெற்ற).
10. கொடுமுடி - வளைவான முடிச்சுகளைக் கொண்ட; அவ்வலை - அழகிய வலை; பரிய - கிழிய; போகிய - தப்பிச் சென்ற.
11. கோட்சுறா - கொல்லுதலில் வல்ல சுறாமீன்; குறித்த முன்பொடு - பிடித்தற்கு வேண்டிய வலிமையொடு (மேற்கொண்ட).
12. வேட்டம் வாயாது - மீன் வேட்டையில் அச்சுறாமீனைப் பிடிக்காது; எமர் வாரலர் - எம் சுற்றத்தார் மீளார்.

தோழி கூற்று

நற்றிணை 232 **முதுவெங்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகல் வருவானை, 'இரவு வா' எனத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் வந்தொழுகும் தலைவனிடம், 'இரவில் எம் பாக்கத்தில் தங்கிச் செல்க' எனத் தோழி சொல்லியது.

சிறுகண் யானைப் பெருங்கை ஈர்இனம்,
குளவித் தண்கயம் குழையத் தீண்டி,
சோலை வாழை முணைஇ அயலது
வேரல் வேலிச் சிறுகுடி அலற,
செங்கால் பலவின் தீம்பழம் மிசையும்
மாமலை நாட! காமம் நல்கென
வேண்டுதும் வாழிய! எந்தை, வேங்கை
வீஉக விரிந்த முன்றில்,
கல்கெழு பாக்கத்து அல்கினை செலினே.

தெளிவுரை

சிறிய கண்களையும் பெரிய கைகளையும் கொண்ட களிறும் பிடியும் காட்டுமல்லிகை சூழ்ந்த குளிர்ச்சி பொருந்திய குளத்தில் தம் மெய் தளருமாறு இணைந்து மகிழும்; அங்குச் சோலையிலுள்ள மலை வாழையை உண்ணாது வெறுக்கும். அருகில், மூங்கில் முள்ளால் அமைந்த வேலிகள் சூழ்ந்த குடியிருப்புகளில் உள்ளோர் அஞ்சி அலறுமாறு உட்புகுந்து பலா மரத்தின் இனிய பழங்களை உண்டு மகிழும். இத்தகைய யானைகள் இயங்கும் மலை நாட்டிற்கு உரியவனே! நீ நெடுங்காலம் வாழ்க! நாங்கள் உம்மிடம் காமத்தால், 'எமக்கு அருள்க' என இரக்கும் நிலையினராயுள்ளோம். எம் தந்தைக்குரியதும் வேங்கைப்பூக்கள் உதிர்ந்து கிடக்கும் அகன்ற முற்றத்தைக் கொண்டதுமான எங்கள் வீடு இப்பாக்கத்தில் உள்ளது. இன்றிரவு அங்குத் தங்கிச் செல்க!

கருத்து

'பகல் வரும் தலைவ! இன்று இரவு எங்கள் விருந்தாய் வந்து, எம் இல்லில் தங்கிச் செல்க' என்று தோழி கூறினாள்.

குறிப்பு

'இரவில் வா' என்று தோழி கூறினாலும், திருமணத்திற்கு முன்பு அவன், தலைவியின் இல்வத்தில் தங்க இயலாது; எனவே, அவன் வரைந்து கொள்ளுதலே தக்கது என்பதை அவன் உணருமாறு தோழி இவ்வாறு உரைக்கிறாள்.

உள்ளுறை

ஆண்யானை, பெண்யானை ஆகியன முறையே தலைவன் தலைவியரைக் குறிக்கும் என்பதையும்;

களிறும் பிடியும் 'இளம் குழையைத் தீண்டி' என்றது, இயற்கைப் புணர்ச்சியிற்கூடியதைக் குறிக்கும் என்பதையும்;

வாழையை வெறுத்தது என்றது, களவுப்புணர்ச்சியை வெறுத்தலைக் குறிக்கும் என்பதையும்;

'சிறுகுடி அலறப் பலாப்பழங்களை உண்டு மகிழும்' என்றது, அயற்பெண்டிர் கூறும் அலர்மொழி நீங்கி அவர் வாயடங்கத் தலைவன் தலைவியை மணம் புரிந்து இல்லறம் துய்க்க வேண்டும் என்பதையும் குறிக்கும் என அறிக.

சொற்பொருள்

1. ஈர் இனம் - களிறும் பிடியும்.
2. குளவி - காட்டுமல்லிகை; கயம் - குளம்; குழைய - மெய் தளருமாறு; தீண்டி - இணைந்து.
3. முணைஇ - வெறுத்து.
4. வேரல் - மூங்கில்.
5. செங்கால் - சிவந்த அடிமரம்; தீம்பழம் - இனிய பழம்; மிசையும் - உண்ணும்.
6. நல்கு - அருள்வாய்.
7. வேங்கை - வேங்கை மரம்.
8. வீ உக - பூக்கள் உதிர்ந்து கிடக்கும்.
9. கல்கெழு - மலையில் பொருந்திய; அல்குதல் - தங்குதல்; செலின் - சென்றால்.

தோழி கூற்று

நற்றிணை 276 **தொல்கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறி வந்து பெயரும் தலைமகனை உலகியல் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்து கூடிக் களித்த தலைவன் மீண்டும் தன்னூர் செல்லப் புறப் படும்போது, தோழி அவனிடம், 'எம்மூரில் விருந்தினனாய்த் தங்கிச் செல்க' என்று கூறியது.

கோடு துவையா, கோள்வாய் நாயொடு
காடுதேர் நசைஇய வயமான் வேட்கும்
வயவர் மகளிர் என்றி ஆயின்,
குறவர் மகளிரேம்; குன்றுகெழு கொடிச்சியேம்;
சேணோன் இழைத்த நெடுங்கால் கழுதில்
கான மஞ்ஞை கட்சி சேக்கும்
கல்லகத் தது,எம் ஊரே; செல்லாது
சேந்தனை சென்மதி நீயே – பெருமலை
வாங்குஅமை பழுனிய நறவுண்டு
வேங்கை முன்றில் குரவையும் கண்டே.

தெளிவுரை

கொம்புகளை ஊதி, வேட்டையாடுதலில் வல்லமை பொருந்திய நாய்களுடனே சென்று, காட்டில் இரை தேடித் திரியும் வலிமைமிக்க விலங்குகளை வேட்டையாடும் வேட்டுவர் மகள் என்று எங்களைக் கருதிவிட வேண்டா. யாம் இக்குன்றில் வாழும் தலைமக்களாகிய குறவர் மகளிர்; கொடிச்சியர் என்றும் கூறப்படுவோம். தினைப்புனங் காவலுக்குக் கானவன் கட்டிய, நெடிய கால்களைக் கொண்ட பரணைக் காட்டுமயில்கள் தம் இருப்பிடமாய்க் கருதித் தங்கும் இம்மலையில் எம் ஊர் அமைந்துள்ளது. நீ இப்போது உன் ஊருக்குச் செல்லுதலைத் தவிர்த்து எம் ஊரில் வந்து தங்குக! அங்கு, பெரிய மலையில் வளர்ந்த மூங்கில்குழலில் பெய்து அடைத்து வைக்கப்பட்டு

நீண்ட நாள் முற்றிய கள்ளினை உண்டு, வேங்கை மரம் நிற்கும் முன்றிலில் யாம் ஆடும் குரவையாட்டத்தையும் கண்டு, அதன் பின்னர் உன்னூர்க்குச் செல்.

கருத்து

'இரவு எம் ஊரில் விருந்தினனாய்த் தங்கி, மகளிர் ஆடும் குரவை ஆட்டத்தையும் கண்டு செல்.'

உள்ளுறை

பரணைத் தம்முடையனவாய்க் கருதி மயில்கள் தங்கும் என்று சொல்வதன்வழி, தலைவனும் தலைவியின் இல்லத்தைத் தனதாய்க் கருதித் தங்கவேண்டும் எனத் தோழி வேண்டுகிறாள்.

குறிப்பு

"வலிமையுள்ள விலங்குகளைக் கொல்லுகின்ற வேட்டுவர்தம் மகளிர்தாமே இவர்கள் என்று கருதி எம் ஊர் வருதற்குத் தயங்க வேண்டா; விருந்தாய் வருபவரை ஏற்றுப் பேணும் இயல்புள்ள குறவர் மகளிர் யாம். நீ வரின், எம் ஊரினர் உம்மை உவந்து ஏற்று உண்ணச்செய்வர்; வேங்கை மரங்களுள்ள முன்றிலில் யாம் ஆடும் குரவையாட்டத்தையும் காணலாம்" என உலகியலாய் விருந்து பேணுதலைச் சுட்டிக் காட்டினாள்.

சொற்பொருள்

1. **கோடு - கொம்பு; துவையா - ஊதியபடி; கோள்வாய் - கொள்ளுதல் வல்ல (குறித்த விலங்கைப் பிழையாது வளைத்துப் பிடிக்க வல்ல).**
2. **காடு தேர் - காட்டில் இரை தேடி; நசைஇய - விருப்பத்தைக் கொண்ட; வயமான் - வலிமை மிக்க விலங்குகளையே; வேட்கும் - வேட்டையாட விரும்பும்.**
3. **வயவர் - வேட்டுவர்; என்றி - என்று கருதுகிறாய்; ஆயின் - ஆனால்.**
4. **கொடிச்சி - குறிஞ்சிநிலப்பெண் (தலைமக்கள் மகள்).**
5. **சேணோன் - பரணில் இருந்து காவல் செய்பவன்; இழைத்த - செய்து நிறுத்திய; நெடுங்கால் - நீண்ட கால்களைக் கொண்ட; கழுது - பரண்.**
6. **மஞ்ஞை - மயில்; கட்சி - ஒதுக்கிடம்; சேக்கும் - தங்கும்.**
7. **கல் - மலை; அகத்தது - இடையே இருப்பது; செல்லாது - நீ உன் ஊருக்குச் செல்லாது.**

8. சேந்தனை - எம் ஊரில் தங்கி; சென்மதி - செல்.
9. வாங்கு அமை - வளைந்த மூங்கில்; பழுனிய - நன்கு முதிர வைத்த; நறவு உண்டு - கள்ளினை (தேனை) உண்டு.
10. வேங்கை முன்றில் - வேங்கை மரம் நிற்கும் முன்றிலில்; குரவையும் - (யாம் ஆடும்) குரவைக் கூத்தையும்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 9 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி தலைமகனை இரவுக்குறி நயப்பித்தது. (நயப்பித்தது - விரும்புமாறு கூறியது.)

கூற்று விளக்கம்

பகற்குறியில் தலைவியைச் சந்திக்க இயலாமல் திரும்பிச் செல்லும் தலைவன் காதில் விழுமாறு தோழி தலைவியிடம் கூறியது.

பிணிநிறம் தீர்ந்து பெரும்பணைத்தோள் வீங்க
மணிமலை நாடன் வருவான்கொல் தோழி!
கணிநிறை வேங்கை மலர்ந்துவண்(டு) ஆர்க்கும்
அணிநிற மாலைப் பொழுது.

தெளிவுரை

"என் தலைவியே! மாணிக்கங்களைக் கொண்ட மலைநாட்டிற் குரியவன், நம் தலைவன். தினை கொய்ய வேண்டிய காலத்தை முன்னுரைக்கும் கணியன்போல வேங்கை மரங்கள் பூத்துள்ளன. அவற்றில் தேன் வண்டுகள் ஆரவாரிக்கும் இம்மாலைப்போதில் பெரிய மூங்கில் போன்ற நம் தோள்கள் பிரிவுத்துன்பத்தால் எய்தியுள்ள பசலை நிறம் நீங்கிப் பூரிக்குமாறு நம் தலைவன் வரமாட்டானா?" என்று பகற்குறிக்கண் வந்து மீளும் தலைவன் கேட்பத் தோழி தலைவியிடம் வினவினாள்.

கருத்து

"பகலில் வந்து செல்லும் தலைவன் இரவில் வரக்கூடாதா?" என்று தலைவன் காதில் விழுமாறு தோழி தலைவியிடம் கூறினாள்.

குறிப்பு

வேங்கை பூப்பது தினையறுக்கும் காலத்தைக் குறிக்கும். வேங்கைகள் பூத்திருப்பதால் தினை கொய்யப்பட்டுவிடும். தலைவி புனங்காவலுக்கு வர மாட்டாள். ஆதலால், இனி இரவுக்குறிக்கு வருமாறு தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பிணி - (பிரிவுத்துயர்) நோயால்; நிறம் - (உண்டான) பசலை நிறம்; பணைத்தோள் - மூங்கில் போன்ற தோள்; வீங்க - பூரிக்கும்படி.
2. வருவான் கொல் - (நம் தலைவன்) வரமாட்டானா?
3. கணி - (தினை கொய்ய வேண்டிய காலத்தை எடுத்துக் கூறும்) சோதிடன் போல; நிறை - மிகுந்துள்ள; வேங்கை - வேங்கை மரங்கள்; ஆர்க்கும் - ஆரவாரிக்கும்.
4. அணி நிற - அழகிய நிறத்தினைக் கொண்ட.

தோழி கூற்று

தினைமொழி ஐம்பது 4 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகனைத் தோழி இரவுக்குறி நயப்பித்தது. (நயப்பித்தது - விரும்புமாறு செய்தது.)

கூற்று விளக்கம்

பகற்குறியில் வந்த தலைவன் தலைவியைக் காணாமல் திரும்புகிறான். தோழி அவனை இரவில் வருமாறு கூறினாள்.

ஏனல் இடத்(து)இட்ட ஈர்மணிகொண்(டு) எல்லிடைக்
கானவர் மக்கள் கனலெனக் கைகாய்த்தும்
வானுயர் வெற்பன் வருவான்கொல் என்தோழி
மேனி பசப்புக் கெட.

தெளிவுரை

"தினைப்புனத்தை உழுதபோது எடுத்து வெளியில் போட்ட குளிர்ந்த மாணிக்க மணிகளை இரவில் நெருப்பெனக் கருதிக் குறவர் புதல்வர் கைகளை நீட்டிக் குளிர் காய்வர். வானளாவி உயர்ந்து காணும்படியான இத்தகைய மலைநாட்டுக்குத் தலைவன், தலைவியின் உடலில் காணும் பசலை நிறம் கெடும் படியாய் இரவுக்குறியில் வந்து அருள்புரிவானோ? அறியேன்" என்று பகற்குறிக்கண் வந்து மீளும் தலைவனை எதிரிற்கண்ட தோழி அவனுக்குக் கேட்கும்படி கூறினாள்.

கருத்து

"பகலில் தலைவியைக் காணாது திரும்பும் தலைவனே, இரவில் வந்து அருள்புரி" எனத் தோழி தலைவனை இரவுக்குறி விரும்புமாறு செய்தது.

சொற்பொருள்

1. ஏனல் - தினைப்புனம்; இடத்து - பக்கத்தே; இட்ட - (உழும்போது வெளியில் எடுத்துப்) போட்ட; ஈர்மணி - குளிர்ந்த மாணிக்க மணி; எல்இடை - இராக் காலத்தே.
2. கானவர் - குறவர்; மக்கள் - புதல்வர்; கனல் - நெருப்பு; கை காய்த்தும் - கைகளை நீட்டிக் குளிர் காய்வர்.
3. வெற்பன் - மலைநாட்டுக்குத் தலைவன்; வருவான்கொல் - வருவானோ?
4. மேனி - உடம்பு; பசப்பு - பசலை நிறம்; கெட - நீங்க.

தோழி கூற்று

நற்றிணை 254 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி படைத்து மொழிந்தது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் தலைவியைக் காண இயலாது திரும்புகின்ற தலைவனை ஆற்றுவிக்கும் வகையில் தோழி புதியனவாய்ச் சில மொழிகளைப் படைத்துக்கொண்டு தலைவனிடம் கூறியது.

வண்டல் தைஇயும், வருதிரை உதைத்தும்,
குன்றுஒங்கு வெண்மணல் கொடிஅடும்பு கொய்தும்,
துனிஇல் நல்மொழி இனிய கூறியும்,
சொல்எதிர் பெறாஅப் உயங்கி, மெல்லச்
செலீஇய செல்லும் ஒலிஇரும் பரப்ப!
உமணர் தந்த உப்புநொடை நெல்லின்
அயினி மாஇன்று அருந்த, நீலக்
கணம்நாறு பெருந்தொடை புரளும் மார்பில்
துணைஇலை தமியை சேக்குவை அல்லை
நேர்கண் சிறுதடி நீரின் மாற்றி,
வானம் வேண்டா உழவின்எம்
கானல்அம் சிறுகுடிச் சேந்தனை செலினே.

தெளிவுரை

"ஒலிக்கின்ற கடற்பரப்பிற்குத் தலைவனே! பகற்பொழுதெல்லாம் எம்முடன் வண்டலில் சிற்றில் புனைந்தும், பொங்கி வரும் அலையை எம்மீது எற்றியும் விளையாடினாய். உயர்ந்த மணல் மேட்டில் படர்ந்துள்ள அடுப்பங்கொடிகளின் மலர்களைப் பறித்துத் தந்தாய். வருத்தம் தாராத இனிய மொழிகளைப் பேசினாய். ஆயினும், எம்மிடமிருந்து மறுமொழி எதுவும் பெறாததால் வருந்தி உன் ஊருக்குச் செல்கின்றாய்!

"பாத்திகளில் கடல்நீரை ஊற்றி மழையை வேண்டாது உப்பு விளைக்கும் வேளாண்மையைக் கொண்டதும், கடற்கரைச்

சோலை சூழப் பெற்றதுமான எங்கள் சிறிய குடியிருப்பில் தங்கிப் பிறகு செல்! அங்ஙனம் தங்கியிருப்பாயாயின், உப்பு வாணிகர்கள் தங்கள் உப்பினை விற்று, அதற்குப் பதிலாய் வாங்கி வரும் நெல்லைக் குற்றிச் செய்த உணவினை உன் குதிரை உண்ணும். மணமிக்க பெரிய மலர் மாலை புரளும் உன் மார்பில் நீயும் துணையின்றித் தனியே துயில மாட்டாய் (தலைவி உன் மார்பில் துயில, நீயும் துயில்வாய்). ஆதலின், பெருமானே! இரவு இங்குத் தங்கிச் செல்வாயாக" என்கிறாள் தோழி.

கருத்து

'தலைவ! இன்று இரவு எம் ஊரில் தங்கிச் சென்றிடுக' என்கிறாள், தோழி.

குறிப்பு

தோழியின் வேண்டுதலை ஏற்று அங்குத் தங்கினால் அவன் களவொழுக்கம் வெளிப்பட்டுப் பழி பல நேரும். மணம் புரிந்தாலன்றித் தலைவன் தலைவியின் வீட்டில் தங்குதல் இயலாது. ஆதலின், அவன் தலைவியோடு இன்புற்றிருக்க உடனே வரைந்துகொள்ளவேண்டும் என்பதைத் தோழி இவ்வாறு குறிப்பாற் புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. வண்டல் - மணற்பரப்பில் மகளிர் சிற்றில் கட்டி விளையாடும் விளையாட்டு; தைஇ - புனைந்து; வருதிரை - கரையை நோக்கி வருகின்ற அலை.
2. கொடிஅடும்பு - அடுப்பங்கொடி.
3. துனிஇல் - வெறுப்பு இல்லாத.
4. சொல் எதிர் பெறாஅய் - மறுமொழி எதுவும் பெறாது; உயங்கி - வருந்தி.

4-5. மெல்லச் செலீஇய செல்லும் - மெல்ல உன் ஊருக்குச் செல்கின்றாய்; ஒலி இரும் பரப்ப - ஒலிக்கின்ற பெரிய கடற்பரப்பிற்குத் தலைவனே!

6. உமணர் - உப்பு வாணிகர்; உப்பு நொடை - உப்பை விற்றுக்கொண்டு வந்த (நொடை - விலை).

7-8. அயினி - உணவு; மா - குதிரைகள்; நீலக்கணம் - நீல மலர்க்கூட்டம்.

8. பெருந்தொடை - தொடுக்கப்பெற்ற பெரிய மாலை.

9. துணை இலை - துணை எதுவும் இல்லாதவனாய்; தமியை - தனியனாய்; சேக்குவை அல்லை - தங்குவாயும் அல்லை.

10. நேர் கண்ண சிறுதடி - நேர் நேராய் வகுக்கப்பட்ட சிறிய சிறிய உப்புப் பாத்திகளில்; நீரின் மாற்றி - நீரைப் பாய்ச்சி.
11. வானம் வேண்டா உழவு - மழையை வேண்டாது செய்யப்படும் உழவில் பெற்ற உப்பு.
12. சேந்தனை செலின் - தங்கிச் சென்றால்.

தோழி கூற்று

நற்றிணை 331 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி இரவுக்குறி நேர்ந்தது.

கூற்று விளக்கம்

பகற்குறிக்கண் வந்து செல்லும் தலைவன் இரவுக்குறி வேண்ட, அதற்கிசைந்த தோழி, இரவில் தம் ஊர்க்கு வருமாறு கூறியது.

உவர்விளை உப்பின் உழாஅ உழவர்
ஒழுகை உமணர் வருபதம் நோக்கி,
கானல் இட்ட காவற் குப்பைப்
புலவுமீன் உணங்கல் படுபுள் ஒப்பி,
மடநோக்கு ஆயமொடு உடனூர்பு ஏறி,
'எந்தை திமில்இது நுந்தை திமில்'என
வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்
திண்திமில் எண்ணும் தண்கடற் சேர்ப்ப!
இனிதே தெய்யஎம் முனிவில் நல்லூர்;
இனி,வரின் தவறும் இல்லை; எனையதூஉம்
பிறர்பிறர் அறிதல் யாவது
தமர்தமர் அறியாச் சேரியும் உடைத்தே.

தெளிவுரை

பரதவர், உவர்நிலத்து விளையும் உப்பினை ஏரால் உழுவ தின்றிக் கையால் பாத்தி கட்டி விளைவிப்பர். அவ்வுப்பினை வாங்க உப்பு வாணிகருடைய வண்டிகள் வருவதை எதிர்நோக்கி

உப்பைக் கடற்கரைச்சோலையில் காவலுடையதாய்க் குவித்து வைப்பர். அச்சோலையில் உப்பிட்டு உலர்ந்த மீன் வற்றலை உண்ணவரும் பறவைகளை இளம்மகளிர் ஓட்டிக்கொண்டிருப்பர். மாலையில் அவர்கள் உப்புக்குவியலின் மீதேறி, கடலில் வரும் படகுகளை, 'இஃது என் தந்தையின் படகு, இஃது உன் தந்தையின் படகு' எனச் சுட்டிக்காட்டி எண்ணிக்கொண்டிருப்பர். இத்தகைய கடற்பரப்பின் சேர்ப்பனே! எம் ஊர் இனிமை தருவது; இங்கு வருதலால் தீமை எதுவும் ஏற்படாது; சேரியும், இவர் இவருக்கு உறவினர் என்றறியா மக்களைக் கொண்டது. ஆதலின், பிறர் உம்மை அறிதல் இயலாது.

கருத்து

'எம் சேரியில் ஒருவரை ஒருவர் இன்னார் என அறியார். ஆதலின், நீ அங்கு இரவு வருதலில் தவறேதுமில்லை.'

விளக்கம்

"பரதவர் தாம் விளைவித்த உப்பினை அதனை வாங்கவரும் வாணிகரை எதிர்நோக்கிக் கடற்கரைச்சோலையில் குவித்து வைத்திருப்பர். அச்சோலையில் மீன் வற்றலைக் கவரவரும் பறவைகளை ஓட்டிக்கொண்டிருக்கும் இளமங்கையர் மாலையில் உப்புக் குவியலின் மேலேறிக் கடலிலிருந்து திரும்பும் படகுகளை எண்ணிக்கொண்டிருப்பர். அத்தகைய கடற்பரப்பின் தலைவனே! 'எம் ஊர் இனியது; ஒருவரை ஒருவர் இன்னார் என அறியார்; ஆதலின் நீ இரவு அங்கு வருதலில் தவறேதுமில்லை' என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

உள்ளுறை

மகளிர் பகலில் பறவைகளை விரட்டுவர்; மாலையில் உப்புக் குவியலின்மீதேறிக் கடலினின்று மீளும் படகுகளை, 'எம் முடையது, உம்முடையது' என எண்ணுவர் என்றது, தலைவியும் பகலில் பறவைகளை விரட்டுவாள் என்பதனையும், இரவில் மனையிலிருந்து, 'சோலையில் தலைவன் செய்த புள்ளோசைக் குறி இது; கூற்றுப்புள் வரவால் எழுந்த ஓசை இது' எனக் கருதியுமிருப்பாள் என்பதனையும் உள்ளுறுத்துகிறது.

சொற்பொருள்

1. உவர் - உவர் நிலம்; உழாஅ உழவர் - ஏரால் உழாமல் கையால் பாத்தி கட்டி உப்பினை உண்டாக்குபவர்.
2. ஒழுகை - வண்டிகளின் வரிசை; உமணர் - உப்பு வாணிகர்; வருபதம் - வருகின்ற காலம்.
3. காவல் குப்பை - காவலைக் கொண்ட உப்புக்குவியல்.
4. புலவு மீன் - புலால் நாற்றம் கொண்ட மீன்; உணங்கல் - வற்றல்; படுபுள் - கவர வரும் பறவை; ஓப்பும் - விரட்டும்.
5. மடநோக்கு - மடப்பத்தைக் கொண்ட நோக்கு; ஆயம் - மகளிர்; ஊர்பு ஏறி - (உப்புக்குவியல்மேல்) தவழ்ந்து ஏறி.
6. திமில் - படகு.
7. வளை நீர் - சங்குகள் மேயும் கடல்; கிளைஞர் - தம் உறவினர்.
9. முனிவில் - வெறுப்பில்லாத.
11. தமர் தமர் அறியா - இவர் இவருக்கு உறவினர் என்றறியா.

தோழி கூற்று

குறுந்தொகை 345 **அண்டர் மகன் குறுவழுதி**

திணை : நெய்தல்

கூற்று

பகல் வந்து ஒழுகுவானைத் தோழி 'இரா வா' என்றது.

கூற்று விளக்கம்

பகற்குறியில் வந்து தலைவியைச் சந்தித்துச் செல்லும் தலைவனிடம் இனி 'நீ இரவுப்பொழுதிலே வருக' எனத் தோழி கூறியது.

இழைஅணிந்து இயல்வரும் கொடுஞ்சி நெடுந்தேர்
வரைமருள் நெடுமணல் தவிர்த்தனிர் அசைஇத்
தங்கினிர் ஆயின் தவறோ? தெய்ய
தழைதாழ் அல்குல் இவள்புலம்பு அகலத்
5 தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி
இழும்என ஒலிக்கும் ஆங்கண்
பெருநீர் வேலிஎம் சிறுநல் ஊரே.

தெளிவுரை

"தாழை மரங்களைக் கொண்டதும் அலைகள் விளங்குவதுமான வளைந்த உப்பங்கழி 'இம்' எனும் குரலோடு ஒலிக்கும். அவ்விடத்தே கடலை எல்லையாய்க் கொண்டது, எமது சிறிய நல்லூர்.

பொன்னணிகள் அணிவிக்கப்பெற்றதும், கொடுஞ்சியினைக் கொண்டதும், விரைந்து ஓடிவருவதுமான உமது நெடிய தேரினை, மலை போன்றுள்ள மணற்குவியலின் மறைவிலே நிறுத்தி, இளைப்பாறி வருக! அவ்வாறு வந்து, தாழ்ந்து விளங்கும் அழகிய தழையுடையை அணிந்த அல்குலைக் கொண்ட எம் தலைவியின் தனிமைத் துன்பம் நீங்கும்படி இரவிலே தங்குவீராயின் அது தவறாகுமோ?"

கருத்து

இனி இரவிலே வந்து தலைவியைச் சந்தித்துச் செல்லலாம்.

குறிப்பு

தவறோ என்னும் வினா, அங்ஙனம் செய்ய வேண்டும் என்னும் எண்ணத்தை வெளிப்படுத்துகிறது.

இரவுக்குறி இல்லத்தின் எல்லையைத் தாண்டியதாய் இருக்கக்கூடாது; அங்கே தேரோடு வந்தால் ஊரினர் அறிவர் என்றஞ்சி அதனை மணல் மேட்டின் மறைவில் நிறுத்தி வைக்கும்படி கூறினாள், தோழி.

சிறு நல்லூரில் தாழை விளங்கும் கழிசார்ந்த கடற்பகுதி என இரவுக் குறியிடம் சுட்டப்பட்டது.

சொற்பொருள்

1. இழை அணிந்து - பொன் அணிகளைத் தாங்கி; இயல்வரும் - ஓடி வரும்; கொடுஞ்சி - தேரின் முன்தட்டில் உள்ள கைப்பிடி.
2. வரைமருள் - மலை போல் காணப்படும்; தவிர்த்து - மறைவிலே விட்டு வைத்து; அசைஇ - இளைப்பாறி.
3. தங்கினிர் ஆயின் - (எம் ஊரில்) தங்குவீராயின்.
4. தழை தாழ் - தழையுடை தொங்குகின்ற; அல்குல் - அல்குலைக் கொண்ட; இவள் புலம்பு - இவள் கொண்ட தனிமைத் துயரம்; அகல - நீங்க.

5. தாழை தைஇய - தாழை மரங்கள் பொருந்திய; தயங்கு திரை - விளங்குகின்ற அலைகளைக் கொண்ட; கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி; தைஇய - தைத்த.
6. இழும் என - இழும் என்னும் ஒலியுடன்; ஆங்கண் - அவ்விடத்தில் (உள்ள).
7. பெருநீர் வேலி - கடலை எல்லையாய்க் கொண்ட.

தோழி கூற்று

அகநானூறு 120 **நக்கீரனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிக்கண் தலைமகளை இடத்துய்த்து வந்து, தலைமகனை எதிர்ப்பட்டு நின்று தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பகற்குறி இடத்தில் நிறுத்திவந்த தோழி, தலைவனைக் கண்டு, அவனிடம் அன்றிரவு தம் ஊரில் தங்கிச் செல்லுமாறு கூறியது.

நெடுவேள் மார்பின் ஆரம் போல,
செவ்வாய் வானம் தீண்டி,மீன் அருந்தும்
பைங்காற் கொக்கின் நிரைபறை உகப்ப,
எல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயின்,
கல்சேர்ந் தன்றே – பல்கதிர் ஞாயிறு
மதர்எழில் மழைக்கண் கலுழ, இவளே
பெருநாண் அணிந்த சிறுமென் சாயல்
மாண்நலம் சிதைய ஏங்கி, ஆனாது,
அழல்தொடங் கினளே – பெரும! – அதனால்
கழிச்சுறா எறிந்த புண்தாள் அத்திரி
நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந்து, அசைஇ,
வல்வில் இளையரொடு எல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவது உண்டோ–

பெண்ணை ஓங்கிய வெண்மணற் படப்பை
அன்றில் அகவும் ஆங்கண்,
சிறுகுரல் நெய்தல்எம் பெருங்கழி நாட்டே?

தெளிவுரை

பகற்பொழுதை மெல்லமெல்லக் குறைத்துப் பகலவன் மேற்றிசை மலைவாயிலைச் சென்றடைந்தான். (வயல்களில்) மீனைத் தின்றுகொண்டிருந்த கொக்குக்கூட்டம் மேலெழுந்து ஒரே வரிசையில் பறக்கத் தொடங்கியது. செக்கர் வானத்தில் வெள்ளைக் கொக்குகள் பறந்த தோற்றம், முருகப்பெருமான் மார்பினில் முத்துமாலை அமைந்து அசைவது போன்றிருந்தது.

மிக்க நாணத்தை அணிகலனாய்க் கொண்ட சிறிய மெல்லிய சாயலைக் கொண்ட தலைவியோ, தன் மாட்சிமைமிக்க அழகு கெட, மதர்த்த அழகிய குளிர்ச்சி பொருந்திய கண்களில் நீர் வழிய அழத் தொடங்கிவிட்டாள்.

பெரும! உப்பங்கழியிலுள்ள சுறா மீன்கள் தாக்கியதால் உன் கோவேறு கழுதையின் காலில் புண் ஏற்பட்டதால் நீர் மிகுந்த கரிய கழியிலே நடக்க இயலாமல் மெலிந்துள்ளது. ஆகவே, வலிய வில்லினைக் கொண்டுள்ள உன் ஏவலாளரொடு இரவிலே செல்லாது தங்கி இளைப்பாறிச் செல்லலாமே!

பனைமரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள வெண்மணல் தோட்டங் களில் அன்றில் தன் துணையை அழைத்துக்கொண்டிருக்கும். அவ்விடத்தில், சிறிய கொத்துகளான நெய்தல் பூக்களைக் கொண்ட உப்பங்கழி சூழ்ந்த எம் ஊரில் சிறிது பொழுது (இன்றிரவு) தங்கிச் சென்றால் குற்றம் எதுவும் உண்டோ?

கருத்து

'தலைவ! இன்றிரவு எம் ஊரில் தங்கிச் செல்லலாமே!'

விளக்கம்

பெரும! ஞாயிறு மறையும்பொழுது நீ பிரிவதால் தலைவி அழத் தொடங்கிவிட்டாள். நீ ஏறிச் செல்லவிருந்த கோவேறு கழுதையின் காலில் சுறாமீன் தாக்கிப் புண் ஏற்பட்டுள்

ளமையால் நடக்க இயலாமல் அது வருந்துகிறது. ஆதலின், உன் ஏவலாளரொடு இப்போதே புறப்படாமல் எம் ஊரில் தங்கிச் செல்வதால் உமக்கு ஏற்படும் குற்றம் ஏதேனும் உண்டா?

சொற்பொருள்

1. நெடுவேள் - முருகன்; ஆரம் - மாலை.
2. செவ்வாய் வானம் - செக்கர் வானம்; தீண்டி - பொருந்தி.
3. நிரை - கூட்டம்; பறை உகப்ப - பறத்தலை விரும்ப.
4. எல்லை - பகற்பொழுதை; பைப்பய - மெல்ல மெல்ல; கழிப்பி - போக்கி; குடவயின் - மேற்றிசையில்.
5. கல் - மலை.
6. மதர் - மதர்த்த; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்; கலுழ - கலங்கிட.
7. பெருநாண் - மிக்க நாணம்; சிறுமென் சாயல் - சிறிய மெல்லிய சாயல்.
8. மாண்நலம் - மாட்சிமைப்பட்ட அழகு; சிதைய - கெட.
10. சுறா - சுறாமீன்; எறிந்த - தாக்கிய; புண்தாள் - புண்ணுற்ற கால்; அத்திரி - கழுதை.
11. பரி மெலிந்து - செல்லுதல் மெலிந்து; அசைஇ - இளைப்பாறி.
12. வல்வில் - வலிமையான வில்; இளையர் - ஏவலாளர்; எல்லி - இரவு.
13. சேர்ந்தனை - தங்கி; சிதைகுவது - கெடுவது.
14. பெண்ணை - பனைமரம்; படப்பை - தோட்டம்.
15. அன்றில் - அன்றில் பறவை; அகவும் - (தன் துணையை) அழைக்கும்; ஆங்கண் - அவ்விடத்தேயுள்ள.
16. சிறு குரல் - சிறிய பூங்கொத்து; கழிநாடு - உப்பங்கழி சூழ்ந்த ஊர்.

தோழி கூற்று

அகநானூறு 300 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்து நீங்கும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்து திரும்புவதற்குத் தேரைப் பூட்டச் சொல்லும் தலைவனிடம் தோழி, 'இன்று இரவு எம் ஊரில் வந்து தங்கிச் செல்லலாம்' என்று கூறியது.

நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்
நுணங்குமணல் ஆங்கண் உணங்கப் பெய்ம்மார்
பறிகொள் கொள்ளையர், மறுக உக்க
மீன்ஆர் குருகின் கானல்அம் பெருந்துறை,
எல்லை தண்பொழில் சென்றென, செலீஇயர்
தேர்பூட்டு அயர ஏஎய், வார்கோல்
செறிதொடி திருத்தி, பாறுமயிர் நீவி,
'செல்இனி மடந்தை!நின் தோழியொடு, மனை'எனச்
சொல்லிய அளவை, தான்பெரிது கலுழ்ந்து,
தீங்குஆ யினள்இவள் ஆயின், தாங்காது,
நொதுமலர் போலப் பிரியின், கதுமெனப்
பிறிதுஒன்று ஆகலும் அஞ்சுவல்; அதனால்,
சேணின் வருநர் போலப் பேணாய்,
இருங்கலி யாணர்எம் சிறுகுடித் தோன்றின்,
வல்எதிர் கொண்டு மெல்லிதின் வினைஇ,
'துறையும் மான்றின்று பொழுதே; சுறவும்
ஓதம் மல்கலின், மாறு ஆயினவே;
எல்லின்று தோன்றல், செல்லா தீம்'என,
எமர்குறை கூறத் தங்கி, ஏமுற
இளையரும் புரவியும் இன்புற, நீயும்
இல்உறை நல்விருந்து அயர்தல்
ஒல்லுதும், பெரும!நீ நல்குதல் பெறினே.

தெளிவுரை

"பெருமை! அதிகாலையிலேயே வலையில் மீன்களை நிறைய முகந்துகொண்டனர், மீன் பிடித்தலில் வல்லவராய பரதவர்; மேலும் 'பறி' என்னும் கருவியினாலே பிடித்த மீன்களையும் சேர்த்து நுண்ணிய மணல்மேட்டில் அவை துடிக்கும்படி உலரப் போட்டிருக்கின்றனர். அம்மீன்களைத் தின்னப் பறவையினங்கள் வந்து விழுகின்றன. அத்தகைய அழகிய பெரிய கடற்கரைச்சோலையில் பகற்பொழுது கழிந்ததால், உன் ஊர்க்குச் செல்லத் தேரினைப் பூட்டுமாறு வலவனை ஏவினாய்; தலைவியின் திரண்ட நெருங்கிய வளையலைத் திருத்தி அணிவித்தாய்; சிதறிக் கலைந்த கூந்தலைத் தடவி ஒழுங்கு செய்தாய்; பிறகு, 'மடந்தையே! நீ உன் இல்லத்திற்கு உன் தோழியுடன் இப்போது செல்' என்று சொன்னாய்; அவ்வாறு சொன்ன அளவிலே, இவள் மிகவும் அழுது வருந்துகின்றனள். அதனை எண்ணாது அயலார்போல நீ பிரிந்து சென்றால் இவள் விரைந்து வேறு தீங்கினை அடைவள் என அஞ்சுகிறேன். (அவள் இறந்துபடுதலும் கூடும்.)

"நான் கூறுவதனைக் கேட்டருள்! நீயும் நின் ஏவலாளரும் நெடுந்தொலைவிலிருந்து வருபவர்போல, எம்மோடு எவ்வுறவும் கொண்டவர்போல் காட்டிக்கொள்ளாமல், மிக்க ஆரவார முடைய எமது சிற்றூருக்கு வாருங்கள். எங்கள் உறவினர் விரைந்து எதிர்கொண்டழைத்து, உம் வருகைபற்றி மெல்ல வினவுவர். பிறகு, 'பொழுதும் மயங்கிவிட்டது; நீர்த்துறையில் அலை பெருகி ஏறலின் சுறாமீன்களும் பகையாய்த் தொல்லை கொடுக்கும்; இரவும் வந்துவிட்டது. எனவே, நீங்கள் செல்ல வேண்டா' என்று உம்மை இரந்து வேண்டிக்கொள்வர்; நீயும் அங்குத் தங்கி இன்புறவும், உன் ஏவலாளரும் குதிரையும் இன்பம் எய்தவும் எம் இல்லத்தில் தங்கும் நல்ல விருந்தாய் ஏற்றுப் பேணுவோம்!"

கருத்து

'தலைவ! எம் ஊருக்கு விருந்தினனாய் வந்து, இரவில் தங்கிச் செல்க.'

விளக்கம்

பெரும! நீ கடற்கரைச்சோலையில் பகற்பொழுது கழிந்ததும் உன் ஊருக்குச் செல்லத் தேரினைப் பூட்டச் சொன்னாய்! மேலும், 'மடந்தையே! உன் தோழியோடு உன் இல்லத்திற்குச் செல்' என்றும் கூறினாய். அதைக் கேட்ட அளவிலேயே இவள் பெரிதும் அழுது வருந்துகின்றாள்; நீ பிரிந்தால் வேறு துன்பங் கட்கும் இவள் ஆளாகலாம். இவள் இறந்துபடுதலும் கூடும் என அஞ்சுகிறேன். ஆதலால், நீ எம் ஊர்க்கு வரின் எம் சுற்றத்தார் உம்மை வரவேற்று, இரவில் செல்ல வேண்டாமென அங்குத் தங்குமாறு வேண்டிக்கொள்வர். நீ அவ்வாறு தங்குவாயாயின் நீ பெருமையுறவும், உன் ஏவலாளரும் குதிரையும் இன்பமுறவும் உம்மை எம் விருந்தாய் ஏற்றுப் போற்றிப் பேணுவோம்" எனத் தோழி கூறுகிறாள்.

இவ்வாறு கூறுவதன் நோக்கம், தலைவனுக்கு இல்லறத்தில் விருப்பம் ஏற்படுத்துவதாம்!

சொற்பொருள்

1. நாள் - நாள் காலையில்; வலை முகந்த - வலையினால் மீன்களை முகந்துகொண்ட; கோள்வல் - மீன் பிடித்தலில் வல்ல.
2. நுணங்குமணல் - நுண்ணிய மணல்; உணங்க - உலரும்படி; பெய்ம்மார் - பரப்புவர்.
3. பறி - மீன்பிடி கருவி; கொள்ளையர் - மிக்க மீனினையுடையவர்; மறுக உக்க - வருந்துமாறு உலரப்போட்ட.
4. மீன் ஆர் - மீன்களை உண்ணும்; குருகு - பறவை.
5. எல்லை சென்றென - பகல் கழிந்ததாய்; செலீஇயர் - (உன்) ஊர்க்குச் செல்ல.
6. தேர் பூட்டு அயர - தேரைப் பூட்டுமாறு; ஏஎய் - ஏவி; வார்கோல் - நீண்டு திரண்ட.
7. செறி தொடி - நெருங்கிய வளை; பாறுமயிர் - கலைந்த மயிர்.
9. அளவை - அளவிலே; கலுழ்ந்து - அழுது வருந்தி.
10. தீங்காயினள் - வருந்துகின்றாள்.
11. நொதுமலர் - அயலவர்; கதும் என - விரைவாய்.
12. பிறிது ஒன்று ஆகலும் - வேறு தீங்கு அடையினும் அடையலாம்.
13. சேணின் வருநர் - தொலைவிலிருந்து வருபவர்.

14. இருங்கலி - மிக்க ஆரவாரமுள்ள; யாணர் - புது வருவாயினைக் கொண்ட; சிறுகுடி - சிற்றூர்; தோன்றின் - வருவீராயின்.
15. வல் - விரைய; மெல்லிதின் - மெல்லென; வினைஇ - வினாவி.
16. மான்றின்று - மயங்கிவிட்டது.
17. (துறையும்) ஓதம் மல்கலின் - (நீர்த்துறையும்) அலைபெருகி ஏறலின்; சுறவும் மாறு ஆயின - சுறா மீன்களும் பகையாயின.
18. எல்லின்று - இருண்டுவிட்டது; தோன்றல் - தலைவ; செல்லாதீம் - செல்ல வேண்டா.
19. எமர் - எம் உறவினர்; குறை கூற - குறையிரந்து வேண்ட; ஏமுற தங்கி - இன்பமுடன் தங்கி.
20. இளையரும் - ஏவலாளரும்; புரவியும் - குதிரைகளும்.
21. இல் உறை - எம் வீட்டில் தங்கும்; அயர்தல் - விரும்புதல்.
22. ஒல்லுதும் - உடன்படுக; நல்குதல் - விரும்புதல்.

தோழி கூற்று

அகநானூறு 340 **நக்கீரர்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறிக்கண் தோழி தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறியிடத்தில் தலைவனைக் கண்ட தோழி, அவனிடம் அன்றிரவு தம்மூரில் தங்கிச் செல்லுமாறு கூறியது.

பல்நாள் எவ்வம் தீர, பகல்வந்து,
புன்னைஅம் பொதும்பின் இன்நிழல் கழிப்பி,
மாலை மால்கொள நோக்கி, பண்ஆய்ந்து,
வலவன் வண்தேர் இயக்க, நீயும்
செலவுவிருப் புறுதல் ஒழிகதில் அம்ம–
'செல்லா நல்இசை, பொலம்பூண், திரையன்
பல்பூங் கானல் பவத்திரி அன்னஇவள்,
நல்எழில் இளநலம் தொலைய, ஒல்லென,
கழியே ஓதம் மல்கின்று; வழியே
வள்ளயிற்று அரவொடு வயமீன் கொட்கும்;

சென்றோர் மன்ற; மான்றின்று பொழுது,என
நின்திறத்து அவலம் வீட, இன்றுஇவண்
சேப்பின் எவனோ! பூக்கேழ் புலம்ப!–
பசுமீன் நொடுத்த வெண்நெல் மாஅத்
தயிர்மிதி மிதவை ஆர்த்துவம்; நினக்கே,
வடவர் தந்த வான்கேழ் வட்டம்
குடபுல உறுப்பின் கூட்டுபு நிகழ்த்திய
வண்டுஇமிர் நறுஞ்சாந்து அணிகுவம் – திண்திமில்
எல்லுத் தொழில்மடுத்த வல்வினைப் பரதவர்
கூர்வளிக் கடுவிசை மாட்டலின் பாய்ந்துஉடன்
கோள்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கடல் அசைவளி எறிதொறும், வினைவிட்டு
முன்றில் தாழைத் தூங்கும்
தெண்கடல் பரப்பின்,எம் உறைவுஇன், ஊர்க்கே.

தெளிவுரை

"பூக்கள் பொருந்திய கடற்கரைக்குத் தலைவனே! திரையன் என்பான் சிறந்த நல்ல புகழினையும், பொன்னாலான அணிகளை யும் கொண்டவன். 'பவத்திரி' என்னும் அவன் ஊர் பல்வேறு பூஞ்சோலைகளைக் கொண்டது. அவ்வூர் போன்று நலம் நிரம்பியவள், நம் தலைவி! நீ செல்லும் வழியிலுள்ள உப்பங் கழியில் நீர் பெருகியுள்ளது; அக்கழியில் கூரிய பற்களைக் கொண்ட பாம்பினோடு சுறாமீன்களும் திரிந்துகொண்டிருக் கின்றன. பொழுதோ பெரிதும் இருண்டுவிட்டது. இவ்வாறிருக் கவும் நம் தலைவர் சென்றுவிடுவரோ என்று உன்னையே நினைந்து தலைவி வருந்தியிருக்கிறாள்.

"வலிமையான படகுகளுடன் பகற்பொழுதில் பரதவர் கடலில் மீன் வேட்டைக்குச் சென்றனர். கடுமையான காற்று மிக்க விசையுடன் வந்து மோதுதலினாலும், சுறாமீன்கள் பாய்ந்து கிழித்ததனாலும் வளைந்த முடிச்சுகளைக் கொண்ட நெடிய வலைகள் சிதைவுற்றன. தொழிலுக்குப் பயன்படாத அவ் வலைகள் வீட்டு முற்றங்களில் வளர்ந்துள்ள தாழை மரங்கள்மீது கிடத்தப்பட்டிருக்கும்; குளிர்ந்த கடற்காற்று வீசுந்தோறும் அவை அசைந்துகொண்டிருக்கும். இத்தகைய தெளிந்த கடற்

பரப்பினைக் கொண்டதும், தங்குதற்கு இனியதுமான எம் ஊரில் இன்று தங்கிச் சென்றால் என்ன?

"பசிய மீனை விற்றுப் பெற்ற வெண்ணெல்லால் ஆகிய மாவினைத் தயிரிட்டுப் பிசைந்து உன் குதிரைக்கு உணவாய்த் தருவோம். வட நாட்டிலிருந்து கொண்டுவந்த வெண்ணிறமான வட்டக்கல்லிலே பொதியமலைச் சந்தனக்கட்டையால் பிற மணப்பொருள்களையும் சேர்த்து அரைத்த மணங்கமழும் சந்தனத்தை உமக்குப் பூசுவோம்.

"பல நாளும், உன் வருத்தம் நீங்கப் பகற்பொழுதிலே வந்து, புன்னை மரங்களைக் கொண்ட அழகிய சோலையின் குளிர்ந்த நிழலிலே பொழுதைக் கழித்து, மாலைப்பொழுது வந்தவுடன் அதனை மயக்கும் தோன்றப் பார்த்துப் பாகன் தேரினைப் பூட்ட, நீயும் ஊருக்குச் செல்வதை விரும்பியிருக்கிறாய். அதுபோல இல்லாமல் இன்றிரவு எம்மிடையே தங்கிச் செல்" எனத் தோழி சொல்கிறாள்.

கருத்து

இரவில் தங்கிச் செல்லுமாறு தலைவனிடம் தோழி கூறுகிறாள்.

விளக்கம்

"பூக்கள் பொருந்திய கடற்கரைக்குத் தலைவனே! கழியில் நீர் நிரம்பியுள்ளது; பொழுது மயங்கிவிட்டது. அதனால் நம் தலைவர் சென்றுவிடுவாரோ என்று கூறித் தலைவி வருத்தம் கொள்கிறாள்; அவ்வருத்தம் நீங்க, தங்குதற்கினிய எம் ஊரில் இன்று எம்மிடத்தே தங்கிச் செல்வதால் உனக்கு என்ன குறை நேரப்போகிறது? மாலைத் தயிரிட்டுப் பிசைந்த கூழினை உன் குதிரைக்கு உணவாய்த் தருவோம்; நறுஞ்சாந்தினை உமக்குப் பூசுவோம். ஆதலால், நீ உன் ஊருக்குச் செல்லுதலைத் தவிர்த்திடு" எனத் தோழி தலைவனிடம் வேண்டுகிறாள்.

குறிப்பு

'தங்கிச் செல்' என்று தோழி கூறியதனால் தலைவன் தங்கிவிட இயலாது. அதனால், அவன் தன் காதலி உறுகின்ற துயருக்கு இரங்கி, அவளை மணந்து, பிரியாது வாழ்தலைத் தன்னுள் நாடுவான் என்று தோழி கருதுகிறாள்.

சொற்பொருள்

1. எவ்வம் - துன்பம்.
2. அம் - அழகிய; பொதும்பு - சோலை; கழிப்பி - பொழுதைக் கழித்து.
3. மால்கொள - மயக்கம் தோன்ற.
4. வலவன் - பாகன்; வண்தேர் - வலிமையான தேர்; இயக்க - ஓட்ட.
5. செலவு விருப்புறுதல் - செல்ல விரும்புதலை; ஒழிக - (இன்று) நீக்குக.
6. செல்லா - கெடாத; நல் இசை - நல்ல புகழ்; பொலம்பூண் - பொன்னாலான அணிகளை அணிந்தவன்; திரையன் - தலைவன் ஒருவன்.
7. பவத்திரி - திரையனின் ஊர்.
8. தொலைய - கெட; ஓல் என - 'ஓல்' என்னும் ஒலியுடன்.
9. ஓதம் - நீர்; மல்கின்று - பெருகியுள்ளது.
10. வள்ளயிறு - கூரிய பல்; அரவு - பாம்பு; வயமீன் - வலிமையுள்ள சுறாமீன்; கொட்கும் - திரிதரும்.
11. மான்றின்று - இருண்டது.
12. அவலம் - துன்பம்; வீட - ஒழிய; இவண் - இங்கே.
13. சேப்பின் - தங்கினால்; எவனோ - என்னவோ?; பூக்கேழ் - பூக்கள் பொருந்திய; புலம்ப - கடற்கரைக்குத் தலைவனே!
14. நொடுத்த - விற்ற.
15. தயிர் மிதி - தயிரிட்டுப் பிசைந்த; மிதவை - கூழ்; ஆர்த்துவம் - (குதிரை) உண்ணச் செய்வோம்.
16. வடவர் - வடநாட்டிலுள்ளார்; வான்கேழ் - வெண்மையான நிறம்; வட்டம் - சந்தனம் அரைக்கப் பயன்படும் வட்டமான கல்.
17. குடபுலம் - மேற்கு மலையாகிய பெரிய மலை; உறுப்பு - சந்தனக் கட்டை; கூட்டுபு - (வேறு மணப்பொருள்களையும்) சேர்த்து; நிகழ்த்திய - அரைத்த.
18. நறுஞ்சாந்து - நறிய சந்தனம்; அணிகுவம் - பூசுவோம்; திண் திமில் - திண்ணிய படகு.
19. எல்லுத் தொழில் - பகலிலே மீன் பிடிக்கும் தொழிலை; மடுத்த - மேற்கொண்ட.
20. கடுவிசை - (காற்றின்) மிக்க வேகம்.
21. கோள்சுறா - கொல்லும் தொழிலைக் கொண்ட சுறாமீன்; கொடு முடி - வளைந்த முடிச்சு.

22. அசைவளி - அசைந்து வரும் காற்று; எறிதொறும் - வீசுந்தோறும்; வினைவிட்டு - தொழில் ஒழிந்து.
23. தாழைத் தூங்கும் - தாழை மரத்தின்மீது கிடந்து அசையும்.
24. உறைவு இன் ஊர் - தங்குதற்கு இனிய ஊர்.

தோழி கூற்று

அகநானூறு 350 **சேந்தன் கண்ணனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்து நீங்கும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பகற்குறி வந்து மீளும் தலைவனைத் தோழி, அன்றிரவு தம் விருந்தாய்த் தங்கிச் செல்லுமாறு கூறியது.

கழியே, சிறுகுரல் நெய்தலொடு காவி கூம்ப
எறிதிரை ஓதம் தரல்ஆ னாதே
துறையே, மருங்கின் போகிய மாக்கவை மருப்பின்
இருஞ்சேற்று ஈர்அளை அலவன் நிவப்ப
வழங்குநர் இன்மையின் பாடுஆன் றன்றே;
கொடுநுகம் நுழைந்த கணைக்கால் அத்திரி
வடிமணி நெடுந்தேர் பூண ஏவாது
ஏந்துஎழில் மழைக்கண் இவள்குறை யாகச்
சேர்ந்தனை சென்மோ – பெருநீர்ச் சேர்ப்ப! –
இலங்குஇரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை எதிர்கொள இழிதரும்
குவவுமணல் நெடுங்கோட்டு ஆங்கண்
உவக்காண் தோன்றும்எம் சிறுநல் ஊரே!

தெளிவுரை

பெரிய கடற்கரைக்குரிய தலைவனே!

உப்பங்கழியில் நெய்தலும், நீலமும் கொத்தாகப் பூத்துள்ளன. அவற்றின் பூவிதழ்கள் குவியுமாறு கடலில் பெரிய அலைகள் வீசிக்கொண்டே இருக்கின்றன. துறை மருங்கில் நீண்ட பெரிய கவர்த்த கால்களைக் கொண்ட நண்டு கருஞ்சேற்றிலுள்ள ஈரமான வளையிலிருந்து மேலே வெளிப்பட்டுத் திரிகின்றது; வருவோர் போவோர் இல்லாமையால் துறை ஒலியடங்கிக் காணப்படுகின்றது.

பெரிய கூடற்பரப்பில், தாக்கிக் கொல்லும் தன்மை வாய்ந்த சுறாமீன்களைப் பிடிப்பதைவிட்டுப் பரதவர், நீருள் மூழ்கி வலம்புரிச்சங்கினை எடுப்பர்; சங்குகள் 'கல்' என ஒலி எழுப்ப, ஆரவாரம் மிக்க கொற்கைப்பட்டினத்தோர் தம்மை எதிர் கொண்டு வரவேற்குமாறு தங்கள் படகுகளிலிருந்து தரையிலே இறங்கி வருவர். மணற்குவியல்களைக் கொண்ட நீண்ட கரை யாகிய அவ்விடத்திலே எமது நல்ல சிற்றூர் அமைந்துள்ளது; அதோ அது தோன்றுவதைப் பார்.

திரண்ட காலினைக் கொண்ட கோவேறு கழுதையைத் திருத்தமாய்ச் செய்யப்பெற்ற மணிகளைக் கொண்ட நீண்ட தேரிலுள்ள வளைந்த நுகத்தில் பூட்டுக எனக் கட்டளையிட வேண்டா. மிகவும் அழகும் குளிர்ச்சியும் பொருந்திய கண்களைக் கொண்ட எம் தலைவியின்பொருட்டு இன்றிரவு எம் ஊரில் தங்கிச் செல்க!

கருத்து

'எம் தலைவியின்பொருட்டு இரவில் எம் ஊரில் தங்கிச் செல்க!'

விளக்கம்

"கழியில் நீர்ப்பெருக்கு மிகுந்தது; துறைக்கு வந்து செல்வார் எவருமிலர்; எனவே, ஒலியும் அடங்கிற்று; பகற்பொழுதும் கழிந்தது. எமது நல்ல சிற்றூர் இதோ தோன்றுகின்றது. 'தேரைப் பூட்டுக' என உன் பாகனுக்குத் கட்டளை பிறப்பிக்க வேண்டா. தலைவியின் வேண்டுகோளின்படி எம் ஊரில் இற்றை நாள் இரவு தங்கிச் செல்க" எனத் தோழி தலைவனை நோக்கிக் கூறினாள்.

சொற்பொருள்

1. குரல் - பூங்கொத்து; காவி - நீலமலர்; கூம்ப - குவிய.
2. திரை ஓதம் தரல் ஆனாது - கடலில் அலைகள் வீசிக்கொண்டே யிருக்கும்.
3. மருங்கின் போகிய - பக்கத்தே நீண்ட; மா - பெரிய; கவை - கவர்த்த; மருப்பின் - கொம்பினைக் கொண்ட.
4. ஈர்அளை - ஈர வளை; அலவன் - நண்டு; நிவப்ப - மேலே வெளிப்பட.
5. வழங்குநர் இன்மையின் - செல்வோர் இல்லாமையால்; பாடு ஆன்றன்று - ஒலி அடங்கியது.
6. கொடுநுகம் - வளைந்த நுகம்; கணை - திரண்ட; அத்திரி - கழுதை.
7. பூண - பூணும்படி; ஏவாது - கட்டளையிடாது.
8. குறையாக - காரியமாய்.
9. சேர்ந்தனை - தங்கி; சென்மோ - செல்க; சேர்ப்ப! - தலைவ!
10. இரும்பரப்பின் - பெரிய கடற்பரப்பில்; எறிசுறா - தாக்கிக் கொல்லும் தன்மை வாய்ந்த சுறாமீன்; நீக்கி - ஒதுக்கி.
11. வலம்புரி - முத்து; வான்திமில் - பெரிய படகு.
12. ஒலிதலை - ஒலி எழுப்புகின்ற; பணிலம் - சங்கு; ஆர்ப்ப - ஒலிப்ப; கல் என - கல் என ஒலியுண்டாகும்படி.
13. கலிகெழு - ஆரவாரம்மிக்க; கொற்கை - கொற்கைப்பட்டினத்திலுள் ளோர்; எதிர்கொள - எதிர்கொள்ளுமாறு; இழிதரும் - படகினின்று இறங்குவர்.
14. நெடுங்கோடு - நீண்ட கரை.
15. உவக்காண் - அங்கே பார்; தோன்றும் - தெரியும்.

தோழி கூற்று

குறுந்தொகை 88 **மதுரைக் கதக்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தான் பகலில் வருவதைக் கைவிட்டு இரவு நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு வருவதாய்ச் சொன்னான். அதைத் தோழி தலைவியிடம் கூறினாள்.

ஒலிவெள் அருவி ஓங்குமலை நாடன்,
சிறுகண் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொல்முரண் சோரும் துன்அருஞ் சாரல்,
நடுநாள் வருதலும் வரூஉம்;
5 வடுநா ணலமே தோழி! நாமே.

தெளிவுரை

தலைவியே! ஓசையிட்டு இறங்கும் வெண்மையான அருவியைக் கொண்ட உயர்ந்த மலைநாட்டுக்குரியவன், தலைவன். அவனுடைய மலைச்சாரலில் சிறிய கண்களைக் கொண்ட பெரிய ஆண்யானை வலிமைமிக்க புலியை எதிர்த்துத் தாக்கி (நெடுநாள்களாய்த் தான் அடக்கி வைத்திருந்த பழைய பகையைத் தீர்த்துக்கொண்டு) தன் வலிமையை இழந்து சோர்வடையும். மக்கள் நெருங்குதற்கரிய அம்மலைச்சாரலின் வழியாய் நம் தலைவன் நள்ளிரவு நேரத்தில் வருதலும் கூடும். அங்ஙனம் அவன் வருதலால் ஏற்படும் ஊராரின் பழிச் சொல்லுக்கு இனி நாம் நாணிப் பயனில்லை.

கருத்து

'தலைவன் இனி இரவில் வந்து அளவளாவுவான். வழியில் நேரும் கொடுமைக்கு அஞ்சி, அவன் வரும்பொழுது அவனை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்தல் சரியன்று.'

குறிப்பு

ஓங்கிய மலையிலிருந்து அருவி கீழிறங்கி நிலப்பரப்பிலுள்ளார்க்கும் பயன்படுவதுபோலத் தலைவனும் நெடுந்தூரம் கடந்து வந்து நமக்கு இன்பம் தருவான் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. ஒலிவெள் - ஒலிக்கின்ற வெண்மையான.
2. களிறு - ஆண்யானை; வயப்புலி - வலிமைமிக்க புலி.
3. தொல்முரண் - பழைய வலிமை; சோரும் - இழக்கும்; துன் அரும் - நெருங்குதற்கு அரிய.
4. நடுநாள் - நள்ளிரவு; வருஉம் - வருதலும் கூடும்.
5. வடு - பழிச்சொல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 340 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறி உணர்த்திய தோழிக்குக் கிழத்தி மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியிடம் வந்து அளவளாவுவான் என்று தோழி கூறினாள். அப்போது, தலைவன் இரவுக்குறியிடம் வருதலால் ஏற்படும் ஏதம் கருதித் தான் அஞ்சுதலைக் குறிப்பிட்டுத் தலைவி இரவுக்குறியை மறுத்தது.

காமம் கடையின் காதலர்ப் படர்ந்து,
நாம்அவர்ப் புலம்பின், நம்மோடு ஆகி,
ஒருபாற் படுதல் செல்லாது, ஆயிடை,
அழுவம் நின்ற அலர்வேய் கண்டல்
5 கழிபெயர் மருங்கின் ஒல்கி, ஓதம்
பெயர்தரப் பெயர்தந் தாங்கு,
வருந்தும் தோழி! அவர்இருந்த என்நெஞ்சே.

தெளிவுரை

தோழியே! அவர் எப்போதும் என் நெஞ்சில் குடிகொண் டுள்ளார். காதல் மிகுமாயின் என் நெஞ்சம் காதலரை நினைத்து அவரிடம் சென்றுவிடுகிறது; நான் அவரைப் பிரிந்து தனிமைத் துயரால் வருந்தினேனால் அது திரும்பி என்னோடு கூடி வருந்துகிறது. இவ்வாறு என் நெஞ்சம் ஒரு பக்கத்தே இராது இரு பக்கமுமாய் அலைந்து ஊசலாடுகிறது. கடற்கரைப்பரப்பில் உப்பங்கழியில் மலர்களைத் தாங்கி நிற்கும் தாழை, நீர்க்கழியை நோக்கி வெள்ளம் பெயரும்போது அப்பக்கம் சாயும்; அவ் வெள்ளம் கடலை நோக்கித் திரும்பச் செல்லும்போது தாழையும் அப்பக்கமாய்ச் சாயும். இவ்வாறு அஃது இருபக்கமாய் மாறி மாறிச் சாய்வதுபோல நம் நெஞ்சமும் அலைப்புண்டு வருந்து கின்றது.

கருத்து

'தலைவன் வந்துவந்து போவதால் என் நெஞ்சு ஒருபாற்படவில்லை. என்னைச் சந்திக்க அவன் இரவுக்குறியில் வர வேண்டா' எனத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

தலைவனைப் பிரியாது வாழும் மணவாழ்வை விரும்புகிறது, தலைவியின் நெஞ்சம்.

சொற்பொருள்

1. கடையின் - கூடினால்; படர்ந்து - (காதலரிடம்) சென்று.
2. புலம்பின் - பிரிந்து வருந்தினோமானால்.
3. ஒருபாற்படுதல் செல்லாது - ஒரே நிலையில் நிற்காமல்; ஆயிடை - அவ்விடத்தில்.
4. அழுவம் - கடற்கரை; அலர்வேய் - பூக்களைச் சூடிய (கொண்ட); கண்டல் - தாழை.
5. மருங்கின் - பக்கம்; ஒல்கி - தளர்ந்து, சாய்ந்து; ஓதம் - அலை.
6. பெயர்தர - திரும்பிச் செல்லும்போது.

தலைவி கூற்று

குறுந்தொகை 150 **மாடலூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி நேர்ந்த தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறி வேண்டத் தோழி அதற்கு இசைந்து, அதனைத் தலைவியிடம் கூற, அவளும் அதனை ஏற்றுக் கூறியது.

சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயின் இமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுலர் அகலம்
உள்ளின், உள்நோய் மல்கும்;
புல்லின், மாய்வது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

"தோழியே! பரண்மேல் இருக்கும் குறவன் கொளுத்திய நறும் புகையைக் கொண்ட கொள்ளிக்கட்டைகள், வானத்தில் மின்னு கின்ற மீன்களைப்போல, இடந்தோறும் விட்டுவிட்டு ஒளி தரும். இத்தகைய காட்சி கொண்ட ஓங்கிய மலைநாட்டைச் சேர்ந்தவன், நம் தலைவன். சந்தனம் பூசிப் புலர்ந்திருக்கும் அவனது மார்பை நினைத்தால், உள்ளத்தில் உள்ள காமநோய் பெருகுகிறது; ஆனால், பெருகிய அந்நோய் அவனைத் தழுவிக் கொண்ட அந்நொடியே இல்லையாகிவிடுகிறதே, அஃது எதனால்?" எனத் தலைவி தோழியை வினவினாள்.

கருத்து

தலைவனைக் கண்டு அளவளாவினாலன்றி என் நோய் தீர்வதில்லை. எனவே, அவன் இரவுக்குறி வரலாம்.

குறிப்பு

கொள்ளிக்கட்டைகள் விண்மீன்போல் ஒளிவிடும் என்பதால் தலைவன் இரவு வேளையில் அச்சமின்றி வருதற்கு இயலும் என்பதாம்.

சொற்பொருள்

1. சேணோன் - உயரத்தில் (பரண் மேல்) இருப்பவன்; மாட்டிய - கொளுத்திய; ஞெகிழி - கொள்ளிக்கட்டை.
2. வயின்வயின் - இடந்தோறும்; இமைக்கும் - ஒளி வீசும்.
3. சாந்து - சந்தனம் (பூசி); புலர் - உலர்ந்த; அகலம் - மார்பு.
4. உள்ளின் - நினைத்தால்; மல்கும் - பெருகும்.
5. புல்லின் - தழுவினால்; மாய்வது - இல்லையாவது.

தோழி கூற்று

அகநானூறு 148 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகல் வருவானை இரவு வருகென்றது.

கூற்று விளக்கம்

பகற்குறிக் கூட்டத்தை விரும்பி வந்துகொண்டிருக்கும் தலைவனைத் தோழி இரவுக்குறி வருமாறு கூறியது.

பனைத்திரள் அன்ன பருஏர்எறுழ்த் தடக்கை,
கொலைச்சினம் தவிரா மதனுடை முன்பின்,
வண்டுபடு கடாஅத்து, உயர்மருப்பு யானை
தண்கமழ் சிலம்பின் மரம்படத் தொலைச்சி;
உறுபுலி உரறக் குத்தி ; விறல்கடிந்து;
சிறுதினைப் பெரும்புனம் வவ்வும் நாட!
கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியோடு பொருது,களம் பட்டென,
காணிய செல்லாக் கூகை நாணி,
கடும்பகல் வழங்கா தாஅங்கு, இடும்பை
பெரிதால் அம்ம இவட்கே; அதனால்
மாலை வருதல் வேண்டும் – சோலை
முளைமேய் பெருங்களிறு வழங்கும்
மலைமுதல் அடுக்கத்த சிறுகல் ஆறே.

தெளிவுரை

"தலைவ! உன் மலையில் திரியும் யானை, பனைமரம் போன்று பருத்த, அழகிய, வலிமையான துதிக்கையைக்கொண்டிருக்கிறது; அது கொல்லும் சினம் நீங்காத செருக்கினையும், வலிமையையும், வண்டுகள் மொய்க்கும் மதநீரையும், நிமிர்ந்த கொம்பினையும் கொண்டு விளங்குகிறது. மணங்கமழும் குளிர்ந்த மலைச் சாரலில் உள்ள மரங்கள் வீழுமாறு அந்த யானை முரித்துத் தள்ளுகிறது. மேலும், அங்கு வந்த தன் பகையாகிய புலியைக் கதறக் கதறக் குத்தி அதன் வலிமையைத் தொலைக்கிறது. பின்னர்ப் பசி தோன்றவே பெரிய தினைப்புனத்துள் சென்று, அங்குள்ள சிறிய தினையை முற்றிலுமாய் மேய்கிறது. இத்தகைய காட்சிகள் கொண்ட நாட்டுக்கு உரியவனே!

"விரைந்தோடும் குதிரைப்படையைக் கொண்ட ஆய் எயினன் என்பவன் நெடிய தேரினைக் கொண்ட மிஞிலி என்பானோடு போரிட்டு இறந்துபட்டனன். (ஆய், பறவைகளுக்குப் பாது காவலன். ஆதலின், பறவைகளெல்லாம் சென்று, ஒன்றுசேர்ந்து அவன்மீது வெயில் படாதவாறு தம் சிறகுகளை விரித்தன.) பகற் குருடாகிய கோட்டான் பகலிலே சென்று மற்ற பறவைகளைப் போலச் செயற்பட இயலாததற்கு நாணமுற்றுத் துன்புற்றாற் போல, பகலில் நீ வரும்போது வர இயலாது தலைவி பெரிதும் துன்பமுறுகிறாள். ஆதலால், பெரிய யானை சோலையில் உள்ள மூங்கில் குருத்தைத் தின்றுகொண்டு திரிகின்ற மலைச் சாரலில், சிறு பாறைகள் நிறைந்த வழியில் நீ மாலைப்பொழுதில் வருக."

கருத்து

தலைவ! பகற்குறியிடத்திற்கு வர இயலாது தலைவி வருந்துகின்றாள். ஆதலின், நீ இரவுக்குறி வருக!

சொற்பொருள்

1. திரள் பணை - திரண்ட பனை; பருஏர் - பருத்த அழகிய; எறுழ் - வலிமை; தடக்கை - துதிக்கை.

2. மதனுடை - செருக்குப் பொருந்திய; முன்பின் - வலிமை.
3. கடாஅம் - மதம்; உயர் மருப்பு - நிமிர்ந்த கொம்பு.
4. சிலம்பு - மலை; தொலைச்சி - ஒடித்துத் தள்ளி.
5. உறுபுலி - மாறுபாடுற்ற புலி; உரற - கதற; விறல் கடிந்து - வலிமையைத் தொலைத்து.
6. வவ்வும்- மேயும்.
7. ஆஅய் எயினன் - மன்னருள் ஒருவன்.
8. மிஞிலியோடு - மிஞிலி என்பவனொடு; பொருது - சண்டையிட்டு; களம் பட்டென - போர்க்களத்தில் இறந்துபட.
9. காணிய செல்லா - அதனைக் காணச் செல்லாத; கூகை - கோட்டான்.
10. கடும் பகல் - கடிய பகலில்; வழங்காதாஅங்கு - இயங்காது (இடும்பை யுற்றாற்போல); இடும்பை - துன்பம்.
11. பெரிதால் - பெரியது; இவட்கு - இத்தலைவிக்கு.
13. முளை மேய் - மூங்கில் குருத்தினைத் தின்னும்; வழங்கும் - இயங்குகின்ற.
14. மலை முதல் அடுக்கத்த - மலைச்சாரலிலுள்ள; சிறு கல் ஆறு - சிறிய பாறைகள் செறிந்த வழி.

தோழி கூற்று

நற்றிணை 323 **வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி இரவுக்குறி நேர்ந்தது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியை விரும்பிய தலைவனுக்கு உடன்பட்ட தோழி, தம் ஊருக்கு வரும் வழியைக் கூறி, இரவில் அங்கு வருமாறு கூறியது.

ஓங்கித் தோன்றும், தீம்கள் பெண்ணை
நடுவண் அதுவே தெய்ய, மடவரல்
ஆயமும் யானும் அறியாது அவணம்
ஆய நட்பின் மாண்நலம் ஒழிந்துநின்
5 கிளைமை கொண்ட வளைஆர் முன்கை
நல்லோள் தந்தை சிறுகுடிப் பாக்கம்;

புலிவரி எக்கர்ப் புன்னை உதிர்த்த
மலிதாது ஊதும் தேனோடு ஒன்றி,
வண்டுஇமிர் இன்இசை கறங்க; திண்தேர்த்
தெரிமணி கேட்டலும் அரிதே;
வரும்ஆறு ஈது;அவண் மறவா தீமே.

தெளிவுரை

"தலைவ! உன்னிடத்துள்ள மிக்க அன்பின் காரணமாய்த் தலைவி உன்னுடன் உறவு பூண்டனள். வளையல்களைக் கொண்ட அந்நல்லோளின் கடற்கரை ஊர், உயர்ந்து தோன்றும் இனிய கள்ளினைக் கொண்ட பனைமரங்களுக்கிடையே உள்ளது என்பதை நீ அறிவாய். தலைவியின் ஆயத்தாரும், தோழியாகிய நானும் பிறர் அறியாவண்ணம் அங்கிருப்போம். அங்கே, புலியின் மேனியில் தோன்றும் வரி போன்ற மணல்மிக்க திடலில், புன்னை மரங்களிலிருந்து உதிர்ந்த பூக்களில் பெண் வண்டுகளோடு ஆண்வண்டுகளும் சேர்ந்து எழுப்புகின்ற ஓசை மிக்கிருக்கும். அவ்வோசை மிகுதியால் நீ ஏறி வருகின்ற தேரின் மணி ஓசையைப் பிறர் கேட்பதும் அரிது. நீ அங்கு வருதற்குரிய வழியும் அதுவே. ஆகவே, அவ்வழியைக் கடைப்பிடித்து நீ மறவாது வருக."

கருத்து

'இரவில் எம் ஊர் வருக!'

விளக்கம்

"எங்கள் சிறுகுடிப்பாக்கம் பனைமரங்களுக்கு இடையே உள்ளது. அங்கே எம் வீட்டருகே புன்னைமரச் சோலையுண்டு. அங்கு உதிர்ந்துள்ள பூக்களில் படிந்துண்ணும் வண்டினத்தின் ஓசையால் தேரில் கட்டப்பட்டுள்ள மணியின் ஒலி பிறருக்குக் கேளாது. இங்கு வருதற்கு இதுவே வழி. ஆகவே, இவ்வழியைக் கடைப்பிடித்து வந்தருள்க" என்று தோழி சொல்லுகின்றாள்.

குறிப்பு

பனைமரங்கள் மிக்க வழி என்பதால், அம்மரங்களில் கள் இறக்குவோர் இருப்பர்; ஆதலின், கவனமுடன் வருக என்கிறாள்.

வண்டுகள் புன்னைத் தாதினை இமிர்ந்து உண்பதுபோல நீயும் தலைவியின் நலத்தை மகிழ்வுடன் துய்க்கலாம்.

சொற்பொருள்

1. தீம் கள் - இனிய கள்; பெண்ணை - பனைமரம்.
2. நடுவண் அது - நடுவே உள்ளது; மடவரல் - மடப்பம் பொருந்திய.
3. ஆயம் - விளையாட்டுத்தோழியர்; அவணம் - அவ்விடத்தே.
4. மாண்நலம் - சிறந்த நலம் பொருந்திய நட்பை; ஒழிந்து - நீத்து.
5. கிளைமை - நட்பு; வளைஆர் - வளையல் பொருந்திய.
7. புலிவரி - புலியின் உடலில் தோன்றும் கோடுகள்போல் உள்ள; எக்கர் - மணல்மேடு.
8. மலிதாது - மிகுந்த பூந்தாதினை; தேனோடு - தேனீக்களோடு; ஒன்றி - ஒன்றுகூடி.
9. இமிர் - ஒலிக்கும்; கறங்க - ஒலிக்க.
10. தெரிமணி - விளங்கும் மணியின் ஒசை.
11. ஆறு - வழி; ஈது - இதுவே; அவண் மறவாதீமே - அவ்வழியை மறவாது கடைப்பிடித்து வருக.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 58 **கணிமேதாவியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்கு இரவுக்குறி நேர்ந்த தோழி இடங்காட்டியது.

கூற்று விளக்கம்

இரவில் வரவேண்டிய இடம்பற்றித் தோழி தலைவனிடம் கூறியது.

கடற்கானல் சேர்ப்ப! கழிஉலாஅய் நீண்ட
அடல்கானல் புன்னை தாழ்ந்(து)ஆற்ற – மடல்கானல்
அன்றில் அகவும் அணிநெடும் பெண்ணைத்(து)எம்
முன்றில் இளமணல்மேல் மொய்த்து.

தெளிவுரை

"கடற்கரைச்சோலைகளைக் கொண்ட துறைமுகத் தலைவனே! எம் இல்லத்தின் முன்பகுதி உப்பங்கழிகளால் சூழப்பெற்றது; அங்கு மணல்மீது மீன்கள் காய வைக்கப்பட்டுள்ள உப்பளங்கள் உள்ளன. புன்னை மரங்கள் தழைத்துப் பூத்துள்ள கடற்கரைச் சோலையில் அன்றில்களெல்லாம் ஒன்றுசேர்ந்து ஓசை எழுப்பும் ஒரு பனை மரமும் உண்டு. அதுவே யாம் விளையாடுமிடம்" என்று தோழி தலைவனிடம் இரவுக்குறியிடம்பற்றிக் கூறினாள்.

கருத்து

'எம் வீட்டிற்கு முன்னே உள்ள உப்பளங்களில் மீன்கள் காய வைக்கப் பட்டிருக்கும். அருகிலுள்ள சோலையில் அன்றில்கள் ஓசை எழுப்பி வாழும் பனைமரம் ஒன்றுண்டு. அதுவே நமது இரவுக் குறியிடம்.'

சொற்பொருள்

1. கழிஉலாஅய் - உப்பங்கழிகள் சூழப்பெற்று.
2. அடல் கானல் - மீன்களைக் கொன்று காய வைக்கப்பட்டுள்ள உப்பளத்தோடு கூடி; ஆற்ற தாழ்ந்து - மிகவும் தழைக்கப்பெற்று; மடல் - பூ இதழ்கள்.
3. அன்றில் - அன்றில் பறவைகள்; அகவும் - அழைக்கும்; அணி நெடும் - அழகிய உயர்ந்த; பெண்ணணைத்து - பனைமரத்தைக் கொண்டுள்ளது.
4. முன்றில் - வீட்டிற்கு முன்; மொய்த்து - நிரம்பி.

(எம் இல்முன் கழி உலாய், மணல் மொய்த்து, புன்னை தாழ்ந்து, அன்றில் அகவும் பெண்ணணைத்து என்று கூட்டுக.)

தோழி கூற்று

கைந்நிலை 57 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன், தலைமகளை இரவில் சந்திக்கவிருக்கும் இரவுக்குறி யிடத்தைத் தோழி, தலைமகளிடம் தெரிவிப்பது.

கூற்று விளக்கம்

இரவுக்குறிக்குத் தலைவனிடம் நேர்ந்த தோழி, தலைவியிடம் இரவுக் குறியிடத்தை உணர்த்தியது.

கொடுவாய்ப் புணர்அன்றில் கொய்மடல் பெண்ணைத்
தடவுக் கிளைபயிரும் தண்கடல் சேர்ப்பன்
நிலவுக் கொடுங்கழி நீந்திநம் முன்றில்
புலவுத் திரைபொருத போழ்து.

தெளிவுரை

"குளிர்ச்சி பொருந்திய கடற்கரைக்கு உரியவன், நம் நெய்தல் நிலத் தலைவன். அவன் ஒளிமிக்க வளைந்த உப்பங்கழிகளைக் கடந்து வந்து, நம் முற்றத்தில், புலால் நாற்றம் பொருந்திய நீரில் அலை எழுப்பி, தான் வந்திருப்பதைக் குறியாகக் காட்டுவான். அப்பொழுது, அவ்வொலி கேட்டு வெட்டப்படும் மடல்களைக் கொண்ட பனைமரத்திலுள்ள சேவலும் பேடுமாய்ச் சேர்ந் திருக்கும் அன்றில் பறவைகள் தம் சுற்றத்தை அழைக்கும்" என்று தோழி தலைவியிடம் இரவுக்குறியிடத்தைக் குறிப்பாய்க் கூறினாள்.

கருத்து

தோழி, தலைவியிடம் இரவுக்குறி இடத்தைச் சுட்டுகிறாள். (வீட்டிற்கு அருகே உள்ள பனைமரத்தில் அன்றில் தங்கி ஓசை எழுப்பும் இடமே இரவுக்குறி இடம்.)

விளக்கம்

தோழியை இரந்து, பின்னின்று, தலைவன் தலைவியின் இசைவைப் பெற்றான். தலைவனும் தலைவியும் தனியே சந்திப்

பதற்கான குறியிடத்தைத் (இருப்பிடத்தைத்) தோழி தலைவி யிடம் அறிவிக்கிறாள்.

குறிப்பு

தலைவன் தன் வருகையைத் தெரிவிக்கும் குறிகள்: (1) தலைவன் உப்பங்கழி நீரை அடித்து, அலையை எழுப்பி ஓசையை உண்டாக்குவான். (2) அவ்வோசையைக் கேட்டுப் பனைமரத்தில் உள்ள அன்றில் பறவைகள் அஞ்சி ஓசை எழுப்பும். இவற்றின்மூலம் தலைவன் வருகை புரிந்துள்ளான் என்பதறிந்து தோழி தலைவியிடம் கூறுவாள்.

சொற்பொருள்

1. கொடு - வளைந்த; அன்றில் - அன்றில் பறவை; கொய்மடல் - கொய்யப்படும் மடல்கள் கொண்ட; பெண்ணை - பனைமரம்.
2. கிளை பயிரும் - சுற்றத்தை அழைக்கும்.
3. நிலவுக் கொடுங்கழி - நிலவொளி கொண்ட வளைந்த உப்பங்கழி; நீந்தி - அலைந்து; முன்றில் - நம் இல்லத்திற்கு முன்பு.
4. புலவுத் திரை - புலால் நாற்றம் கொண்ட அலைகள்; போழ்து - பொழுதில்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 40 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : மருதம்

கூற்று

இந்நிலத்தின்கண் இன்ன பெற்றியால் வருவாயாக எனச் சொல்லியது.

(பெற்றி - தன்மை.)

கூற்று விளக்கம்

இரவுக்குறி நேர்ந்த தோழி, தலைவன் இன்ன பூ அணிந்து வரவேண்டும் எனக் கூறியது.

ஆம்பல் அணித்தழை ஆரம் துயல்வரும்
தீம்புனல் ஊரன் மகள்இவள் ஆய்ந்தநறும்
தேமலர் நீலம்; பிணையல் செறிமலர்த்
தாமரை, தன்ஐயர் பூ.

தெளிவுரை

இரவுக்குறிக்குத் தலைவி இசைந்ததால் தோழி, தலைவனிடம், "தலைவ! என் தலைவி நீர்வளமிக்க மருதநில ஊரன் மகள். அவள் ஆம்பல் மலர்களால் அழகு செய்யப்பெற்ற சந்தனத் தழையாடை அணிந்திருப்பாள். அவளால் நல்லது என ஆராய்ந்து தேர்வு செய்யப்பெற்றுள்ளது, மணமிக்க நீல மலர். தாமரை மலர்கள் நிறைத்துக் கட்டப்பெற்ற மாலையையே இவள் தந்தையும் தமையன்மாரும் சூடுவர். எனவே, நீ நீலமலரைக் கையில் கொண்டு, தாமரை மாலையைச் சூடி, இரவுக்குறி யிடத்திற்கு வருக" என்று கூறினாள்.

கருத்து

'இரவுக்குறியிடத்திற்கு யாம் அறியுமாறு தாமரை மாலையணிந்து, கையில் நீல மலருடன் வா' எனத் தோழி தலைவனிடம் கூறினள்.

குறிப்பு

தலைவியைப் பெற்ற தந்தையும் உடன்பிறந்த தமையன்மாரும் அணிவது, தாமரை மலர். இரவில் பிறர் ஐயுறாதிருக்கத் தலைவனையும் தாமரை மாலை அணிந்து வரக் கூறினாள், தோழி.

சொற்பொருள்

1. ஆம்பல் - ஆம்பல் மலர்; ஆரம் - சந்தனம்; துயல் வரும் - அசைந்து வரும்.
2. ஆய்ந்த - (தலைவி நல்லது என்று ஆராய்ந்து) கண்டுபிடித்த; நறும் - நல்ல.
3. தேமலர் - மணமிக்க மலர்; நீலம் - நீலமலர்.

3-4 செறிமலர்த் தாமரைப் பிணையல், தன் ஐயர் பூ.

தோழி கூற்று

அகநானூறு 360 **மதுரைக் கண்ணத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

பகற்குறி வந்த தலைமகற்குத் தோழி பகற்குறி மறுத்து இரவுக்குறி நேர்ந்தது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் பகற்குறியில் வந்த தலைவனிடம், அவன் மணம் செய்துகொள்ளும் கருத்தின்றி இருப்பது கண்ட தோழி, இனிப் பகற்குறியில் வாராதே என்றும், இரவுக்குறியில் வா என்றும் சொல்லியது.

பல்பூந் தண்பொழில், பகல்உடன் கழிப்பி,
ஒருகால் ஊர்திப் பருதிஅம் செல்வன்
குடவயின் மாமலை மறைய, கொடுங்கழித்
தண்சேற்று அடைஇய கணைக்கால் நெய்தல்
நுண்தாது உண்டு வண்டினம் துறப்ப,
வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருஉடன் இயைந்த தோற்றம் போல,
அந்தி வானமொடு கடல்அணி கொளாஅ,
வந்த மாலை பெயரின், மற்றுஇவள்
பெரும்புலம் பினளே தெய்ய; அதனால்,
பாணி பிழையா மாண்வினைக் கலிமா
துஞ்சுஊர் யாமத்துத் தெவிட்டல் ஒம்பி,
நெடுந்தேர் அகல நீக்கி, பையெனக்
குன்றுஇழி களிற்றின் குவவுமணல் நீந்தி,
இரவின் வம்மோ – உரவுநீர்ச் சேர்ப்ப!–
இனமீன் அருந்தும் நாரையொடு பனைமிசை
அன்றில் சேக்கும் முன்றில், பொன்என
நன்மலர் நறுவீ தாஅம்
புன்னை நறும்பொழில் செய்தநம் குறியே.

தெளிவுரை

“வலிமைமிக்க கடற்கரைக்குரிய தலைவனே!

"பல்வேறு பூக்களைக் கொண்ட குளிர்ந்த சோலையில் பகல் முழுதும் தலைவியுடன் கூடிக் களித்திருந்தாய். ஒற்றைச்சக்கரத் தேரினைக் கொண்ட அழகிய ஞாயிறு, மேற்கேயுள்ள பெரிய மலையில் சென்று மறைந்தது. வளைந்த கழியிலுள்ள குளிர்ந்த சேற்றில் திரண்ட தண்டினில் பூத்துக் குலுங்கியிருக்கும் நெய்தற் பூக்களின் தேனையுண்ட வண்டினங்களும் அம்மலர்களை விட்டு நீங்கின. அச்சம்தரும் மிக்க வலிமையினைக் கொண்ட இரு பெரும் தெய்வங்களான சிவன், திருமால் ஆகிய இவர்களது செந்நிறமும் கருநிறமும் ஒருங்கிணைந்த தோற்றம்போல, அந்திச் செவ்வானத்துடன் நீலக்கடலும் இணைந்து அழகுடன் திகழ்ந்தது. இவ்விதமான மாலைக்காலத்தில் நீ நீங்கினால் இவள் (தலைவி) தனிமைத் துன்பத்தால் பெரிதும் வருந்துவாள்.

"அதனால், தாளத்திற்கேற்பத் தப்பாது அடியிட்டுச் செல்லும் மாட்சிமைமிக்க தொழில்திறம் வாய்ந்த உன்னுடைய குதிரைகள், ஊர்மக்கள் துயிலும் யாமத்தில் கனைத்து ஒலியெழுப்புவதைத் தவிர்க்கும்வண்ணம் உன் நெடிய தேரினை நெடுந்தொலை விலேயே நிறுத்திவிடு. பின்னர்க் குன்றிலிருந்து மெல்ல இறங்கிச் செல்லும் களிறுபோல நீயும் குவிந்து கிடக்கும் மணற்குன்று களைக் கடந்து வருக!

"மீனினங்களை அருந்தும் நாரையுடன் பனைமரத்தின்மேல் அன்றில்களும் தங்கியிருக்கும். மனையின் முற்றத்திலே, பொன் போலத் தோன்றும் நறுமலர்கள் உதிர்ந்து பரவிக் கிடக்கும். இத்தகைய எம் வீட்டருகே புன்னை மரங்களுள்ள சோலையில் யாம் குறித்துச் சொல்லிய குறியிடத்திற்கு இரவிலே நீ வருக."

கருத்து

'தலைவ! பகலெல்லாம் இவளுடன் இருந்துவிட்டு நீ மாலையில் பிரிந்தால் இவள் பெரிதும் துன்புறுகிறாள். அதனால், உன் நெடுந்தேரைத் தொலைவிலேயே நிறுத்திவிட்டு, திரண்ட மணல்மேட்டினைக் கடந்து, வீட்டருகே புன்னை மரங்கள் உள்ள சோலையில் நம் குறியிடத்திற்கு இரவிலே வருக.'

சொற்பொருள்

1. பல்பூ - பல்வேறு பூக்கள்; தண்பொழில் - குளிர்ந்த சோலை; பகல் - பகல் நேரத்தை; உடன் கழிப்பி - ஒன்றாய் இருந்து கழித்து.
2. ஒருகால் - ஒற்றைச் சக்கரத்தைக் கொண்ட; ஊர்தி - தேரைக் கொண்ட; பருதி - சூரியன்.
3. குடவயின் - மேற்குப்பக்கம்; மாமலை - பெரிய மலை; கொடுங்கழி - வளைந்த உப்பங்கழி.
4. கணைக்கால் - திரண்ட கால்; நெய்தல் - நெய்தல் பூ.
5. துறப்ப - நீங்க.
6. வெருவரு கடுந்திறல் - அஞ்சத்தக்க மிக்க வலிமை; இரு பெருந் தெய்வம் - சிவபெருமான், திருமால் ஆகிய இரு தெய்வங்கள்.
7. உருஉடன் - தோற்றத்துடன்; இயைந்த தோற்றம் போல - (செந்நிறமும் கருநிறமும்) ஒருங்கு பொருந்திய தோற்றத்தைப் போல.
8. அந்தி வானம் - செக்கர் வானம்; அணிகொளாஅ - அழகு கொண்டது.
9. பெயரின் - நீங்கினால்.
10. புலம்பினள் - தனிமைத் துன்பத்தால் வருந்தியிருப்பாள்.
11. பாணி பிழையா - தாளம் தப்பாது; மாண் வினை - சிறப்பான ஓட்டத்தைக் கொண்ட; கலிமா - செருக்குமிக்க குதிரை.
12. துஞ்சு ஊர் - ஊர் தூங்குகின்ற; யாமம் - நள்ளிரவு; தெவிட்டல் - ஒலி செய்தல்; ஓம்பி - பாதுகாத்து.
13. அகல நீக்கி - சேய்மையில் நிறுத்தி; பையென - மெதுவாய்.
14. குன்று இழி - குன்றிலிருந்து இறங்கும்; களிற்றின் - யானையைப் போல; நீந்தி - கடந்து.
15. வம்மோ - வருக; உரவு நீர் - வலிய கடற்கரை; சேர்ப்ப - தலைவனே!
16. பனை - பனைமரம்; மிசை - மேலே.
17. அன்றில் - ஒருவகைப் பறவை; சேக்கும் - தங்கும்; முன்றில் - முற்றத்தில்; பொன் என - பொன்போல.
18. வீ - பூக்கள்; தாஅம் - பரவிக் கிடக்கும்.
19. செய்த நம் குறி - நமது குறியிடம்.

தோழி கூற்று

குறுந்தொகை 177 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

கிழவன் வரவுணர்ந்து, தோழி கிழத்திக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தே தலைவனின் வரவு நோக்கிக் காத்திருந்த காலத்தில் அவன் வரவையுணர்ந்து தோழி, தலைவியிடம் கூறியது.

கடல்பாடு அவிந்து, கானல் மயங்கி,
துறைநீர் இருங்கழி புல்லென் றன்றே;
மன்றல்அம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலும்; இன்றுஅவர்
வருவர்கொல் வாழி தோழி! நாம்தம்
புலப்பினும் பிரிவுஆங்கு அஞ்சித்
தணப்புஅருங் காமம் தண்டி யோரே.

தெளிவுரை

கடல் ஒலி அடங்கியது; கடற்கரைச்சோலையில் ஒளி மங்கி இருள் பரவியது; கடல்துறையிலுள்ள நீர் நிறைந்த கரிய உப்பங் கழி, பூக்கள் குவிந்ததால் பொலிவிழந்தது. ஊரின் பொது இடத்திலுள்ள பனைமரத்தின் மடலில் கூடு கட்டி வாழும் அன்றில்பறவையும் மெல்லிதாய்க் கூவும். முன்பு நாம் அவரோடு புலந்த பொழுதும் அப்புலவி காரணமாய்ப் பிரிவுண்டாகுமே என்பதற்கு அஞ்சி, நம்மைப் பிரிதற்கரிய காமம் அமையப் பெற்றவர், நம் காதலர்; ஆதலான், இன்று தவிராது அவர் வருவர்.

கருத்து

தலைவர் இன்று இரவுக்குறியிடத்திற்குத் தவறாது வருவர்.

விளக்கம்

பிரிதற்கு ஏது உண்டானவிடத்தும் பிரிவு அஞ்சிப் பிரியாத சிறந்த காமம் அமைந்தவராதலின், தனித்திருத்தலை அவர் விரும்ப மாட்டார்; ஆதலின், இன்றே வருவர்.

குறிப்பு

கடலில் ஒலி அடங்கியதையும், கானலில் ஒளி மங்கி இருள் பரவியிருத்தலையும் தோழி சுட்டிக் காட்டி, இரவுக்குறியிடத்தில் தலைவியோடு சேர்தற்கு ஏற்ற புறச்சூழல் அமைந்துள்ளது எனத் தெளிவுபடுத்துகிறாள்.

சொற்பொருள்

1. பாடு அவிதல் - ஓசை அடங்குதல்; மயங்குதல் - ஒளி குறைதல் (இருள் பரவுதல்).
2. துறை - கடல் துறை; இருங்கழி - கரிய உப்பங்கழி.
3. மன்றல்அம் பெண்ணை - ஊர்ப் பொதுவிடத்தில் உள்ள அழகிய பனை மரம்.
4. அன்றில் - அன்றில் பறவை; பையென - மெல்லிதாய்; நரலும் - கூவும்.
5. தம் - அவரை.
6. புலத்தல் - கலவியிற்பிணங்கல்.
7. தணப்பு அரும் - பிரிதற்கரிய; தண்டியோர் - அமையப்பெற்றோர்.

தோழி கூற்று

ங்குறுநூறு 206 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகன் வந்து குறியிடத்து நின்றமை அறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியிடத்திற்கு வந்ததனை அறிந்த தோழி, தலைவியிடம் கூறியது.

அன்னாய், வாழி!வேண்டு அன்னை! உவக்காண்
மாரிக் குளத்துக் காப்பாள் அன்னன்;
தூவலின் நனைந்த தொடலை ஒள்வாள்,
பாசி சூழ்ந்த பெருங்கழல்,
5 தண்பனி வைகிய வரிக்கச் சினனே!

தெளிவுரை

தலைவியே! நான் கூறுவதைக் கேள்! மழைக்காலத்தில் நீர் நிரம்பிய குளத்தின் கரையில், அதன் கரை உடையாதிருக்குமாறு நின்று காவல் புரியும் காப்பாளனைப்போல், அங்கே தலைவன் நிற்பதைப் பார்! மழையில் நனைந்துகொண்டும், ஒளி வீசும் வாளினைத் தோளில் தொங்கவிட்டுக்கொண்டும், நீர்ப்பாசி சுற்றியதனால் பசிய நிறத்துடன் காணப்படும் கழலினை அணிந்துகொண்டும், குளிர்ச்சி பொருந்திய நீர்த்துளி தங்கிய சுச்சினை இறுகக் கட்டிக்கொண்டும் அவன் நிற்பதைப் பார்.

கருத்து

'வழியிடைத் துன்பங்களான மழையையும், பாசி படர்ந்த நீர்நிலைகளையும் பொருட்படுத்தாது அவற்றைக் கடந்து வந்துள்ளான், தலைவன்.'

இறைச்சி

மாரிக்காலக் குளக்காப்பாளன் மழைநீர் பெருகிக் கரையை உடைத்துவிடாமல் காப்பவன் என்னும் தொடர்மூலம், தலைவியின் துயர் பெருகி, அவள் நெஞ்சம் உடைந்துவிடாமல் அருள் செய்யத் தலைவன் வந்துள்ளான் என்னும் இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது.

குறிப்பு

தலைவன் தலைவிபாலுள்ள அன்பினால் பல்வேறு துன்பங்களுக்கிடையே வந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறாள், தோழி.

சொற்பொருள்

1. உவக்காண் - அதோ பார்.
2. மாரிக்குளம் - மழைக்காலத்தில் நீர் நிரம்பியுள்ள குளம்; காப்பாள் - காப்பு ஆள் - பாதுகாக்கும் காவலன்.
3. தூவல் - மழைத்தூறல்; தொடலை - தோளிலே கோத்துத் தொங்கவிடப்பட்ட.
4. சூழ்ந்த - சுற்றிய; கழல் - காலில் அணியும் பூண், வீரக்கழல்.
5. வைகிய - தங்கிய; வரிக்கச்சு - இறுகக் கட்டிய கச்சு. (கச்சு - அரைப் பட்டிகை.)

தலைவன் கூற்று

நற்றிணை 6 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிப்பாற்பட்டு ஆற்றானாய தலைமகன், தோழி கேட்பத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியிடத்தில் வந்து நின்று, 'தன் வரவினைத் தலைவிக்கு அறிவிப்பார் எவரும் இலரே' என்று தோழி கேட்பத் தன் நெஞ்சிற்குக் கூறியது.

நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால்
நார்உரித் தன்ன மதன்இல் மாமைக்
குவளை அன்ன ஏந்துஎழில் மழைக்கண்,
திதலை அல்குல், பெருந்தோள், குறுமகட்கு
எய்தச் சென்று செப்புநர்ப் பெறினே,
'இவர்யார்?' என்குவள் அல்லள்; முணாஅது,
அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி
எறிமட மாற்கு வல்சி ஆகும்
வல்வில் ஓரி கானம் நாறி,
இரும்பல் ஒலிவரும் கூந்தல்
பெரும்பே துறுவள்,யாம் வந்தனம் எனவே.

தெளிவுரை

"நீரிலே வளர்கின்றதும் உள்துளையைக் கொண்டதுமான அல்லித்தண்டினை நாருரித்தாற்போன்று தோன்றும் பசலை படர்ந்த மாநிறத்தையும், குவளை போன்ற அழகிய குளிர்ந்த கண்களையும், தேமலைக் கொண்ட அல்குலையும், பெரிய தோளையும் கொண்ட இளம்பெண், நம் தலைவி. அவளிடம் நெருங்கிச் சென்று, நான் வந்திருப்பதை எவரேனும் சொல் வாராயின், அவள் வந்துள்ளவர் யார் எனக் கேட்க மாட்டாள். குறிஞ்சிநில வழியில், குமிழ மரத்திலிருந்து கீழே உதிர்ந்த வளைந்த மூக்கைக் கொண்ட முதிர்ந்த சுனிகள் அங்குத் துள்ளி

விளையாடும் மான்களுக்கு இனிய உணவாகும். அத்தகைய வல்வில் ஓரியின் காடுபோல மணம் வீசுவதும், கருமையாய்த் திரண்டு தழைத்ததுவுமாகிய கூந்தலைக் கொண்டுள்ள தலைவி, நான் வந்துள்ளதை அறிந்தால் மகிழ்ச்சியால் பெரிதும் மயக்கம் கொள்வாள். அப்படிச் சென்று கூறுவாரை நான் பெற வில்லையே!" எனத் தோழி கேட்பத் தன் நெஞ்சிற்குச் சொல்வது போலச் சொல்கிறான், தலைவன்.

கருத்து

'என் வரவினைத் தலைவியிடம் தெரிவித்தால் அவள் மகிழ்ச்சியால் மயக்கம் கொள்வாள். அப்படிச் சொல்வார் எவருமிலரே' எனத் தலைவன் வருந்தித் தன்னுளே கூறினான்.

குறிப்பு

தான் வந்திருப்பதைத் தோழி தலைவியிடம் கூறவேண்டும் என்பதைத் தலைவன் குறிப்பால் சொல்கிறான்.

இறைச்சி

குமிழின் கனி மானுக்கு உணவாகும். அதைப் போலத் தலைவன் வரவு, தலைவியின் துயரைப் போக்கி இன்பத்தைத் தரும் என்பதாம்.

சொற்பொருள்

1. தூம்பு - துளை; திரள்கால் - திரண்ட தண்டு.
2. மதன்இல் மாமை - அழகு குறைந்த மாமை நிறம்.
3. ஏந்துஎழில் - மிக்க அழகு.
4. திதலை - தேமல்; குறுமகள் - இளைய மகள் (தலைவி).
5. எய்தச் சென்று - நெருங்கச் சென்று; செப்புநர் - கூறுபவர்; பெறினே - பெற்றால்.
6. இவர் யார் என்குவள் அல்லள் - வந்துள்ளவர் யார் என்று வினவ மாட்டாள்; முணாஅது - வெறுப்பை விளைவிக்காது.
7. அத்தம் - வழி (யில் நிற்கும்); குமிழ் - குமிழ மரம்; கொடு மூக்கு - வளைந்த மூக்கு.
8. எறி மடமான் - துள்ளியோடும் இளமான்; வல்சி - உணவு.
9. வல்வில் ஓரி - கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; கானம் நாறி - கானம் போல நறுமணம் கமழ்ந்து.

10. இரும்பல் - கரிய பலவாய; ஒலிவரும் - தழைத்து அடர்ந்திருக்கும்; கூந்தல் - கூந்தலைக் கொண்ட தலைவி.
11. பெரும் பேதுறுவள் - பெரிதும் மயக்கமெய்தி நிற்பாள்.

தோழி கூற்று

அகநானூறு 68 **ஊட்டியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் இரவுக்குறி வந்தமையறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தே தலைவன் வந்து நிற்கிறான். தலைவியை அனுப்பு வதற்குத் தோழி, தாய் உறங்கிவிட்டாளா என்பதை அறிய முற்பட்டுப் பேசு கிறாள். அவள் உறங்கிவிட்டாள் என்பதறிந்து தோழி தலைவியிடம் கூறியது.

'அன்னாய்! வாழி,வேண்டு அன்னை!நம் படப்பைத்
தண்அயத்து அமன்ற கூதளம் குழைய,
இன்இசை அருவிப் பாடும்' என்னதூஉம்
கேட்டியோ? வாழி,வேண்டு அன்னை,நம் படப்பை,
ஊட்டி யன்ன ஒண்தளிர்ச் செயலை
ஓங்குசினைத் தொடுத்த ஊசல், பாம்புஎன,
முழுமுதல் துமிய உரும்எறிந் தன்றே;
பின்னும் கேட்டியோ? எனவும்அஃது அறியாள்,
அன்னையும் கனைதுயில் மடிந்தனள், அதன்தலை
மன்உயிர் மடிந்தன்றால் பொழுதே, காதலர்
வருவர் ஆயின், 'பருவம் இது'எனச்
சுடர்ந்துஇலங்கு எல்வளை நெகிழ்ந்த நம்வயின்
படர்ந்த உள்ளம் பழுதுஅன் றாக,
வந்தனர், வாழி, தோழி! அந்தரத்து
இமிழ்பெயல் தலைஇய இனப்பல கொண்மூத்

தவிர்வுஇல் வெள்ளம் தலைத்தலை சிறப்ப,
கன்றுகால் ஒய்யும் கடுஞ்சுழி நீத்தம்
புன்தலை மடப்பிடிப் பூசல் பலஉடன்
வெண்கோட்டு யானை விளிபடத் துழவும்
அகல்வாய்ப் பாந்தள் படாஅர்ப்
பகலும் அஞ்சும் பனிக்கடுஞ் சுரனே.

தெளிவுரை

தலைவியே, வாழ்க!

(நம் அன்னை துயில்கின்றாளா என்பதை அறிந்துகொள்ள), "அன்னையே வாழ்க! நான் கூறுவதைக் கேள். நம் தோட்டத்துக் குளிர்ந்த நீர்நிலையில் நெருங்கி வளர்ந்துள்ள கூதளஞ்செடியின் தழைகளின்மேல் அவற்றின் அழகு குறையுமாறு விழுகின்ற அருவியின் இனிய ஓசையைக் கேட்டனையோ?" என்று அன்னையை வினவினேன். (மறுமொழி இல்லை.)

"மேலும் கேட்டேன். 'அன்னையே! நம் தோட்டத்தில் அரக்கு ஊட்டியதுபோன்று ஒளி பொருந்திய தளிர்களைக் கொண்ட அசோக மரத்தின் உயர்ந்த கிளையில் கட்டப்பட்டுள்ள ஊசல் கயிற்றினைப் பாம்பு எனக் கருதி, அம்மரத்தின் பெரிய அடிப் பகுதியே துண்டாகுமாறு விழுந்த இடியின் ஓசையையேனும் கேட்டாயோ?' என்று வினவினேன். அதற்கும் மறுமொழி யில்லை; ஆதலின், நம் அன்னை பெரும் தூக்கத்தில் ஆழ்ந் துள்ளாள் என்பதறிந்தேன். மேலும், இந்நேரத்தில் எல்லா உயிரிகளும் தூங்கிவிட்டன.

"ஒளி பொருந்திய வளையல்கள் கழன்று விழும்படி மெலிந் துள்ள நம்மிடம் நம் காதலர் வருதற்கு ஏற்ற தருணம் இஃது ஆகும் என நினைத்த நம் உள்ளம் பழுதுபடாதபடி அவர் வந்துள்ளார்.

"வானில் இடிமுழக்குடன் மேகக்கூட்டங்கள் இடையீடின்றிப் பெய்த மழையால் எழுந்த வெள்ளம் எல்லா இடங்களிலும் பெருக்கெடுத்து ஓடுகிறது. வெள்ளத்தில் தோன்றிய நீர்ச்சுழிகள் யானைக்கன்றின் கால்களை இழுத்துக்கொண்டு செல்கின்றன;

அது கண்ட பெண்யானை ஆரவாரிக்கிறது; வெள்ளிய கொம்பினைக் கொண்ட ஆண்யானை கன்றினை இழுத்துச் சென்ற வெள்ளத்துள் ஆரவாரத்துடன் கையிட்டுத் துழாவுகிறது. மேலும், அகன்ற வாயினைக் கொண்ட பாம்புகள் செறிந்த புதர்களும் வழியில் நிரம்பியுள்ளன.

"பகற்போதிலேயே வருவதற்கு நடுக்கத்தை ஏற்படுத்தும் இந்தக் கடுமையான காட்டுவழியில் நம் தலைவர் வந்துள்ளார்." ('இங்ஙனம் வந்துள்ளவரை எதிர்கொள்ளச் செல்க' எனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.)

கருத்து

'தலைவன் பல துன்பங்களையும் கடந்து வந்துள்ளான். தாயும் ஆழ்ந்த துயிலில் உள்ளாள்; உலகமும் உறங்குகிறது. தலைவனைச் சந்திக்க இதுவே தக்க தருணம். அவனை எதிர்கொள்ளச் செல்க' எனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

விளக்கம்

"காட்டுவழி; மேகம் மேன்மேலும் மழையைப் பெய்வித்து வெள்ளத்தை மிகுவிக்கிறது. வெள்ளம் கன்றின் காலை இழுப்பதால் தாய் யானை பிளிறும் ஓசை கேட்டு, களிற்றியானை பிளிறியவண்ணம் வெள்ளநீரைத் துழாவுகின்றது; வழியில் பாம்புகள் நிறைந்த புதர்களும் உள்ளன. பகற்பொழுதிலேயே செல்வதற்கு அச்சம் தரக்கூடிய கடுமையான காட்டுவழியினைக் கடந்து தலைவர் வந்துவிட்டார்" என்று தோழி தலைவியிடம் சொன்னாள்.

சொற்பொருள்

1. படப்பை - தோட்டம்.
2. அயம் - பள்ளம்; அமன்ற - நிறைந்த; கூதளம் - கூதளஞ்செடி; குழைய - வருந்த.
3. பாடும் - ஒலிக்கும்.

3-4. அருவிப் பாடும் கேட்டியோ - அருவி ஓசையைக் கேட்டாயோ?

5. ஊட்டி அன்ன - (அரக்கு) ஊட்டியதைப் போல; செயலை - அசோகம்.

6. சினை - கிளை; தொடுத்த - கட்டிய.
7. முழு முதல் - அடிமரம் முழுமையாய்; துமிய - துண்டுபட; உரும் - இடி; எறிந்தன்று - இடிக்கிறது.
9. கனை துயில் - மிக்க தூக்கம்; மடிந்தனள் - ஆழ்ந்துள்ளாள்; அதன் தலை - அதன் மேலும்.
10. மன்உயிர் - ஏனைய உயிர்களும்; மடிந்தன்று - உறங்கிவிட்டன.
11. பருவம் - தருணம்.
12. எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; நம்வயின் - நம்மிடத்து.
13. படர்ந்த - நினைத்த.
14. அந்தரத்து - வானில்.
15. இமிழ்பெயல் - இடியுடன் கூடிய மழை; தலைஇய - பொருந்திய; கொண்மூ - மேகம்.
16. தவிர்வு இல் - நீங்குதலில்லாத; தலைத்தலை - எல்லா இடங்களிலும்; சிறப்ப - மிகுதலால்.
17. ஒய்யும் - இழுத்துச் செல்லும்; நீத்தம் - வெள்ளம்.
18. புன்தலை - மெல்லிய தலை; மடப்பிடி - இளைய பெண்யானை; பூசல் - ஆரவாரம்.
18. வெண்கோடு - வெண்மையான தந்தம்; விளிபட - ஒலியெழுப்பி.
20. பாந்தள் - பாம்பு; படாஅர் - புதல்.
21. பனிக் கடுஞ்சுரம் - மிக்க நடுக்கத்தினைச் செய்யும் காட்டுவழி.

தலைவன் கூற்று

நற்றிணை 82 **அம்மள்ளனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழியிற் புணர்ச்சிக்கண் தன்னிலைக் கொளீஇயது.

கூற்று விளக்கம்

தோழியின் உதவியோடு தலைவியைக் குறியிடத்துக் கூடிய தலைவன், தன் மனநிலை தலைவிக்குத் தோன்றுமாறு, அவள் நலத்தைப் பாராட்டிக் கூறியது.

நோயும் நெகிழ்ச்சியும் வீடச் சிறந்த
வேய்வனப்பு உற்ற தோளை நீயே,
என்உயவு அறிதியோ நல்நடைக் கொடிச்சி!
முருகுபுணர்ந்து இயன்ற வள்ளி போல,நின்
உருவுகண் எறிப்ப நோக்கல்ஆற் றலெனே
போகிய நாகப் போக்கருங் கவலை,
சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்
சேறுஆடு இரும்புறம் நீறொடு சிவண,
வெள்வசிப் படீஇயர் மொய்த்த வள்புஅழீஇ,
கோள்நாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்கும் சிறுகுடி யானே.

தெளிவுரை

நடை நலம் கொண்ட கொடிச்சியே! நான் கொண்டுள்ள காதல் நோயும் அதனால் உண்டான என் மேனியின் தளர்ச்சியும் நீங்குமாறு, நான் தழுவி மகிழ்ந்ததும் சிறந்த மூங்கில்போலும் அழகமைந்ததுமான தோள்களைக் கொண்டவளே! நீ என் வருத்தம் அறிந்தனையோ?

உயர்ந்த நாக மரங்களைக் கொண்ட பலவாகப் பிரிந்து செல்லும் வழிகளைக் கொண்டது, காடு; அக்காட்டு வழியில் சிறிய கண்களைக் கொண்ட சீற்றம் மிக்க ஆண் பன்றி சேற்றில் உழன்றதால் அதன் முதுகு முழுதும் புழுதி படிந்திருந்தது. அப்பன்றியின் கால்கள் சுருக்குவார் வைத்த நிலப் பிளவில் மாட்டிக் கொண்டன. அதனால் காட்டு நாய்கள் சூழ்ந்து அப்பன்றியைக் கொன்றன. அந்நாய்கள் தசையைக் கொண்டு போகாதபடி, கானவர் அவற்றை விலக்கி, பன்றி இறைச்சியைக் கொண்டு வந்து உண்டு மகிழ்வர். அத்தகைய சிறுகுடியில் பிறந்து முருகவேளுடன் கூடிச் சென்ற வள்ளிநாயகியைப் போல நீ விளங்குகின்றாய். அழகிய வடிவுடன் அமைந்த உன் ஒளிவீசும் கண்களைப் பார்த்ததும் அவற்றைத் தவிர மற்றவற்றைப் பார்க்க இயலாமல் அக்கண்களைப் பார்த்த வண்ணமே கண்டு மகிழ்கிறேன்.

கருத்து

உன் கண்ணின் வனப்பு, அதனையே காணச் செய்து உன் முழுவனப்பையும் காண முடியாமல் செய்து விடுகிறது.

உள்ளுறை

பன்றி, வாரில் அகப்பட்டதைப் போலத் தலைவி காதல் நோய் வயப்பட்டாள்; நாய் பன்றியின் தசையைக் கொள்ள, கானவர் அதனை மீட்டனர்; அவ்வாறே, தலைவியின் நலத்தைப் பசலை பற்றிக் கெடுத்தாலும் அதனைத் தலைவன் நீக்குவான் என உள்ளுறை கொள்க.

சொற்பொருள்

1. நோய் - காம நோய்; நெகிழ்ச்சி - தளர்ச்சி; வீட - விட்டகல.
2. வேய் - மூங்கில்; வனப்பு - அழகு; தோளை - தோள்களைக் கொண்டவள்.
3. உயவு - பெரு வருத்தம்; கொடிச்சி - குறிஞ்சி நிலத் தலைவி.
4. முருகு - முருகன்; இயன்ற - செல்லுகின்ற.
5. உருவு - அழகிய வடிவு; கண் எறிப்ப - என் கண்ணினைத் தாக்கி மழுங்கச் செய்ய.
6. போகிய - உயரப் போகிய (வளர்ந்த); நாகம் - நாக மரம்; கவலை - கவறுபட்ட வழி.
7. பெருஞ்சினம் - மிக்க சினம்; ஒருத்தல் - ஆண் விலங்கு, பன்றி.
8. இரும்புறம் - கரிய முதுகு; நீறு - புழுதி; சிவண - பொருந்த.
9. வெள்வசி - வெறும் பிளப்பு (இதனில் படும் விலங்குகளின் கால்கள் மாட்டிக் கொள்ளும்); வள்பு - வார்; அழீஇ - அறுத்து.
10. கோள் - பற்றிக் கொள்ளும்; நாய் - வேட்டை நாய்; கொள்ளை - வேட்டையாகக் கொள்ளப்பட்ட பன்றித் தசை.
11. பெயர்க்கும் - பிடுங்கிக் கொள்ளும்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 60 **மூவாதியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் இரவுக்குறிக்கண் தலைமகன் தன்னைச் சார்ந்து பிரிந்தவழி உறக்கம் வாராமை கண்டு புலம்பித் தோழி கேட்ப உரைத்தது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் தலைவனைக் கூடிப் பிரிந்து வந்த தலைவி உறங்காத வளாய்த் தோழியை வினவியது.

மணிநிற நெய்தல் இருங்கழிச் சேர்ப்பன்
அணிநலம் உண்(டு)அகன்றான் என்றுகொல் எம்போல்
திணிமணல் எக்கர்மேல் ஓதம் பெயரத்
துணிமுந்நீர் துஞ்சா தது.

தெளிவுரை

தலைவனை இரவுக்குறியிடத்தில் சேர்ந்து திரும்பி வந்த தலைவி உறங்காதிருக்கிறாள். கடல் இரைச்சல் கேட்கிறது. அப்போது தலைவி, "என்னைப்போல இந்தக் கடலும் உறக்கம் கொள்ளாதிருக்கிறதே, ஏன்? நீலமணிபோலும் நெய்தற்பூக்கள் மலர்ந்த பெரிய உப்பங்கழிகளைக் கொண்ட கடல்நிலத்திற்குத் தலைவன் நம் நலம் நுகர்ந்து நீங்கியதுபோல, கடலும் தனது அழகிய நலத்தை நுகர்ந்த தலைவன் நீங்கிவிட்டான் என்று கருதித்தானோ?" என்று தோழியை வினவினள்.

கருத்து

'கடலும் தன் தலைவனால் நலனிழந்ததால் நம்மைப்போல் உறங்கா திருக்கிறதோ?'

சொற்பொருள்

1. மணி நிறம் - நீல மணியின் நிறம்; இருங்கழி - பெரிய உப்பங்கழி; சேர்ப்பன் - கடல்நிலத்தலைவன்.
2. என்று கொல் - என்று நினைத்துத்தானோ?

3. திணி - செறிந்த; எக்கர் - மணல்மேடு; ஓதம் - அலை; பெயர - மோதி அலைக்க.
4. முந்நீர் - கடல்; துஞ்சாதது - தூங்காமல் இருப்பது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1116 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் இரவுக்குறிக்கண் மதி கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தில் வான நிலவைக் கண்டு காதலன் காதலியின் முக அழகைப் பாராட்டிக் கூறியது.

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்.

தெளிவுரை

வானத்திலுள்ள விண்மீன்கள், நிலவையும் என் காதலியின் முகத்தையும் கண்டு, எது மதி, எது தலைவியின் முகம் என்று அறிந்துகொள்ள இயலாமல், தம் நிலையில் நிற்காமல் கலங்கித் தவிக்கின்றன.

கருத்து

'என் காதலியின் முகத்தை முகமா நிலவா என்று வேற்றுமையறிய இயலாது வானில் உள்ள மீன்கள் நிலைகுலைந்து தவிக்கின்றன' என்று காதலன் கூறுகிறான்.

விளக்கம்

'வான்நிலவு எது, என் காதலியின் முகம் எது என்று அறிய இயலாமல் விண்மீன்கள் கலங்குகின்றன' என்று காதலன் காதலியின் முக அழகுபற்றிக் கூறுகிறான்.

குறிப்பு

விண்மீன்கள் விட்டுவிட்டுச் சிமிட்டுவதுபோல ஒளிர்கின்றன. அக்காட்சி காதலியின் முகத்திற்கு அருகில் சென்று பார்க்க அவை அலைவனபோல் தோன்றுகின்றது என்னும் கற்பனை நயம் களிப்பூட்டுகிறது.

சொற்பொருள்

2. மீன் - விண்மீன்கள்
1. மதியும் - திங்களையும்; மடந்தை முகனும் - இவள் முகத்தையும்; அறியா - இது வேறு, அது வேறு என்று (வேறுபாடு) அறிய இயலாமல்.
2. பதியில் - தம் இடத்திலிருந்து; கலங்கிய - பெயர்ந்து கலங்கித் திரியலாயின.

தலைவன் கூற்று

திருக்குறள் 1117 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் இரவுக்குறிக்கண் மதி கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தில் வான் நிலவைக் கண்ட காதலன், அதனைத் தன் காதலியின் முகத்தோடு ஒப்பிட்டு, காதலியின் முகம் நிலவினைவிடச் சிறந்தது என்று கூறியது.

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுஉண்டோ மாதர் முகத்து.

தெளிவுரை

நிலவு, பெரும்பாலான நாள்களில் தேய்ந்தே இருக்கும்; முழு நிலவு நாளிலும் நடுவில் களங்கமுள்ளதாய் இருக்கும். ஆனால், என் காதலியின் முகம் அப்படிப்பட்டது அன்று.

கருத்து

தேய்வதும் வளர்வதுமாய் விளங்கும் நிலவில் 'குறுமுயல்' என்னும் களங்கம் உண்டு; என் காதலியின் முகமோ களங்கம் ஏதுமின்றி எப்போதும் ஒளி சிந்திக்கொண்டிருக்கும்.

விளக்கம்

நிலவில் தேய்தலும் வளர்தலும் மாறி மாறி அமையும். என் காதலியின் முகமோ எப்போதும் ஒருதன்மைத்தாய் விளங்கும். முழுமதியிலும் மறு உண்டு. காதலியின் முகத்திலோ எந்நிலை யிலும் மறு இராது.

குறிப்பு

என் காதலியின் முகம் களங்கமில்லாதது; ஆதலின், அது நிலவினும் சிறந்ததெனக் காதலன் தன் காதலியின் முக அழகைச் சிறப்பிக்கிறான்.

சொற்பொருள்

1. அறுவாய் - (நிலவின்) தேய்ந்த குறைப்பகுதி; நிறைந்த - முழுதும் நிரம்பி; அவிர் - விளங்கும்; மதிக்குப் போல - முழு நிலவுக்கு உள்ளது போல.
2. மாதர் முகத்து - என் காதலியின் முகத்தில்; மறு உண்டோ - கறை உண்டோ? (இல்லை).

தலைவன் கூற்று

திருக்குறள் 1118 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் மதி கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தில் நிலவொளி வீசும் நேரத்தில் காதலியைக் கண்ட காதலன், நிலவு தன் காதலியைப் போல விளங்க மாட்டாதாதலால் அது தன் விருப்பத்திற்குரியதன்று என்று கூறியது.

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

தெளிவுரை

நிலவே! இந்த அழகிய பெண்ணின் முகத்தினைப்போல நான் மட்டும் மகிழும்வண்ணம் ஒளி வீச உன்னால் இயலுமானால், நீயும் இவளைப்போல என்னால் விரும்பப்படுவாய்!

கருத்து

நிலவே! என் காதலியின் முகத்தினைப் போல் உன்னால் ஒளி வீச இயலாது.

விளக்கம்

நிலவே! என் காதலியின் முக ஒளி என்னை மகிழ்விக்கிறது; உன்னாலும் அவள் முக ஒளிபோல் ஒளி வீச இயலுமானால் நீயும் காதலிக்கத் தகுதியானவள்.

சொற்பொருள்

2. மதி - நிலவே!
1. மாதர் முகம்போல - என் காதலியின் முகத்தினைப்போல்; ஒளிவிட வல்லையேல் - (என்னை மட்டும் மகிழ்விக்கும்படியாய்) உன்னால் ஒளி வீச இயலுமானால்.
2. காதலை - (நீயும் அவளைப்போல்) என்னால் விரும்பப்படுவாய்; வாழி - நீ வாழ்வாயாக!

தலைவன் கூற்று

திருக்குறள் 1119 **திருவள்ளுவர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் மதி கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

நிலவொளி வீசும் நேரத்தில் இரவுக்குறியிடத்தில் தன் காதலியைக் காண வந்த தலைவன், நிலவை நோக்கிக் கூறியது.

மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

தெளிவுரை

மதியே! மலரினைப் போன்ற கண்களைக் கொண்ட என் காதலியின் முக அழகினை ஒத்திருக்க விரும்புவாயேயானால், பலரும் காணும்படியாய்த் தோன்றாதே.

கருத்து

தன் காதலியின் முக அழகினைத் தான் ஒருவனே கண்டு அனுபவித்த வனாதலால், தலைவன், பலர் காணத் தோன்றும் நிலவின் நிலையை இழித்துக் கூறினான். எனவே, 'உன்னால் அவள் முக அழகினை ஒத்திருக்க இயலாது' என்கிறான்.

விளக்கம்

நிலவே! என் காதலியின் முகம்போல உன்னால் ஒளி வீச இயலாது. குறையைக் கொண்டுள்ள நீ, பலர் காணத் தோற்ற மளிக்கிறாயே! ஒளிவிட இயலாத நீ இனிமேலாவது எல்லாரும் காணத் தோன்றாதே.

குறிப்பு

'நிலவினும் மேலானவள்' எனக் காதலன் தன் காதலியைப் புகழ்ந்துரைக்கிறான்.

சொற்பொருள்

2. மதி - முழு நிலவே!
1. மலர் அன்ன கண்ணாள் - மலர் போலும் கண்களைக் கொண்ட என் காதலியின்; முகம் ஒத்தி ஆயின் - முகத்தை ஒத்திருக்க விரும்பினால்.
2. பலர்காணத் தோன்றல் - பலர் பார்க்கும்படியாய்த் தோன்றாதே!

தலைவன் கூற்று

அகநானூறு 142 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் தலைவியைச் சந்தித்துக் கூடிய தலைவன், அந்த இன்பத்தைத் தன் நெஞ்சிற்குக் கூறி மகிழ்ந்தது.

இலமலர் அன்ன அம்செந் நாவின்
புலம்மீக் கூறும் புரையோர் ஏத்த,
பலர்மேந் தோன்றிய கவிகை வள்ளல்
நிறைஅருந் தானை வெல்போர் மாந்தரம்
பொறையன் கடுங்கோப் பாடிச் சென்ற
குறையோர் கொள்கலம் போல, நன்றும்
உவஇனி – வாழிய, நெஞ்சே! – காதலி
முறையின் வழாஅது ஆற்றிப் பெற்ற
கறைஅடி யானை நன்னன் பாழி,
ஊட்டஅரு மரபின் அஞ்சுவரு பேஎய்க்கு
ஊட்டுஎதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி
புள்ளிற்கு ஏமம் ஆகிய பெரும்பெயர்
வெள்ளத் தானை அதிகன் கொன்று,உவந்து
ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பின்,
பலர்அறி வுறுதல் அஞ்சி, பைப்பய
நீர்த்திரள் கடுக்கும் மாசுஇல் வெள்ளிச்
சூர்ப்புறு கோல்வளை செறித்த முன்கை–
குறைஅறல் அன்ன இரும்பல் கூந்தல்,
இடன்இல் சிறுபுறத்து இழையொடு துயல்வர,
கடல்மீன் துஞ்சும் நள்ளென் யாமத்து,
உருவுகிளர் ஏர்வினைப் பொலிந்த பாவை
இயல்சுற் றன்ன ஒதுக்கினள் வந்து,
பெயல்அலைக் கலங்கிய மலைப்பூங் கோதை
இயல்எறி பொன்னின் கொங்குசோர்பு உறைப்ப,

25 தொடிக்கண் வடுக்கொள – முயங்கினள்;
வடிப்புஉறு நரம்பின் தீவிய மொழிந்தே.

தெளிவுரை

நன்னன் என்னும் குறுநிலத் தலைவன், நீதி முறை தவறா நெறி நின்று கூடமை செய்து அதற்குப் பரிசாய், உரல் போலும் அடியினைக்கொண்ட யானை ஒன்றனைப் பெற்றான்; அவன் 'பாழி' என்னும் ஊருக்குரியவன்; அவ்வூரில் மலைக்குகையி லுள்ள அச்சம் தரத்தக்க பேய்க்குப் படையல் வைப்பதாய் நேர்ந்து அதனை நிறைவேற்றிய மிஞிலி என்பவன் நன்னனுக்கு நண்பன். அம்மிஞிலி, புள்களுக்குப் பாதுகாவலனும், வெள்ளம் போன்ற சேனையினைக் கொண்டவனுமாகிய அதியன் என்பானைக் கொன்று, மகிழ்ந்து, அப்போர்க்களத்தில் வெற்றிக் கூத்தாடினான். அப்போது ஏற்பட்ட ஆரவாரத்தினைப் போல, பலரும் அறிந்து அலர் தூற்றுதலை எண்ணித் தலைவி அஞ்சினாள். (ஆதலின், பிறர் அறியாதிருக்க என்னைக் காண இரவில் வருகிறாள்.)

அவள், தூய நீரைப் போன்று வெண்மையுடன் திரட்சி யாயுள்ள சொக்க வெள்ளி வளையல்களை அணிந்த முன்னங் கைகளைக் கொண்டவள்; ஆற்றோரத்தில் நீர் குறைந்தபோது காணப்படும் கருமணல் போன்று அடர்ந்த அவளது கரிய கூந்தல் அணிகலன்களோடு முதுகுப்புறம் மறைய அசைந்து கொண்டிருக்கும். கடல்மீன்களும் உறங்கும் நடுயாமத்தில், அழகு கிளர்ந்த பொலிவினைக் கொண்டதும் சிறந்த தொழிற் பாட்டினைக் கொண்டதுமான பொம்மை ஒன்று, நடை கற்றாற் போல மெல்ல மெல்ல நம்மை வந்தடைந்தாள்.

அவள், மழை பெய்து அலைத்தமையால் கசங்கிய மலைப் பூக்களாலாகிய மலர்மாலையை அணிந்திருந்தாள். அதிலிருந்து, கொல்லன் உலைக்களத்தில் அடிக்குங்கால் தெறித்து விழும் பொன்துகள்போல் தேன் துளிகள் துளிர்த்து விழுந்தன. திருத்தம் செய்யப்பெற்ற யாழ்நரம்பின் இன்னிசை போன்று இனிய சொற்களைக் கூறி, தன் கையில் அணிந்திருந்த தொடி யால் என் உடம்பில் வடு உண்டாகும்படி இறுக என்னைத் தழுவினாள்.

மாந்தரம் பொறையன் கடுங்கோ என்பவன் சேர மன்னன். அவன், குற்றமற்ற மேலோர், இலவ மலர்போலும் தம் அழகிய சிவந்த நாவினால் புகழும் சிறப்பினைப் பெற்றவன்; மன்னர் பலருள்ளும் மேம்பட்டு விளங்குபவன்; கொடுப்பதற்கென்றே எப்போதும் கீழ் நோக்கிய கையினைக் கொண்ட வள்ளற் பெருமகன். இத்தகைய சிறப்புடையோனைப் பாடிச் சென்ற இரவலர்களின் கலம் நிறைவுறுவதுபோல, நெஞ்சே! (தலைவி தழுவியதால்) இனி நீயும் பெரிதும் நிறைவுற்று மகிழ்வாய்! நீ வாழிய!

கருத்து

'நெஞ்சமே! இரவுக்குறியில் தலைவி என்னை இனிதே முயங்கினாள்.'

குறிப்பு

நெஞ்சே! நம் களவொழுக்கம் பகலில் நிகழுமாயின் பலரும் அறிந்து அலராகும் என்று அஞ்சி நம் காதலி, கடல்மீன்கள் தூங்கும் நள்ளிரவில், அழகிய பாவை நடை கற்றதுபோல மெல்ல மெல்ல வந்து, அவள் வளையல் என் முதுகில் வடுவுண்டாக்கும்படி நம்மை முயங்கினாள். வறியவன் பெற்ற பெருஞ்செல்வம்போல நெஞ்சே! நீ மகிழ்க!

சொற்பொருள்

1. இலமலர் – இலவ மலர்; அம்செந்நா – அழகிய சிவந்த நாக்கு.
2. புலம் மீக்கூறும் – புலமையால் உயர்த்திக் கூறப்பெறும்; புரையோர் – மேலோர்; ஏத்த – புகழ.
3. பலர்மேந் தோன்றிய – பலரினும் மேம்பட்டுக் கொடுத்தலால்; கவிகை – கவிந்த கையைக் கொண்ட.
4. நிறைஅருந் தானை – நிறுத்தற்கரிய சேனை.

4-5.மாந்தரம் பொறையன் கடுங்கோ – சேர மன்னருள் ஒருவன்.

6. குறையோர் – வறியோர்; கொள்கலம் – பரிசிலை ஏற்கும் பாத்திரம்.
7. உவஇனி – இனி(ப் பெரிதும் நிறைவுற்று) மகிழ்வாய்.
8. முறையின் வழாஅது – நீதி முறையினின்றும் தவறாது; ஆற்றி – கடமையினைச் செய்து.
9. கறைஅடி – உரல் போன்ற அடி; நன்னன் – குறுநில மன்னன்; பாழி – நன்னனது ஊர்.
10. ஊட்டஅரு மரபின் – பலியிடுவதற்கு அரிய தன்மையைக் கொண்ட; அஞ்சுவரு – அஞ்சத்தக்க.

11. ஊட்டு எதிர் கொண்ட - ஊட்டுதலை ஏற்றுக்கொண்ட; வாய் மொழி - வாய்மை பொருந்திய; மிஞிலி - நன்னனுக்கு நண்பன்.
12. புள்ளிற்கு - பறவைகட்கு; ஏமம் - பாதுகாப்பு; பெரும் பெயர் - பெரிய புகழ்.
13. வெள்ளத் தானை - வெள்ளம் போன்ற படை; அதிகன் - குறுநில மன்னருள் ஒருவன்.
14. ஒள்வாள் அமலை - போர் வெற்றிக்கூத்து (வாளாற்றல் மிகுந்த வீரர் தம் அரசருடன் கூடியாடும் வெற்றிக்கூத்து); ஞாட்பு - பூசல் (அதனால் எழுகின்ற ஆரவாரம்).
15. பைப்பய - மெல்ல மெல்ல.
16. நீர்த்திரள் கடுக்கும் - நீரின் திரட்சியை ஒக்கும்; வெள்ளி - வெள்ளியினாலாய.
17. சூர்ப்புஉறு - வளைவு பொருந்திய; கோல் வளை - திரண்ட வளையல்.
18. குறை அறல் அன்ன - ஆற்றில் நீர் குறைதலால் நெளிவாய் அமையும் கருமணல் போன்ற.
19. சிறுபுறத்து - பிடரியில்; இழையொடு துயல்வர - அணியோடு கூடி அசைய.
21. உருவுகிளர் ஏர்வினைப் பொலிந்த பாவை - அழகு கிளர்ந்த பொலி வினைக் கொண்ட செய்தொழிலால் சிறந்த பாவை (பொம்மை).
22. இயல் கற்றன்ன - நடை கற்றுக்கொண்டதுபோல; ஒதுக்கினள் - நடையினளாய்.
23. பெயல்அலை - மழை அலைத்தலால்; கோதை - மாலை.
24. இயல்எறி பொன்னின் - உலைக்களத்தில் அடிக்குங்கால் தெறித்து விழும் பொன் துகள் போல; கொங்கு சோர்பு உறைப்ப - தேன் துளித்து வீழ.
25. தொடிக்கண் - வளையலின்; வடுக்கொள - வடு என் உடலில் அழுந்தும்படியாய்; முயங்கினள் - தழுவினள்.
26. வடிப்புறு நரம்பின் - வடித்தல் அமைந்த யாழ் நரம்பின் ஒலிபோல; தீவிய - இனிய; மொழிந்து - மொழிகளைக் கூறி.

தலைவன் கூற்று

அகநானூறு 162 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகளைக் கண்ணுற்று நீங்கிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தே வந்து தலைவியைக் கூடிப் பிரிந்து செல்லுகின்ற தலைவனின் நெஞ்சம், அவளது பேரழகின் பெருக்கிலேயே நிலைபெற்று நிற்கிறது. அவளையே நினைந்து நினைந்து அவன் தன் நெஞ்சிற்குக் கூறியது.

கொளக்குறை படாஅக் கோடுவளர் குட்டத்து
அளப்புஅரிது ஆகிய குவைஇருந் தோன்றல,
கூடல்கண் டன்ன மாக விசும்பின்
அழற்கொடி அன்ன மின்னுவசிபு நுடங்க,
கடிதுஇடி உருமொடு கதழ்உறை சிதறி,
விளிவுஇடன் அறியா வான்உமிழ் நடுநாள்,
அருங்கடிக் காவலர் இகழ்பதம் நோக்கி,
பனிமயங்கு அசைவளி அலைப்ப, தந்தை
நெடுநகர் ஒருசிறை நின்றனென் ஆக,
அறல்என அவிர்வரும் கூந்தல், மலர்என
வாள்முகத்து அலமரும் மாஇதழ் மழைக்கண்
முகைநிரைத் தன்ன மாவீழ் வெண்பல்,
நகைமாண்டு இலங்கும் நலம்கெழு துவர்வாய்,
கோல்அமை விழுத்தொடி விளங்க வீசி,
கால்உறு தளிரின் நடுங்கி, ஆனாது,
நோய்அசா வீட முயங்கினள் – வாய்மொழி
நல்இசை தருஉம் இரவலர்க்கு உள்ளிய
நசைபிழைப்பு அறியாக் கழல்தொடி அதிகன்
கோள்அறவு அறியாப் பயம்கெழு பலவின்
வேங்கை சேர்ந்த வெற்பகம் பொலிய,
வில்கெழு தானைப் பசும்பூண் பாண்டியன்

களிறுஅணி வெல்கொடி கடுப்ப, காண்வர
ஒளிறுவன இழிதரும் உயர்ந்துதோன்று அருவி,
நேர்கொள் நெடுவரைக் கவாஅன்
25 சூர மகளிரின் பெறற்குஅரி யோளே.

தெளிவுரை

கொள்ளக் கொள்ளக் கடல்நீர் குறைவுபடாதது; தன்னிடத்தே மலைகள் வளர்தற்கான ஆழமுடைமையால் அளத்தற்கு அரியது; திரண்ட கருமையான தோற்றத்தைக் கொண்டது; அத்தகைய கடலினைக் கண்டாற்போல நீலவானில், தீக் கொடியை ஒத்த மின்னல், மேகத்தைப் பிளந்துகொண்டு நெளிந்து நெளிந்து ஓடுகிறது. கடுமையான இடியொலியுடன், எப்பொழுது நிற்குமென அறிய இயலாதவாறு நடுஇரவில் பெருமழை பெய்கின்றது.

சோர்வின்றிக் காவல் செய்யும் காவலர் சோர்ந்திருந்த சமயம் நோக்கி, குளிரொடு கூடிய வாடைக்காற்று வீசி வருத்த, தலைவி யினைப் பெற்ற தந்தையின் நீண்ட மாளிகையின் ஒருபுறத்தில் நான் நின்றுகொண்டிருந்தேன்.

அதிகன் வாய்மைச்சொற்களையே பேசுபவன்; நல்ல கீர்த்தி யினைப் பெற்றுத் தரும் இரவலர்கள் விரும்பும்வண்ணம் தவறாது கொடுக்கும் ஈகைத் தன்மையினன்; வீரவளை அணிந்தவன்.

அவனது மலைப்பரப்பு, காய்த்தலில் மாறுதலில்லா (எப்பொழுதும் காய்க்கின்ற) பயன் நிரம்பிய பலாமரங்களுடன் வேங்கை மரங்களும் நிறைந்து அழகு பெற்றது. அதன் உச்சி யிலிருந்து அருவி பொழியும்; அவ்வருவி, வில்லேந்திய படை வீரர்களைக் கொண்ட பசும்பூண் பாண்டியனது போர்யானை மீது வீரர் உயர்த்திப் பிடித்த வெற்றிக்கொடியை ஒப்ப, அழகு பெற ஒளி வீசிக் கீழிறங்கும். அம்மலைச்சாரலில் எப்போ தேனும் அரிதாய் மலையுறை அணங்குகள் எனப்படும் பெண் தெய்வங்கள் வந்து விளையாடும்.

அத்தகைய தெய்வங்களைப் போன்றவளான தலைவி நம்மால் பெறுதற்கரியவள். அவள் கருமணல் போன்ற கூந்தலைக் கொண்டவள்; ஒளி பொருந்திய முகத்தில் சுழலும் நீலமலர்

போன்ற இமைகளுடன் கூடிய குளிர்ந்த கண்களைக் கொண்டவள்; வண்டுகள் விரும்பும் முல்லை அரும்புகளை வரிசையாய் நிறுத்தினாலொத்த வெண்பற்களும், புன்னகையால் மாண்புற்று விளங்கும் அழகு பொருந்திய பவளம் போன்ற செவ்வாயும் கொண்டவள். இவற்றுடன், அழகிய சிறிய வளையல் விளங்கும் கையை வீசி, காற்றால் மோதப்பெற்ற தளிரென நடுநடுங்கியவாறு நம் வருத்தமெல்லாம் நீங்குமாறு வந்து நம்மை முயங்கினாள்.

கருத்து

'நெஞ்சே! தலைவி இரவுக்குறியிடத்தில் நம் காமநோய் வருத்தமெல்லாம் நீங்குமாறு தழுவி இன்பமளித்தாள்.'

விளக்கம்

மழை பெய்த நள்ளிரவில் காவலர் சோர்ந்திருந்த சமயம் தலைவியின் பெருமனையின் ஒரு புறத்தே நின்றேன். சூரர மகளிரைப் போலப் பெறுதற்கரியவளாகிய தலைவி, அறல் போன்ற கூந்தலும், மலர் போன்ற கண்ணும், முல்லையரும்பு போன்ற பல்லும், புன்சிரிப்பும், சிவந்த வாயும் கொண்டு, கைவீசி நடந்து, காற்றால் மோதப்பெற்ற தளிர்போல் நடுங்கி வந்த அவள், நான் கொண்ட காமநோய் நீங்குமாறு என்னைத் தழுவினாள்.

சொற்பொருள்

1. கோடுவளர் - மலைகள் வளரும்; குட்டம் - ஆழம்.
2. குவை இருந்தோன்றல - திரண்ட கரிய தோற்றத்தினைக் கொண்ட.
3. மாக - மேலேயுள்ள; விசும்பு - வானத்தில்.
4. மின்னு - மின்னல்; வசிபு - மேகத்தைப் பிளந்துகொண்டு; நுடங்க - நெளிந்து செல்ல.
5. கடிது இடி - கடுமையாய் இடிக்கும்; உரும் - இடி; கதழ் உறை - விரைந்த நீர்.
6. விளிவு - முடிவு; வான்உமிழ் - மேகம் பெய்யும்; நடுநாள் - நடுயாமம்.
7. கடி - காவல்; இகழ்பதம் - சோர்ந்திருந்த சமயம்.
8. பனி மயங்கு - குளிர் பொருந்திய; அசைவளி - அசைந்துவரும் வாடைக்காற்று.
9. நெடுநகர் - நீண்ட மாளிகை; ஒரு சிறை - ஒரு பக்கம்.

10. அறல் - நெளிந்த கருமணல்.
11. வாள்முகம் - ஒளி பொருந்திய முகம்; அலமரும் - சுழலும்.
12. முகை - முல்லை அரும்பு; நிரைத்தன்ன - வரிசையாய் நிறுத்தினாலொத்த; மாவீழ் - வண்டுகள் விரும்பும்.
13. நகை மாண்டு - புன்னகையால் மாண்புற்று; துவர் - பவளம்.
14. கோல் அமை - அழகு வாய்ந்த; தொடி - வளையல்.
15. கால் - காற்று; உறு - பட்ட; ஆனாது - அமையாது.
16. நோய் - காமநோய்; அசா - வருத்தம்; வீட - நீங்க; வாய்மொழி - வாய்மைச்சொல்.
17. நல் இசை - சிறந்த புகழ்; உள்ளிய - எண்ணிய.
18. நசை - விருப்பம்; பிழைப்பு அறியா - பிழைக்காதவாறு; அதிகன் - வள்ளல்களுள் ஒருவன்.
19. கோள் அறவு அறியா - காய்ப்பின்றி இராத (எப்பொழுதும் காய்க்கிற); பயம் கெழு - பயன் நிரம்பிய.
20. வெற்பகம் - மலையிடம்; பொலிய - அழகு பெற.
21. பசும்பூண் பாண்டியன் - பாண்டிய மன்னருள் ஒருவன்.
22. களிறுஅணி - களிற்றின்மீது அழகுற எடுத்த; காண் வர - அழகு பெற.
23. ஒளிறுவன - மிளிர்வன, ஒளியுடன்.
24. நேர்கொள் - நேரான; கவாஅன் - மலைப்பக்கம்.
25. சூரர மகளிர் - அச்சம் தரும் தெய்வப்பெண்டிர்.

தலைவன் கூற்று

அகநானூறு 198 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

புணர்ந்து நீங்கிய தலைமகளது போக்கு நோக்கிய தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தில் களவொழுக்கத்தில் வந்து தன்னோடு அளவளாவிச் செல்லும் தலைவியின் பண்புடைமை கண்ட தலைவன் தன்னுள்ளே மகிழ்ந்து கூறியது.

கூறுவம் கொல்லோ? கூறலம் கொல்?எனக்
கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது,
நயந்துநாம் விட்ட நல்மொழி நம்பி,
அரைநாள் யாமத்து விழுமழை கரந்து,
கார்விரை கமழும் கூந்தல், தூவினை
நுண்நூல் ஆகம் பொருந்தினள், வெற்பின்
இளமழை சூழ்ந்த மடமயில் போல,
வண்டுவழிப் படரத் தண்மலர் வேய்ந்து,
வில்வகுப் புற்ற நல்வாங்கு குடச்சூல்
அம்சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து,
துஞ்சுஊர் யாமத்து முயங்கினள், பெயர்வோள்,
ஆன்ற கற்பின் சான்ற பெரியள்,
அம்மா அரிவையோ அல்லள்; தெனாஅது
ஆஅய் நல்நாட்டு அணங்குடைச் சிலம்பில்
கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்,
ஏர்மலர் நிறைசுனை உறையும்
சூர்மகள் மாதோ என்னும்என் – நெஞ்சே!

தெளிவுரை

"என் உள்ளத்தில் எழுந்த விருப்பத்தைச் சொல்லலாமா வேண்டாவா என்று பல நாள் மறைத்து வைத்தேன். ஆனால், அடக்க இயலாமல் ஒரு நாள், அவள் தோழி வாயிலாய்த் தெரிவித்தேன். நயந்து நான் சொன்ன சொற்களால் தலைவியும் என்னை விரும்பினாள் என்று புரிந்துகொண்டேன். இன்று நள்ளிரவில், மழை பெய்துகொண்டிருக்க, அந்த மழையில் என்னைக் காண அவள் மறைந்து வந்தாள். கார் காலத்து மணம் அவள் கரிய கூந்தலில் கமழ, வேலைப்பாட்டுடன் அமைந்த மெல்லிய நூலாடை அவள் முன்புறத்தை மறைக்க, இளமேகம் சூழ்ந்த இளமயில்போலத் தோன்றினாள். அவள் சூடியிருந்த குளிர்ந்த மலரில் படிந்த வண்டுகள் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. வில்லைப் போன்ற வளைவுடன் நன்கு செய்யப்பட்ட அழகிய அவள் காற்சிலம்புகள் ஒலியெழுப்பாவண்ணம், அச்சத்தோடு வந்து, ஊர் உறங்கும் நடுச்சாமத்தில், என்னைத் தழுவித் திரும்பிச் செல்கின்றாள்.

"உயர்ந்த கற்பினால் பெருமையுற்று, மாமை நிறம் வாய்ந் துள்ள இவள் பெண் அல்லள்; தென்பகுதியில் உள்ளதும், ஆய் என்பவனுக்கு உரியதுமாகிய நாட்டில், தெய்வங்கள் வாழும் கவிரம் என்னும் பெயர் கொண்ட மலைச்சாரலில், மென் மலர்கள் நிறைந்திருக்கும் சுனையில் வாழும் தேவதைதான் என்று என் நெஞ்சம் கூறுகிறது" என்று தலைவன் மகிழ்ந்தான்.

கருத்து

'நெஞ்சே! என்னோடு கூடிவிட்டுத் திரும்பும் இவள் மானிடப்பெண் அல்லள்; தெய்வப்பெண்.'

விளக்கம்

"என் நெஞ்சே! நம்முள் மறைந்திருக்கும் காமத்தைச் சொல்ல லாமா வேண்டாவா என்று எண்ணி எண்ணி, மறைக்க இயலாமல் நாம் இரந்து சொன்ன சொற்களை இவள் நம்பினாள். அதனால், குளிர்மலர் சூடி, அழகிய சிலம்பொலிக்க, இளமயில்போல, ஊர் முழுதும் தூங்கும் யாமத்தில் இவள் வந்து நம்மைத் தழுவிச் செல்கிறாள். கற்பிற்சிறந்து மாமை நிறத்துடன் உள்ள இவளை மானிட மகள் என்று சொல்ல மாட்டேன்; கவிரம் என்னும் மலைச்சாரலில் மென்மலர்ச்சுனையில் வாழும் தெய்வமே என்பேன்" என்று தலைவன் தன்னைப் புணர்ந்து செல்லும் தலைவியைப் பாராட்டிப் பேசினான்.

குறிப்பு

1. தலைக்குப் பின் கூந்தலும், தலைக்கு முன் மெல்லிய நூலாலான ஆடையும் கொண்ட தலைவியின் தோற்றம் இளமேகம் சூழ்ந்த இளைய மயில் போன்றிருந்தது.
2. ஆய் - இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; பொதிய மலைத் தலைவன். ஆய் அண்டிரன் என்றும் இவன் வழங்கப்பெறுவான்.

சொற்பொருள்

1. கூறலம் கொல் - கூற வேண்டாவா?
2. கரந்த - மறைத்துள்ள; கைந்நிறுக்கல்லாது - அடக்க இயலாது.
3. நயந்து - விரும்பி; நல்மொழி - நல்ல சொற்கள்.
4. விழுமழை - மிக்க மழை; கரந்து - மறைந்து.

5. கார் - கார் காலம்; விரை - மணம்; தூவினை - நல்ல வேலைப்பாடு.
6. நுண் நூல் - மெல்லிய நூல் ஆடை; ஆகம் - மார்பு.
7. இளமழை - மேகம்.
8. படர - மொய்க்க; வேய்ந்து - சூடி.
9. வில் வகுப்பு - வில் போன்ற அமைப்பு; குடச்சூல் - கருக்கொண்டது போன்று புடைத்துள்ள சிலம்பு.
10. ஒடுக்கி - ஒலி எழாது அடக்கி.
11. பெயர்வோள் - திரும்பிச் செல்பவள்.
12. ஆன்ற - நிறைந்த, உயர்ந்த; சான்ற - பெருமையுற்ற.
13. அரிவை - பெண்; தெனாஅது - தெற்கில்.
14. ஆய் - வள்ளல்களுள் ஒருவன்; அணங்கு - தெய்வம்; சிலம்பு - மலை.
15. கவிரம் - கவிரம் என்னும் பெயர் கொண்ட; உரு - அச்சம்; கவாஅன் - மலைச்சாரல்.
16. ஏர் - அழகு; உறையும் - வாழும்.
17. சூர்மகள் - தெய்வ மகள்.

தலைவன் கூற்று

அகநானூறு 208 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

புணர்ந்து நீங்கும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் இரவுக்குறியில் தலைவன் தலைவியைக் கூடி நீங்கும்போது கூறியது.

யாம இரவின் நெடுங்கடை நின்று,
தேம்முதிர் சிமையக் குன்றம் பாடும்
நுண்கோல் அகவுநர் வேண்டின், வெண்கோட்டு
அண்ணல் யானை ஈயும் வண்மகிழ்
5 வெளியன் வேண்மான் ஆஅய் எயினன்,
அளிஇயல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை,
இழைஅணி யானை இயல்தேர் மிஞிலியொடு

நண்பகல் உற்ற செருவில் புண்கூர்ந்து,
ஒள்வாள் மயங்குஅமர் வீழ்ந்தென, 'புள்ஒருங்கு
அம்கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று
ஒண்கதிர் தெறாமைச் சிறகரின் கோலி,
நிழல்செய்து உழறல் காணேன், யான்'எனப்
படுகளம் காண்டல் செல்லான், சினம்சிறந்து,
உருவினை நன்னன், அருளான், கரப்ப,
பெருவிதுப் புற்ற பல்வேள் மகளிர்
குரூஉப்பூம் பைந்தார் அருக்கிய பூசல்,
வசைவிடக் கடக்கும் வயங்குபெருந் தானை
அகுதை களைதந் தாங்கு, மிகுபெயல்
உப்புச் சிறைநில்லா வெள்ளம் போல,
நாணுவரை நில்லாக் காமம் நண்ணி,
நல்கினள், வாழியர், வந்தே– ஓரி
பல்பழப் பலவின் பயம்கெழு கொல்லிக்
கார்மலர் கடுப்ப நாறும்,
ஏர்நுண் ஓதி மாஅ யோளே!

தெளிவுரை

"நெஞ்சே! நம் தலைவி மாமை நிறத்தவள். அவளது அழகிய மென்கூந்தல், பழங்கள் பல தொங்கும் பலா மரங்களைக் கொண்டதும், ஓரி என்பவனுக்கு உரியதுமான கொல்லி மலையில் கார் காலத்தில் மலரும் மலரைப் போன்ற மணம் கொண்டது. அவள் இன்றிரவில் என்னுடன் அளவளாவிச் சென்றாள்.

"வெளியன் வேண்மான் ஆய் எயினன் என்பான், குறுநில மன்னன். அவனுடைய அரண்மனை வாயிலில், அவனைக் காண்பதற்காக வைகறைப்போதில் வரும் பாணர்கள், தேனடைகள் நிறைந்த உச்சியினைக் கொண்ட அவன் குன்றத்தைப் பாடுவார்கள். அவர்கள் விரும்பினால் ஆய் தன் பட்டத்துயானையினைக்கூட வழங்கும் வள்ளல் தன்மை கொண்டவன்.

"நன்னன் என்பவனுக்கு நண்பனாகிய மிஞிலியோடு, ஆய் எயினன் பாழிப்பறந்தலை என்னும் இடத்தில் நண்பகல் நேரத்தில் வாள் போர் செய்து இறந்தான். பறவைகளிடம் ஆய்

மிக்க கருணை உள்ளவன். அவன் இறந்ததை அறிந்த பறவைகள் வானில் ஒன்றாய்ச் சிறகை விரித்துப் பறந்து அவன் உடலில் வெயில் படாதவாறு மறைத்தன. 'இந்தக் காட்சியை நான் சென்று காணேன்' என்று கூறி, அஞ்சத் தக்க பேராற்றலைக் கொண்ட நன்னன் தன் அரண்மனையில் மறைந்துகொண்டான்.

"எயினனுக்கு உறவினராகிய வேளிர்குல மகளிர், பெருநடுக்க முற்றுப் போர்க்களத்திற்கு விரைந்தோடி வந்து, தம் பூமாலை களைப் பிய்த்துப் போட்டு, அவன் உடலைப் பார்த்துக் கதறியழுதனர். பகைவரின் படைகளை வென்று, தனக்கும் தன்னைச் சார்ந்தார்க்கும் உண்டாகிய பழியைப் போக்கு பவனாகிய அகுதை என்பவன், எயினனுக்கு நண்பன். அவன் இச்செய்தியைக் கேட்டு, மிஞிலியோடு போர் செய்து மகளிர் அழுகையைப் போக்கினான். அதைப் போல, நான் இவ்விரவில் வந்துள்ளதை அறிந்த தலைவி, உப்பினால் அமைக்கப்பெற்ற அணையை எளிதில் உடைத்துக்கொண்டு வெள்ளம் பாய்வதைப் போல, தன் நாணத்தைக் கட்டுப்படுத்த இயலாது வந்து என் துன்பத்தைப் போக்கினாள். அவள் வாழ்க" என்று தலைவன் கூறி மகிழ்ந்தான்.

கருத்து

தலைவியை இரவுக்குறியில் புணர்ந்து நீங்கும் தலைவன், தன்னோடு கூடித் தன் ஆற்றாமையினைத் தணித்து இன்பம் தந்த தலைவியின் சிறப்பினை நினைந்து, 'நெஞ்சே! மாமை நிறமுள்ள நம் தலைவி, உப்பால் அமையப்பெற்ற அணையைப் பெருவெள்ளம் உடைத்துக்கொண்டு வருவதுபோலத் தன் நாணத்தை உடைத்துக்கொண்டு காமம் பெருகிட வந்து, நம் துன்பத்தை நீக்கி அருள் செய்தாள்' என்று கூறி மகிழ்ந்தான்.

குறிப்பு

'ஆய் எயினன் வீழ்ந்ததனால் கலங்கிய மகளிர்க்கு, அகுதை உதவிப் பழி துடைத்ததுபோல, காமத்தால் உளமழிந்த தனக்குத் தலைவி வந்து அருள் செய்தாள்' என்று தலைவியைப் பாராட்டுகிறான், தலைவன்.

சொற்பொருள்

1. யாம இரவு - வைகறை, இரவின் கடையாமம்; கடை - வாயில்.
2. தேம் - தேன்; சிமையம் - உச்சி.

3. நுண்கோல் - சிறிய பிரப்பங்கோல்; அகவுநர் - பாடும் பாணர்; கோடு - தந்தம்.
4. அண்ணல் - பெருமை; வண்மகிழ் - கொடுத்து மகிழும்.
6. அளிஇயல் - கருணையுள்ள; பாழி - ஓர் ஊர்; பறந்தலை - ஒரு போர்க்களம்.
7. இழை - அணிகலன்; மிஞிலி - குறுநில மன்னர்களுள் ஒருவன்.
8. செரு - போர்; புண்கூர்ந்து - புண்பட்டு.
9. வீழ்ந்தென - இறக்க; புள் - பறவை; ஒருங்கு - ஒன்றுசேர்ந்து.
11. தெறாமை - வெயில் படாதவாறு, சுடாதவாறு; சிறகர் - சிறகு; கோலி - பரப்பி.
12. உழறல் - சுழன்றுகொண்டிருத்தல்.
13. சிறந்து - மிக்கு.
14. உரு வினை - அச்சம் தரும் போர்ச்செயல்; கரப்ப - மறைய.
15. விதுப்புறல் - விரைதல்; வேள் மகளிர் - வேளிர்குல மகளிர்.
16. குரூஉ - நிறம்; அருக்குதல் - அழித்தல்.
17. வசைவிட - பழி நீங்க; கடக்கும் - மாற்றார் படையினை வெல்லும்; வயங்குதல் - விளங்குதல்.
18. அகுதை - எயினனுக்கு நண்பன்; களைதந்தாங்கு - நீக்கினாற்போல.
19. சிறை - அணை.
20. நண்ணி - பொருந்தப்பெற்று.
21. நல்கினள் - அருள் செய்தாள்; ஓரி - கடையெழு வள்ளல்களுள் ஒருவன்.
22. பயம் - பயன்; கொல்லி - கொல்லிமலை.
23. கார் மலர் - கார் காலத்தில் மலரும் மலர்.
24. ஏர் நுண ஓதி - அழகிய மென்மையான கூந்தல்; மாஅயோள் - மாமை நிறம் கொண்டவள்.

தலைவன் கூற்று

அகநானூறு 262 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகளைப் புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தில் தலைவியுடன் அளவளாவி மீளும் தலைவன், புணர்ச்சி இன்பத்தால் பெரிதும் மகிழ்ந்து தன் நெஞ்சிற்குக் கூறியது.

முதைபடு பசுங்காட்டு அரில்பவர் மயக்கிப்
பகடுபல பூண்ட உழவுறு செஞ்செய்,
இடுமுறை நிரம்பி, ஆகுவினைக் கலித்து,
பாசிலை அமன்ற பயறு,ஆ புக்கென,
வாய்மொழித் தந்தையைக் கண்களைந்து, அருளாது,
ஊர்முது கோசர் நவைத்த சிறுமையின்,
கலத்தும் உண்ணாள், வாலிதும் உடாஅள்,
சினத்திற் கொண்ட படிவம் மாறாள்,
மறம்கெழு தானைக் கொற்றக் குறும்பியன்,
செருஇயல் நல்மான் திதியற்கு உரைத்து,அவர்
இன்உயிர் செகுப்பக் கண்டுசினம் மாறிய
அன்னி மிஞிலி போல,மெய்ம் மலிந்து,
ஆனா உவகையேம் ஆயினெம் பூமலிந்து
அருவி ஆர்க்கும் அயம்திகழ் சிலம்பின்
நுண்பல் துவலை புதல்மிசை நனைக்கும்
வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன்
கொண்டல் மாமலை நாறி,
அம்தீம் கிளவி வந்த மாறே.

தெளிவுரை

முன்னாளில் பழமை வாய்ந்த ஊரில் (அழுந்தூரில்) கோசர் களுக்குச் சொந்தமான புன்செய் நிலங்கள் இருந்தன. பசுமை நிறைந்த பழமையான அக்காட்டிலே பின்னிக் கிடந்த செடி

கொடிகள், எருதுகள் பல பூட்டிய ஏர்களைக்கொண்டு உழுது அழிக்கப்பட்டன. செப்பம் செய்யப்பட்ட இந்நிலத்திலே, உரம் முதலியவற்றை இட்டுக் களை எடுத்து, நீர் பாய்ச்சப்பட்டது. அதனால், நன்கு தழைத்து வளர்ந்த பசுமையான இலைகள் நிறைந்த பயிற்றங்கொல்லையில் பசு ஒன்று மேய்ந்தது. அப் பசு 'தம் பசுதான்' என்னும் உண்மையை ஒப்புக்கொண்டார், அன்னிமிஞிலிக்குத் தந்தையான முதியவர். கோசர்களோ இரக்கம் சிறிதுமின்றி அம்முதியவரின் கண்களைப் பிடுங்கித் துன்புறுத்தினர். இக்கொடுமையினை அன்னிமிஞிலி அறிந்தாள். அன்றுமுதல், 'கலத்தில் உண்பதில்லை; தூய ஆடை அணிவ தில்லை' என விரதம் பூண்டாள்; அக்கோசர்களை எவ்வா றேனும் பழி வாங்க உறுதி பூண்டாள்.

குறும்பியர் இனத்தைச் சேர்ந்த, போர்த்திறம் வாய்ந்த குதிரைப் படைகளையுடைய திதியன் என்னும் குறுநில மன்னனிடம் அன்னிமிஞிலி இதுபற்றிக் கூறிட, அவன் கோசர்களைக் கொன்றழித்தான்; அதுகண்டு அன்னிமிஞிலி சினம் ஒழிந்து, மனம் மகிழ்ந்தாள்.

வள்ளல் பேகன், வண்டுகள் வீழும் கள்ளினையும் வள்ளல் தன்மையால் எய்தும் மகிழ்ச்சியையும் கொண்டவன். அவனுடைய மலைச்சாரலில் விழும் அருவிநீரில் பூக்கள் மிதந்து வரும். அந்நீரின் நுண்ணிய துளிகள் மலையின்மீதுள்ள புதர்களையெல்லாம் நனைக்கும். அதனால், மேகம் தவழும் பேகனின் பெரிய மலை மணங்கமழும். அதுபோல, அழகிய இனிய சொல்லினைக் கொண்ட நம் தலைவியும் நறுமணம் கமழ வந்து நம்மைக் கூடினாள். நாமும் அன்னிமிஞிலி போல உடல் பூரிக்கப்பெற்று அளவற்ற மகிழ்ச்சி கொண்டோம்.

கருத்து

'நெஞ்சே! கோசர்களைத் திதியன் கொன்றதால் சினம் மாறி மகிழ்ச்சி கொண்ட அன்னிமிஞிலி போல, தலைவி தந்த இன்பத்தை நினைந்து நாமும் உடல் பூரிக்க உவகையுற்றோம்.'

விளக்கம்

முதுகோசர் என்பாருடைய பயிற்றங்கொல்லையில் பசு மேய்ந்தது; 'அது எம் பசு' என்னும் உண்மையை உரைத்தார், அன்னிமிஞிலியைப் பெற்ற தந்தை. உண்மை உரைத்ததைக் கேட்டு மகிழ வேண்டிய கோசர்கள், அருளின்றி அவர் கண்களைப் பிடுங்கிக் கொடுமைப்படுத்தினர். அன்னிமிஞிலி அதனைப் பொறுக்கலாற்றாது, "கோசர்களைக் கொல்லாமல் நான் கலத்திலும் உண்ணேன், தூய ஆடைகளையும் அணியேன்!" என்று வஞ்சினம் கூறி உறுதி பூண்டாள். அவள் திதியன் என்பானிடம் கோசர்களின் கொடுமையை உரைத்து, அவர்களைக் கொல்லச் செய்து சினம் மாறி உவகை எய்தினாள்.

சொற்பொருள்

1. முதை படு - பழமைப்பட்ட; அரில்பவர் - பின்னிக் கிடக்கும் கொடிகள்; மயக்கி - உழக்கி.
2. பகடு - எருது; உழவுறு - உழவு செய்யப்பெற்ற; செஞ்செய் - சிவந்த புன்செய் நிலம்.
3. இடுமுறை - இடுவனவற்றை முறையே இட்டு; ஆகுவினை - பயறு விளைதற்குச் செய்ய வேண்டிய செயல்கள்; கலித்து - தழைத்து.
4. பாசிலை - பசிய இலை; அமன்ற - நிறைந்த; ஆ - பசு; புக்கென - புகுந்து மேய்ந்த.
5. வாய்மொழித் தந்தை - உண்மையை உரைத்த தன் தந்தையை; களைந்து - பிடுங்கியெடுத்து.
6. முதுகோசர் - ஓர் இனத்தார்; நவைத்த - துன்புறுத்திய.
7. கலம் - உண்கலம்; வாலிது - தூயது; உடாஅள் - உடுத்தாள்.
8. படிவம் - உருவம்.
9. மறம் - வீரம்; தானை - சேனை; கொற்றம் - வெற்றி; குறும்பியன் - குறும்பியர் இனத்தவன்.
10. செருஇயல் - போர்த்திறம் வாய்ந்த; நல்மான் - நல்ல குதிரைப் (படையினையுடைய); திதியன் - குறுநில மன்னர்களுள் ஒருவன்; அவர் - அக்கோசர்.
11. செகுப்ப - கொன்றழிக்க.
12. மெய்ம்மலிந்து - உடல் பூரிக்கப்பெற்று.
13. ஆனா - அமையாத; ஆயினெம் - ஆனோம்.
14. ஆர்க்கும் - ஒலிக்கும்; அயம் - சுனை.

15. துவலை - துளிகள்.
16. வண்டுபடு - வண்டு பொருந்தும்; நறவு - தேன்; வண்மகிழ் - கொடையால் எய்தும் மகிழ்ச்சி; பேகன் - பழநி மலையை ஆண்ட வள்ளல்.
17. கொண்டல் - மேகம்; நாறி - மணந்து.
18. அம்தீம் கிளவி - அழகிய இனிய பேச்சு; வந்தமாறே - வந்து புணர்ந்தமையால்.

தலைவன் கூற்று

அகநானூறு 280 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தில் தலைவியோடு கூடியிருந்து மீளும் தலைவன், 'இத்தலைவி பெரும் பொருளும் அருங்கலனும் கொடுத்தாலும் கிடைத்தற்கு அரியவள்' என்று தன் நெஞ்சிற்குக் கூறியது.

பொன்அடர்ந் தன்ன, ஒள்இணர்ச் செருந்திப்
பல்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையள்,
திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி
அசையினள் இருந்த ஆய்தொடிக் குறுமகள்
நலம்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்,
பெறல்அருங் குரையள் ஆயின், அறம்தெரிந்து,
நாம்உறை தேஎம் மரூஉப்பெயர்ந்து, அவனொடு
இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழந்தும்,
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்,
படுத்தனம், பணிந்தனம், அடுத்தனம், இருப்பின்,
தருகுவன் கொல்லோ தானே – விரிதிரைக்
கண்திரள் முத்தம் கொண்டு, ஞாங்கர்த்
தேன்இமிர் அகன்கரைப் பகுக்கும்
கானல்அம் பெருந்துறைப் பரதவன் நமக்கே.

தெளிவுரை

"நெஞ்சே! நம் தலைவி பொன்னை நெருக்கமாய் வைத்தாற் போன்ற ஒளி பொருந்திய செருந்தி மலர்மாலையை அழகுறச் சூடியுள்ளவள்; மணல் அடர்ந்த கடற்கரையிலுள்ள நண்டுகளை ஓட்டி விளையாடி அதனால் இளைப்பாறி இருப்பவள்; ஆய்ந் தெடுத்த வளையல்களை அணிந்துள்ள இளமகள்; நலம் நிறைந்த சிறந்த பொருள்களையெல்லாம் கலம் நிறையக் கொடுத்தாலும் இவள் பெறுதற்கு அரியவள்.

"இவள் தந்தையோ, பரந்து விரிந்த கடலிலுள்ள திரண்ட முத்துகளை வாரிக்கொண்டு வந்து, அவற்றை வண்டுகள் ஒலிக்கும் அகன்ற கரையிலுள்ள பலருக்கும் பகுத்துக் கொடுக்கும் பண்பினன்; சோலை சூழ்ந்துள்ள பெருந்துறையைக் கொண் டிருப்பவன்.

"நாம் நம் ஊரைவிட்டு இக்கடற்கரைக்கு வந்து, அவனோடு கூடி, உப்பங்கழிகளை அடுத்துள்ள உப்பளத்திலுள்ள உப்பினை விற்றுத் திரிந்தும், ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்றும், அவன் மனமறிந்து நடந்தும், பணிவு காட்டியும், சார்ந்தும் இருந்தால், அறத்தினை நினைந்து, நாம் விரும்பும் தலைவியை ஒருவேளை நமக்கு மணஞ்செய்து தருவானா?" என்று தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகிறான்.

கருத்து

'நெஞ்சே! பெரும்பொருள் தரினும் தலைவி கிடைத்தற்கரியவள்.'

விளக்கம்

"நெஞ்சே! சிறந்த பொருளையும் அணிகலன்களையும் பரிசமாய் நிறையக் கொடுப்பினும் தலைவி நாம் பெறுதற் கரியவள். ஆனால், நாம் நம் ஊரிலிருந்து வந்து, அவள் தந்தையாகிய பரதவனோடு உப்பினை விற்று உடன் திரிந்தும், மீன் பிடிக்கச் சென்றும், அவன் வசமாகிப் பணிந்தும் சார்ந்தும் இருந்தால், அறம் தெரிந்து, நாம் விரும்பும் தலைவியை நமக்குத் தருவானா?" எனத் தலைவன் நெஞ்சிற்குச் சொல்கிறான்.

சொற்பொருள்

1. அடர்ந்தன்ன - நெருங்கினாற்போல; செருந்தி - ஒருவகைப் பூ.
2. நலம் பெறு - அழகு பொருந்திய; கோதையள் - மாலையை அணிந்தவள்.
3. திணிமணல் - மணல் அடர்ந்த; அலவன் - நண்டு.
4. அசையினள் - இளைப்பாறி இருப்பவள்.
5. விழுப்பொருள் - சிறந்த பொருள்.
6. பெறல் அருங்குரையள் - பெறுதற்கு அரியவள்.
7. உறை - வாழும்; தேளம் - ஊர்; மரூஉப் பெயர்ந்து - தங்கியிருப்பதை விட்டு நீங்கி; அவனொடு - (தலைவியைப் பெற்ற) தந்தையோடு.
8. சேர்ப்பு - உப்பளம்; உப்புடன் உழந்தும் - உப்பினை விற்றுத் திரிந்தும்.
9. பெருநீர்க் குட்டம் - மிக்க நீரினைக் கொண்ட கடல்; புணை - தெப்பம், படகு.
10. படுத்தனம் - (அவன்) வயமாகியும்; அடுத்தனம் - சார்ந்தும்.
12. கண்திரள் - திரண்ட வடிவினைக் கொண்ட; முத்தம் - முத்து; ஞாங்கர் - அங்கே, இடம்.
13. தேன் - தேனீக்கள்; பகுக்கும் - பிரித்துக் கொடுக்கும்.

தலைவன் கூற்று

அகநானூறு 152 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் வந்து, தன் காதலியைத் தழுவி மகிழ்ந்து, பிரிந்து செல்லும் தலைவன் அவள் தோள் வனப்பையும் கூந்தல் வனப்பையும் நினைந்து தன் பிரிவாற்றாமையைத் தன் நெஞ்சுக்குக் கூறியது.

நெஞ்சு நடுங்கு அரும்படர் தீர வந்து,
குன்றுழை நண்ணிய சீறூர் ஆங்கண்
செலீஇய பெயர்வோள் வணர்சுரி ஐம்பால் –

நுண்கோல் அகவுநர்ப் புரந்த பேர்இசை,
சினம்கெழு தானை, தித்தன் வெளியன்,
இலங்குநீர்ப் பரப்பில் கானல்அம் பெருந்துறை,
தனம்தரு நன்கலம் சிதையத் தாக்கும்
சிறுவெள் இறவின் குப்பை அன்ன,
உறுபகை தரூஉம் மொய்ம்முசு பிண்டன்
முனைமுரண் உடையக் கடந்த வென்வேல்,
இசைநல் ஈகைக் களிறுவீசு வண்மகிழ்,
பாரத்துத் தலைவன், ஆர நன்னன்;
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பில்
களிமயிற் கலாவத் தன்ன; தோளே –
வல்வில் இளையர் பெருமகன் நள்ளி
சோலை அடுக்கத்துச் சுரும்புஉண விரிந்த
கடவுள் காந்த ளுள்ளும், பலஉடன்
இறும்பூது கருலிய ஆய்மலர் நாறி,
வல்லினும், வல்லார் ஆயினும், சென்றோர்க்குச்
சால்அவிழ் நெடுங்குழி நிறைய வீசும்,
மாஅல் யானை ஆஅய் கானத்துத்
தலையாற்று நிலைஇய சேய்உயர் பிறங்கல்
வேய்அமைக் கண்இடை புரைஇ,
சேய ஆயினும், நடுங்குதுயர் தருமே.

தெளிவுரை

'தித்தன் வெளியன்' என்னும் குறுநில மன்னன் இசைக் கோலினை ஏந்திய பாணரைப் பாதுகாத்துப் பெரும்புகழ் ஈட்டியவன்; சினமிக்க படையைக் கொண்டவன். அவன் 'கானலம் பெருந்துறை' என்னும் துறைமுகத்திற்கு உரியவன்.

இத்துறைமுகத்தில் பொன்னைக் கொண்டுவந்து சேர்க்கும் மரக்கலங்கள் அழியுமாறு அவன் பகைவனாகிய வலிமை மிக்க பிண்டன் அம்மரக்கலங்களைச் சூழ்ந்து பெரும்படையை நிறுத்தினான். அப்படை, அம்மரக்கலங்களைச் சூழ்ந்து மோதும் இறால் மீன்கள்போல இருந்தது. தித்தனின் பெரும் படையை எதிர்த்து வெற்றிவேல் ஏந்திய நன்னன் சிதறடித்தனன்.

அந்நன்னன் கொடையால் புகழ் பெற்றவன்; இரப்போர்க்கு யானைகளைக் கொடுத்து மகிழும் வள்ளல் தன்மை வாய்ந்தவன். முத்தாரம் பூண்டுள்ள அவன், 'பாரம்' என்னும் ஊரினுக்குத் தலைவன்.

அந்நன்னனின் 'ஏழில்' என்னும் நெடிய மலைச்சாரலில் உள்ள 'பாழி' என்னும் குன்றில் மகிழ்ந்தாடும் மயிலின் தோகையினைப் போன்றுள்ளது, தலைவியின் வளைந்து சுருண்ட கூந்தல்.

வலிய வில்வீரர் தலைவன், நள்ளி. அவன் மலைச்சாரலில் வண்டுகள் உண்ணுதற்கும், கடவுளுக்குச் சூட்டுதற்கு உரியதுமான காந்தள் மலர் மலர்ந்துள்ளது. அக்காந்தள் மலரோடு மணமிக்க வேறு பல மலர்களும் ஒருசேரக் கமழ்வதுமானது, அவள் தோள்.

கல்வியில் வல்ல அறிஞரா அல்லரா என்று கருதாமல், இரந்தோர் கலம் நிறைய மிடாவில் உள்ள சோற்றினை அளிப்பவன், 'ஆஅய்'. அவன் பெருமைமிக்க யானைகளைக் கொண்டவன். அவனுக்குரிய 'தலையாறு' என்னும் ஊரிலுள்ள மலையில் வளரும் மூங்கிலின் கணுக்களுக்கு இடையேயுள்ள பகுதிபோலத் திரண்டு விளங்குகின்றது, தலைவியின் தோள்.

இத்தகைய தலைவி, என் நெஞ்சம் நடுங்குதற்குக் காரணமான அரிய துன்பம் தீர, இங்கு வந்து என்னைக் கூடி, குன்றிடத்தே பொருந்தியுள்ள தன் சிறிய ஊருக்கு மீள்கிறாள்.

அவள் தொலைவில் சென்றுவிட்டாள்; ஆயினும், அவள் கூந்தலும் தோள்களும் நாம் வருந்துமாறு துயர் செய்கின்றன.

கருத்து

'நெஞ்சே! என்னைத் தழுவிவிட்டுச் செல்லும் தலைவியின் கூந்தலும் தோள்களும் எனக்குத் துன்பம் தருகின்றன.'

விளக்கம்

தலைவியின் கூந்தல், நன்னனின் ஏழில் மலைச்சாரலில் களித்தாடும் மயிலின் தோகை போன்றது; தோளோ, ஆஅய் என்னும் வள்ளலின் மலையில் வளரும் மூங்கிலின் கணுக்களுக்கிடையேயுள்ள பகுதி போன்ற வனப்புடையது; அத்தோள், நள்ளி

என்பானுக்குரிய சோலை மிக்க பக்கமலையில் பூத்துள்ள காந்தளும் மற்றும் அழகிய மலர் பலவும் ஒன்றுசேர்ந்து கமழ்வது போன்ற மணம் கொண்டது. நம்மைப் பிரிந்து அவள் தொலைவில் சென்றுவிட்டாளாயினும் அவள் கூந்தலும் தோள்களும் நாம் நடுங்கும்படியான துன்பத்தைத் தருகின்றன.

சொற்பொருள்

1. அரும்படர் - மிகுந்த துன்பம்.
2. குன்றுழை - குன்றினிடத்தே; நண்ணிய - பொருந்திய.
3. செலீஇய - செல்ல; பெயர்வோள் - மீள்வோள்; வணர்சுரி - வளைந்து சுருண்ட; ஐம்பால் - ஐந்தாய் வகுக்கப்பட்டுள்ள அழகிய கூந்தல்.
4. நுண்கோல் - நுண்ணிய கோலைக் கொண்ட; அகவுநர் - பாணர்; புரந்த - பாதுகாத்த; பேர்இசை - பெரிய புகழ்.
5. தித்தன் வெளியன் - குறுநில மன்னருள் ஒருவன்.
6. கானலம் பெருந்துறை - தித்தன் வெளியனின் துறைமுகம்.
7. தனம் தரும் நன்கலம் - பொன்னைக் கொண்டுவரும் நல்ல மரக்கலங்கள்.
8. சிறு வெள் இறவின் - சிறிய வெண்மையான இறால்மீன்; குப்பை - தொகுதி.
9. மொய்ம் மூசு பிண்டன் - மிக்க பகையைத் தரும் வலிமை மிக்க பிண்டன் என்பவன்.
10. முனை முரண் - போர் செய்யும் மாறுபாடு; உடைய - சிதைய; கடந்த - வென்ற.
11. இசைநல் - புகழ் மேவிய; ஈகை - கொடையாய்; களிறுவீசு - களிறுகளை வழங்கும்.
12. பாரத்து - பாரம் என்னும் ஊருக்கு; ஆர - ஆரம் பூண்ட; நன்னன் - குறுநில மன்னருள் ஒருவன்.
13. ஏழில் - நன்னனுடைய மலை; பாழி - பாழி என்னும் பக்க மலை.
14. கலாவம் - தோகை; தோளே - (தலைவியின்) தோளோ.
15. நள்ளி - மன்னருள் ஒருவன்.
16. சுரும்பு - வண்டு; விரிந்த - மலர்ந்த.
17. கடவுள் காந்தள் - கடவுளுக்குப் படைக்கப்படும் காந்தள் மலர்; பல உடன் - இன்னும் பல அழகிய மலர்.
18. இறும்பூது - வியப்பு; கனலிய - நெருங்கிய; நாறி - மணம் கமழ்ந்து.
19. வல்லினும் வல்லார் ஆயினும் - கல்வியில் வல்ல அறிஞரோ, அல்லரோ எனினும்.

20. சால் அவிழ் - மிடாச்சோறு; (அவிழ் - சோறு); நெடுங்குழி - கலம்; வீசும் - அளிக்கும்.
21. மாஅல் - பெரிய; ஆஅய் - வள்ளல்களுள் ஒருவன்; தலையாறு - நள்ளிக்குரிய ஓர் இடம்; நிலைஇய - நிலைபெற்றுள்ள; பிறங்கல் - மலை.
22. வேய் அமை - மூங்கிலில் அமைந்துள்ள; கண்இடை - கணுக்களுக் கிடையேயுள்ள இடம்.
23. சேய ஆயினும் - தொலைவில் உள்ளதாயினும்.

தலைவி கூற்று

அகநானூறு 298 **மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறிக்கண் தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்தே தலைவனோடு மகிழ்ந்திருந்த தலைவி, தனது பிரிவாற்றாமையும், தனது துன்பத்தில் பங்கு கொண்டு தனக்கு உறுதுணை யாய் இருந்த தோழியின் மாண்பும் தோன்றுமாறு தலைவனிடம் கூறியது.

பயம்கெழு திருவிற் பல்கதிர் ஞாயிறு
வயங்குதொழில் தரீஇயர், வலன்ஏர்பு விளங்கி,
மல்குகடல் தோன்றி யாங்கு, மல்குபட
மணிமருள் மாலை மலர்ந்த வேங்கை
ஒண்தளிர் அவிர்வரும் ஒலிகெழு பெருஞ்சினைத்
தண்துளி அசைவளி தைவரும் நாட!
கொன்றுசினம் தணியாது, வென்றுமுரண் சாம்பாது,
இரும்பிடித் தொழுதியின் இனம்தலை மயங்காது,
பெரும்பெயற் கடாஅம் செருக்கி, வளமலை
இருங்களிறு இயல்வரும் பெருங்காட்டு இயவின்,
ஆர்இருள் துமிய வெள்வேல் ஏந்தி,
தாழ்பூங் கோதை ஊதுவண்டு இரீஇ,
மென்பிணி அவிழ்ந்த அரைநாள் இரவு,இவண்
நீவந் ததனினும், இனிது ஆகின்றே –

தூவல் கள்ளின் துனைதேர், எந்தை
கடியுடை வியல்நகர் ஓம்பினள் உறையும்
யாய்அறி வுறுதல் அஞ்சிப் பானாள்,
கரவல் நெஞ்சமொடு காமம் செப்பேன்,
யான்நின் கொடுமை கூற, நினைபுஆங்கு,
இனையல்– வாழி, தோழி!நம் துறந்தவர்–
நீடலர் ஆகி வருவர், வல்லென;
கங்குல் உயவுத்துணை ஆகிய
துஞ்சாது உறைவி இவள்உவந்் ததுவே.

தெளிவுரை

"தலைவ! பல கதிர்களைக் கொண்ட ஞாயிறு உலகிற்குப் பல்வேறு வளங்களைத் தருகிறது; விளக்குமுறும் தொழில்கள் பலவற்றையும் உலகுத்திற்குத் தருவதற்காக நீல நிறக் கடலில் காலையில் வலமாய் எழுந்து தோன்றுகிறது. இக்காலைச் சூரியனின் காட்சிபோல நீலமணி போன்ற மாலைக்காலத்தில் பூத்துக் குலுங்கும் வேங்கை மரங்கள் காட்சி தருகின்றன. அம் மரத்தின் பெரிய கிளைகளில் தழைத்துள்ள ஒளி பொருந்திய தளிர்களில் தூங்கும் பனித்துளிகளை ஆடி அசைந்து வரும் காற்று மெல்லத் தடவி அவற்றை உதிர்க்கிறது. அத்தகைய மலை நாட்டுக்குத் தலைவனே!

"காட்டுவழியில் ஓர் ஆண்யானை மதங்கொண்டது. அது வழக்கம்போலத் தன் பகைவிலங்குகளைக் கொல்லாமலும், அவற்றை வென்று விரட்டிப் பகையைப் போக்கிக்கொள்ளா மலும், பெண்யானைக் கூட்டத்துடன் சேராமலும் மதத்தால் செருக்குற்றுத் திரியும். (இந்நிலையில் அது கொடுமை வாய்ந்ததாய் இருக்கும்.) அதற்கும் அஞ்சாமல் கொடிய வழியில், வேலொன்றை மட்டும் ஏந்தி, உன் மாலையில் மொய்க்கும் வண்டுகளை விரட்டிக்கொண்டு நடுநாளாகிய இரவுக்காலத்தில் நீ இங்கு வருகின்றாய்.

"மழை போன்று பொழியும் கள்ளையும், விரைந்து செல்லும் தேரையும் கொண்டவன், எம் தந்தை; எம் அகன்ற வீடோ மிகுந்த காவல் மிக்கது; அவ்வீட்டிலிருந்து என்னை எங்கும்

வெளிச் செல்லாமல் செய்தாள், என் அன்னை; அத்துடன் எனக்குப் பாதுகாவலாகவும் அருகே அமர்ந்தாள். அவள் நம் களவுப் புணர்ச்சியை அறிந்துவிடக்கூடாது என்று அஞ்சி என் காமத்தினை அவளிடம் கூறாது மறைத்தேன்.

"நீ வாராத கொடுமையினைத் தோழியிடம் மெதுவாய்ச் சொன்னேன். என் கருத்தினைக் குறிப்பாய் அறிந்த அவள், 'தலைவி! நீ வாழி! வருந்தாதே! நம்மை விட்டுப் பிரிந்து சென்ற தலைவன் காலந்தாழ்த்தாது விரைவில் வருவான்' என்று கூறி, இரவு முழுவதும் எனக்கு உற்ற துணையாய் இருந்து, கண் துயிலாது, என்னுடன் தங்கியிருந்தது, இரவில் நீ வந்த வருகை யினும் எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது" என்று கூறினாள், தலைவி.

கருத்து

'நாடா பெருங்காட்டுவழியில் வேல் ஏந்தி நீ நடுநாள் இரவு இங்கு வந்ததைக்காட்டிலும், என் தோழி, 'தலைவியே வருந்தாதே! நம் தலைவர் விரைவில் வருவார்' எனக் கூறி, இரவெல்லாம் கண் விழித்து, உடனிருந்து தேறுதல் சொன்னது எனக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது' என்கிறாள், தலைவி.

உவமை

காலையில் நீல நிறக் கடலில் செஞ்ஞாயிறு தோன்றுவது போன்று நீலமணிபோலும் இருளைக் கொண்ட மாலையில் வேங்கைமரம் பொன்னிறப் பூக்களைப் பூக்கிறது. மாலைப் பொழுதின் இருளிற்கு நீல நிறம் கொண்ட கடலும், தளிரோடும் பொன் நிறம் கொண்ட மலரோடும் சிவந்து விளங்கும் வேங்கை மரம் கடலில் தோன்றும் செஞ்ஞாயிற்றுக்கும் உவமைகளாயின.

சொற்பொருள்

1. பயம் - பயன்; கெழு - பொருந்திய.
2- வயங்கு தொழில் தரீஇயர் - விளங்கும் தொழில்களை உலகத்திற்குத் தருவதற்காக; வலன் ஏர்பு - வலமாய் எழுந்து.
3. மல்கு கடல் - பெரிய (நீர் நிறைந்த) கடல்.
4. மணிமருள் - நீலமணி போலும்.
5. அவிர் வரும் - தழைத்து விளங்கும்.

6. தண்துளி - குளிர்ந்த நீர்த்துளி; அசைவளி - அசைகின்ற காற்று; தைவரும் - மெல்லத் தடவும்.
7. முரண் - மாறுபாடு; சாம்பாது - மெலிவிக்காது, போக்காது.
8. பிடி - பெண்யானை; தொழுதி - கூட்டம்; மயங்காது - கலவாது.
9. கடாஅம் - மதம்; செருக்கி - செருக்குற்று.
10. இயவு - வழி.
11. துமிய - கெட.
12. இரீஇ - ஓட்டி, விரட்டி.
13. மென்பிணி அவிழ்ந்த - மெல்லிய அரும்புகள் மலர்ந்த.
15. தூவல் - மழை: துனை - விரைவு; எந்தை - எம் தந்தை.
16. கடி - காவல்; வியல் நகர் - அகன்ற வீடு; ஓம்பி - பாதுகாத்து.
17. பானாள் - நள்ளிரவு.
18. கரவல் - மறைத்தல்.
19. ஆங்கு நினைபு - ஆங்கு என் கருத்தினை உணர்ந்து.
20. இனையல் - வருந்தாதே!; துறந்தவர் - பிரிந்தவர்.
21. நீடலர் - காலம் தாழ்த்தாது; வல்லென - விரைந்து.
22. கங்குல் - இரவு; உயவுத்துணை - பேச்சுத்துணை.
23. துஞ்சாது - தூங்காது; உறைவி - (என்னுடன்) தங்கியிருந்த தோழி; உவந்தது - மகிழ்ந்தது.

தலைவி கூற்று

கைந்நிலை 10 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள், இரவுக்குறி ஏதமுடைத்து என்று அஞ்சித் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்துத் தலைவன் வர விரும்பியபோது, அது துன்பம் நிறைந்தது எனத் தலைவி, தோழியிடம் கூறுதல்.

பொன்இணர் வேங்கைப் புனம்சூழ் மலைநாடன்
மின்னின் அனையவேல் ஏந்தி இரவினுள்
இன்னே வரும்கண்டாய் தோழி இடையாமத்து
என்னை இமைபொரு மாறு?

தெளிவுரை

"தோழியே! பொன் போன்ற மலர்க்கொத்துகளைக் கொண்ட வேங்கை மரங்கள் நிறைந்திருக்கும் காடுகள் சூழ்ந்த மலை நாட்டுக்குத் தலைவன், நடு இரவில் மின்னல் போன்று ஒளி வீசும் வேலினை ஏந்தி இப்பொழுது வருவான். எனவே, என் கண் இமைகள் எவ்வாறு பொருந்தி உறங்கும்?" எனத் தலைவி தோழியிடம் இரவுக்குறி ஏதமுடைத்து என்று கூறுகிறாள்.

கருத்து

'இரவில் கொடுமையான வழியில் தலைவன் வருவதை அறிந்து அஞ்சுகிறேன்' எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. பொன் இணர் - பொன்னிறமுள்ள பூங்கொத்து; வேங்கை - வேங்கை மரம்; புனம்சூழ் - வயலைச் சூழ்ந்துள்ள.
2. மின்னின் அனைய - மின்னல் போன்ற.
3. இன்னே - இங்கே.
4. என்னை - எவ்வாறு?; இமைபொரும் - கண்ணிமைகள் பொருந்தும்.

தோழி கூற்று

நற்றிணை 336 **கயமனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

ஆறு பார்த்துற்றுச் சொல்லியது. (ஆறு - வழி) (இரவில் கொடுந்துன்பம் விளையக் கூடிய காட்டுவழியில் தலைவன் வருவதை நினைந்து நினைந்து அஞ்சி நடுங்கிக் கூறுவது).

கூற்று விளக்கம்

தலைவன் துன்பம் நிறைந்த வழியில் இரவில் வருவதை அறிந்த தலைவி அஞ்சிக் கலங்குவது கண்ட தோழி, தலைவனை இனி இரவில் வரவேண்டா என்று சொல்லியது.

பிணர்ச்சுவல் பன்றி தோல்முலைப் பிணவொடு
கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்,
கல்அதர் அரும்புழை அல்கி, கானவன்,
வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை,
புனைஇருங் கதுப்பின் மனையோள் கெண்டி,
குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட!
உரவுச்சின வேழம் உறுபுலி பார்க்கும்
இரவின் அஞ்சாய்; அஞ்சுவல் – அரவின்
ஈர்அளைப் புற்றம், கார்என முற்றி,
இரைதேர் எண்குஇனம் அகழும்
வரைசேர் சிறுநெறி வாரா தீமே!

தெளிவுரை

“சொரசொரப்பான பிடரியைக் கொண்ட ஆண்பன்றி, தோலாய் வற்றிவிட்ட தன் பெண்பன்றியுடன் சென்று திரண்ட அடிப்பகுதியைக் கொண்ட தினையின் கதிரை மிகுந்த அளவில் உண்டது. அதனையறிந்த கானவன், கல் நெருங்கிய அரிய வழியில் சென்று தங்கிப் பதுங்கி, தன் வில்லினால் அம்பெய்து, வெண்மையான தந்தத்தைக் கொண்ட அந்த ஆண்பன்றியைக் கொன்றான். தான் கொன்ற அப்பன்றியை அழகிய கருங் கூந்தலைக் கொண்ட தன் மனைவியிடம் தந்தான். அவள் அதனைத் துண்டுதுண்டாய் வெட்டிச் சுற்றத்தார்க்கும் பகிர்ந்து கொடுத்தாள். இத்தகைய காட்சிகள் கொண்ட காடுகள் அமைந்த நெடிய மலைக்குரிய தலைவனே! வலிமையும் சினமும் கொண்ட யானை, தன் வழியில் வருகின்ற புலியை எதிர்நோக்கிக் காத்திருக்கும் நள்ளிரவு நேரத்தில், எம்மைக் கருதி வருவதற்கு நீ அஞ்சவில்லை; ஆனால், நாங்கள் அஞ்சுகின்றோம். பாம்பு உறைவதும் ஈரமான துளையைக் கொண்டதுமான புற்றினை மேகம்போலச் சூழ்ந்து இரை தேடும் கரடியினம் தோண்டிப்

பெயர்க்கும் குறுகலான மலை வழியிலே நீ இனி இரவில் வாராதே" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ, துன்பம் நிறைந்த வழியில் இரவில் இனி நீ வாராதே!'

விளக்கம்

இரவு நேரத்தில் புலியைக் கொல்ல யானை எதிர்பார்த்துக் காத்திருக்கும். பாம்பு உறையும் புற்றைக் கரடிக்கூட்டம் அகழ்ந்து கொண்டிருக்கும். இத்தகைய துன்பங்கள் நிறைந்த குறுகிய வழியில் நீ வருவதை அறிந்து அஞ்சுகிறோம். ஆதலால், இனி வரவேண்டா என்கிறாள், தோழி. ஆனால், அவன் வாரா திருந்தாலோ தலைவியுடன் கூடும் கூட்டம் தடைப்படும்; ஆதலால், தலைவி பின்னும் வருந்துவாள். இத்துன்பங்களி லிருந்து விடுபட ஒரே வழி, திருமணம் செய்துகொள்வதே எனத் தலைவனிடம் தோழி குறிப்பாய்ப் புலப்படுத்தினாள்.

இறைச்சி

தினையைத் தின்ற பன்றியைக் கானவன் அம்பினால் கொன்று, அதனைக் கொண்டுவந்து மனைவியிடம் கொடுக்க, அவள் அதனைத் துண்டுகளாக்கிச் சுற்றத்தார்க்கும் பகிர்ந்து கொடுப்பாள் என்பது, தலைவன் தலைவியை மணந்து இல்லறம் நடத்துகையில் தலைவன் பொருளீட்டச் சென்று, கொண்டுவந்து தரும் பொருளைத் தலைவி சுற்றத்தார்க்கும் பகிர்ந்து கொடுத்து இல்லறம் நடத்துவாள் என்பதாம்.

சொற்பொருள்

1. பிணர் - சொரசொரப்பு; சுவல் - பிடரி; பிணவு - பெண்பன்றி.
2. கணைக்கால் - திரண்ட அடிப்பகுதி; ஏனல் - தினைக்கதிர்; கைம்மிக - மிகுந்த அளவில்.
3. அதர் - வழி; புழை - பொந்து; அல்கி - தங்கி.
4. வில்லின் - வில்லினால்; கோடு - கொம்பு; ஏற்றை - ஆண்பன்றி.
5. புனை - புனையப்பட்ட; இரு - கரிய; கதுப்பு - கூந்தல்; மனையோள் - மனைவி; கெண்டி - துண்டுதுண்டாய் வெட்டி.

6. குடிமுறை - சுற்றத்தார்; பகுக்கும் - பிரித்துக் கொடுக்கும்.
7. உரவு - வலிமை; வேழம் - ஆண்யானை; உறுபுலி - தன்முன் வரும் புலியை.
8. அஞ்சுவல் - அஞ்சுகிறோம்; அரவு - பாம்பு.
9. ஈர் - ஈரமான; அளை - துளை; புற்றம் - புற்று; கார் - மேகம்; முற்றி - சூழ்ந்து.
10. தேர் - தேடும்; எண்கு இனம் - கரடிக்கூட்டம்; அகழும் - பறிக்கும்.
11. வரை - மலை; சிறுநெறி - குறுகிய வழி; வாராதீமே - வர வேண்டா.

தோழி கூற்று

தினைமொழி ஐம்பது 1 **கண்ணஞ்சேந்தனார்**

தினை : குறிஞ்சி

கூற்று

அஞ்சி அச்சுறுத்துவது.

கூற்று விளக்கம்

வழியின் அச்சம் கூறி, 'இரவில் வரல்வேண்டா' எனத் தலைவனிடம் தோழி சொல்லியது.

புகழ்மிகு சாந்(து)எறிந்து புல்எரி ஊட்டிப்
புகைகொடுக்கப் பெற்ற புலவோர் – துகள்பொழியும்
வானுயர் வெற்ப! இரவில் வரல்வேண்டா
யானை உடைய சுரம்.

தெளிவுரை

'மணத்தால் புகழ்பெற்ற சந்தன மரங்களை வெட்டி எறிந்து, அக்கட்டைகள்மீது எரியை மூட்டுதலால் வெளிப்படும் சந்தன மணப்புகையை நுகர்ந்த தேவர்கள், பூந்தாது போன்ற மழைத் துளிகளைச் சொரிவர். இவ்வாறான வானளாவிய மலை நாட்டிற்குத் தலைவனே! நீ கடந்து வரும் வழி, யானைகள் உலாவும் இடம். ஆதலால், இரவுக்காலத்தில் வரவேண்டா' எனத் தோழி கூறினாள்.

கருத்து

தலைவனிடம் வழியச்சம் கூறி, 'இரவில் வரல்வேண்டா' என்கிறாள், தோழி.

குறிப்பு

இதன் பயன், அவன் விரைவில் தலைவியை மணந்துகொள்ள வேண்டும் என்பதாம்.

சொற்பொருள்

1. சாந்து - சந்தன மரம்; எறிந்து - வெட்டி; புல் - அது பற்றும்படி; எரி ஊட்டி - நெருப்பு வைத்தலால்.
2. புகை - சந்தனப்புகையினை; கொடுக்க - வான் வழியே செலுத்த; பெற்ற - கிடைக்கப்பெற்ற; புலவோர் - தேவர்கள்; துகள் - மழைத் துளிகள்; பொழியும் - சொரியும்.
3. வெற்பன் - மலைநாட்டுத்தலைவன்.
4. சுரம் - வழி.

தோழி கூற்று

அகநானூறு 238 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் கூடி இருக்கும் பொழுதைவிடப் பிரிந்து இருக்கும் காலம் மிகுதியாயிற்று. இதனால் பிரிவை ஆற்றவியலாது தலைவி வருந்தினாள். அதனைக் கண்ட தோழி, ஒருநாள் இரவுக்குறியில் வந்து மீளும் தலைவனைத் தனியே கண்டு, அவனிடம் தலைவியைப் பிரியாதிருக்குமாறு கூறியது.

மான்றமை அறியா மரம்பயில் இறும்பின்,
ஈன்றஇளைப் பட்ட வயவுப்பிணப் பசித்தென,
மடமான் வல்சி தரீஇய, நடுநாள்,
இருள்முகைச் சிலம்பின், இரைவேட்டு எழுந்த
பனைமருள் எருத்தின் பல்வரி இரும்போத்து,

மடக்கண் ஆமான் மாதிரத்து அலற,
தடக்கோட்டு ஆமான் அண்ணல் ஏனறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி,
இருங்கல் வியல்அறை சிவப்ப ஈர்க்கும்
பெருங்கல் நாட, பிரிதி ஆயின்
மருந்தும் உடையையோ மற்றே– இரப்போர்க்கு
இழைஅணி நெடுந்தேர் களிறொடு என்றும்
மழைசுரந் தன்ன ஈகை, வண்மகிழ்க்
கழல்தொடித் தடக்கை, கலிமான், நள்ளி
நளிமுகை உடைந்த நறுங்கார் அடுக்கத்துப்
போந்தை முழுமுதல் நிலைஇய காந்தள்
மென்பிணி முகைஅவிழ்ந்து அலர்ந்த
தண்கமழ் புதுமலர் நாறும்நறு நுதற்கே.

தெளிவுரை

ஒன்றோடு ஒன்று பின்னியிருப்பதை அறிய இயலாதபடி மரங்கள் நெருங்கியுள்ள குறுங்காடு; அங்குக் குட்டியை ஈன்ற ஒரு பெண்புலி பலவற்றை உண்ணும் ஆசையுடன் பசியும் கொண்டது. அதன் பசியைத் தீர்ப்பதற்காக, இளைய மானுணவைக் கொண்டுவர நடுஇரவில், இருண்ட குகைகளைக் கொண்ட மலையில் பனந்துண்டு போன்ற பிடரியினையும் பல வரிகளையும் கொண்ட ஆண்புலி புறப்பட்டது. அப்புலி வளைந்த கொம்பினைக் கொண்ட தலைமை பொருந்திய ஒரு காட்டு எருதினை அடித்து, அது தனக்கு வலப்பக்கமாய் விழும்படி கொன்றது. அவ்வெருதின் அலறலால், தொலைவில் மேய்ந்து கொண்டிருந்த மடப்பம் பொருந்திய கண்ணினைக் கொண்ட பசு துன்பக்குரல் கொடுத்துக் கதறியது. புலி, தான் கொன்ற எருதினை, பெரிய மலையை அடுத்துள்ள பாறைகள் குருதியால் சிவக்கும்படி இழுத்துச் சென்றது. அத்தகைய காட்சிகளுக்கு இடனான நாட்டை உடையவனே! நீ இவளைப் பிரிந்தால் இவள் துன்பத்தால் மெலிவாள்.

நள்ளி என்னும் வள்ளல், தொடியணிந்த தோள்களையும் நீண்ட கைகளையும் கொண்டவன். செருக்குமிக்க குதிரைகளைப்

பெற்றிருந்த அவன், இரப்போர்க்குத் தேரும் யானையும் மேகத் தினைப் போல எப்போதும் வழங்கிக்கொண்டே இருப்பவன்.

அவன் மலைச்சாரலில், பனைமரத்திற்கு அருகில் மலர்ந் திருக்கும் புதிய காந்தள் மலர்போலும் மணம் கமழும் நெற்றியைக் கொண்ட தலைவி, நீ பிரிந்தால் மெலிவுற்று இறப்பாள். அவ்வாறு நடவாமல் காப்பதற்கு மருந்து வைத்திருக்கிறாயா? இல்லையெனில் இவளைப் பிரியாதே!

கருத்து

இரவுக்குறி வந்த தலைவனைப் பார்த்துத் தோழி, "பெரிய மலை நாட்டைக் கொண்டவனே! இவளைப் பிரிந்து செல்வாய் ஆயின் இவள் உயிர் வாழாள்; ஆதலால், இவளை இறவாமல் காப்பதற்கும், இறந்தால் எழுப்புவதற்கும் மருந்து உன்னிடமிருக்கிறதா? அஃது இருந்தால் பிரிந்து செல்க" என்று, தலைவியது ஆற்றாத்தன்மையை அறியக் கூறி, பிரியாதுறைய வழி காணுமாறு கூறினாள்.

குறிப்பு

பிரியாதுறைவதற்கு மணம் செய்துகொள்வது ஒன்றே வழி என்பது குறிப்பு.

புலி, பசியால் வருந்தினாலும், தான் வீழ்த்தும் விலங்கு தனக்கு வலப்பக்கம் விழுந்தால் மட்டுமே அஃது உண்ணும்; இடப்பக்கம் வீழ்ந்ததாயின் உண்ணாது சென்றுவிடும்.

சொற்பொருள்

1. மான்று - மயங்கிய, பின்னிய; இறும்பு - குறுங்காடு.
2. இளைப்படுதல் - சோர்வுறுதல்; வயவு - வேட்கை; பிண - பிணா - பெண்விலங்கு (பெண்புலி).
3. மடமான் - இளைய மான்; வல்சி - உணவு; தரீஇய - தருவதற்காக.
4. முகை - குகை; சிலம்பு - மலை.
5. பனைமருள் - பனந்துண்டினை ஒத்த; எருத்து - கழுத்து; போத்து - விலங்கின் ஆண் (ஆண்புலி).
6. ஆமான் - காட்டுப்பசு; மாதிரம் - திக்கு.
7. தட - வளைந்த; அண்ணல் - தலைமை, பெருமை.

8. நனந்தலை - அகன்ற இடம்; வலம்பட - வலப்பக்கம் விழும்படியாக; தொலைச்சி - கொன்று.
9. இருங்கல் - கரிய மலை; வியல்அறை - அகன்ற பாறை; ஈர்க்கும் - இழுத்துச் செல்லும்.
10. பிரிதி ஆயின் - பிரிந்து செல்வாயாயின்.
11. உடையையோ - உன்னிடம் உண்டா?
12. இழை அணி - அணிகலன் அணிந்த.
13. சுரந்தன்ன - பொழிந்தாற்போன்ற; வண்மகிழ் - மிக்க மகிழ்ச்சி.
14. கலி - செருக்கு; நள்ளி - வள்ளல்களுள் ஒருவன்.
15. நளிமுகை - செறிந்த அரும்பு; அடுக்கம் - பக்க மலை.
16. போந்தை - பனைமரம்; முழு முதல் - பெரிய அடிப்பக்கம்; நிலைஇய - நிலை பெற்றுள்ள.
17. பிணிமுகை அவிழ்ந்து - கட்டவிழ்ந்து; அலரும் - மலரும்.
18. தண்கமழ் - குளிர்ந்து மணம் வீசும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 185 **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் இரா வந்து ஒழுகாநின்ற காலத்து வேறுபட்ட தலைமகளை, 'வேறுபட்டாயால்' என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவில் வந்து தலைவியோடு அளவளாவிக்கொண்டிருக்குங் காலத்தில் தலைவன் வரும் வழித்துன்பத்திற்கு அஞ்சி, மேனி வேறுபட்ட தலைவியை நோக்கி, 'நீ இவ்வாறு வேறுபட்டது ஏன்?' என்று கேட்ட தோழியிடம் தலைவி கூறியது.

நுதல்பசப்பு இவர்ந்து திதலை வாடி
நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடிநெகிழ்ந்து
'இன்னள் ஆகுதல் நும்மின் ஆகும்'எனச்
சொல்லின் எவனாம் தோழி! பல்வரிப்
5 பாம்பு,பை அவிந்தது போலக் கூம்பிக்

கொண்டலின் தொலைந்த ஒண்செங் காந்தள்
கல்மிசைக் கவியும் நாடற்குஎன்
நல்மா மேனி அழிபடர் நிலையே!

தெளிவுரை

"சிவந்த காந்தள் மலர்கள் கீழ்க்காற்றால் உதிர்ந்து குவிந்து கற்பாறையின்மேல் கவிந்து கிடக்கும். அக்காட்சி, பல வரிகளைக் கொண்ட பாம்பு, படம் ஒடுங்கிக் கிடப்பதுபோலக் காணப்படும். இத்தகைய மலைநாட்டிற்குரிய தலைவன் இரவில் வருவதால் அவனுக்கு நேரவிருக்கும் துன்பத்தை எண்ணி என் மனம் மிக்க துன்பமுறுகிறது.

" 'அவள் நெற்றியில் பசலை நிறம் படர்ந்துவிட்டது; தேமல் தன் பொன் நிறத்தை இழந்துவிட்டது. நீண்ட மெல்லிய பருத்த தோள்கள் இளைத்துவிட்டன; உடம்பு இளைத்ததனால் கையில் அணிந்துள்ள வளையல்கள் தாமே கழன்று விழுகின்றன. உன்னால்தான் அவள் இத்தகைய நிலைக்கு ஆளானாள்' என்று நீ தலைவனிடம் சொன்னால் என்ன?" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

"தலைவன் இரவில் வந்தொழுகுவதால் நான் வேறுபட்டமையைத் தலைவனிடம் நீயே சொல்!" எனத் தலைவி தோழியிடம் கூறினாள். அதனால் தோழி, தலைவனுக்கு இரவுக்குறி மறுக்க நேர்கிறது.)

குறிப்பு

மேல்காற்றினால் வீழ்த்தப்பட்ட காந்தள், பாறையில் விழுந்து, அழகிழந்து காணப்படுதல், ஊரார் அலர் உரைப்பர் எனக் கருதி இல்லத்தில் மெலிந்து கிடக்கும் தலைவியைக் குறிக்கும்.

காந்தள் மலர், பாம்பின் பைபோலத் தோன்றி மருட்டுதல், இரவுக்குறியில் வரும் தலைவனுக்கு நேரும் மருட்சியைக் குறிக்கிறது.

'இரவுக்குறி வருதலை நீக்கி, வரைந்து மணங்கொள்ள ஒருப்படுக' எனத் தலைவனிடம் தோழி கூற வேண்டுமெனத் தலைவி தோழியிடம் குறிப்பால் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பசப்பு - பசலை; இவர்ந்து - பரந்து; திதலை - தேமல்; வாடி - ஒளி யிழந்து.
2. பணை - பெரிய; சாஅய் - மெலிந்து; தொடி - வளையல்.
3. இன்னள் - இத்தன்மையள்; நும்மின் ஆகும் - உம்மால் ஆகியது என.
4. சொல்லின் எவனாம்? - சொன்னால் என்ன?
5. பை - படம்; அவிந்தது - ஒடுங்கியது.
6. கொண்டல் - கீழ்க்காற்று; தொலைந்த - வீழ்த்தப்பட்ட.
7. கல் - பாறை; கவியும் - கவிந்து கிடக்கும்.
8. அழிபடர் - மிக்க துன்பம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 282 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி நேர்ந்த தோழி, தலைமகன் வந்து புணர்ந்து நீங்குழி அவனை எதிர்ப்பட்டுச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் தலைவியைக் கண்டு கூடி நீங்கும் தலைவனை எதிரே கண்டு தோழி கூறியது.

சாரல் புனத்த பெருங்குரல் சிறுதினைப்
பேரமர் மழைக்கண் கொடிச்சி கடியவும்,
சோலைச் சிறுகிளி உண்ணும் நாட!
ஆர்இருள் பெருகின; வாரல்
5 கோட்டுமா வழங்கும் காட்டக நெறியே.

தெளிவுரை

மலைச்சாரலில் உள்ள புனத்தில் பெரிய கதிர்களிலுள்ள தினையைக் கிளிகள் உண்ண வரும். பெரிதும் விருப்பத்தை விளைவிக்கும் குளிர்ச்சியான கண்களைக் கொண்ட கொடிச்சி

அக்கிளிகளை ஓட்டியபடியே இருப்பாள். ஆனால், அதுபற்றிக் கவலைப்படாத சோலைக்கிளிகள், மீண்டும் மீண்டும் வந்து தினைக்கதிரில் அமர்ந்து தினையை உண்டுகொண்டேயிருக்கும். அத்தகைய மலைநாட்டுக்குரியவனே! நீ வரும் காட்டுவழி இருள் மிக்கது; கொம்புகளைக் கொண்ட யானைகள் நடமாடும். ஆதலின், இரவில் வர வேண்டா.

கருத்து

'வரும் வழி கொடியது. ஆதலின், நீ இனி இரவில் எம்மைத் தேடி வருதல் வேண்டா.'

குறிப்பு

ஓட்ட ஓட்ட மீண்டும் வரும் கிளியைப்போல, வரவேண்டா என்று யாம் சொல்லச் சொல்ல நீயும் வந்துகொண்டேயிருக்கிறாய்.

சொற்பொருள்

1. சாரல் புனம் - மலைச்சாரலில் அமைந்துள்ள தினைப்புனம்; குரல் - கதிர்.
2. பேரமர் - பெரிதும் விருப்பம் தரும்; மழைக்கண் - குளிர்ந்த கண்; கொடிச்சி - குறமகள் (தலைவி); கடியவும் - ஓட்டவும்.
4. ஆர் இருள் - மிகுதியான இருள்; வாரல் - வாராதே.
5. கோட்டுமா - கொம்புகளைக் கொண்டுள்ள யானை; வழங்கும் - இயங்கும்; நெறி - வழி.

தோழி கூற்று

குறுந்தொகை 355 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி நொந்து கூறியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியைத் தலைவன் விரும்பித் தானே நடுயாமத்தில் வந்தனன். 'இந்த இருளில் எம் ஊருக்கு வழி தெரிந்து எப்படி வந்தாய்? இனி இவ்விதம் வாராதே' என்று தலைவனிடம் தோழி கூறியது.

பெயல்கண் மறைத்தலின், விசும்புகா ணலையே;
நீர்பரந்து ஒழுகலின் நிலம்கா ணலையே;
எல்லை சேறலின், இருள்பெரிது பட்டன்று;
பல்லோர் துஞ்சும் பானாள் கங்குல்
5 யாங்குவந் தனையோ? ஓங்கல் வெற்ப!
வேங்கை கமழும்எம் சிறுகுடி
யாங்குஅறிந் தனையோ? நோகோ யானே!

தெளிவுரை

மிசு உயரமான மலைகள் அமைந்த நாட்டுக்குரிய தலைவ! மழைக்காலிட்டு மிகுதியான மழை பெய்வதால் வானத்தை யாராலும் பார்க்க இயலவில்லை. அம்மழைநீர் பரந்து ஓடுவதால் நிலத்தையும் காண இயலவில்லை. கதிரவன் மறைந்து விட்டதால் இருளும் மிகுந்துள்ளது. இந்நிலையில் ஊரில் பலரும் தூங்குகின்ற நள்ளிரவில் நீ எங்ஙனம் வந்தாய்? வேங்கைப் பூக்கள் மணங்கமழும் எம் சிற்றூரை எங்ஙனம் அறிந்தாய்? உன் செயலுக்காக நான் வருந்துகிறேன்.

கருத்து

'தலைவ! இனி நீ இரவில் வருதல் வேண்டா.'

குறிப்பு

நடு யாமம்; விசும்பு காணப்படாமையால் விண்மீன்களின் ஒளியும் இல்லை; நீர்ப்பெருக்கால் நிலம் மறைக்கப்படுதலின் வழியும் தெரியாது; ஊரவர் உறங்கிக் கிடத்தலின் அரவமின்மையால் ஊரைத் தெரிந்து வழி காண்பதும் அரிது. இந்நிலையில் நீ எவ்வாறு வந்தனையோ? இனி இவ்விதம் வாராதே!

சொற்பொருள்

1. பெயல் - மழை; விசும்பு - வானம்.

2. பரந்து - விரிந்து; ஒழுகலின் - ஓடுதலால்.
3. எல்லை - சூரியன்; சேறலின் - மேற்கு மலையில் சென்று மறைந்ததால்.
4. துஞ்சும் - உறங்கும்; பானாள் - நடு யாமம், நள்ளிரவு; கங்குல் - இருள்.
5. ஓங்கல் - மலை; வெற்ப - (மலைநாட்டுக்குத்) தலைவ!
6. வேங்கை - வேங்கை மலர்; கமழும் - மணம் வீசும்; சிறுகுடி - சிற்றூர்.
7. நோகோ யானே - நான் வருந்துகின்றேன்.

தோழி கூற்று

குறுந்தொகை 47 **நெடுவெண்ணிலவினார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரா வந்து ஒழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக, நிலாவிற்கு உரைப்பாளாகத் தோழி உரைத்தது. (முன்னிலைப் புறமொழி - முன் நின்றானிடம் நேராகப் பேசாமல் பிறரைக் கூறுமாறுபோலக் கூறுதல்).

கூற்று விளக்கம்

தலைவன் இரவில் வந்து தலைவியை அடிக்கடி சந்திப்பதைத் தோழி விரும்பவில்லை. மேலும், தலைவியை மணந்துகொள்ளும்படி அவனைத் தூண்ட எண்ணுகிறாள். அதற்காக அவனிடம் தன் கருத்தை நேரே கூறாமல் நிலவிடம் பேசுபவள்போலக் கூறி, 'இரவில் வர வேண்டா' என்று கூறியது.

கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை நெடுவெண் ணிலவே!

தெளிவுரை

நெடும்பொழுது ஒளி வீசும் வெண்ணிற நிலவே! கரிய அடி மரத்தினைக் கொண்ட வேங்கை மரத்தின் முதிர்ந்த பூக்கள் கீழேயுள்ள குண்டான பாறைக்கல்லில் வீழ்ந்துகிடப்பதால்,

அப்பாறை பெரிய புலிக்குட்டியைப் போலக் காணப்படுகிறது. அத்தகைய காட்டுவழியில் பல இடையூறுகளுக்கு அஞ்சாது இரவிலே வருகின்ற தலைவனது களவொழுக்கத்திற்கு நீ நன்மை செய்கின்றதாய் இல்லை.

கருத்து

'தலைவ! நிலவு எழுந்து நெடும்பொழுது வீசுவதால் இரவில் வருதலைத் தவிர்த்திடுக.'

குறிப்பு

களவிற்கு நல்லை அல்லை என்றதால் கற்பிற்கு மிக நல்லை என்று ஆயிற்று. மணம் பெற்ற பின் அவர்கள் எத்தகைய இடையூறுமின்றி நிலவுப் பயனைத் துய்க்கலாம் என்பதைத் தோழி குறிப்பாய்ச் சொல்லுகிறாள்.

விளக்கம்

புலிக்குட்டி படுத்துக் கிடப்பதுபோலக் குண்டுக்கல் தோன்றுவது, இரவில் வரும் தலைவனுக்கு அச்சத்தைத் தரும்.

நிலவு நீண்ட நேரம் ஒளி வீசுவதால் தலைவன் வந்து போவதை ஊரார் அறியக்கூடும்.

தலைவ! நீ இரவில் வருதல் முறையாகாது. தலைவியை உடனே மணந்துகொள்வதே தகுதியானது.

இறைச்சி

துறுகல்லானது புலிக்குட்டி போன்றும், அதன்மேல் உதிர்ந்து கிடக்கும் வேங்கைப்பூக்கள் புலிக்குட்டியின்மேலுள்ள வரிக் கோடுகள் போன்றும் தோன்றும் என்றது, அச்சம் கொள்ளத் தகாத பொருள்களையும் கண்டு அச்சம் கொள்ளும்படி அமைந்த கொடிய காடு என்பதாம்.

சொற்பொருள்

1. கருங்கால் - கரிய அடிமரம்; வீ - மலர்; உகு - உதிர்ந்து கிடக்கும்; துறுகல் - குண்டான பாறைக்கல்.
2. குருளை - குட்டி.
3. எல்லி - இரவு; களவிற்கு - களவொழுக்கத்திற்கு.

தோழி கூற்று

நற்றிணை 85 **நல்வினக்கனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரவு உணர்ந்த தோழி, தலைமகளுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

இரவுக்குறிக்கண் தலைவன் வந்திருப்பதையறிந்த தோழி, அவன் வரும் வழியின் ஏதம் கருதி இரவில் வாராதிருக்க வேண்டும் என, அவன் கேட்கும் வகையில், தலைவியிடம் கூறியது.

ஆய்மலர் மழைக்கண் தெண்பனி உறைப்பவும்,
வேய்மருள் பணைத்தோள் விறல்இழை நெகிழவும்,
அம்பல் மூதூர் அரவம் ஆயினும்,
குறுவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்றுகாத்து அல்கும்,
ஆர்இருள் கடுகிய, அஞ்சுவரு சிறுநெறி
வாரற்க தில்ல தோழி! சாரல்
கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை,
தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி, மகிழ்ந்துகொடு
காந்தள்அம் சிறுகுடிப் பகுக்கும்
ஓங்குமலை நாடன்நின் நசையி னானே!

தெளிவுரை

“தலைவியே! மலைச்சாரலில் வேட்டுவன் அம்பெய்திக் கொண்டுவந்த முள்ளம்பன்றியின் கொழுவிய தசையைத் தேன் கமழும் கூந்தலைக் கொண்ட கொடிச்சி, சிற்றூர் மக்களுக்கு மகிழ்ச்சியுடன் பகுத்துக் கொடுக்கும் உயர்ந்த மலைநாட்டுக்குரியவன், நம் தலைவன். அவன் உன்னை மிகவும் விரும்புகிறான்.

“அழகிய குவளை மலர் போன்ற குளிர்ச்சியான உன் கண்களில் தெளிந்த நீர் துளிர்க்கிறது; மூங்கிலையொத்த பருத்த தோள்களிலிருந்து பெருமைமிக்க வளைகள் கழன்று

வீழ்கின்றன. பழிச்சொற்களைக் கூறும் இப்பழைய ஊரில் அப்பழிச்சொற்களாலான ஆரவாரம் நிறைந்திருக்கிறது.

"தலைவன் வரும் வழியில், குறுகிய வரிகள் பொருந்திய புலி திரிவதனால் அஞ்சிக் குறுக நடக்கும் கன்றினைக் கொண்ட யானை, அக்கன்றினைக் காத்தபடி இருக்கும். மிகுந்த இருள் செறிந்திருக்கும் அஞ்சத்தக்க அச்சிறுவழியில் தலைவன் வாராது இருக்கட்டும்."

கருத்து

தலைவன் இரவில் அஞ்சத்தக்க வழியில் வராதிருக்கட்டும்.

விளக்கம்

தலைவியே! தலைவன் வரும் வழியின் கொடுமையை நினைந்து அஞ்சுகின்றவளாயும், அவனைப் பிரிந்திருக்க இயலாதவளாயும் இருக்கின்ற நீ வருந்துகிறாய். அதனால் உன் மேனி மெலிந்து, வளையும் தொடியும் நெகிழ்ந்து நீங்குகின்றன. அந்த நிலை கண்டு ஊரவர் அலர் தூற்றுகின்றனர். தலைவன் வரும் வழியோ, புலிக்கு அஞ்சிப் பெண்யானை தன் கன்றினைக் காத்தபடி நிற்கும் கொடுமையான சூழ்நிலையைக் கொண்டது. ஆதலின், தலைவன் உன் மீது கொண்டுள்ள காதலால், இந்த இரவில், இந்தக் கொடிய வழியில் வராதிருக்க வேண்டும்.

குறிப்பு

கானவன் கொண்டுவந்த முள்ளம்பன்றியின் கொழுவிய ஊனைக் கொடிச்சி, சிறுகுடியில் உள்ளார்க்குப் பகுத்தளிப்பாள் என்பது, தலைவன் வரைவு வேண்டி விடும் சான்றோரைத் தலைவியின் பெற்றோர் வரவேற்று, ஊரிலுள்ளார்க்குத் தெரிவித்து மணம் நிகழ்த்துவர் என்னும் உட்பொருளைக் கொண்டதாகும். ஆகையால், தலைவன் இரவில் வருதலை விடுத்து வரைவொடு வரவேண்டும் எனத் தலைவனிடம் தோழி குறிப்பாய்க் கூறினாள்.

சொற்பொருள்

1. ஆய் - அழகிய; மழைக்கண் - குளிர்ச்சியான கண்; தெண்பனி - தெளிந்த நீர்த்துளி; உறைப்பவும் - துளிர்ப்பவும்.

2. வேய் - மூங்கில்; பணை - பருத்த; விறல் இழை - பெருமைமிக்க வளைகள்.
3. அம்பல் - பழிச்சொல்; அரவம் - ஆரவாரம்.
4. இரும்புலி - பெரிய புலி.
5. வேழம் - பெண்யானை; அல்கும் - தங்கும்.
6. ஆர் - மிகுதி; கடுகிய - நெருங்கிய.
7. வாரற்க - வரவேண்டா.
8. எய்த - அம்பு எய்து வீழ்த்திய; முளவுமான் - முள்ளம்பன்றி.
9. தேம் - தேன்; கொடிச்சி - வேட்டுவப்பெண்.
10. பகுக்கும் - பிரித்துக் கொடுக்கும்.
11. நசையினான் - விருப்பமுள்ளவன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 60 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வரையாதொழுகுந் தலைமகன் இரவுக்குறி வந்துழித் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

இயற்கைப் புணர்ச்சி பெற்ற தலைவன், களவின்பத்தையே பெரிதும் கருதி, தலைவியை வரைந்துகொள்ள முயலாமையால், அவன் இரவுக்குறி யிடத்திற்கு வந்தபோது தோழி சொல்லியது.

பழனக் கம்புள் பயிர்ப்பெடை அகவும்
கழனி ஊர!நின் மொழிவல், என்றும்
துஞ்சுமனை நெடுநகர் வருதி;
அஞ்சா யோ,இவள் தந்தைகை வேலே?

தெளிவுரை

சம்பங்கோழி தன் பெடையைக் காதலுடன் அழைக்கும் கழனிகள் நிறைந்த ஊரினைக் கொண்ட தலைவ! உன்னிடம் ஒன்று சொல்லுவேன். என் சுற்றத்தார் இனிதே உறங்கும் நெடிய

ஊரிலுள்ள இம்மனைக்கு நீ நாள்தோறும் இரவில் வருகிறாய். இவள் தந்தையின் கையிலுள்ள வேலுக்கு நீ அஞ்சுவது இல்லையோ?

கருத்து

'தலைவ! கையில் வேலை ஏந்தியுள்ள எம் தந்தைக்கு அஞ்சாது இரவில் வருவது ஏற்புடையது அன்று.'

விளக்கம்

"தலைவ! இரவுப்பயணம் இடையூறு நிறைந்தது. மேலும், தலைவியைப் பெற்ற தந்தை, தன் கையில் வேலை ஏந்தியவன்; களவு வெளிப்பட்டால் உனக்கு ஊறு விளையும். எனவே, இரவில் வருவதைத் தவிர்த்துவிட்டுத் தலைவியை விரைவில் வரைந்துகொள்ள முற்படு" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. பழனம் - கழனி, வயல்; கம்புள் - சம்பங்கோழி; பயிர்ப்பெடை - ஒலிக்கின்ற பெடைப்பறவை; அகவும் - அழைக்கும்.
2. நின் மொழிவல் - உன்னிடம் சொல்வேன்.
3. துஞ்சுமனை - வீட்டிலுள்ளார் உறங்குகின்ற இடத்துக்கு; நெடுநகர் - பெரிய நகர்; வருதி - வருகிறாய்.

தலைவி கூற்று

அகநானூறு 58 மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார்

திணை : குறிஞ்சி

கூற்று

சேட்படுத்து வந்த தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறிக்கண் வந்து தலைவியைக் கண்டு மீளும் தலைவன், அவளை மணந்து கொள்ளும் கருத்தின்றிக் காலந்தாழ்த்தினான். அதனையறிந்த

தலைவி களவொழுக்கத்தே புணர்ச்சிக் காலத்தைவிட, நீண்டதான பிரிவுக் காலத்தில், தான் அடையும் துன்பத்தைக் குறிப்பால் உணருமாறு கூறியது.

இன்இசை உருமொடு கனைதுளி தலைஇ,
மன்உயிர் மடிந்த பானாட் கங்குல்,
காடுதேர் வேட்டத்து விளிவுஇடம் பெறாஅது,
வரிஅதள் படுத்த சேக்கை, தெரிஇழைத்,
தேன்நாறு கதுப்பின் கொடிச்சியர் தந்தை,
கூதிர்இல் செறியும் குன்ற நாட!
வனைந்துவரல் இளமுலை ஞெமுங்க, பல்ஊழ்
விளங்குதொடி முன்கை வளைந்து புறம்சுற்ற,
நின்மார்பு அடைதலின் இனிது ஆகின்றே–
நும்இல் புலம்பின்றும் உள்ளுதொறும் நலியும்
தண்வரல் அசைஇய பண்புஇல் வாடை
பதம்பெறு கல்லாது இடம்பார்த்து நீடி–
மனைமரம் ஓசிய ஒற்றிப்
பலர்மடி கங்குல், நெடும்புற நிலையே.

தெளிவுரை

கூதிர்க் காலத்தில் இனிய இசை முழக்கம்போல இடி முழங்கிப் பெருமழை பெய்யும் இரவுக் காலம்; உயிர்கள் எல்லாம் உறங்கும் நள்ளிரவு வேளை. தேர்ந்தெடுத்த அணிகலன்களையும் தேன் மணக்கும் கூந்தலையும் கொண்ட குறத்தியரின் தந்தையர், காட்டில் விலங்குகளைத் தேடி வேட்டையாடும்போது, உறங்கு மிடம் கிடைக்காமையால் வீடு திரும்பிப் புலித்தோலில் படுத் துறங்கும் வாழ்க்கையைக் கொண்ட மலைநாட்டுத் தலைவனே!

உன்னைப் பிரிந்திருக்கும் தனிமைக் காலத்தில், உன்னை நினைக்கும்போதெல்லாம் அரும்பனி கலந்து அசைந்து வரும் அருள் இல்லாத வாடைக் காற்று என்னை வருத்தும். அவ்வாடைக் காலத்தில் வருவதாகச் சொன்னபடி நீ வாராத தால், வீட்டின் முன்புறம் உள்ள மரத்தின் கிளை முரியுமாறு வளைத்துப் பிடித்தவாறு, பலரும் உறங்கும் இரவு நேரத்தில், நெடுநேரம் (உன் வருகையை எதிர்பார்த்து) வெளியே நின்றிருப்பேன்.

அவ்வாறு நிற்கும் என் நிலை, வளர்ந்தெழும் என் முலைகள் அழுந்துமாறு, என் வளையல் அணிந்த முன்னங் கைகளால் வளைத்துப் பலமுறை உன் மார்பினைச் சுற்றிக் கொண்டு, உன் மார்பைத் தழுவிக் கிடப்பதைக் காட்டிலும் எனக்கு இனிதாயிருக்கிறது.

கருத்து

நீண்ட நாள் பிரிந்திருந்த தலைவன் மீண்டும் வந்தான். வரவேற்ற தலைவி, "நீ பிரிந்திருக்கும்போது, 'வருவாய் வருவாய்' என எதிர் பார்த்திருக்கும்போது உள்ள இன்பம், உன்னை மார்புற அணைக்கும்போது இல்லை" எனப் பிரிவின் துன்பத்தைக் குறிப்பால் உணர்த்தியது.

குறிப்பு

குறத்தியரின் தந்தையர் தாம் தொழில் செய்ய முடியாத கூதிர்க் கால இரவில் இல்லத்தில் தங்குவர் என்றது, தலைவனும் வெளியே வேலையில்லாக் காலத்தில்தான் வீட்டை நினைத்து வருகின்றான் என்பதைக் குறிக்கிறது.

சொற்பொருள்

1. உரும் - இடி; கனைதுளி - பெருமழை; தலைஇ - பெய்து.
2. மடிந்த - தூங்கியிருக்கும்; கங்குல் - இரவு.
3. காடு தேர் - காட்டில் விலங்குகளைத் தேடி; வேட்டத்து - வேட்டையாடும்போது; விளிவு இடம் - உறங்கும் இடம்.
4. வரிஅதள் - புலித்தோல்; சேக்கை - படுக்கை; தெரிஇணை - தேர்ந்தெடுத்த அணிகலன்.
5. கதுப்பு - கூந்தல்; கொடிச்சியர் - குறத்தியர்.
6. கூதிர் இல் - கூதிர்க்கால இல்லத்தில்; செறியும் - தங்கியிருக்கும்.
7. வனைந்து வரல் - பண்ணினாற்போல வருதல் (எழும்); ஞெமுங்க - அழுந்த.

7-8.பல்லூழ் புறம் சுற்ற - பலமுறை முதுகை வளைத்துக் கொள்ள.

10. புலம்பின் - (பிரிந்திருக்கும்) தனிமையில்; நலியும் - வருத்தும்.
11. தண்வரல் அசைய - குளிர்ச்சியுடன் அசைந்து வருதல்; பண்பில் - இனிய குணம் இல்லாத.
12. பதம் பெறுகல்லாது - குறித்த பருவத்தில் உன் வருகையைப் பெறாது.

13. மனை மரம் - வீட்டின் முன் உள்ள மரம்; ஒசிய - முறியுமாறு, வளைத்து; ஒற்றி - பிடித்து.
14. மடி - உறங்கும்; புறநிலை - வெளியே நின்று கொண்டிருக்கும் நிலை.

தோழி கூற்று

நற்றிணை 353 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி ஆற்றது அருமை அஞ்சித் தான் ஆற்றாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவுக்காலத்தில் தலைவன் இரவுக்குறியில் தலைவியைச் சந்தித்துச் செல்பவனாய் இருக்கிறான். தலைவன் அஞ்சாது வருகின்றானாயினும், வழியின் ஏதத்தை நினைந்து தலைவி வருந்தித் துடிக்கிறாள். அதனை அறிந்த தோழி, தலைவனிடம், 'இரவில் வருவதை நீக்கி வேறு தக்க தொன்றனைச் செய்க' எனக் கூறியது.

ஆள்இல் பெண்டிர் தாளில் செய்த,
நுணங்குநுண் பனுவல் போலக் கணம்கொள
ஆடுமழை தவழும் கோடுஉயர் நெடுவரை,
முடமுதிர் பலவின் குடம்மருள் பெரும்பழம்
கல்கெழு குறவர் காதல் மடமகள்
கருவிரல் மந்திக்கு வருவிருந்து அயரும்,
வான்தோய் வெற்ப! சான்றோய் அல்லை,எம்
காமம் கனிவது ஆயினும், யாமத்து
இரும்புலி தொலைத்த பெருங்கை யானை
வெஞ்சின உருமின் உரறும்
அஞ்சுவரு சிறுநெறி வருத லானே.

தெளிவுரை

"கணவனை இழந்த கைம்பெண்டிர் நூற்கும் பஞ்சுபோல் கூட்டம் கூட்டமாய்க் காற்றால் அலைக்கப்படும் மேகம், உயர்ந்த

சிகரங்களைக் கொண்ட மலையில் தங்கும். அம்மலையில் முதிர்ந்து வளைந்த பலாமரத்தின் குடம் போன்ற பெரிய பழங்களின் சுளைகளை, அங்கு வாழும் குறவர் பெற்ற அன்பு மகள், கரிய விரலைக் கொண்ட மந்திக்குக் கொடுத்து விருந் தோம்புவாள். அத்தகைய மலைக்குரிய தலைவனே!

நள்ளிரவில் கரிய புலியைக் கொன்ற யானை கடுஞ்சினம் கொண்டு இடிபோல முழங்கும். யாவரும் அஞ்சுகின்ற யாமத்தில் எம்பால் உள்ள முதிர்ந்த காமத்தின் காரணமாய் எவரும் வருவதற்கு அஞ்சும் குறுகலான கொடிய வழியில் வரு தலாலே நீ சால்புடையை அல்லை; எனவே, இனிமேலாயினும் நீ இவ்வாறு வருவதைத் தவிர்த்து வேறு தக்கதொன்றனைச் செய்க" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ! இரவு வருதலைக் கைவிட்டு வேறு தக்கது ஒன்றனைச் செய்.'

விளக்கம்

புலியைக் கொன்று யானை முழங்குதலால் யாவரும் அச்சம் கொள்ளும் வழியில் வருவதை விடுத்து வேறு தக்கதொன்றைச் செய்க என்றது, எம் தமரைக் கண்டு மணந்துகொள்ள முயல்க என்பதாம்.

உள்ளுறை

குறவர் மடமகள் பலாச்சுளை கொண்டு மந்திக்கு விருந்தயரும் என்றது, நீ வரைதல் கேட்டு வருவாயாயின் எம் தமர் உன்னை ஏற்பர் என்பதை உணர்த்துகிறது.

சொற்பொருள்

1. ஆள் இல் - கணவன் இல்லாத; தாளில் - முயன்று.
2. பனுவல் - பஞ்சு நூல்; கணம் - கூட்டம், தொகுதி.
3. ஆடு மழை - தவழும் மேகம்; கோடு - உச்சி; வரை - மலை.
4. முட முதிர் - வளைந்த முதிர்ந்த; குடம் மருள் - குடம் போன்ற.
5. கல் - மலை; கெழு - பொருந்திய (வாழுகின்ற).
6. மந்தி - பெண்குரங்கு; வருவிருந்து - வீட்டிற்கு வந்த விருந்து; அயரும் - ஓம்பும், உபசரிக்கும்.

8. கனிவது - முதிர்ந்தது.
9. தொலைத்த - கொன்ற.
10. வெஞ்சினம் - கடும் சினம்; உரும் - இடி; உரறும் - முழங்கும்.
11. அஞ்சு வரு - வருவதற்கு அச்சம் தரும்; சிறுநெறி - குறுகலான வழி.

தோழி கூற்று

நற்றிணை 383 **கோளியூர் கிழார் மகனார் செழியனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி ஆறு பார்த்துற்றுச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவில் வந்து உறவாடிச் செல்லும் தலைவனின் உள்ளத்தைத் தலைவியை மணந்துகொள்வதில் அக்கறை கொள்ளச் செய்ய வேண்டும் எனக் கருதும் தோழி, அவன் வரும் வழியிலுள்ள துன்பங்களை நினைந்து தாம் அஞ்சுவதாய்க் கூறி, இனி இரவில் வரவேண்டா என்று கூறியது.

கல்அயல் கலித்த கருங்கால் வேங்கை
அலங்கல்அம் தொடலை அன்ன குருளை
வயப்புனிற்று இரும்பிணப் பசித்தென வயப்புலி
புகர்முகம் சிதையத் தாக்கி, களிறுஅட்டு,
5 உரும்இசை உரறும், உட்குவரு நடுநாள்,
அருளினை போலினும், அருளாய் அன்றே.
கனைஇருள் புதைத்த அஞ்சுவரும் இயவில்
பாம்புஉடன்று இரிக்கும் உருமோடு
ஓங்குவரை நாட! நீ,வருத லானே!

தெளிவுரை

மலைக்கு அயலே தழைத்த கரிய அடிப்பகுதியைக் கொண்ட வேங்கை மரத்தின் மலரால் தொகுக்கப்பெற்ற அழகுள்ள மாலை போன்ற குட்டிகளை அண்மையில் ஈன்றதனால் சோர்ந்திருந்த ஒரு பெண்புலி, பசியால் வருந்தி இருந்தது. அஃதறிந்த வலிமை

மிக்க அதன் ஆண்புலி, நெற்றியில் புள்ளிகளைக் கொண்ட ஆண் யானையை அதன் முகம் சிதையுமாறு தாக்கிக் கொன்று முழங்கியது. இத்தகைய அச்சம் மிகுந்த நடு இரவில், இருளைப் புதைத்திருப்பது போன்ற அஞ்சத்தக்க வழியில், பாம்பை வீழ்த்திக் கொல்லும் இடி இடிக்கின்ற வேளையில் நீ எம்மை நோக்கி வருகின்றாய். இதனால் எம் தலைவியிடத்தில் மிகவும் அருளுள்ளவன்போல நீ நடந்துகொண்டாலும் உண்மையில் அருளுடையவன் அல்லன்.

கருத்து

'தலைவ! அஞ்சத்தக்க காட்டுவழியில் நீ இரவு நேரத்தில் வருவதைக் கைவிடு.'

விளக்கம்

களவில் நீ நாள்தோறும் வருவது தலைவிக்கு அருள் செய்வது போலத் தோன்றினாலும், துன்பம் நிறைந்த வழியில் தொடர்ந்து வருவது கண்டு நாங்கள் அஞ்சி நடுங்குகிறோம். எங்கட்கு இவ்வச்சத்தை உண்டாக்கும் நீ உண்மையில் அருளற்றவனே. இவ்வச்சம் நீங்கத் தலைவியை விரைவில் மணந்துகொள்.

சொற்பொருள்

1. கல் - மலை; கலித்த - தழைத்த; வேங்கை - வேங்கை மலர்.
2. அலங்கல் - அசைதல்; தொடலை - மாலை; குருளை - குட்டி.
3. புனிறு - அண்மையில் ஈன்ற; பிணவு - பெண்புலி; வயம் - வலிமை.
4. புகர் - புள்ளி; சிதைய - அழியுமாறு; களிறுஅட்டு - ஆண்யானை யினைக் கொன்று.
5. உரும் - இடி; உரறும் - முழங்கும்; உட்கு - அச்சம்; நடு நாள் - நள்ளிரவு.
6. அருளினை - அன்பு கொண்டனை.
7. கணை - செறிந்த, திரண்ட; இயவு - வழி.
8. உடன்று - சிதைத்து; இரிக்கும் - கொல்லும்; உரும் - இடி.
9. ஓங்குவரை - உயர்ந்த மலை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 296 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வருகின்ற தலைமகற்குத் தோழி ஆற்றருமை கூறி மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவுக்குறியில் தலைவியைச் சந்திக்க வருகிறான். அவனை நோக்கித் தோழி, அவன் வருகின்ற வழியில் ஏற்படும் அச்சம்பற்றிக் கூறி, இனிமேல் இரவில் வாராதே என்று மொழிந்தது.

கொடிச்சி காக்கும் பெருங்குரல் ஏனல்
அடுக்கல் மஞ்ஞை கவரும் நாட!
நடுநாள் கங்குலும் வருதி;
கடுமா தாக்கின், அறியேன் யானே.

தெளிவுரை

குற மகளிர் காக்கும் பெரிய கதிர்களில் உள்ள தினையினை மலைச்சாரலிலே உள்ள மயில்கள் கவர்ந்து செல்லும் நாட்டைக் கொண்டவனே! இருள் செறிந்த நள்ளிரவிலும் நீ வருகின்றாய். வழியில் அச்சம் விளைவிக்கும் கொடிய விலங்குகள் தாக்கினால் என்ன ஆகுமோ? (எனவே, இரவில் வாராதே.)

கருத்து

அச்சம் தரும் வழியில் இரவில் வருவதைக் கைவிடு.

விளக்கம்

இரவுக்குறி வரும் தலைவனை நோக்கி, 'வழியில் கொடிய விலங்குகள் தாக்குமோ என்ற அச்சத்தால் நாங்கள் மிகவும் நடுங்குகிறோம். உனக்கு ஊறு நேரின் தலைவி உயிர் விடுவது உறுதி' என்று கூறித் தலைவனிடம், 'இனி இரவில் வாராதே' என வலியுறுத்துகிறாள், தோழி.

உள்ளுறை

'கொடிச்சி காக்கும் பெருங்குரல் ஏனல் மஞ்ஞை கவரும்.' இத்தொடர்மூலம், தமரின் காவலில் உள்ளவளான தலைவியைக்

களவிற்கூடுதலையே விரும்பித் தலைவன் இரவில் வந்து ஒழுகுகின்றான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. கொடிச்சி - குறிஞ்சிநிலத் தலைவி; பெருங்குரல் - பெரிய கதிர்; ஏனல் - தினை.
2. அடுக்கல் - மலைச்சாரல்; மஞ்ஞை - மயில்.
3. நடுநாள் கங்குல் - இரவு வேளையின் நடுச்சாமப்பொழுது.
4. கடுமா - கொடிய விலங்குகள்; அறியேன் - (அதனால் விளைவதை) நான் அறியேன்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 11 **கணிமேதாவியார்**

தினை : குறிஞ்சி

கூற்று

தோழி, நெறி விலக்கியது. (நெறி - வழி)

கூற்று விளக்கம்

தலைவன் வந்து செல்லும் வழியில் ஏற்படும் துன்பத்தினை எடுத்துரைத்து அவன் வரவைத் தோழி விலக்கியது.

கரவில் வளமலைக் கல்லருவி நாட!
உரவில் வலியாய் ஒருநீ – இரவின்
வழிகள்தாம் சால வரஅரிய; வாரல்
இழிகடா யானை எதிர்.

தெளிவுரை

"குற்றமற்ற வளம் நிறைந்த மலைகளையும், 'கல்' என்று ஒலிக்கும் அருவிகளையும் கொண்ட நாட்டிற்கு உரியவனே! ஒப்பற்ற நீ, இரவில் வலிமையான வில்லை மட்டுமே துணை யாய்க்கொண்டு வருகின்றனை. வருவதற்கு அரிய கொடுமை யான மலைவழியில் மதநீர் பெருகும் யானைகளின் எதிரே நீ வர வேண்டா" என்று தோழி தலைவனிடம் வேண்டினாள்.

கருத்து

தலைவ! வழி கொடுமையானது; ஆகையால், வரவேண்டா.

குறிப்பு

வரும் வழியில் காடுகளும், மலைகளும், அருவிகளும், யானைகளும் உள்ளன.

சொற்பொருள்

1. கரவு இல் - குற்றம் இல்லாத; கல் அருவி - 'கல்' என்னும் ஒலியுடன் விழும் அருவி.
2. உரம் வில் - வலிய வில்; வலியாய் - துணையாய்க்கொண்டு; ஒரு நீ - ஒப்பற்ற நீ (தனியாய்).
3. சால - மிகவும்; வரவு அரிய - வருவதற்கு எளிதல்லாத; வாரல் - வரவேண்டா.
4. இழி - ஒழுகுகின்ற; கடாம் - மதம்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 10 **கணிமேதாவியார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி நெறி விலக்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் வந்து செல்லும் வழியில் ஏற்படும் துன்பத்தினை எடுத்துரைத்து அவன் வரவைத் தோழி விலக்கியது.

கருவிரல் செம்முகம் வெண்பல்சூல் மந்தி
பருவிரலால் பைஞ்சுனைநீர் தூஉய்ப் – பெருவரைமேல்
தேன்தேவர்க்(கு) ஒக்கும் மலைநாட! வாரலோ
வான்தேவர் கொட்கும் வழி.

தெளிவுரை

சுரிய விரல்களையும், சிவந்த முகத்தினையும், வெண்மையான பற்களையும் கொண்ட பெண்குரங்கு கருவுற்றுள்ளது. அது தன் பெரிய விரல்களால் பாசிலை படர்ந்த சுனையிலுள்ள நீரினைத் தேவர்கட்கு வழிபாடாய்த் தூவி, மலையுச்சியிலேயுள்ள தேன்கூடுகளை எடுத்துத் தேவர்கட்குக் கொடுக்கும். இத்தகைய காட்சிக்கு இடனான மலைநாட்டையுடையவனே! தெய்வத் தன்மைமிக்க வானத்துத் தேவர்கள் நடமாடும் இம்மலைவழியே நீ தலைவியை நாடி வாராதிரு! (தலைவியை மணம் புரிந்துகொள் என்பது சுருத்து.)

கருத்து

தலைவ! தேவர் உலவும் மலைவழியே தலைவியைக் காண இரவில் வர வேண்டா.

குறிப்பு

நீ வரும் வழி, குரங்குகள் கொடுக்கும் தேன்கூட்டை உண்டு சுவைப்பதற்காக வானத்துத் தேவர் வந்து நடமாடும் இடம்; அவர் காணின் தீங்கு நேரும். ஆதலின், வரல் வேண்டா.

சொற்பொருள்

1. சூல் - கருப்பம்.
2. பரு விரல் - பெரிய விரல்; தூஉய் - (தேவர்கட்கு வழிபாடாய்) தூவி; வரை - மலை.
3. தேன் - தேன் கூடுகளை; ஒக்கும் - கொடுக்கும்; வாரல் - வர வேண்டா.
4. வான் தேவர் - வானத்துத் தேவர்; கொட்கும் - நடமாடித் திரியும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 153 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

வரையாது நெடுங்காலம் வந்து ஒழுகுகின்றுழி, 'நாம் அவரை வேறுபடுத்தற்குக் காரணம் என்னை?' என்ற தோழிக்கு, 'அவர் வரவு நமது ஆற்றாமைக்குக் காரணம் ஆம்' எனத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரைந்துகொள்ளக் கருதாது நீண்ட காலம் இரவில் வந்து செல்வதை மாற்றக் கருதிய தோழி, மாற்றுதற்கு ஏதுவாய் எதனைக் கூறுவது என்று தலைவியைக் கேட்க, தலைவி தோழியிடம் சொல்லியது.

குன்றக் கூகை குழறினும், முன்றில்
பலவின் இருஞ்சினைக் கலைபாய்ந்து உகளினும்,
அஞ்சும்மன் அளித்து,என் நெஞ்சம்! இனியே,
ஆர்இருள் கங்குல் அவர்வயின்
5 சாரல் நீள்இடைச் செலவு ஆனாதே.

தெளிவுரை

தோழியே! என் நெஞ்சம் முன்பு, இரவு நேரத்தில் மலை யிலுள்ள பேராந்தை அலறினாலும், முற்றத்திலுள்ள பலா மரத்தின் பெரிய கிளையில் ஆண்குரங்கு தாவித் துள்ளினாலும் அஞ்சியது. இப்பொழுதோ, செல்லுதற்கரிய இருள் நிறைந்த நள்ளிரவில், மலைச்சாரலில் உள்ள நீண்ட வழியில் வந்து திரும்பும் அவரிடம் சிறிதும் தடையின்றிச் செல்ல முற்படுகிறது. இந்நெஞ்சம் இரங்கத்தக்கது.

கருத்து

'தோழியே! தலைவர் இரவிலே இடர் நிறைந்த வழியிலே நடந்து வருகின்றார். அதனால் அஞ்சுகிறேன்.'

விளக்கம்

"தலைவர் இரவில் வருதலால் அவருக்குத் துன்பம் நேருமோ என்று எண்ணி அஞ்சுகிறேன். இதனைக் கூறி அவரை இரவில்

வரவேண்டா எனச் சொல்” எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

அவன் வரும் சுரவழியினால் ஏற்படும் அச்சங்களை நினைத்துக் கொண்டேயிருப்பதால் தன் நெஞ்சம் அவ்வழியில் செல்வதாய்த் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கூகை - பேராந்தை, கோட்டான்; குழறினும் - அலறினாலும், கத்தினாலும்; முன்றில் - இல்முன் - முற்றம்.
2. பலவு - பலாமரம்; இருஞ்சினை - பெரிய கிளை; கலை - ஆண்குரங்கு; உகளுதல் - தாவிக் குதித்தல்.
3. அளித்து - இரங்கத்தக்கது; இனியே - இப்பொழுதோ.
4. ஆர் இருள் - நடத்தற்கரிய இருள்; கங்குல் - இரவு; அவர் வயின் - அவரிடம் (வந்து திரும்பும்).
5. சாரல் - மலைச்சாரல்; நீள் இடை - நீண்ட வழி; செலவு ஆனாதே - செல்லுவதை விடாது.

தலைவி கூற்று

நற்றிணை 104 **பேரிசாத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள் ஆறு பார்த்துற்ற அச்சத்தால் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் கொடிய காட்டுவழியில் வருதலை எண்ணிய தலைவி, அதில் உள்ள இடரை நினைத்துக் கவலையோடு கூறியது.

பூம்பொறி உழுவைப் பேழ்வாய் ஏற்றை
தேம்கமழ் சிலம்பில் களிற்றொடு பொரினே,
துறுகல் மீமிசை, உறுகண் அஞ்சாக்
குறக்குறு மாக்கள் புகற்சியின் எறிந்த
5 தொண்டகச் சிறுபறைப் பாணி அயலது

பைந்தாள் செந்தினைப் படுகிளி ஓப்பும்
ஆர்கலி வெற்பன் மார்புநயந்து உறையும்
யானே அன்றியும், உளர்கொல் – பானாள்,
பாம்புடை விடர ஒங்குமலை மிளிர,
உருமுச்சிவந்து எறியும் பொழுதொடு, பெருநீர்
போக்குஅற விலங்கிய சாரல்,
நோக்குஅருஞ் சிறுநெறி நினையு மோரே.

தெளிவுரை

தேன் மணம் கமழும் புதுமலர்களைக் கொண்ட மலைப் பகுதியில் அழகிய வரிகளையும் அகன்ற வாயினையும் கொண்ட ஆண்புலி தனக்கு முன் எதிர்ப்பட்ட ஆண்யானையுடன் போர் செய்யும். அப்போரினால் உண்டாகும் பெரிய முழக்கங்களுக்கு அஞ்சாத குறவர்குல இள மைந்தர்கள் பெரிய பாறையின் மீது மனச்செருக்குடன் ஏறி நின்று, தத்தம் கையிலிருக்கும் தொண்டகப்பறையை விருப்பத்துடன் முழக்குவர். அப்பறை யொலி, அங்கே பசிய தண்டினைக் கொண்ட தினையினைக் கவர வரும் கிளிக்கூட்டத்தை அச்சுறுத்தி வெருண்டோடச் செய்யும். பாம்புகள் நிறைந்த மலைகளைக் கொண்ட மலையுச்சிகள் புரண்டு விழும்படி நள்ளிரவில் மின்னல் மின்னி இடி இடித்து முழங்கிடும். இருளில் நடப்பதற்கு இயலாத வகையில் மலைப் பக்கங்களில் வெள்ளம் பெருகிக் குறுக்கிட்டு ஓடும். இத்தகைய சாரலிடத்து நோக்குதற்கும் அரிய சிறிய வழியில் வரும் மலை நாடனை விரும்பி நினைத்திருக்கும் என்னைப்போலப் பிறர் எவரும் இவ்வுலகில் உள்ளனரோ?

கருத்து

'வருதற்கரிய வழியில் வரும் தலைவன் மார்பை விரும்பி நினைத்திருப் பவள் நான் ஒருத்தியே. ஆதலின், அவனுக்கு இடரேதும் விளையாதிருக்க இரவில் வாராதபடி தடுத்திடு' எனத் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

விளக்கம்

ஆண்புலி ஆண்யானையோடு போர் செய்தலை அஞ்சாது பார்த்துக் குறச்சிறுவர் பறையை ஒலிக்கின்றனர். அவ்வொலி

யால் கிளிகள் அஞ்சி ஓடுகின்றன. இரவில் மலைகள் பிளந்து விழுமாறு இடி முழங்குகின்றது. மழை பொழிந்து பெரு வெள்ளம் குறுக்கிடுகின்றது. இந்நள்ளிரவுப்போதில் தலைவன் மார்பை விரும்பி வாழும் என்னைப் போல வேறு எவரேனும் உளரோ?

குறிப்பு

'தலைவன் வரும் வழியை நினைந்து என் மனம் கலங்குகின்றது. தோழி! நான் படுந்துன்பத்தை அறியாது நீ அவனைக் களவொழுக்கத்துக்கு இரவுக் குறியிடத்துக்கு வருமாறு செய்கின்றாய்; வாராதபடி தடுக்கவில்லை' எனத் தலைவி தோழியிடம் கூறினாள் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. பூம்பொறி - அழகிய வரி; உழுவை - புலி; பேழ்வாய் - அகன்ற வாய்; ஏற்றை - ஆண்.
2. தேம் கமழ் - தேன் மணக்கும்; பொரிணே - போர் செய்ததால்.
3. துறுகல் - பெரிய பாறை; மீமிசை - மேலே; உறுகண் - துன்பம்.
4. புகற்சி - விருப்பம்; எறிந்த - முழங்கிய.
5. பாணி - ஒலி.
6. ஓப்பும் - விரட்டும், துரத்தும்.
7. ஆர் கலி - முழக்கம் நிறைந்த; நயந்து - விரும்பி.
8. அன்றியும் - அல்லாமலும்; உளர்கொல் - வேறொருவர் உளரோ?; பானாள் - நள்ளிரவு.
9. விடர் - மலைப்பிளவு; மிளிர - மின்னி.
10. உரும் - இடி; சிவந்து - சினந்து; எறியும் - இடிக்கும்; பெருநீர் - பெரு வெள்ளம்.
11. போக்கு அற - செல்ல இயலாதவாறு; விலங்குதல் - தடுத்தல்.
12. நோக்கு அரு - நோக்குதற்கும் அரிய.

தலைவி கூற்று

கைந்நிலை 11 **புல்லங்காடனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள், இரவுக்குறி ஏதமுடைத்து என்று அஞ்சித் தோழிக்குக் கூறுதல்.

கூற்று விளக்கம்

இரவுக்குறியிடத்துக்குத் தலைவன் வர விரும்பியபோது, அஃது ஆபத்தானது எனத் தோழியிடம் தலைவி கூறுதல்.

எறிகிளர் கேழல் கிளைத்திட்ட பூழி
பொறிகிளர் மஞ்ஞை புகன்று குடையும்
முறிகிளர் நன்மலை நாடன் வருமே
அரிதுரைத்திவ் அல்லில் நமக்கு.

தெளிவுரை

"இலைகளைக் கொண்ட மரங்கள் நிறைந்திருக்கும் இடங்களில் பன்றிகள் தம் கொம்புகளால் குத்தி எழுப்பிய புழுதியில் புள்ளிகளைக் கொண்ட மயில்கள் விளையாடும். இத்தகைய காட்சிக்கிடனான மலைநாட்டுக்குரிய தலைவன் இவ்விருட்டில் வருவான் என்னும் அச்சமும் கவலையும் என்னை வருத்துகின்றன."

கருத்து

தலைவன் இருட்டில் வருவான் என்னும் அச்சத்தால் தலைவி வருந்து கிறாள் எனச் சொல்லி இரவுக்குறி தவிர்த்தாள், தோழி.

சொற்பொருள்

1. எறி கிளர் - குத்தி எழுப்பி; கேழல் - பன்றி; கிளைத்திட்ட - தோண்டிய.
2. பொறி - புள்ளிகள்; கிளர் - நிறைந்து விளங்கும்; குடையும் - கிளறும்.
3. முறி - தளிர்; கிளர் - நிறைந்த.
4. அரிது - அரிதான; உரைத்து - (சொற்கள்) பேசி; அல்லில் - இருளில்.

தலைவன் கூற்று

நற்றிணை 192 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி மறுக்கப்பட்டு ஆற்றானாய தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவில் வரும் வழியில் ஏற்படும் துன்பத்தை நினைந்து கவலையுற்ற தலைவி, அவனை, 'இனி இவ்வாறு வரல்வேண்டா' என்று கூறியபோது தலைவன் மொழிந்தது.

குருதி வேட்கை உருகெழு வயமான்
வலிமிகு முன்பின் மழகளிறு பார்க்கும்
மரம்பயில் அடுக்கம் மலியப் பூழியர்
உருவத் துருவையின் நாள்மேயல் ஆரும்
மாரி எண்கின் மலைச்சுர நீள்இடை
நீநயந்து வருதல் எவன்எனப் பலபுலந்து
அழுதனை உறையும் அம்மா அரிவை
பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதுஇயல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றி அன்ன,நின்
மாண்நலம் உள்ளி வரின்,எமக்கு
ஏமம்ஆகும் மலைமுதல் ஆறே.

தெளிவுரை

"குருதியுண்ணும் விருப்பம் கொண்டதும், கண்டார்க்கு அச்சம் தரும் வலிமை மிக்கதுமான புலி, வலிமையும் இளமையும் கொண்ட களிற்றினைக் கொல்வதற்கு அதன் வரவை நோக்கி யிருக்கும். அத்தகைய மலையில் மரங்கள் அடர்ந்த மலைப்பக்கம் முழுவதும், பூழி நாட்டவருடைய நல்ல நிறம் கொண்ட ஆடுகள் மந்தையாய்ப் பரவி மேய்வதுபோல, மாரிக்காலத்து இரவில், கரடிகள் இரை தேடி அலையும். 'அவ்வழியில் நீ என்னை விரும்பி வருவது எதற்கு' என்று பலவாறு மனம் வேறுபட்டு அழுது கலங்கும் அழகிய மாமை நிறம் கொண்ட பெண்ணே!

பழங்கள் நிறைந்த பலாமரங்கள் செறிந்துள்ள கொல்லி மலையின் மேற்குப்பகுதியில், ஒரு பாவை உருவம் தெய்வத்தால் புதுவதாய்ச் செய்து நிறுத்தப்பட்டுள்ளது. விரிந்த கதிர்களைக் கொண்ட இளஞாயிற்றின் பொன் வெயிலில் அப்பாவை காணப்படுவது போன்ற மாட்சிமை மிக்க உன் அழகிய நலத்தினை நினைந்தே நான் வருகின்றேன். அந்நினைவே எனக்கு இனிய துணையாய் இருக்கிறது."

கருத்து

'தலைவியே! கொல்லிப்பாவையிடமிருந்து வீசும் ஒளியைப்போல உன் மேனியிலிருந்து தோன்றும் ஒளியே காட்டின் இருளை நீக்கிவிடுமாதலின் நான் அஞ்ச வேண்டியதில்லை; நீயும் அச்சம் தவிர்.'

விளக்கம்

'தலைவியே! நான் இரவில் மலைவழியைக் கடந்து வருதலின் ஏதம் கருதி வருந்துகின்றாய். இளவெயில் கொல்லிப்பாவையின் மேனியில் பட்ட பொழுது அதன் நிறமும் அழகும் ஒளியும் சிறப்புற்று விளங்குவதுபோல நீ விளங்குகின்றாய். அத்தகைய உன் அழகையே துணையாய் நினைத்து நான் வருவதால் எனக்கு இடர் ஏதும் விளையாது' என்று கூறித் தலைவன் தலைவியின் அச்சத்தைப் போக்குகிறான்.

குறிப்பு

கொல்லிப்பாவையிடமிருந்து வீசும் ஒளி போன்று தலைவியின் மேனியிலிருந்து வீசும் ஒளியே தனக்கு வழித்துணை என்கிறான், தலைவன்.

இறைச்சி

புலி, களிற்றை நோக்கி நிற்கும் மலையில் கரடிகள் அஞ்சாமல் இயங்கும் என்னும் தொடர்மூலம், தலைவியைப் பெற்ற அன்னை காவல் கொள்ளும் வழியில் தலைவன் அஞ்சாமல் வருவான் என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. வேட்கை - விருப்பம்; உரு - அச்சம்; வயமான் - புலி.
2. முன்பு - வலிமை; மழகளிறு - இளமையான ஆண்யானை.

3. அடுக்கம் - மலை; மலிய - நிறைய; பூழியர் - பூழி நாட்டார்.
4. உருவம் - நிறம்; துருவை - ஆடு; நாள்மேயல் - நாள்காலை உணவு; ஆரும் - மேயும்.
5. எண்கு - கரடி; சுரம் - மலைக்காடு; நீள் இடை - நெடிய வழி.
6. நயந்து - விரும்பி; எவன் - எதற்கு; புலந்து - வருந்தி.
7. உறைதல் - தங்கியிருத்தல்; அம் மா - அழகிய மாமை நிறத்தைக் கொண்ட; அரிவை - பெண்.
8. பயங்கெழு - பழங்கள் மிகுந்த; பலவு - பலாமரம்; கொல்லி - கொல்லி மலை; குடவரை - மேற்குப்பகுதி.
9. புணர்த்த - செய்த; இயல் - விளங்கும்; பாவை - பெண் உருவம் (கொல்லிப்பாவை).
10. விரி - விரிகின்ற.
11. மாண் நலம் - மாட்சிமைப்பட்ட அழகு; உள்ளி - நினைந்து
12. ஏமம் - பாதுகாப்பு; ஆறு - வழி.

தோழி கூற்று

குறுந்தொகை 198 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி குறியிடம் பெயர்த்துக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் ஒரு நாள் தலைவியைக் காண்பதற்காக, வீட்டின் கொல்லைப் புறத்திலே இரவுக்குறி வந்து நின்றான். அவன் செய்த அடையாளத்தால், அவன் வந்திருப்பதைத் தோழி அறிந்தாள். அவனிருக்குமிடம் சென்று, "தலைவனே! இங்கு நிற்க வேண்டா. தாய் கொல்லைப்பக்கம் வரும் நேரமாயிற்று. காலம் தாழ்த்தாமல் இங்கிருந்து சென்றுவிடு! இனித் தினைப்புனத்திலே சந்திக்கலாம்" என்று கூறியது.

யாஅம் கொன்ற மரம்சுட்ட இயவில்
கரும்புமருள் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை அன்னபால் வார்பு,
கரிக்குறட்டு இறைஞ்சிய செறிகோள் பைங்குரல்
5 படுகிளி கடிகம் சேறும்; அடுபோர்

எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்து
ஆரம் நாறும் மார்பினை,
வாரற்க தில்ல; வருகுவள் யாயே.

தெளிவுரை

பகைவரைக் கொல்லும் வேற்படையைக் கொண்டவன், மலையமான் திருமுடிக்காரி. அவனது முள்ளூர்க்கானத்துச் சந்தனம் மணக்கும் மார்பினைக் கொண்ட தலைவனே! இங்கு வாராதே! எங்கள் தாய் இவ்விடத்தே அடிக்கடி வருவாள்.

யா மரங்களை வெட்டிச் சுட்டு உண்டாக்கிய பகுதியில் வளர்ந்த பசிய தாளைக்கொண்ட தினைப்பயிர், கரும்பு போன்ற அடித்தண்டினைக் கொண்டிருக்கும்; கதிர்கள், பெண்யானையின் துதிக்கைபோலத் தோற்றமளிக்கும். பால் நிரம்பிய கதிர்கள், கொல்லன் கரியை எடுக்கப் பயன்படும் குறடுபோல வளைந் திருக்கும். இவ்வாறு விளைந்து நிற்கின்ற தினைக்கதிர்களைத் தின்னக் கிளிகள் வந்து விழும். அவற்றை ஓட்ட நாங்கள் தினைப் புனம் செல்வோம். எனவே, நீ அங்கு வந்து காண்பது எளிது.

கருத்து

தினைப்புனம் காக்கச் செல்கிறோம்; இனிப் பகற்குறியில் கூடலாம்.

குறிப்பு

இரவுக்குறி மறுத்துப் பகற்குறி நேர்வதாயினும், தினை முற்றியது கூறலின் அதுவும் குறிப்பாய் மறுக்கப்பட்டது எனலாம்.

சொற்பொருள்

1. யாஅம் - யா மரம்; கொன்ற - வெட்டிய; இயவு - பகுதி.
2. மருள் - போன்ற; முதல - அடியைக் கொண்ட; பைந்தாள் - பசிய தண்டு.
3. மடப்பிடி - இளைய பெண்யானை; தடக்கை - வளைந்த துதிக்கை; பால் வார்பு - பால் நிரம்பி.
4. கரிக்குறடு - கரியை எடுக்கப் பயன்படுகின்ற குறடு; இறைஞ்சிய - வளைந்த; செறிகோள் - செறிந்த குலை; பைங்குரல் - பசிய கதிர்.
5. படுகிளி - தின்ன வருகின்ற கிளி; கடிகம் - ஓட்டுவதற்கு; சேறும் - செல்வோம்; அடுபோர் - பகைவரைக் கொல்லும் போர்.

6. எஃகு - வேல்; மலையன் - மலையன் என்பவனது; கானம் - முள்ளூர்க் கானம்.
7. ஆரம் - சந்தனம்; நாறும் - மணக்கும்; மார்பினை - மார்பினைக் கொண்டவனே.
8. வாரற்க - வாராதே; யாய் - தாய்.

தோழி கூற்று

நற்றிணை 158 **கண்ணங்கொற்றனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி மறுத்தது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வரும் தலைவனிடம், 'நாளைமுதல் தினைப்புனம் காவல் செல்கின்றோமாதலின் அங்கு வந்து பகலில் காணுக' எனத் தோழி இரவுக்குறி மறுத்துத் தலைவனிடம் கூறியது.

நீயே, அடிஅறிந்து ஒதுங்கா ஆர்இருள் வந்துஎம்
கடியுடை வியல்நகர்க் காவல் நீவியும்,
பேர்அன் பினையே பெருங்கல் நாட!
யாமே, நின்னும்நின் மலையும் பாடி, பல்நாள்
சிறுதினை காக்குவம் சேறும்; அதனால்,
பகல்வந் தீமோ, பல்படர் அகல!
எருவை நீடிய பெருவரைச் சிறுகுடி
அரியல் ஆர்ந்தவர் ஆயினும், பெரியர்;
பாடுஇமிழ் விடர்முகை முழங்க,
ஆடுமழை இறுத்தது,எம் கோடுஉயர் குன்றே.

தெளிவுரை

மலைநாட! நீ இரவில் வருவது எங்கட்கு வருத்தம் தருகிறது. வழி அறிந்து ஒதுங்கிச் செல்லுதற்கு இயலாத செறிந்த இருளில் அடியெடுத்து வைத்து வந்து, எம் இல்லக்காவலையும் கடந்து எம்மைக் கூடும் பேரன்பு கொண்டவனாய் இருக்கிறாய்! கொறுக்கச்சி அடர்ந்த பெரிய மலைப்பக்கத்தில் அமைந்துள்ள

இச்சிறுகுடியில் உள்ளவர் கள்ளினை மிகுதியாய் உண்பவ ராயினும் பிறரை ஒறுப்பதில் மிகவும் கொடியவராவர். மேலும், முழங்குகின்ற இடியின் பேரொலி மலைமுழைகளிலும் எதிரொலிக்கும்படியாய் மேகம் மலை உச்சியில் சூழ்ந்துள்ளது. ஆகவே, பெருமானே, நீ இனி இரவில் வாராதே! மேலும் உன்னையும் உன் மலையையும் பாடி நாங்கள் தினைப்புனக் காவலுக்குச் செல்ல இருக்கிறோம். பல நாள் புனத்தினைக் காக்க வேண்டியிருக்கும். ஆதலின், பலவாய துன்பங்களும் அகலுமாறு பகலில் வந்து எங்களைத் தினைப்புனத்தில் காண்க!

கருத்து

எம் உறவினர் சீற்றம் கொண்டவர்; வழியோ, மழையும் இருளும் மிக்கது; நாளை தினைப்புனங் காவலுக்குச் செல்கின்றோம்! அங்கு வந்து காண்க!

குறிப்பு

இரவுக்குறி மறுத்துப் பகற்குறி கூறினள் எனினும், பகலிலும் பிறர் காண நேரிடுவதால் அலர் எழுதலோடு, பெற்றோரும் சினப்பர் என்பதால் அதனையும் தவிர்த்து 'நீ வரைவொடு வருதலே சிறப்பு' என மறைமுகமாய் வலியுறுத்துகிறாள்.

சொற்பொருள்

1. அடி அறிந்து ஒதுங்கா - அடியெடுத்து வைத்து நடத்தற்கரிய, வழி அறிந்து ஒதுங்கிச் செல்லுதற்கு இயலாத.
2. கடி - காவல்; வியல்நகர் - அகன்ற இல்லம்; நீவியும் - கடந்தும்.
4. பல்நாள் - பல நாள்.
5. காக்குவம் - காப்பதற்கு; சேறும் - சேருவோம்.
6. பல்படர் - பலவகைத் துன்பம்.
7. எருவை - கொறுக்கச்சி; நீடிய - அடர்ந்த.
8. அரியல் - கள்; ஆர்ந்தவர் - குடித்தவர்.
9. இமிழ் - முழக்கம்; விடர்முகை - பிளவுண்ட முழை (முழை - குகை, பொந்து).
10. ஆடு மழை - அசைந்து வரும் மேகங்கள்; இறுத்தது - தங்கியுள்ளது; கோடு - மலை உச்சி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 290 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

காவல் மிகுதியான் இரவுக்குறி மறுக்கப்பட்டு நீங்கிய தலைமகன் வந்துழி, அவன் கேட்டு வெறுப்புத் தீர்தற்பொருட்டால் தினைப்புனங்காவல் தொடங்காநின்றாளென்பது தோன்றத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவிக்குக் கட்டுக்காவல் மிகுந்தது. அதனால் தலைவனுக்கு இரவுக்குறி மறுக்கப்பட்டது. தலைவியைக் காண இயலாது திரும்பிய தலைவன் மீண்டும் வந்தான். வெறுப்போடு திரும்பியிருக்கும் தலைவன், வெறுப்பு நீங்கி ஆறுதல் கொள்ள வேண்டும் என்பதற்காக, தலைவி தினைப்புனங்காவலைத் தொடங்கிவிட்டாள் என்னும் நல்ல செய்தியைத் தோழி தலைவனிடம் கூறியது.

அறம்புரி செங்கோல் மன்னனின் தாம்நனி
சிறந்தன போலும் கிள்ளை, பிறங்கிய
பூக்கமழ் கூந்தல் கொடிச்சி
நோக்கவும் படும்,அவள் ஒப்பவும் படுமே.

தெளிவுரை

அறம் புரிகின்ற செங்கோன்மை தவறாத மன்னனினும் மிகச் சிறந்தவள், தலைவி. பூ மணம் கமழும் கூந்தலைக் கொண்ட அவளால் நாளைமுதல் அக்கிளிகள் கனிவோடு நினைக்கவும் படும்; தினையிலிருந்து விரட்டவும் படும்.

கருத்து

தலைவி தினைப்புனங் காவலைத் தொடங்க இருக்கிறாள். ஆதலின், அவளைத் தலைவன் பகற்குறியில் கூடலாம் எனத் தலைவன் மகிழுமாறு தோழி கூறினாள்.

விளக்கம்

மன்னன் கண்டிக்கும்போது கனிவோடு நோக்க மாட்டான்; ஆனால், தலைவியோ கிளிகளைக் கனிவோடு பார்த்துக்

கண்டிடப்போடு விரட்டுவதால் அவள் செங்கோல் மன்னனை விடச் சிறந்தவள் ஆகிறாள்.

தலைவனைக் காண தினைப்புனங்காவல் வழியேற்படுத்தித் தருவதால் அவள் கிளிகளைக் கனிவோடும் நோக்குகிறாள்.

சொற்பொருள்

1. அறம்புரி - அறம் செய்யும்; நனி - மிகவும்.
2. கிள்ளை - கிளி; பிறங்கிய - தங்கிய.
3. கொடிச்சி - குறமகள்.
4. நோக்கவும் படும் - அன்புடன் நினைக்கவும் படும்; ஓப்பவும் படும் - விரட்டவும் படும்.

தலைவி கூற்று

நற்றிணை 102 **செம்பியனார்**

தினை : குறிஞ்சி

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவி

கூற்று விளக்கம்

பகற்குறியிடத்தும் இரவுக்குறியிடத்தும் இடையீடுபட்டுத் தலைவன் வராத நிலையில், வரைவு வேண்டும் விருப்பினொடு தலைவி கிளியை நோக்கி, 'கிளியே! என் தலைவனைக் கண்டு இக்குறமகள் தினைப்புனங் காவற்கு மீண்டும் வந்தாள் என்று சொல்' என இரந்து வேண்டியது.

கொடுங்குரல் குறைத்த செவ்வாய்ப் பைங்கிளி!
அஞ்சல் ஓம்பி, ஆர்பதம் கொண்டு,
நின்குறை முடித்த பின்றை, என்குறை
செய்தல் வேண்டுமால்; கைதொழுது இரப்பல்;
பல்கோள் பலவின் சாரல் அவர்நாட்டு,
நின்கிளை மருங்கின் சேறிஆயின்
அம்மலை கிழவோற்கு உரைமதி இம்மலைக்
கானக் குறவர் மடமகள்
ஏனல் காவல் ஆயினள் எனவே.

தெளிவுரை

"வளைந்த தினைக் கதிர்களைக் கொய்து பசியாறும் சிவந்த வாயைக் கொண்ட பச்சைக் கிளியே! அஞ்சாதே! நீ கதிர்களைக் கொய்வதால் விரட்டுவர் என அஞ்சாது நீ விரும்பிய மட்டும் கதிர்களை உணவாகக் கொள். உன் தேவை முடிந்த பின்பு, எனக் குற்ற தேவையை நீ நிறைவு செய்யுமாறு உன்னைக் கைதொழுது வேண்டுகிறேன். என் தேவை என்னவெனில், காய்கள் பலவாகக் காய்க்கின்ற பலா மரங்கள் மிக்க சாரலைக் கொண்ட என் தலைவரது நாட்டில் உள்ள உன் உறவினரைக் காணச் சென்றால் அங்கு என் தலைவரையும் கண்டுவர வேண்டும் என்பதே. அவரைக் காணும்போது, 'இம்மலைக் காட்டிலுள்ள தினைப் புனத்திற்குக் குறவர் மகள் மீண்டும் வந்து காவல் காத்து நிற்கின்றாள்' என்பதை மட்டும் சொல்!" எனத் தலைவி கிளியை இரந்து வேண்டினாள்.

கருத்து

கிளியே! எனக்காக நீ அவரிடம் சென்று நான் தினைப்புனங் காவல் செய்திருப்பதைச் சொல்!

விளக்கம்

கிளிகளே! எனக்காக அஞ்ச வேண்டாம். நீங்கள் விரும்பிய மட்டும் தினைக் கதிர்களை உண்ணுங்கள். ஆனால் ஒன்று, நீங்கள் திரும்பிச் செல்லும்போது எனக்காக ஒன்று செய்ய வேண்டுமெனக் கைதொழுது வேண்டுகிறேன். பலா மரங்கள் நிறைந்த சாரலைக் கொண்ட என் தலைவர் நாட்டில் அவரைக் கண்டு நான் இம்மலைச் சாரல் புனத்தில் தினைக்காவல் பூண்டுள்ளேன் என்ற செய்தியைச் சொல்லுங்கள்.

இறைச்சி

என்னைக் கைவிட்ட கொடுமையைக் கொண்டவருடைய சாரலாயிருந்தும் அச்சாரலிலுள்ள பலா மரங்கள் பிறர்க்கும் பயன்படுமாறு நிறையக் காய்க்கின்றனவே! இஃதென்ன இயல்பு! என்பது இறைச்சிப் பொருள்.

சொற்பொருள்

1. கொடுங்குரல் - வளைந்த தினைக்கதிர்; குறைந்து - கொய்த.
2. ஆர்பதம் - உணவு.
4. இரப்பல் - வேண்டுகிறேன்.
5. பல்கோள் - பல காய்களைக் காய்க்கும்.
6. கிளை - சுற்றம், இனம்; சேறிஆயின் - சேர்வையாயின்.
7. உரைமதி - சொல்.
8. மடமகள் - இளமையான மகள்.
9. ஆயினள் - ஆனாள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 288 **கபிலர்**

தினை : குறிஞ்சி

கூற்று

கிளிகள் புனத்தின்கண் படியாநின்றனவென்று தலைமகளைக் காக்க ஏவிய வழி, அதனையறிந்த தலைமகன் உவந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

விளைந்த தினைப்புனத்தில் படியவரும் கிளிகளை ஓட்டுவதற்குத் தலைவி அனுப்பப்பட இருக்கிறாள் என்னும் செய்தி அறிந்து தலைவன் மகிழ்ந்து தன் நெஞ்சுக்குக் கூறியது.

நன்றே செய்த உதவி நன்றுதெரிந்து
யாம்எவன் செய்குவம் நெஞ்சே! காமர்
மெல்இயல் கொடிச்சி காப்பப்
பல்குரல் ஏனல் பாத்தருங் கிளியே.

தெளிவுரை

நெஞ்சமே! அழகிய மென்மையான இயல்பினைக் கொண்ட குறமங்கை, நெருங்கிய பல கதிர்களைக் கொண்ட தினைப் புனத்தில் பரவிப் படியும் கிளிகளை விரட்ட வரவிருக்கின்றாள். இக்கிளிகள் நமக்குச் செய்த உதவி மிகவும் பெரியது. அவை

செய்த உதவியினை நன்குணர்ந்த நாம் அக்கிளிகட்கு என்ன கைம்மாறு செய்வது?

கருத்து

நெஞ்சே! புனங்காக்கத் தலைவியை வரச்செய்த கிளிகட்கு என்ன உதவி செய்யினும் அஃது அவை நமக்குச் செய்த உதவிக்கு ஈடாகா.

விளக்கம்

தலைவியைத் தினைப்புனங் காக்க அனுப்பவிருப்பதைத் தலைவன் அறிந்தான். எங்ஙனம் இனி அவளைக் கூடுவது என்றெண்ணியிருந்தவன், தலைவி வருகை பெருவாய்ப்பாய் அமைந்துள்ளதைத் தன் நெஞ்சிற்குச் சொல்லி மகிழ்கின்றான்.

சொற்பொருள்

1. நன்று தெரிந்து - நன்மையைத் தெரிந்து.
2. எவன் - என்ன; செய்குவம் - செய்வோம்; காமர் - அழகிய.
3. மெல் இயல் - மென்மையான இயல்பு.
4. குரல் - கதிர்; ஏனல் - தினை; பாத்தரும் - பரவலாய்ப் படியும்.

தோழி கூற்று

அகநானூறு 18 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, இரவு வருவானைப் 'பகல் வா' என்றது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்து செல்லும் தலைவனைப் பகலில் வா எனத் தோழி கூறியது.

நீர்நிறம் கரப்ப, ஊழுறுபு உதிர்ந்து,
பூமலர் களுலிய கடுவரல் கான்யாற்று,
கராஅம் துஞ்சும் கல்உயர் மறிசுழி
மராஅ யானை மதம்தப ஒற்றி,
5 உராஅ ஈர்க்கும் உட்குவரு நீத்தம் –

கடுங்கண் பன்றியின் நடுங்காது துறந்து,
நாம அருந்துறைப் போ்தந்து, யாமத்து
ஈங்கும் வருபவோ? ஓங்கல், வெற்ப!
ஒருநாள் விழுமம் உறினும், வழிநாள்
வாழ்குவள் அல்லள், என்தோழி; யாவதும்
ஊறுஇல் வழிகளும் பாில வழங்குநர்
நீடுஇன்று ஆக இழுக்குவர்; அதனால்,
உலமரல் வருத்தம் உறுதும்எம் படப்பைக்
கொடுந்தேன் இழைத்த கோடுஉயர் நெடுவரை,
பழம்தூங்கு நளிப்பின் காந்தள்அம் பொதும்பில்,
பகல்நீ வரினும் புணர்குவை – அகல்மலை
வாங்குஅமைக் கண்இடை கடுப்ப,யாய்
ஒம்பினள் எடுத்த தடமென் தோளே.

தெளிவுரை

"உயர்ந்த மலைநாட்டுக்குத் தலைவனே!

"ஆற்றுநீரின் நிறம் தெரிய இயலாதவாறு முதிர்வுற்ற மலர்கள் மிதந்து நீர்ப்பரப்பை மறைக்கின்றன. நீர் வேகமாய்ப் பாயும் காட்டாற்று வெள்ளம், முதலை தங்கும் உயர்ந்த கல்லில் மோதிச் சுழியை உண்டாக்குகிறது. அச்சுழி, இனத்தோடு மருவாது தனித்துத் திரியும் களிற்றுயானையின் மதம் கெடுமாறு அதனைப் பற்றி இழுத்துச் செல்கின்றது. அத்தகைய அச்சம் தரும் காட்டாற்று வெள்ளத்தைப் பன்றி நடுங்காது நீந்திக் கடப்பது போல ஆற்றைக் கடந்து நள்ளிரவில் உன்னைப்போல் இங்கு வருவாருளரோ?

"(இரவில் வரும்போது) ஒருநாள் உனக்குத் துன்பம் நேர்ந் தாலும் மறுநாள் என் தோழி உயிரோடு இருக்கமாட்டாள்.

"எவ்வகையான இடையூறும் இல்லாத வழியாயினும் அங்குப் பலமுறை சென்று வருவோரே (எதிர்பாராமல்) திடீரெனத் தவறித் துன்புறுவதுமுண்டு. ஆகையால், இரவில் நீ வரும் போதெல்லாம் நாங்கள் மனங்கலங்கி வருந்த வேண்டி யிருக்கிறது.

"எம் தோட்டத்திற்கு அடுத்து உயர்ந்த உச்சிகளைக் கொண்ட மலையில், பழங்கள் தொங்குகின்ற மரங்கள் செறிந்த இடம் இருக்கின்றது. அங்கே காந்தள் பூத்த புதரும் உள்ளது. அவ் விடத்திற்கு நீ பகற்பொழுதில் வந்தால், அகன்ற மலையில் வளர்ந்த மூங்கிலின் கணுக்களுக்கிடையேயுள்ள வழுவழுப்பான இடம்போல் அழகு ததும்பும் என் தாய் போற்றி வளர்த் துள்ள தலைவியின் பெரிய மென்மை வாய்ந்த தோள்களை அடையலாம்."

கருத்து

'வெற்ப! யானையையும் அதன் மதம் கெடுமாறு இழுத்துவரும் வெள்ளத் தினைக் கடந்து இவ்விரவில் வரலாமா? நீ ஒருநாள் வழியிடைத் துன்பம் உறினும் அடுத்த நாள் தலைவி உயிரோடிராள். எம் மலையில் பழமரங்கள் நிறைந்துள்ள இடத்தில், காந்தள் மலர் பூத்துள்ள சோலையில் நீ பகற்போதில் வந்தாலும் தலைவியின் மென்மையான தோளினைப் பொருந்தி மகிழலாம்.'

குறிப்பு

இரவுக்குறி விலக்கிப் பகற்குறி உடன்பட்டாள்போலத் தோழி கூறு கின்றாள். என்றாலும், தேன் அழிக்க வருவாராலும், பழம் கொய்ய வருவாராலும், பூப்பறிக்க வருவாராலும் பகற்குறியும் அரிதாம் எனக் குறிப்பால் மறுத்தாள் எனலாம்.

பகல் நேரத்தில் வந்தாலும், அந்நேரத்திலும் உள்ள தடங்கல்களை எடுத்துக் கூறி, இவையெல்லாம் நீங்கத் திருமணம் செய்துகொள்வதே சிறந்தது என்று சொல்லாமல் சொல்லுகிறாள், தோழி!

சொற்பொருள்

1. கரப்ப - மறைய; ஊழ் உறுபு - முதிர்ந்து.
2. களுலிய - நெருங்கிய; கடுவரல் - விரைந்து வருகின்ற; கான்யாறு - காட்டாறு.
3. கராஅம் - முதலை; கல்உயர் - உயர்ந்த கல்; சுழி - நீர்ச்சுழி.
4. மராஅ - இனத்தோடு மருவாத; தப - கெட; ஒற்றி - மோதி இழுத்து.
5. உராஅ ஈர்க்கும் - வலிமையோடு இழுத்துச் செல்லும்; உட்கு வரு - அச்சம் தரும்; நீத்தம் - வெள்ளம்.
6. பன்றியின் - பன்றியைப் போல; துறந்து - நீந்தி.

7. நாமம் - அச்சம்; பேர் தந்து - தாண்டி.
8. ஈங்கு - இங்கு; ஓங்கல் - மலை; வெற்ப - தலைவ!
9. விழுமம் - துன்பம்; உறினும் - நேர்ந்தாலும்; வழிநாள் - மறுநாள்.
11. ஊறுஇல் - இடையூறு இல்லாத; பயில - பலமுறை.
12. நீடு இன்று ஆக - நீடுதல்இலையாக (எதிர்பாராது); இழுக்குவர் - துன்புறுவர்.
13. உலமரல் - துன்பம்; படப்பை - தோட்டம்.
14. கொடுந்தேன் - வட்டமான தேனடை; கோடு - உச்சி; வரை - மலை.
15. தூங்கும் - தொங்குகின்ற; நளிப்பு - மரச்செறிவு; பொதும்பு - புதல்.
16. புணர்குவை - பொருந்துவை.
17. வாங்கு அமை - வளைந்த மூங்கில்; கண் - கணு; இடை - நடு; கடுப்ப - ஒப்ப; யாய் - அன்னை.
18. ஓம்பினள் எடுத்த - போற்றி வளர்த்த; தட - பெரிய.

தோழி கூற்று

அகநானூறு 80 **மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்து செல்லும் தலைவனை இனிப் பகலில் வருமாறு தோழி கூறியது.

கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும்
இருங்கழி இட்டுச் சுரம்நீந்தி, இரவின்
வந்தோய் மன்ற தண்கடல் சேர்ப்ப!
நினக்குஎவன் அரியமோ, யாமே? எந்தை
புணர்திரைப் பரப்பகம் துழைஇத் தந்த
பல்மீன் உணங்கல் படுபுள் ஓப்புதும்
முண்டகம் கலித்த முதுநீர் அடைகரை
ஒண்பல் மலரக் கவட்டுஇலை அடும்பின்

செங்கேழ் மென்கொடி ஆழி அறுப்ப,
இனமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ,
மின்இலைப் பொலிந்த விளங்குஇணர் அவிழ்பொன்
தண்நறும் பைந்தாது உறைக்கும்
புன்னைஅம் கானல், பகல்வந் தீமே.

தெளிவுரை

குளிர்ச்சி பொருந்திய கடற்கரைக்குத் தலைவனே!

வளைந்த காலினைக் கொண்ட முதலையும், கொம்பினைக் கொண்ட சுறாமீனும் உலவித் திரியும் கரிய உப்பங்கழிகளைக் கொண்ட அரிய வழிகளைக் கடந்து இரவில் வந்துள்ளாய்! (இனி அங்ஙனம் வாராதே!) யாம் உமக்கு எவ்வகையில் அரியவர் ஆனோம்?

கடலையடுத்துள்ள கரையில் நீர்முள்ளிச்செடிகள் தழைத்து வளர்ந்திருக்கும்; ஒள்ளிய மலர்களையுடையதும், கவடுபட்ட இலைகளைக் கொண்டதுமான செந்நிறமுள்ள அடும்பங் கொடிகள் படர்ந்திருக்கும். அக்கொடிகளை அறுத்துக்கொண்டு மணிகள் பல அணிந்த ஓரினமாகிய குதிரைகள் பூட்டப்பட்ட உன்னுடைய நெடிய தேரினைச் செலுத்தி வருகிறாய்!

ஒளி வீசும் இலைகளால் பொலிவுற்றதும், பொன்போலும் குளிர்ந்த தாதுக்களை உதிர்க்கின்ற பூங்கொத்துகளைக் கொண்டதுமாகிய புன்னைமரச் சோலைக்குப் பகல்வேளையில் அத் தேரினைச் செலுத்தி வா!

அங்கு அலைகள் பொருந்திய கடலிலிருந்து எம் தந்தையால் கொண்டு வரப்பட்டுக் காய வைக்கப்பட்ட மீனில் வந்து படியும் பறவைகளை யாம் ஓட்டிக்கொண்டிருப்போம். அங்கு உன்னைச் சந்திப்பது எளிது.

கருத்து

'தலைவ! பகலில் உலர வைக்கப்பட்ட மீனைக் கவர வரும் பறவைகளை ஓட்டிக்கொண்டிருப்பாள், தலைவி. ஆதலின், நீ இரவில் வருவதை நிறுத்தி இனிப் பகலில் வா.'

விளக்கம்

தலைவ! யாம் உமக்கு எவ்வகையில் அரியவர் ஆனோம்? முதலையும் சுறாவும் திரியும் அரிய வழியில் இரவில் வருகிறாய். எம் தந்தையால் கடலிலிருந்து கொண்டு வரப்பட்டுக் காய வைக்கப்பட்ட மீனில் பறவைகள் படியாது புன்னைமரச்சோலை யில் பகலில் ஓட்டிக்கொண்டிருப்போம். ஆதலின், உன் நெடுந் தேரைச் செலுத்தி அங்கே வா. (இனி இரவில் வாராதே.)

குறிப்பு

அடுப்பங்கொடிகளைச் சக்கரம் அறுப்பதால் தேர் வந்த வழியினைப் பிறர் அறிவர்; ஆதலின், பகற்குறியும் இயலாது எனக் குறிப்பால் உணர்த்தி வரைவுகடாவினாள் என்பதாம்.

சொற்பொருள்

1. கொடுந்தாள் - வளைந்த கால்; கோட்டுமீன் - கொம்பினைக் கொண்ட சுறாமீன்.
2. இட்டுச் சுரம் - நெருங்குதற்கு அரிய வழி; நீந்தி - கடந்து.
3. தண்கடல் - குளிர்ந்த கடல்.
4. எவன்? - எவ்வாறு?
5. புணர்திரைப் பரப்பகம் - பொருந்தும் அலைகளைக் கொண்ட கடல்; துழைஇ - துழாவி.
6. உணங்கல் - வற்றல்; படுபுள் - படியும் பறவைகள்; ஓப்புதும் - ஓட்டுவோம்.
7. முண்டகம் - நீர்முள்ளி; கலித்த - தழைத்த; முதுநீர் - கடல்.
8. கவட்டிலை - கவடுபட்ட இலை; அடும்பு - அடும்பங்கொடி.
9. செங்கேழ் - சிவப்பு நிறம்; ஆழி - சக்கரம்.
10. இனமணி - மணிகள் பல (அணிந்த); புரவி - குதிரை; கடைஇ - செலுத்தி.
11. மின்இலை - ஒளி வீசும் இலை; விளங்குஇணர் - விளங்கும் பூங்கொத்து; அவிழ்பொன் - பொன்துகள் உதிர்தல்போல.
12. தண் - குளிர்ந்த; நறும் - நறுமணமுள்ள; தாது - பூந்தாது; உறைக்கும் - சொரியும்.
13. அம் கானல் - அழகிய கடற்கரைச்சோலை.

தோழி கூற்று

அகநானூறு 182 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி இரா வருவானைப் 'பகல் வா' என்றது.

கூற்று விளக்கம்

"குன்ற நாட! மழை பொழியும் நள்ளிரவில் நீ தனியாய் வரும் வழியின் கேடுகளை நினைந்து எப்பொழுதும் இவள் கண்களில் நீர் மல்க அழுது கொண்டேயிருக்கிறாள். ஆதலால், பெரிய மலையை அடுத்துள்ள சாரலில் நீ நண்பகலில் வரவேண்டும்" என்று தோழி கூறியது.

பூங்கண் வேங்கைப் பொன்இணர் மிலைந்து,
வாங்குஅமை நோன்சிலை எருத்தத்து இரீஇ,
தீம்பழப் பலவின் சுளைவிளை தேறல்
வீளை அம்பின் இளையரொடு மாந்தி,
ஒட்டுஇயல் பிழையா வயநாய் பிற்பட,
வேட்டம் போகிய குறவன் காட்ட,
குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர,
முளவுமாத் தொலைச்சும் குன்ற நாட!
அரவுஎறி உருமோடு ஒன்றிக் கால்வீழ்த்து
உரவுமழை பொழிந்த பானாள் கங்குல்,
தனியை வந்த ஆறுநினைந்து, அல்கலும்
பனியொடு கலுழும்இவள் கண்ணே; அதனால்,
கடும்பகல் வருதல் வேண்டும் தெய்ய
அதிர்குரல் முதுகலை கறிமுறி முனைஇ,
உயர்சிமை நெடுங்கோட்டு உகள, உக்க
கமழ்இதழ் அலரி தாஅய் வேலன்
வெறிஅயர் வியன்களம் கடுக்கும்
பெருவரை நண்ணிய சார லானே.

தெளிவுரை

வேட்டைக்குச் சென்ற குறவன், அழகிய இடத்தில் வளர்ந்து நிற்கும் வேங்கைமரத்தின் பொன்போன்ற பூங்கொத்துகளைச்

சூடிக்கொண்டான்; மூங்கிலால் செய்யப்பட்ட வலிமையான வளைந்த வில்லினைத் தோளில் மாட்டிக்கொண்டான்; இனிய பலாச்சுளையில் விளைந்த தேனைச் சீழ்க்கை ஒலியுடன் விரைந்து பாயும் அம்பினைக் கைக்கொண்டுள்ள தன் ஏவல் இளைய ருடன் பருகினான். தப்பாது விலங்குகளைத் துரத்திப் பிடிக்கும் வலிமையான வேட்டை நாய்கள் பின்னே வர முன்னே சென்றான். காட்டில் குளிர்ச்சியான மல்லிகைப்புதரில் மறைந் திருக்கும் முள்ளம்பன்றியினைக் கொன்று வீழ்த்தினான். அதனால் குருதியோடு மல்லிகைப்புதர் அசைந்தது. இத்தகைய காட்சிகள் கொண்ட குன்றுகளோடு கூடிய நாட்டிற்குத் தலைவனே!

ஒளி வீசிப் பாம்பினைக் கொல்லும் இடி முழக்கத்தோடு கூடிய மேகம் கால் இறங்கி மழைநீரைச் சொரிகின்ற நள்ளிரவில் நீ தன்னந்தனியாய் வருகின்றாய்; வரும் வழியில் ஏற்படக்கூடிய கேடுகளை நினைந்து இவள் எப்பொழுதும் கண்களில் நீர் வழிய அழுகிறாள்.

அதிரும் குரல் கொண்ட முதுமையான ஆண்குரங்கு, மிளகுக் கொடியின் தளிரை உண்டு, அதனை வெறுத்து உயர்ந்த உச்சி களைக் கொண்ட நெடுமலைச் சிகரங்களிலுள்ள மரங்களில் பாய்ந்து தாவும்; அதனால் மணம் கமழும் இதழ்கள் பொருந்திய பூக்கள் உதிர்ந்து எங்கும் பரவிக் கிடக்கும். (அக்காட்சி) வேலன் வெறியாடும் பெரிய களத்தினைப் போன்றிருக்கும். அத்தகைய பெரிய மலைச்சாரலில் இனி நீ நண்பகல் நேரத்தில் வர வேண்டும்.

கருத்து

'குன்ற நாட! நள்ளிரவில் நீ தனியனாய் வரும் வழியின் ஏதத்தினை நினைந்து தலைவி எப்பொழுதும் கண்ணீர் சிந்தி அழுகிறாள். அதனால் பெரிய மலையை அடுத்துள்ள சாரலுக்கு நண்பகலில் நீ வரவேண்டும்.'

குறிப்பு

இரவுக்குறி மறுத்த வாய்பாடாயினும், 'நீ தனியனாய் வரும் வழியை நினைந்து தலைவி அழுகிறாள்' என்றலின், 'ஆறு பார்த்துற்ற அச்சம் கூறி வரைவு கடாவினாள்' என்பது குறிப்பு.

உள்ளுறை

குறவன் புதரில் மறைந்திருக்கும் பன்றியைக் கொல்ல, அதன் குருதி பட்டுக் களங்கமுற்றுப் புதர் அசைகிறது என்னும் தொடர்மூலம், தலைவன் தலைவியோடு களவொழுக்கத்தில் ஈடுபட்டதனால் அவள் குடிக்குப் பழி ஏற்பட்டு, அஃது எங்கும் பேசப்படுகிறது. அப்பழி நீங்கும்பொருட்டுத் தலைவன் தலைவியை வரைதல் வேண்டும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. பூங்கண் - அழகிய இடம்; இணர் - பூங்கொத்து; மிலைந்து - சூடி.
2. வாங்கு அமை - வளைந்த மூங்கில்; நோன்சிலை - வலிமையான வில்; எருத்ததத்து - தோளில்; இரீஇ - தொங்கவிட்ட, மாட்டிக் கொண்ட.
3. பலவின் - பலாப்பழத்தின்; தேறல் - தேன்.
4. வீளை - சீழ்க்கை ஒலி; இளையர் - ஏவலாளர்; மாந்தி - அருந்தி.
5. ஓட்டு இயல் பிழையா - துரத்திப் பற்றும் இயல்பில் தப்புதலில்லாத; வயநாய் - வலிமையான நாய்; பிற்பட - பின்வர.
6. வேட்டம் - வேட்டை; காட்ட - காட்டில்.
7. குளவி - காட்டுமல்லிகை; துயல்வர - அசைந்திட.
8. முளவு மா - முள்ளம்பன்றி; தொலைச்சும் - கொன்று வீழ்த்தும்.
9. அரவு எறி - பாம்பினைக் கொல்லும்; உரும் - இடி; கால் வீழ்த்து - கால் இறங்கி.
10. உரவு மழை - வலிய மேகம்; பானாள் - நள்ளிரவு.
11. தனியை - தன்னந்தனியனாய்; ஆறு - வழி; அல்கலும் - எப் பொழுதும்.
12. பனியொடு - நீரொடு; கலுழும் - அழும்.
13. கடும்பகல் - நண்பகல்; தெய்ய - அசைச்சொல்.
14. அதிர்குரல் - அதிரும் குரலைக் கொண்ட; முதுகலை - முதுமையான ஆண் குரங்கு; கறி முறி - மிளகுத்தளிர்; முனைஇ - வெறுத்து.
15. சிமை - உச்சி; உகள - தாவ. உக்க - உதிர்ந்த.
16. அலரி - பூக்கள்; வேலன் - பூசாரி; தாஅய் - பரவி.
17. வெறி அயர் - வெறியாடல் நிகழ்த்தும்; வியன் - அகன்ற, பரந்த; கடுக்கும் - போன்றிருக்கும்.
18. நண்ணுதல் - நெருங்குதல்; சாரல் - மலைச்சாரல்.

தோழி கூற்று

அகநானூறு 240 **எழூஉப்பன்றி நாகன் குமரனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி இரவுக்குறி வந்த தலைமகற்குப் பகற்குறி நேர்ந்தது.

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்வதில் கருத்தின்றித் தலைவன் நாள்தோறும் இரவில் வந்து சென்றான். அது கண்ட தோழி, இரவு நேரத்தில் வருவதால் எதிர்ப்படும் இடையூறுகளை எடுத்துக் கூறி, 'பகலில் வா' எனக் கூறியதோடு பகற்குறி இடத்தையும் கூறியது.

செவ்வீ ஞாழல் கருங்கோட்டு இருஞ்சினைத்
தனிப்பார்ப்பு உள்ளிய தண்பறை நாரை
மணிப்பூ நெய்தல் மாக்கழி நிவப்ப,
இனிப்புலம் பின்றே கானலும்; நளிகடல்
திரைச்சுரம் உழந்த திண்திமில் விளக்கில்
பல்மீன் கூட்டம் என்ஐயர்க் காட்டிய,
எந்தையும் செல்லுமார் இரவே; அந்தில்
அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி,
யாயும் ஆயமோடு அயரும்; நீயும்,
தேம்பாய் ஒதி திருநுதல் நீவி,
கோங்கு முகைத்தன்ன குவிமுலை ஆகத்து,
இன்துயில் அமர்ந்தனை ஆயின், வண்டுபட
விரிந்த செருந்தி வெண்மணல் முடுக்கர்,
பூவேய் புன்னைஅம் தண்பொழில்,
வாவே தெய்ய, மணந்தனை செலற்கே.

தெளிவுரை

"தலைவ! நீலமணி போலும் நெய்தற்பூக்களைக் கொண்ட கரிய கழியில் நாரை ஒன்று தாழப் பறந்துகொண்டிருந்தது. அதுவும் சிவந்த பூவினைக் கொண்ட ஞாழல் மரத்தின் கரிய கொம்பின் பெரிய கிளையில் இரைக்காகக் காத்திருக்கும் தன்

குஞ்சினை நினைத்து மேலெழுந்து பறந்து சென்றுவிட்டது. அதனால் கடற்கரைச்சோலை இப்போது தனிமையுற்றது.

"செறிந்த அலைகளைக் கொண்ட கடற்பரப்பில் திரிந்து, வருந்தி, திண்ணிய படகின் விளக்கொளியில் பலவகை மீன் இனங்கள் வாழ்கின்ற இடங்களை என் அண்ணன்மார்க்குக் காட்டுவதற்காக என் தந்தையும் இரவில் கடற்கரைக்குச் சென்றுள்ளார்.

"என் தாயும் தண்ணிய துறையில் உள்ள தெய்வத்தைப் போற்றித் தொழுது வழிபடத் தன் தோழியருடன் சென்றுள்ளாள்.

"நீயும் தேன் சொரியும் கூந்தலைக் கொண்ட தலைவியின் அழகிய நெற்றியைத் தடவி, கோங்கின் அரும்பு போன்ற குவிந்த இளைய முலையினைக் கொண்ட மார்பகத்தே இனிதே துயின்று, அவளைக் கூடி இன்புற்றுச் செல்வதற்கு விரும்பு கின்றனை. (தடை பல இருப்பதால் இரவு நேரம் ஏற்றதன்று.)

"அவளுடன் கூடியிருக்க விரும்பினால், வண்டு மொய்க்கும்படி செருந்தி மலர்கள் மலர்ந்திருக்கும் வெண்ணிற மணல்மேட்டின் மூலையில், பூக்கள் நிறைந்த புன்னை மரங்களுள்ள அழகிய குளிர்ந்த சோலைக்கு(ப் பகலில்) வருக!"

கருத்து

'தலைவ! நீ தலைவியுடன் சேர்ந்திருக்க இரவில் தடைகள் பல இருப்பதால் இனிப் பகலில் வா.'

விளக்கம்

"கானல் தனிமையுற்றது; கடலுக்குச் சென்ற தந்தை இரவில் திரும்பி வருவார். தாயும் தெய்வத்தை வழிபடத் தண்ணிய துறைக்குச் சென்றுள்ளாள். நீயும் தலைவியின் குவிந்த முலை யிடத்தே இனிய துயிலை விரும்பியிருக்கின்றாய். அவளை நீ அடைய வேண்டுமானால் பகலில், வெள்ளிய மணல் முடுக்கில், பூக்கள் நிறைந்துள்ள புன்னைமரச் சோலைக்கு வருக" என இரவுக்குறி வந்த தலைவனிடம் தோழி கூறுகிறாள்.

குறிப்பு

தந்தையும் தாயும் இரவு வீட்டிலில்லாது வெளியே இருப்பது இரவுக்குறித் தடைகள். (எவ்வேளையிலும் அவர்கள் திரும்பலாம்.)

'மணல் முடுக்கில் பூக்கள் நிறைந்த புன்னைமரச் சோலைக்கு வா' என்பது, தோழி தலைவனுக்குப் பகற்குறி இடம் காட்டியது.

சொற்பொருள்

1. செவ்வீ - சிவந்த பூ; ஞாழல் - ஞாழல் மரம்; கருங்கோடு - கரிய கொம்பு; இருஞ்சினை - பெரிய கிளை.
2. தனிப் பார்ப்பு - தனியேயிருக்கும் குஞ்சு; உள்ளிய - நினைத்த; தண்பறை - தணிய (தாழ)ப் பறக்கும்.
3. மணி - நீலமணி; நெய்தல் - நெய்தல் பூ; மாக்கழி - கரிய கழி; நிவப்ப - மேலெழுந்து (நாரையும் பறந்திட).
4. புலம்பின்று - தனிமையுற்றது; நளி - நெருக்கமான (அலைகளைக் கொண்ட).
5. திரைச்சுரம் - அலையாகிய வழியில்; உழந்த - வருந்திய; திமில் - படகு.
6. என் ஐயர் - என் அண்ணன்மார்; காட்டிய - காட்டுவதற்காக.
7. செல்லுமார் (கடற்கரைக்குச்) சென்றுள்ளார்; அந்தில் - அவ்விடம்.
8. அணங்கு - தெய்வம்; பனித்துறை - குளிர்ந்த துறை; ஏத்தி - வணங்கி.
9. ஆயம் - தோழியர்; அயரும் - சிறப்புச் செய்யும்.
10. தேம் - தேன்; ஓதி - கூந்தல்; நீவி - தடவி.
11. கோங்கு முகைத்தன்ன - கோங்க மரம் அரும்பினாலொத்த; ஆகம் - மார்பு.
12. துயில் - உறக்கம்; அமர்தல் - விரும்புதல்; வண்டுபட - வண்டு மொய்க்க.
13. விரிந்த - மலர்ந்த; செருந்தி - செருந்தி மரம்; முடுக்கர் - மூலை.
14. பூவேய் - பூக்கள் நிறைந்த; பொழில் - சோலை.
15. வா - வருக; மணந்தனை செலற்கு - கூடிச் செல்வதற்கு.

தோழி கூற்று

அகநானூறு 308 **பிசிராந்தையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவு வருவானைப் பகல் வருக என்றது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியினால் ஏற்படும் ஏதங்கள் பலவற்றையும் கருதி, தோழி, தலைவனைப் பகலில் வருமாறு கூறியது.

உழுவையொடு உழந்த உயங்குநடை ஒருத்தல்
நெடுவகிர் விழுப்புண் கழாஅ, கங்குல்
ஆலி அழிதுளி பொழிந்த வைகறை,
வால்வெள் அருவிப் புனல்மலிந்து ஒழுகலின்,
இலங்குமலை புதைய வெண்மழை கவைஇ,
கலம்சுடு புகையின் தோன்றும் நாட!
இரவின் வருதல் எவனோ? பகல்வரின்,
தொலையா வேலின் வண்மகிழ் எந்தை
களிறுஅணந்து எய்தாக் கல்முகை இதணத்து,
சிறுதினைப் படுகிளி எம்மொடு ஒப்பி,
மல்லல் அறைய மலிர்சுனைக் குவளைத்
தேம்பாய் ஒண்பூ நறும்பல அடைச்சிய
கூந்தல் மெல்அணைத் துஞ்சிப் பொழுதுபட,
காவலர்க் கரந்து, கடிபுனம் துழைஇய
பெருங்களிற்று ஒருத்தலின், பெயர்குவை,
கருங்கோற் குறிஞ்சி,நும் உறைவுஇன், ஊர்க்கே.

தெளிவுரை

"கண்ணுக்குத் தெரியும் மலை மறையுமாறு வெண்மேகங்கள் சூழ்ந்து, பார்ப்பவர்க்கு மட்கலம் சுடப்படுகின்ற புகையிலிருந்து எழுகின்ற புகைபோலத் தோற்றமளிக்கும் மலைநாட்டுக் குரியவனே!

"புலியோடு போர் செய்த ஆண்யானை தளர்ந்த நடையுடன் சென்றது. அந்த யானையின் நீண்ட பிளப்பாகிய விழுப்

புண்ணினைக் (மத்தகப் புண்ணினைக்) கழுவிடும் வகையில் இரவில் ஆலங்கட்டியுடன் பெருமழை பெய்தது; அவ்வாறு பெய்த மழையால் காலையில் மிகவும் வெண்மையான அருவிநீர் பெருகி வந்தது. பெரும் துன்பம் நேர்வதற்கு இடனான இந்த இரவில் நீ வருவது ஏன்?

"ஒருபொழுதும் தப்பாத வெற்றியினைத் தரும் வேலினையும், வளம் நிறைந்த பெருமகிழ்ச்சியினையும் கொண்டவர், எம் தந்தை. அவர், உயர்ந்த ஆண்யானையும் கை உயர்த்திப் பற்ற இயலாத உயரத்தில், மலைக்குகையின் மேல் எமக்குப் பரண் அமைத்துத் தந்துள்ளார். நீ பகலிலே வருவாயானால் பரண்மேல் எம்முடனிருந்து தினைப்புனத்தில் விழுகின்ற கிளிகளை ஓட்டலாம். வளமான பாறைக்கல்லிற்கு அருகே அமைந்துள்ள நீர் நிறைந்த சுனையில் பூத்த மணங்கமழும் குவளை மலர்களைச் சூடிய தலைவியின் கூந்தல் மெல்லணையில் இனிது துயிலலாம். இவ்வாறு பகற்பொழுது இனிதாய்க் கழிந்த பின், காவலர்க்குத் தெரியாமல் தினைப்புனத்தைச் சுற்றி வளைத்து உட்புகுந்து தினையை மேய்ந்து செல்லும் பெரிய ஆண்யானைபோல நீயும், கரிய அடித்தண்டினைக் கொண்ட குறிஞ்சி மலர்களைக் கொண்ட வசித்தற்கு இனிய உன் ஊருக்குச் செல்லலாம். எனவே, இனிப் பகலில் வருக!"

கருத்து

இரவில் வழியில் காட்டுயானை திரிதலையும், ஆலங்கட்டியோடு மழை பொழிவதையும் கூறி, வழியின் ஏதத்திற்குத் தலைவி அஞ்சுவதை உணர்த்தித் தலைவன் இரவுக்குறியை நீக்கிப் பகலில் வரவேண்டும் என்கிறாள், தோழி.

குறிப்பு

பகலில் வந்து இன்புற்றுச் சென்றாலும், தன் தந்தையின் மேலாண்மை யினையும் காவலர்கள் இருப்பதையும் கூறி எச்சரித்துப் பகலில் கூடுதலும் இயலாது என்பதையும் புலப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. **உழுவை - புலி; உழந்த - போர் செய்தமையால் தளர்ந்த; உயங்கு நடை - வருந்திய நடை; ஒருத்தல் - ஆண்யானை.**

2. நெடுவகிர் - நீண்ட பிளப்பு; விழுப்புண் - மத்தகப்புண்; கழாஅ - கழுவி; கங்குல் - இரவில்.
3. ஆலி - ஆலங்கட்டி; அழிதுளி - மிக்க துளி; பொழிந்த - பெய்தமையால்; வைகறை - விடியற்காலை.
4. வால் வெள் - மிக்க வெண்மையான; மலிந்து - நிறைந்து.
5. மலை புதைய - மலை மறைய; வெண் மழை - வெண் மேகம்; கவைஇ - சூழ்ந்து.
6. கலஞ்சுடுபுகை - மட்கலம் சுடப்படுவதால் எழும் சூளைப்புகை.
8. தொலையா வேல் - வெற்றி பெறுதலில் தப்பாத வேல்; வண்மகிழ் - வளம் நிறைந்த பெருமகிழ்ச்சி; எந்தை - எம் தந்தை.
9. அணந்து - மேல் நிமிர்ந்து; எய்தா - பற்ற முடியாத; கல்முகை - மலைக் குகையின் மேலுள்ள; இதணம் - பரண்.
10. படுகிளி - படியும் கிளி; ஓப்பி - ஓட்டி.
11. மல்லல் - வளம்; அறை - பாறை; மலிர் சுனை - நீர் நிறைந்த சுனை.
12. தேம்பாய் - தேன் ஒழுகும்; அடைச்சிய - சூட்டிய.
13. துஞ்சி - துயின்று; பொழுதுபட - பகற்பொழுது கழிய.
14. கரந்து - மறைந்து; கடிபுனம் - காவல் உள்ள புனம்; துழைஇய - வளைத்து உண்ட.
15. ஒருத்தல் - ஆண்யானை; பெயர்குவை - செல்வாய்.
16. குறிஞ்சி - குறிஞ்சிப்பூ; உறைவு இன் - தங்குதற்கு இனியதான.

தோழி கூற்று

கலித்தொகை 49 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

நீ இவ்வாறு வருகின்ற வரவு எமக்குத் துன்பத்திற்குக் காரணமாக நின்றதெனக் கூறி, இரவு வருவானைத் தோழி பகல் வருக என்றது.

கூற்று விளக்கம்

இரவிலே தலைவன் வந்து இன்பம் தருவது இனிதாயிருந்தாலும் அவன் வரும் வழியின் கொடுமையால் அவனுக்குத் தீங்கு நேருமோ எனத் தலைவி அஞ்சுகின்றாள்; அதனால் தலைவனிடம், 'இனி இரவில் வரல் வேண்டா; மலைச்சாரலுக்குப் பகலிலேயே வருக' என்கிறாள், தோழி.

கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கின் துஞ்சும் யானை,
நனவில்தான் செய்தது மனத்தது ஆகலின்,
கனவிற் கண்டு, கதும்என வெரீஇ,
புதுவ தாக மலர்ந்த வேங்கையை
'அது'என உணர்ந்து,அதன் அணிநலம் முருக்கிப்
பேணா முன்பின்தன் சினம்தணிந்து, அம்மரம்
காணும் பொழுதில் நோக்கல் செல்லாது,
நாணி இறைஞ்சும் நன்மலை நன்னாட!

தாழிசை

போதுஎழில் மலர்உண்கண் இவள்மாட்டு நீஇன்ன
காதலை என்பதோ இனிது–மற்று இன்னாதே,
மின்ஒரும் கண்ணாக, இடிஎன்னாய், பெயல்என்னாய்,
இன்னதோர் ஆரிடை, ஈங்குநீ வருவதை.

இன்புற அளித்தனை இவள்மாட்டு நீஇன்ன
அன்பினை என்பதோ இனிது–மற்று இன்னாதே,
மணங்கமழ் மார்பினை, மஞ்சுஇவர் அடுக்கம்போழ்ந்து,
அணங்குஉடை ஆரிடை, ஈங்குநீ வருவதை.

இருள்உறழ் இருங்கூந்தல் இவள்மாட்டு நீஇன்ன
அருளினை என்பதோ இனிது–மற்று இன்னாதே.
ஒளிறுவேல் வலன்ஏந்தி, 'ஒருவன்யான்' என்னாது,
களிறுஇயங்கு ஆரிடை, ஈங்குநீ வருவதை.
அதனால்–

சுரிதகம்

இரவில் வாரல், ஐய! விரவுவீ
அகல்அறை வரிக்கும் சாரல்,
பகலும் பெறுவை,இவள் தடமென் தோளே.

தெளிவுரை

வளைவான வரிகளைக் கொண்ட புலியைத் தாக்கி வென்ற யானை, அந்த அயர்ச்சியால், நீண்டுயர்ந்த மலைச்சாரலின் ஒரு பக்கம் படுத்துத் தூங்கியது. நனவிலே தான் செய்தது அதன்

மனத்திலே நிலைத்திருந்ததால் தூங்கிய யானை, கனவிலும் புலியைக் கண்டு துயில் கலைந்து எழுந்தது. எதிரே புது மலர்கள் நிறைந்திருந்த வேங்கை மரத்தினைப் புலி என்றே கருதி, அடங்காச் சினத்தோடு அதனைக் குத்திக் குலைத்த பின்னர்ச் சினம் தணியப்பெற்றது. தன்னிலை எய்தியதும் அது மரம் என்பதை அறிந்ததும் முகத்தைத் திருப்பிக்கொண்டு, வெட்கித் தலை குனிந்தபடியே சென்றது. அத்தகைய மலைநாட்டுக்குத் தலைவனே!

அழகிய மலர்போன்ற மையுண்ட கண்களைக் கொண்ட தலைவியிடம் நீ இவ்வளவு காதல் கொண்டிருப்பது இனிதே! ஆனால், இடியையும் மழையையும் பொருட்படுத்தாமல், மின்னலின் ஒளியினாலேயே வழி அறிந்துகொண்டு, இவ்வளவு கடுமையான வழியில் நீ வருவது எமக்குத் துன்பத்தைத் தருகிறது.

தலைவி இன்புறுமாறு நீ இவ்வளவு அன்புமிக்கவனாய் இருக்கின்றாய் என்பது இனிதே. ஆனால், மணங்கமழும் மார்புடன் மலையடுக்குகளின் இடைவழியில் அணங்குகள் உலவும் அஞ்சத்தக்க வழியில் நீ இங்கே வருவது எமக்குத் துன்பத்தைத் தருகிறது.

இருளைவிடக் கருமையான கூந்தலைக் கொண்ட தலைவியிடம் நீ இவ்வளவு கருணை கொண்டவனாய் இருக்கின்றாய் என்பது இனிதே. ஆனால், வேல் ஒன்றனை வலக்கையில் ஏந்தியவனாய், தனியாய் வருகின்றோமே என்று கருதாமல், காட்டுயானைகள் திரியும் அரிய வழியில் நீ இங்கே வருவது எமக்குத் துன்பத்தைத் தருகின்றது.

ஆதலால், ஐயனே! இனி நீ இரவில் வரல் வேண்டா. அகன்ற பாறைகளில் பலவகைப் பூக்களும் உதிர்ந்து அழகிய கோலம் செய்யும் மலைச்சாரலில் பெருமை வாய்ந்த இவளது தோளினைப் பகலிலும் நீ துய்க்கலாம்.

கருத்து

'ஐய! நீ இரவில் வரல் வேண்டா; இவள் மென்தோள் பகலும் பெறுகுவை.'

விளக்கம்

களவொழுக்கத்தினை மேற்கொண்ட தலைவன் இராக்காலத் திலே வந்து தலைவியைச் சந்திக்கின்றான். தலைவனைக் கண்டு கூடி மகிழ்வதில் தலைவி இன்பங்கொள்ளினும் இரவு நேரத்தில் கொடிய விலங்குகள் உலவிக்கொண்டிருக்கும் காட்டுவழியே வருவதால் தலைவனுக்கு ஏதேனும் துன்பம் நேருமோ என அவள் அஞ்சுகிறாள். இச்செய்தியைத் தோழி தலைவனிடம் சொல்லித் தலைவனைப் பகலில் மட்டும் வரவேண்டுகிறாள்.

உள்ளுறை

புலியை வென்று உறங்கும் யானை - அலரை நீக்கித் துயிலும் தலைவி;

கனவில் புலியைக் கண்டு யானை அஞ்சியமை - தலைவி தனது களவொழுக்கச் செயலைக் கனவில் கண்டு அஞ்சியது;

வேங்கைமரத்தை யானை சிதைத்தமை - தலைவனது களவொழுக்கத்திற்கு இசையுமாறு தலைவியைத் தோழி வற்புறுத்தியமை;

யானை, கோபம் தணிந்தமை - தலைவி, கோபம் தணிந்தமை;

யானை வெட்கித் தலைகுனிந்தமை - தலைவி தன் செயலுக்காக நாணியமை என்று உள்ளுறைப் பொருள் கொள்க.

குறிப்பு

இரவில் வரும் தலைவனைப் பகலிலேயே வருக என்று தோழி குறிப் பிட்டாலும், தலைவியை விரைவில் மணந்துகொள்ள வேண்டும் என்று தலைவனை வற்புறுத்துகிறாள் என்றே கொள்ளலாம்.

சொற்பொருள்

1. கொடுவரி - வளைவான வரிகளைக் கொண்ட புலி.
2. மருங்கு - பக்கம்.
4. வெரீஇ - அஞ்சி.
6. 'அது' - தான் தாக்கிய புலிதான் அது; முருக்கி - அழித்து.
7. பேணா - அடங்காத.
9. இறைஞ்சும் - தலைகுனியும்.
10. இவள் மாட்டு - இவளிடத்தில்.

10-11. இன்ன காதலை - இவ்வளவு அன்பு கொண்டுள்ளாய்.
12. மின் - மின்னல்; ஒரும் - கண்டுகொள்ளும்; பெயல் - மழை.
16. மஞ்சு - மேகம்; இவர் - தவழும்.
17. அணங்கு - துன்புறுத்தும்; ஆரிடை - அரிய வழி.
20. ஒருவன் யான் - நான் ஒப்பற்றவன்; என்னாது - என்று அகந்தை கொள்ளாமல்.
21. இயங்கும் - திரியும், உலவும்.
23. வீ - மலர்.
24. அகல் அறை - அகன்ற பாறை; வரித்தல் - கோலமிடுதல்.
25. பெறுவை - பெறுவாய்.

. தோழி கூற்று

அகநானூறு 192 **பொதும்பில் கிழான் வெண்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி, தலைமகனைச் செறிப்பு அறிவுறீஇ, இரவுக்குறி மறுத்தது. (இற்செறிப்பு - தலைவி வெளியே செல்லாது இல்லத்திற்குள்ளேயே தங்கச் செய்தல்).

கூற்று விளக்கம்

தலைவியை மணந்துகொள்வதில் கருத்தில்லாது, களவொழுக்கத்தையே விரும்பி வந்து போகும் தலைவனிடம் பகற்குறியிலும் இரவுக்குறியிலும் அவளைக் காண வருதல் கூடாது என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறித் தோழி குறி மறுத்தது.

மதிஇருப்பு அன்ன மாசுஅறு சுடர்நுதல்
பொன்நேர் வண்ணம் கொண்டன்று; அன்னோ!
யாங்குஆ குவள்கொல் தானே? விசும்பின்
எய்யா வரிவில் அன்ன பைந்தார்,
செவ்வாய், சிறுகிளி சிதைய வாங்கி,
பொறைமெலிந் திட்ட புன்புறப் பெருங்குரல்
வளைசிறை வாரணம் கிளையொடு கவர,
ஏனலும் இறங்குபொறை உயிர்த்தன; பானாள்
நீவந்து அளிக்குவை எனினே மால்வரை
மைபடு விடரகம் துழைஇ, ஒய்யென

அருவி தந்த அரவுஉமிழ், திருமணி
பெருவரைச் சிறுகுடி மறுகுவிளக்கு உறுத்தலின்,
இரவும் இழந்தனள்; அளியள், உரவுப்பெயல்
உரும்இறை கொண்ட உயர்சிமைப்
15 பெருமலை நாட!–நின் மலர்ந்த மார்பே.

தெளிவுரை

"வலிய மழையுடன் இடி தங்கும் உயர்ந்த உச்சியைக் கொண்ட மலைநாட்டிற்கு உரியவனே! வானவில்லைப் போன்ற பசிய கழுத்தினையும், சிவந்த வாயினையும் கொண்ட சிறிய கிளிகள், தினைக்கதிர்களைச் சிதையும்படி கொத்தி, வாயால் சுமந்து செல்ல இயலாமல் கீழே சிந்தின.' அவற்றை வளைந்த சிறகுகளைக் கொண்ட காட்டுக்கோழிகள் கூட்டமாய் வந்து கொத்தி உண்டன. நாங்கள் காவல்செய்த தினையும் வளைந்து தாழ்ந்து கதிர்களை ஈன்றது. (ஆதலின், தலைவி இனி இற்செறிக்கப்பெறுவாள்.)

"தலைவ! நீ பாதி இரவில் இங்கு வந்து இவளைச் சந்திப்பாய். எனினும், மலை உச்சியிலிருந்து கொட்டும் அருவி, சாரலில் உள்ள குகையில் எல்லாம் பரவி, அங்குப் பாம்பு உமிழ்ந்து வைத்த அழகிய இரத்தினங்களைக் கீழே கொண்டுவந்து சேர்க்கும். அவற்றை இச்சிற்றூரில் உள்ளோர் அழகுக்காக வைத்திருப்பர். இரவில் அவ்விரத்தினங்கள் அனைத்தும் ஒளி வீச, தெருக்கள் பளிச்சென விளங்கும். அதனால், நீ பிறரறியாமல் இரவில் சந்திப்பது என்பது இயலாது. ஆதலின், தினைப்புனத்துக்கதிர் அறுவடை செய்யப்படுமாதலால், பகலில் உன்னைச் சந்திக்க இயலாத தலைவி இரவிலும் ஏமாறுவாள். அதன் விளைவாய் அவளது மாசற்ற நெற்றியில் பசலை படரும். அதனால் என்ன ஆவளோ அறியேன். அவள் நிலை இரங்கத்தக்கது."

கருத்து

'தினைப்புனம் அறுவடை செய்யப்படுவதால் இனிக் கிளி கடியும் வேலை இல்லை; ஆதலால், நீ பகலில் இவளைச் சந்திக்க இயலாது. ஊரில் சிறுமியர், அருவி கொண்டுவந்து தந்த பாம்பு உமிழ்ந்த மணிகளை வீடுகளில் வைத்திருப்பதால் அவை இரவில் ஒளி வீசி எங்கும் வெளிச்சம்

ஏற்படச் செய்யும். ஆதலால், இரவிலும் இவளைச் சந்திக்க இயலாது' எனத் தோழி தலைவன் கேட்குமாறு கூறினாள்.

சொற்பொருள்

1. மதி இருப்பு - மதி இருக்கத்தக்க இடம் (நெற்றி).
2. பொன்நேர் வண்ணம் - பசலை.
3. விசும்பின் - விசும்பிலுள்ள.
4. எய்யா வரிவில் - எய்ய முடியாத அழகிய வில் - வானவில்; வரி - அழகு; பைந்தார் - பசிய மாலை (கிளிக்கழுத்தில் உள்ள கோடு).
6. பொறை மெலிந்திட்ட - சுமக்க இயலாத; குரல் - (தினைக்) கதிர்.
7. சிறை - சிறகு; வாரணம் - காட்டுக்கோழி.
8. இறங்கு பொறை உயிர்த்தன - முற்றி வளைந்து தாழ்ந்த கதிர்களை ஈன்றன.
9. அளிக்குவை - அருள் செய்வாய்; மால் வரை - பெரிய மலை.
10. மைபடு - இருள் பொருந்திய; விடரகம் - மலைப்பிளவு; ஒய்யென - விரைந்து.
11. அரவு - பாம்பு; திருமணி - அழகிய மணி.
12. மறுகு - தெரு; விளக்குறுத்தலின் - இருள் அகற்றி விளங்கச் செய்வதால்.
13. உரவுப் பெயல் - வலிய மழை.
14. உரும் - இடி; இறை கொண்ட - தங்குதல் உடைய; சிமை - (மலை) உச்சி.
15. மலர்ந்த மார்பு - அகன்ற மார்பு.

தோழி கூற்று

குறுந்தொகை 73 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பகற்குறி மறுத்து இரவுக்குறி நேர்ந்து, அதுவும் மறுத்தமைபடத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பகலில் வருவதை மறுத்து, இரவில் வரச்செய்து, பின்னர் அதனையும் தான் மறுத்ததன் இன்றியமையாமையைத் தோழி தலைவியிடம் கூறியது.

மகிழ்நன் மார்பே வெய்யை யால்நீ;
அழியல் வாழி தோழி! நன்னன்
நறுமா கொன்று ஞாட்பில் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல,
வன்கண் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே.

தெளிவுரை

தலைவியே! நீ தலைவனின் மார்பை அடையவே விரும்பு கிறாய். அதற்கு, நன்னனது காவல்மரமாகிய நறுமணமுள்ள மாமரத்தை வெட்டி, அவனைப் போரில் விரட்டியடித்த, 'ஒருசொற்காரர்' என்னும் பெயர் பெற்ற கோசர்போலக் கருணையற்ற செயல் ஒன்றையும் செய்ய வேண்டும்! வருந்தாதே!

கருத்து

'தலைவியே! தலைவன் பிரியாது நிலையாய் உடனிருப்பதற்குச் சில சூழ்ச்சிகளைச் செய்வோம்' எனத் தலைவியிடம் தோழி கூறினாள்.

விளக்கம்

"தலைவன் விரும்புகின்றபடியெல்லாம் நாமும் நடந்து கொண்டால், களவொழுக்கம் குறைவின்றி நடைபெறும் என்னும் துணிவினால் தலைவன் வரைதற்குரிய முயற்சியை மேற் கொள்ள மாட்டான். அதனால்தான் முதலில் பகல் சந்திப்பை மறுத்தேன்; இப்போது இரவில் சந்திப்பதையும் தடுத்தேன். இரவுக்குறி மறுத்தலால் நாம் செய்தது தறுகண்மை போலத் தோன்றினும் நமக்கு நன்மையே அதனால் உண்டாகும். பகல்குறி, இரவுக்குறி ஆகியவற்றை மறுத்தது தலைவன் விரைவில் மணம் செய்துகொள்ள வேண்டுமென்பதற்காகவேதான்" என்று கூறித் தலைவியை வருந்தாதிருக்குமாறு தோழி ஆறுதல் கூறினாள்.

குறிப்பு

கோசர் : கோசர்கள் சிறந்த வீரர்கள்; போரில் வல்லவர்கள்; தாம் கூறிய வஞ்சினத்தை நிறைவேற்றக்கூடியவர்கள். இவர்கள் நன்னன் என்பவன் நாட்டின்மீது படையெடுத்து, அவன் காவல்மரமாகிய மாமரத்தை வெட்டி எறிந்து, அவன் நாட்டினுள் நுழைந்தனர்.

நன்னன் கொங்கு நாட்டிற்கு அருகேயுள்ள ஒரு மலைநாட்டிற்குத் தலைவன் என்று கருதப்படுகிறான்.

சொற்பொருள்

1. மகிழ்நன் - காதலன்; வெய்யை நீ - நீ விரும்பி வருந்துகின்றாய்.
2. அழியல் - வருந்தாதே; நன்னன் - குறுநில மன்னருள் ஒருவன்.
3. நறுமா - நல்ல மாமரம்; கொன்று - வெட்டி; ஞாட்பில் போக்கிய - போரில் விரட்டியடித்த.
4. ஒன்றுமொழி - வஞ்சினம் கொண்ட; கோசர் - ஓர் இனத்தவர் (இவர்கள் சொன்ன சொல் மாறாதவர்கள்).
5. வன்கண் - அஞ்சாமை; சூழ்ச்சி - ஆராய்ச்சி.

தோழி கூற்று

அகநானூறு 220 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : நெய்தல்

கூற்று

இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனை எதிர்ப்பட்டுத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்து செல்லும் தலைவனிடம், 'ஊரில் பழிச்சொல் எழுவதால் தலைவியின் அழகு கெடுகிறது; அவ்வழகு கெடாதிருக்க வழியொன்று சொல்' என்று கூறியது.

ஊரும் சேரியும் உடன்இயைந்து அலர்எழ,
தேரொடு மறுகியும், பணிமொழி பயிற்றியும்,
கெடாஅத் தீயின் உருகெழு செல்லூர்,
கடாஅ யானைக் குழூஉச்சமம் ததைய,
மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்
முன்முயன்று அரிதினின் முடித்த வேள்வி,
கயிறுஅரை யாத்த காண்தகு வனப்பின்,
அருங்கடி நெடுந்தூண் போல, யாவரும்
காண லாகா மாண்எழில் ஆகம்
உள்ளுதொறும் பனிக்கும் நெஞ்சினை, நீயே
நெடும்புற நிலையினை, வருந்தினை ஆயின்,

முழங்குகடல் ஓதம் காலைக் கொட்கும்,
பழம்பல் நெல்லின் ஊணூர் ஆங்கண்,
நோலா இரும்புள் போல நெஞ்சுஅமர்ந்து
காதல் மாறாக் காமர் புணர்ச்சியின்,
இருங்கழி முகந்த செங்கோல் அவ்வலை
முடங்குபுற இறவோடு இனமீன் செறிக்கும்
நெடுங்கதிர்க் கழனித் தண்சாய்க் கானத்து,
யாணர்த் தண்பணை உறும்எனக் கானல்
ஆயம் ஆய்ந்த சாய்இறைப் பணைத்தோள்
நல்எழில் சிதையா ஏமம்
சொல்இனித் தெய்ய,யாம் தெளியு மாறே.

தெளிவுரை

"தலைவ! ஊரிலும் சேரியிலும் ஒருசேரப் பழிச்சொற்கள் எழுமாறு நீ தேரோடு வந்து திரிகின்றாய்; பணிவான சொற்களைப் பலகாலும் கூறியும் செல்கின்றாய்!

"என்றும் நீங்காத வேள்வித்தீயினைக் கொண்டிருப்பது, அழகுடன் விளங்கும் செல்லூர். அவ்வூரில் மதயானைக்கூட்டம் போர் முனையில் அழிந்துபட அரசர் குலத்தை வேருடன் அழித்தவன், பரசுராமன்; அங்கே அவன் பண்டொரு நாள் விடாமல் முயன்று வேள்வி ஒன்றனைச் செய்து முடித்தான். அவ்வேள்வியில் முழுவதும் கயிற்றால் சுற்றப்பட்ட தூண் ஒன்று நடப்பட்டது; மிக்க அழகினையும் நெருங்குதற்கரிய காவலையும் கொண்ட அவ்வேள்வித்தூணைப் போன்று எவராலும் காண இயலாத மாட்சிமைப்பட்ட அழகினைக் கொண்டது, எம் தலைவியின் மார்பகம்; அதை நினைத்து, நடுங்கும் நெஞ்சத்துடன் நீயும் புறத்திலே வந்து, நீண்ட நேரம் நின்று வருந்திச் செல்கிறாய்.

"காலைப்பொழுதிலேயும் கடலலைகள் கரையை வந்து மோதி முழங்குகின்ற ஊணூர் நெல்வளம் கொண்டது. அங்கு, ஒன்றை யொன்று பிரியாது கூடியிருக்கும் சிறந்த மகன்றில் பறவைகளைப் போல, ஒருவர் நெஞ்சில் ஒருவர் பொருந்தி, நீங்கள் இருவரும் காதல் நீங்கா அழகிய புணர்ச்சியைப் பெற்றுள்ளீர்கள்!

"குளிர்ச்சி பொருந்திய சாய்க்கானம் என்னும் ஊர், நெடிய கதிர்கள் விளையும் நெல்வயல்களைக் கொண்டது. அங்குச் சிறந்த கோல்களைக் கொண்ட அழகிய வலையை வீசிப் பெரிய கழிகளில் துழாவிப் பிடித்த வளைந்த முதுகினைக் கொண்ட இறால் மீன்களுடன் பிற மீனினங்களையும் ஒருசேரப் பிடித்துக் குவித்திருப்பர். அந்த ஊரிலேயுள்ள அழகிய குளிர்ந்த மூங்கிலுக்கு ஒப்பானது என்று தோழியர் கூட்டம் ஆய்ந்து பாராட்டுகின்ற வளைந்த முன்கையினையும் வழுவழுப்பான தோள்களையும் கொண்டவள், எம் தலைவி.

"அவளது நல்லழகு கெடாதிருப்பதற்கு ஏதேனும் ஒரு பாதுகாப்பான வழியை யாம் தெளிவாய் உணருமாறு இப்பொழுது நீ கூறு!"

கருத்து

'தலைவ! ஊரில் பழிச்சொல் எழுந்துள்ளதால் தலைவியின் அழியும் அழகு அழியாதிருக்க வழியொன்று சொல்.'

உன் வருகை பலரும் அறிந்த ஒன்றாகிவிட்டது. அதனால் தலைவி காவலுக்குட்படுவாள். இனித் தலைவியை நீ சந்திக்க இயலாது. அதனால் தலைவியின் அழகு கெடாதிருக்க வழியொன்று காணவேண்டும்.

விளக்கம்

'ஊரும் சேரியும் அலர் தூற்றுகின்றன. தலைவ! நீயோ, எவரும் காண இயலாத அழகினைக் கொண்ட தலைவியின் மார்பகத்தை நினைந்து நடுங்கும் நெஞ்சத்துடன் புறத்தே நெடிது நின்று பல காலம் வருந்திச் செல்கின்றனை. அதனால் தலைவியின் தோள் அழகும் அழிகின்றது. அவள் அழகு சிதையாதிருப்பதற்கு எங்கட்கு வழியேதும் புலப்படவில்லை. அவள் அழகு சிதையாதிருக்கத் தெளிவான வழி ஒன்று எங்கட்குச் சொல்' என்று கூறித் தலைவனிடம், 'தலைவியை வரைந்து கொள்' என்பதைக் குறிப்பாய்க் கூறுகிறாள், தோழி.

சொற்பொருள்

1. உடன் இயைந்து - ஒன்றாய்ச் சேர்ந்து; அலர் - பழிச்சொல்.
2. மறுகியும் - வந்து திரிந்தும்; பயிற்றியும் - கூறியும்.

3. கெடாஅத்தீ - என்றும் நீங்காத வேள்வித்தீ; உருகெழு - அழகு பொருந்திய; செல்லூர் - ஓர் ஊர்.
4. கடாஅ - யானை மதம்; சமம் - போர்; ததைய - அழிய.
5. மன் மருங்கு அறுத்த - மன்னர் வழிமரபினை அழித்த; மழுவாள் நெடியோன் - பரசுராமன்.
6. முன்முயன்று - முன்பு முயன்று.
7. கயிறு அரை யாத்த - கயிற்றினை அரையினில் சுற்றிய; வனப்பு - அழகு.
8. அருங்கடி - அரிய காவல்.
9. மாண் எழில் - மாட்சிமைப்பட்ட அழகு; ஆகம் - மார்பு.
10. உள்ளுதொறும் - நினையும் தோறும்; பனிக்கும் - நடுங்கும்.
11. நெடும்புற நிலையினை - நீண்ட நேரம் புறத்திலே நிற்பதை; வருந்தினை - வருத்தப்படுகின்றாய்.
12. ஓதம் - அலை; கொட்கும் - அலையும், முழங்கும்.
13. பழம்பல் நெல் - மிகுதியான பழைய நெல்; ஊணூர் - ஓர் ஊர்.
14. நோலா - ஒன்றையொன்று பிரிந்திருக்கப்பெறாத; இரும்புள் - பெரிய பறவையான மகன்றில்; அமர்ந்து - விரும்பி.
15. காமர் புணர்ச்சி - அழகிய புணர்ச்சி.
16. முகத்தல் - துழாவுதல்; செங்கோல் - நேரிய கோல்; அவ்வலை - அழகிய வலை.
17. முடங்கு - வளைந்த; புறம் - முதுகு; இற - இறால் மீன்; செறிக்கும் - குவிக்கும்.
18. கழனி - வயல்; தண் - குளிர்ச்சியான; சாய்க்கானம் - ஓர் ஊர்.
19. யாணர்த் தண்பணை - அழகிய குளிர்ந்த மூங்கில்; உறும் - ஒக்கும்.
20. ஆயம் - தோழியர் கூட்டம்; ஆய்ந்த - ஆய்ந்து (பாராட்டிய); சாய் இறை - வளைந்த முன் கை; பணைத்தோள் - பெரிய தோள்.
21. நல்எழில் - நல்ல அழகு; சிதையா - கெடாமைக்கு; ஏமம் - (ஏதுவாகிய) பாதுகாவல்.
22. தெளியுமாறு - தெளிய உணருமாறு.

தலைவன் கூற்று

குறுந்தொகை 29 **ஔவையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன், 'இவர் எம்மை மறுத்தார்' என்று வரைந்துகொள்ள நினையாது, பின்னும் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் கூறியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியில் கூடுதற்கு இசையத் தலைவி மறுத்துவிட, அதனால் வருந்தும் தலைவன், மணந்துகொள்ள முனையாது, அவளை மறவாது அவளையே நாடிச் செல்கின்ற தன் நெஞ்சிற்குக் கூறியது.

நல்உரை இகந்து, புல்உரை தாஅய்,
பெயல்நீர்க்கு ஏற்ற பசுங்கலம் போல,
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி,
அரிதுஅவா வுற்றனை நெஞ்சே! நன்றும்
5 பெரிதால் அம்மநின் பூசல், உயர்கோட்டு
மகவுடை மந்தி போல,
அகன்உறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

தெளிவுரை

"நெஞ்சே! 'தலைவி வருவாள், அவளைச் சந்திக்க இயலும்' என்னும் நல்லுரை கேளாது, 'இரவிலே நீ அவளைச் சந்திக்க வாராதே' என்னும் பயனற்ற சொற்களைத்தாம் தோழி கூறக் கேட்டனை. மழைநீர் படும் இடத்தில் வைக்கப்பட்ட சுடப்படாத பச்சைமண் பானைபோல, உள்ளம் தாங்கு இயலாத ஆசை வெள்ளத்திலே நீந்திப் பெறற்கரிய பொருளின்மேல் ஆசை யுற்றனை.

"உயர்ந்த மரக்கிளையில் குட்டியைத் தன் அடிவயிற்றில் தாங்கிக்கொண்டிருக்கும் பெண்குரங்கைப்போல, மனம் பொருந்தி உள்ளன்போடு உன்னை ஆதரித்து, உன் குறையைக் கேட்டு அதைத் தீர்த்து வைப்பாரைப் பெறுவாயாயின், உனது

மனப்போராட்டம் பெருமையுள்ளதாய் இருக்கும். அவ்வாறு கேட்பார் இல்லையாதலால் இரவுக்குறியில் காதலியைக் காணவேண்டும் என்று வீணாய் எண்ணி ஏன் துன்புறுகிறாய்?" என்று தலைவன் தன் நெஞ்சிடம் கூறிக்கொண்டான்.

கருத்து

இரவுக்குறி மறுக்கப்பட்ட போது தலைவன், 'நெஞ்சமே! உன் குறையை அறிந்து தீர்ப்பார் இல்லையாதலின் இனித் தலைவியை நீ இரவில் காணுதல் அரிது' என்று வருந்திக் கூறினான்.

குறிப்பு

சுடப்படாத பச்சை மட்பாண்டம், மழைநீரில் கரைந்துவிடுவதுபோலத் தலைவனின் நெஞ்சிலுள்ள ஆசை, தலைவியின் இரவுக்குறி மறுப்பால் அழிந்துவிட்டது.

சொற்பொருள்

1. நல்லுரை இகந்து - (தலைவியைச் சந்திக்க இயலும் என்னும்) நல்லுரை கேளாமல்; புல்லுரை தாஅய் - (இரவில் வாராதே என்னும்) பயனற்ற சொல்லைக் கேட்டு.
2. பெயல் நீர் - மழைநீர்; பசுங்கலம் - பச்சை மட்பாண்டம்.
3. வெள்ளம் நீந்தி - ஆசை வெள்ளத்திலே முழுகி நீந்தி.
4. அரிது - பெறுதற்கு இயலாத.
5. பூசல் - போராட்டம்; கோடு - மரக்கிளை.
6. மகவு - குட்டி; மந்தி - பெண்குரங்கு.
7. அகன்உறத் தழீஇ - உள்ளன்போடு பொருந்தி; கேட்குநர்ப் பெறின் - (உன் குறையைக்) கேட்கக்கூடியவரைப் பெற்றால்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 312 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வந்து நீங்குகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்கு, வரைவுடைமை வேட்பக் கூறியது

கூற்று விளக்கம்

இரவுக்குறி வந்து நீங்குகின்ற தலைவன் தலைவியின் மென்மையை வியந்து, அவளை விரைவில் மணந்துகொள்ள விரும்பியவனாய்த் தன் நெஞ்சிற்குக் கூறியது.

இரண்டுஅறி கள்விநம் காத லோளே;
முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நாற வந்து,
நள்ளென் கங்குல் நம்ஒ ரன்னள்,
5 கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துஉளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி,
அமரா முகத்தள் ஆகித்
தமர்ஒ ரன்னள் வைகறை யானே.

தெளிவுரை

நெஞ்சமே! நம் காதலி வேறுபட்ட இருவகையில் செயல் படுகின்ற கள்ளத்தன்மை கொண்டவளாயுள்ளாள். செறிந்த இருளைக் கொண்ட இரவுப்போதிலே, எப்பகையையும் எதிர் கொள்ளும் வலிமை கொண்டவனும், சிவந்த வேலினை ஏந்தி யோனுமாகிய மலையமான் திருமுடிக்காரியின் முள்ளூர்க் காட்டிலுள்ளது போன்ற மணம் கமழ வந்து நம்மோடு ஒத்தவளாய் உடன் தங்கிச் செல்கிறாள். விடியற்காலை வேளை யில், இரவிலே நாம் அவள் கூந்தலில் சூடிய பலவகை மலர்களை யெல்லாம் எவரும் காணாதவாறு உதிர்த்துப் போக்கி, மலர்ச் சாந்திட்டுச் கோதிய தன் நறிய கூந்தலிலே எண்ணெய் தடவி, நம்மோடு பொருந்தாத முகத்தினளாய்த் தம் சுற்றத்தாரோடு ஒன்றி அதற்கேற்ற தன்மையள் ஆகிறாள்.

கருத்து

தலைவி நம்மோடு கொண்ட களவுறவைப் பிறர் அறியாவண்ணம் நன்கு மறைத்து ஒழுகுகின்றாள்.

குறிப்பு

"இரவில் நம்மோடு மணந்திகழ ஒன்றியிருந்த தலைவி, பகலில் நம்மைக் காணும்பொழுது அயலானைக் காண்பதுபோல ஒதுங்கிச் செல்கிறாள்; தன் தமருக்கு அஞ்சியே இப்படி ஒழுகுகின்றாள். அது நீங்க நான் அவளை விரைவில் மணத்தல் வேண்டும்" என்று தலைவன் எண்ணுகிறான்.

சொற்பொருள்

1. இரண்டு அறி - வேறுபட்ட இரு வகையில் செயல்படுகின்ற தன்மை; கள்வி - மறைத்து நடப்பவள்.
2. முரண் - பகை; துப்பு - வலிமை; மலையன் - மலையமான் திருமுடிக்காரி.
3. கானம் - காடு; நாற - மணக்க.
4. நள்ளென் கங்குல் - செறிந்த இருள்; நம் ஓரன்னள் - நம்மோடு ஒத்தவளாயினாள்.
5. விரவுமலர் - பலவகை மலர்; உதிர்த்து - போக்கி.
6. சாந்து உளர் - மலர்ச்சாந்தினை இட்டுக் கோதிய; கதுப்பு - கூந்தல்.
7. அமரா - நம்மோடு பொருந்தாத.
8. தமர் - சுற்றம்; ஓரன்னள் - ஒத்தவளாயுள்ளாள்.

அல்லகுறி

தலைவன் இரவுக்குறியிடத்திற்கு வந்தவுடன் தான் வந்துள்ளதைத் தெரிவிக்கும் முறையில் தோட்டத்தில் உள்ள பறவைகளை எழுப்பியோ, தென்னை முதலியவற்றின் காய்களைப் பறித்து நீரில் வீழ்த்தியோ ஒலி உண்டாக்குவான். அதைக் கேட்டுணர்ந்த தோழி தலைவியைத் தலைவனிடம் கொண்டு சேர்ப்பாள். சில வேளைகளில், ஏதோ ஓர் அச்சத்தால் பறவைகள் தாமாகவே பறந்து ஒலியெழுப்பிச் செல்வதுண்டு; முற்றிய சில காய்களுங்கூட இற்று, நீரில் வீழ்ந்து ஒலி எழுப்பு தலும் கூடும். இவ்வாறு ஒலிகள் இயற்கையாய் நிகழும்போது தலைவன் வந்துவிட்டதாய்க் கருதித் தோழியும் தலைவியும் இரவுக்குறியிடத்து வந்து, சிறிது நேரம் காத்திருந்து, தலைவன் வாராமையால் இல்லத்திற்குத் திரும்பிப் போவதுண்டு. தலைவன் பின்னர்க் குறியிடத்துக்கு வந்து குறி செய்தாலும், முன்னர் நடந்த நிகழ்வுகளால் அதை நம்ப இயலாமையாலும், வீட்டிலுள்ளார் விழித்திருப்பராதலாலும், மறுபடியும் வீட்டை விட்டு வெளியே செல்லுதல் அரிய செயலாகுமென்பதாலும் தலைவியும் தோழியும் இரவுக்குறியிடம் வாரார். அன்று எழுப்பப்பட்ட குறி பயனற்றதாய்விடும். இதுவே அல்லகுறிப் படுதலாம். அல்லகுறி - தலைவனால் அன்றிப் பிறிதொன்றனால் நிகழும் குறி.

மறுநாள் பகற்போதில் தலைவன் வந்து வேலி ஓரத்தில் நிற்றல் கண்டு, தோழி, முதல் நாள் இரவு தலைவியும் தானும் அல்ல குறிப்பட்டு மீண்டதைத் தலைவன் அறியுமாறு கூறுவாள். இஃது 'அல்லகுறி அறிவித்தல்' எனப்படும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 121 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

இரவுக்குறி வரும் தலைமகன் செய்யும் குறி பிறிதொன்றனால் நிகழ்ந்தது, மற்று அவன் குறியை ஒத்தவழி, அவ்வொப்புமையை மெய்ப்பொருளாக உணர்ந்து சென்று, ஆண்டு அவனைக் காணாது தலைமகள் மயங்கியவழிப் பின்னர் அவன் வரவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

ஒரு நாள் இரவு, தலைவன் செய்ய வேண்டிய குறி வேறொன்றால் நிகழ்ந்தது. தலைவி அக்குறி இடத்திற்குப் போனாள். அவனைக் காண வில்லை; திரும்பிவிட்டாள். பின்னர், தலைவன் அந்த இடத்திற்கு வந்தான். வழக்கம்போலத் தான் வந்திருப்பதற்கான குறிகளைச் செய்தான். அதை அறிந்த தோழி தலைவியிடம் போய், அவன் வந்திருப்பதை அறிவித்தாள். தலைவியோ, முன்பு ஒருமுறை தேடிச் சென்று ஏமாந்தவளாதலின் இப்பொழுது செய்யப்பட்ட குறியையும் நம்பவில்லை. முன்புபோலப் போய் ஏமாந்து வருவதைவிடப் போகாமல் இருப்பது நல்லதென் றுரைத்தாள்.

மெய்யோ, வாழி, தோழி! சாரல்
மைபட் டன்ன மாமுக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்பல், ஏற்ற
கோட்டொடு போகி யாங்கு, நாடன்
5 தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தன,என் தடமென் தோளே.

தெளிவுரை

தோழியே! நீ கூறியது உண்மைதானா? உண்மையெனின் வாழ்க! மலைச்சாரலில் மையைப் பூசினாற்போன்ற கரிய முகத்தைக் கொண்ட ஆண்குரங்கு ஒன்று, தன்னைத் தாங்கும் கொம்பா என அறியாது தாவிய தவற்றினால் அக்கொம்பு முரிந்து போனாற் போல, மலைநாடன் செய்த அடையாளக்குறி

தவறிப்போனதனால் பரந்த என் மென்மையான தோள்கள் பசலையுற்றன. (ஆகையால், மீண்டும் நாம் ஏமாற வேண்டா.)

கருத்து

தோழீ! தலைவன் வந்துள்ளான் என்று ஒருமுறை சென்று, வாராமையால் ஏமாற்றமுற்றது போதும்; மீண்டும் ஏமாற வேண்டா.

குறிப்பு

கொம்பு தன்னை ஏற்கும் வலிமையுள்ளதா என ஆராயாது குரங்கு பாய்ந்தமையால், அக்கொம்பு முரிந்ததோடு அக்குரங்கும் கீழே வீழ்ந்தது. அதுபோல, தலைவன், தலைவி அறியும்வண்ணம் குறியைச் செய்யாத தவற்றால் அவள் தோள் பசலையடையவும், இன்பம் பெறாது அவள் வருந்தவும் நேர்ந்தது.

சொற்பொருள்

1. மெய்யோ - உண்மையோ?
2. மைபட்டன்ன - மை பூசியது போன்ற; மாமுகம் - கரிய முகம்; முசு - குரங்கு வகைகளுள் ஒன்று; கலை - ஆண்குரங்கு.
3. ஆற்றப் பாயா - கொம்பை அறிந்து பாயாத; தப்பல் - தவற்றினால்; ஏற்ற - பற்றிய.
4. கோடு - கொம்பு; போகியாங்கு - கீழே வீழ்ந்ததுபோல.
5. குறிவாயா - குறியைச் சரியாய்ச் செய்யாத.
6. பசந்தன - பசலை படர்ந்தன; தட - பெரிய; மென் - மென்மையான.

தோழி கூற்று

குறுந்தொகை 227 **ஓதஞானி**

திணை : நெய்தல்

கூற்று

சிறைப்புறம்.

கூற்று விளக்கம்

அல்லகுறிப்பட்டுச் சென்ற தலைவன் மறுநாள் வந்து, தோழியிடம் தான் முன்தினம் வந்து சென்றதைக் கூறுகிறான். தலைவி அவன் வந்திலன் எனக் குறைப்பட்டுக்கொண்ட பொழுது, தலைவன் சிறைப்புறமாய் நிற்க, முன்நாள் தலைவன் வந்திருந்ததற்கான அடையாளத்தைக் காட்டித் தோழி கூறுகிறாள்.

பூண்வனைந் தன்ன பொலஞ்சூட்டு நேமி
வாள்முகம் துமிப்ப வள்இதழ் குறைந்த
கூழை நெய்தலும் உடைத்து, இவண்
தேரோன் போகிய கான லானே.

தெளிவுரை

தலைவியே! தலைவன் இந்தக் கானற்சோலைக்கு நேற்றுத் தேரூர்ந்து வந்து திரும்பச் சென்றிருக்கிறான். (இங்கே அதற்கான அடையாளத்தைக் காண்.) பூண் கட்டியதுபோன்ற இரும் பினாலான அவன் தேர்ச்சக்கரங்களின் வாய்ப்பகுதி துண்டித் தலினால் வளப்பமான இதழ்கள் துண்டிக்கப்பட்டுக் குறை பட்டுத் தோன்றும் நெய்தற்பூக்களை இக்கானல் பகுதி கொண் டிருக்கிறது.

கருத்து

தலைவியே! தலைவன் நேற்று இங்கு வந்து நம்மைக் காணாமல் போயிருக்க வேண்டும்.

குறிப்பு

தலைவன் வந்திருந்தான் என்பதற்கு அடையாளமாய் அவன் தேர்ச்சக்கரங்களால் துண்டிக்கப்பட்ட நெய்தற்பூக்கள் அங்குக் கிடப்பதைக் காட்டுகிறாள், தோழி.

சொற்பொருள்

1. பூண் வனைந்தன்ன - பூணைக் கட்டியது போன்ற; பொலஞ்சூடு - பொன்னாலாகிய; நேமி - சக்கரத்தின் விளிம்பு.
2. வாள் முகம் - வாளைப் போன்ற வாய்; வள் இதழ் - வளவிய இதழ்; குறைந்த - துண்டிக்கப்பட்ட.
3. கூழை - குறைப்பட்ட, துண்டிக்கப்பட்ட; நெய்தல் - நெய்தல் பூ; உடைத்து - உள்ளது; இவண் - இங்கே.
4. தேரோன் - தேரினையுடைய தலைவன்.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 41 **மாறன் பொறையனார்**

திணை : நெய்தல்

கூற்று

அல்லகுறிப்பட்ட தலைமகற்குச் சொல்லுவாளாய்த் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

அல்லகுறிப்பட்ட தலைவனுக்குச் சொல்வதுபோலத் தோழி தலைவியிடம் சொல்லியது.

தெண்கடல் சேர்ப்பன் பிரியப் புலம்(பு)அடைந்து
ஒண்தடங்கண் துஞ்சற்க, ஒள்ளிழாய்! – நண்(பு)அடைந்த
சேவலும் தன்அருகில் சேக்குமால் என்கொலோ
பூந்தலை அன்றில் புலம்பு.

தெளிவுரை

"ஒளி திகழும் அணிகலன்களை அணிந்துள்ள தலைவியே! தெளிந்த கடற்றுறைத் தலைவன், அல்லகுறிப்பட்டதனால் இரவுக்குறியிடத்தில் உன்னைக் காணாமல் பிரிந்து சென்றான்; நீ தனிமை அடைந்தாய்! அதனால் ஒளிமிக்க உன் கண்கள் உறக்கம் கெட்டமை ஒருபுறமிருக்கட்டும். ஆனால், காதல்மிகக்

கொண்ட ஆண் அன்றில் பறவை தன் பக்கத்தே தங்கியிருக்கவும், சிவந்த பூவினைப் போன்ற தலைக்கொண்டையைக் கொண்ட பெண் அன்றில் ஒன்று நேற்றிரவு விடியுமளவும் கூவியது ஏனோ?" எனத் தலைவன் கேட்கும்படியாகத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

கருத்து

'இரவு முழுவதும் அன்றில் பறவை கூவிக்கொண்டேயிருந்ததால் தலைவனைக் காணமுடியாது போயிற்று' என்று தலைவன் கேட்கும் வண்ணம் தோழி கூறுகிறாள்.

குறிப்பு

அன்றில் கூவியதால், மனையிலுள்ளோர் உறக்கம் கெட, அதனால் தலைவனைக் காண இயலாது போயிற்று என்பதனைத் தோழி தெரிவிக்கிறாள்.

சொற்பொருள்

1. தெண்கடல் - தெளிந்த கடல்; சேர்ப்பன் - தலைவன்; புலம்பு - தனிமை.
2. ஒள் - ஒளி மிக்க; தட - அகன்ற; துஞ்சற்க - உறங்காது ஒழியினும் ஒழியட்டும்; நண்பு அடைந்த - காதல் மிகக் கொண்டுள்ள.
3. சேக்கும் - தங்கியிருக்கும்; என்கொலோ? - என்ன காரணமோ?
4. பூந்தலை - சிவந்த பூவினைப் போன்ற தலைக்கொண்டையைக் கொண்ட; அன்றில் - அன்றில் பறவை; புலம்பு - வருந்துதல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 237 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டு நீங்கிய தலைமகனை வந்திலனாகக்கொண்டு அவன் பின்பு வந்துழி, அவற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைச் சந்திக்கத் தோழி குறிப்பிட்ட இடத்தை இராப்போதில் அடையாளம் காண இயலாது தலைவன் வறிதே திரும்பினான். அஃதறியாத தோழி, அவன் சொன்னபடி வரவில்லை என்று கருதி, அவன் வராமையால் தலைவி பட்ட துயரைக் கூறியது.

காமம் கடவ, உள்ளம் இனைப்ப,
யாம்வந்து காண்பதுஓர் பருவ மாயின்,
ஒங்கித் தோன்றும் உயர்வரைக்கு
யாங்குளனப் படுவது நும்மூர்? தெய்யோ!

தெளிவுரை

உன்னைக் குறித்துத் தோன்றிய ஆசைவேகம் எம்மை மிகுதியும் தூண்டுகிறது; பிரிவு எங்களைப் பெரிதும் வருத்து கிறது. நாங்களே புறப்பட்டு வந்து உன்னைக் காண வேண்டிய நிலை ஏற்படலாம். அப்போது நாங்கள் சரியாக வந்து சேர்வதற்கு உதவியாய், உம் ஊர் இதோ உயர்ந்து தோன்றும் இந்த மலைக்கு எந்தப் பக்கத்தில் உள்ளது என்பதை எங்களுக்குச் சொல்லுக.

கருத்து

'நீ நேற்றுப் போன்று இன்றும் வராது இருந்துவிடுவாயாயின் நாங்களே உன்னை வந்து காணும் நிலை ஏற்படலாம்' என்று தோழி தலைவனிடம், அவனை முன் நாள் காண முடியாததால் ஏற்பட்ட துயரத்தைப் புலப்படுத் தினாள்.

குறிப்பு

நீ வாராதபோது தன் நெஞ்சே தன்னைத் தின்று தீர்ப்பத் தலைவி பெரிதும் துன்புறுகிறாள். ஆதலின், அவளை இறந்து

படாமல் காக்க வேண்டுமானால் உன்னிடம் அழைத்து வருதலின்றி வேறு வழியில்லை.

சொற்பொருள்

1. கடவ - தூண்ட; இணைப்ப - வருத்த.
2. பருவமாயின் - காண வேண்டிய காலம் ஏற்பட்டால்.
3. உயர்வரை - உயர்ந்த மலை.
4. யாங்கு எனப்படுவது? - எப்பக்கம் உள்ளது?; நும் ஊர் - உன் ஊர்.

தலைவன் கூற்று

அகநானூறு 62 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டுழித் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவில் எழுந்த ஓர் ஒலியைத் தலைவன் செய்த ஒலியாய்க் கருதிச் சென்ற தலைவி, தலைவனைக் காணாது திரும்பிவிட்டாள். அதன் பின்னர்த் தலைவன் வந்து ஒலி எழுப்பியபோது, அவ்வொலியை முன் போன்றது என்றெண்ணித் தலைவி வராதிருந்துவிட்டாள். அவள் வராததால் வருந்திய தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியது.

அயத்துவளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன,
நகைப்பொலிந்து இலங்கும் எயிறுகெழு துவர்வாய்,
ஆகத்து அரும்பிய முலையள், பணைத்தோள்,
மாத்தாள் குவளை மலர்பிணைத் தன்ன,
மாஇதழ் மழைக்கண், மாஅ யோளொடு
பேயும் அறியா மறைஅமை புணர்ச்சி,
பூசல் துடியின் புணர்புபிரிந்து இசைப்ப,
கரந்த கரப்பொடு நாம்செலற்கு அருமையின்,
கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநள் போல,
நடுங்குஅஞர் தீர முயங்கி, நெருநல்
ஆகம் அடைதந் தோளே – வென்வேல்

களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறுநீர் அடுக்கத்து வியல்அகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவையின்,
மடவது மாண்ட மாஅ யோளே.

தெளிவுரை

வெற்றி தரும் வேலினையும் யானைகள் மிகுந்த படையினை யும் கொண்டவன், சேரன். அவனுடைய கொல்லிமலை, அருவிநீர் கொண்ட பக்க மலையைக் கொண்டது; அகன்ற அப்பக்கமலை அழகு பெறும்படி, கடவுளால் உண்டாக்கப்பட்ட (கடவுள் போன்ற தன்மை கொண்ட) கொல்லிப்பாவை அமைந் திருக்கிறது. அக்கொல்லிப்பாவையைப் போன்று இளமைச் சிறப்புடன் மாமை நிறம் கொண்டவள், நம் தலைவி.

அவள், நீர்க்கரையில் வளரும் பைஞ்சாய்க் கோரையின் குருத் தினைப் போன்று ஒளி சிறந்து விளங்கும் பற்கள் பொருந்திய சிவந்த வாயினைக் கொண்டவள்; மார்பில் அரும்பித் தோன்றும் முலையினைக் கொண்டவள்; மூங்கில் போன்ற தோளினள்; கரிய தண்டினைக் கொண்ட குவளை மலர்களை இணைத்து வைத்தாற்போன்ற கரிய இமையினைக் கொண்ட குளிர்ந்த கண்களைப் பெற்றவள்.

அத்தன்மையினைக் கொண்டவளுடன், பேயும் இயங்காத காலத்தே, பிறர் அறியாவாறு களவுப்புணர்ச்சி கொண்டிருந் தோம். அப்புணர்ச்சியானது, இன்று இவ்வூர்ப்பெண்கள் தம்முள் கூடியும், பலவாறு பிரிந்து சென்றும், போர்க்களத்தில் முழக்கும் துடி ஒலிபோல அலர் தூற்றப் பெறுவதாயிற்று. அதனால் நானும் மற்றவர் அறியாதவாறு, அஞ்சி அஞ்சி இரவுக்குறியிடத்திற்குக் காலம் தாழ்த்திச் சென்றதால் அல்ல குறிப்பட்டேன். நேற்றோ, விரைந்தோடும் நீர் மிக்க காவிரிப் பேரியாற்றில் நெடிய சுழிகளைக் கொண்ட வெள்ளத்தில் மூழ்கிக் குளிரக் குளிரக் குளிப்பவள்போல, தன்னை நடுக்குறச் செய்யும் அலரால் உண்டாகும் துன்பம் தீரும்படி அவள் என்னைக் குளிரத் தழுவினாள்; என் மார்பை விடாது பொருந்தியும் கிடந்தாள்.

(நேற்று என்று கூறுவதன்வழி இன்று அல்லகுறிப்பட்டுத் தலைவியை அடையாதவனாயினன் என்பதைப் புலப்படுத்துகிறான், தலைவன்.)

கருத்து

'நாம் காலம் தாழ்த்து வந்தமையால் தலைவி அல்லகுறிப்பட்டு மீண்டாள்' எனத் தலைவன் வருந்துகிறான்.

விளக்கம்

1. **பொறையன் கொல்லி :** பொறை - மலை: மலைநாடன் ஆதலின் சேரன், பொறையன் எனப்பட்டான்; கொல்லிமலை வல்வில் ஓரிக்கு உரியது; அவ்வோரியைப் பொருது வென்ற காரி, அம் மலையைச் சேரனுக்கு ஈந்தானாதலின், அது சேரனுக்கு உரியதாயிற்று.

2. **கொல்லிப்பாவை :** இப்பாவை கொல்லிமலையின் மேற்குப் பக்கத்தில் தெய்வத்தச்சனால் அமைக்கப்பட்டுக் கொல்லித் தெய்வத்தால் பாதுகாக்கப்படுவது; கரிய கண்களைக் கொண்டது; இது நகைத்துத் தன் முன் வந்தாரைக் கொல்லும் இயல்பினது; 'கொல்லிமலைச்சாரலிலே பெருங்காற்று வீசிப் பெருமழை பெய்து பேரழிவைச் செய்தாலும், இடியேறு சினங்கொண்டு பெருமுழக்கம் செய்தாலும், பெரிய இவ்வுலகமே சினங் கொண்டு எதிர்த்தாலும், இவையேயன்றி வேறு பல ஊறுபாடுகள் தோன்றினாலும் இப்பாவை தன் அழகிய நல்ல வடிவம் கெடாத இயல்பினது.' (நற். 201)

சொற்பொருள்

1. அயம் - நீர்; பைஞ்சாய் - ஒரு வகைக் கோரைப்புல்; முருந்து - தண்டின் மேற்பகுதி, குருத்து.
2. நகை - ஒளி, புன்சிரிப்பு; துவர்வாய் - சிவந்த வாய்.
3. ஆகம் - மார்பு; பணை - மூங்கில்.
4. மா - கரிய; தாள் - தண்டு.
5. மாஅயோள் - மாமை நிறம் கொண்டவள்.
6. அறியா - இயங்காத காலத்தே.

7. பூசல் - ஆரவாரம்; துடி - ஒரு வகைப் பறை; புணர்பு பிரிந்து - கூடியும் தனித்தும்.
9. சுடு - விரைவு; மலிந்த - நிறைந்த.
10. மண்ணுநள் - முழுகுதல்.
11. அஞர் - துன்பம்; நெருநல் - நேற்று.
12. ஆகம் - மார்பு.
13. தானை - படை; பொறையன் - சேரன்; கொல்லி - கொல்லிமலை.
14. வியல் அகம் - அகன்ற இடம்.
15. கடவுள் எழுதிய பாவை - கொல்லிப்பாவை.
16. மடவது மாண்ட - மடம் என்னும் குணத்தில் சிறப்புற்ற.

தலைவன் கூற்று

குறுந்தொகை 120 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் இரவிலே தலைவியை ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பது வழக்கம். ஒரு நாள் அத்தலைவன் வருவதற்கு முன்பே, அவன் தான் வந்திருப்பதற்கு அடையாளமாய்ச் செய்யப்படும் குறியினைக் கேட்டு, தலைவி அந்த இடத்திற்கு வந்தாள். ஆனால், அவன் அங்கு இல்லை. தலைவி திரும்பிவிட்டாள். பின்னர், அவன் அந்த இடத்திற்கு வந்தான்; குறிகளின்மூலம் தன் வருகையைத் தெரிவித்தான். தலைவியோ, அக் குறிகள் முன்புபோல வேறு வகையில் எழுப்பப்பட்ட குறிகள் என்று கருதி, அவ்விடத்திற்குப் போகாமலிருந்துவிட்டாள். காத்திருந்த தலைவன், தலைவியைக் காணாமல் வருத்தத்துடன் திரும்பினான். அப்பொழுது அவன் தன் நெஞ்சிற்குக் கூறிய சமாதானம்.

இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு,
அரிதுவேட் டனையால் நெஞ்சே! காதலி
நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியா தோயே.

தெளிவுரை

நெஞ்சே! வறியவன் ஒருவன் இவ்வுலக இன்பங்களை யெல்லாம் அடைய விரும்பியதைப்போல், நீயும் பெறுதற் கரியதைப் பெற விரும்பினை. காதலி நமக்கு நன்மை தருபவளாய் இருப்பதை அறிந்ததுபோல, அவள் பெறுதற்கும் அரியவள் என்பதை நீ அறிந்துகொள்ளவில்லை.

கருத்து

நெஞ்சே தலைவி பெறுதற்கு அரியள்.

சொற்பொருள்

1. இல்லோன் - பொருளில்லாத வறியவன்; காமுற்றாஅங்கு - விரும்பியதுபோல.
2. அரிது - பெறுதற்கரியது; வேட்டனை - விரும்பினை.
3. அறிந்தாங்கு - அறிந்ததுபோல.
4. அறியாதோய் - அறிந்துகொள்ளாதவன் ஆயினை.

தலைவன் கூற்று

குறுந்தொகை 128 **பரணர்**

திணை : நெய்தல்

கூற்று

அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகன், தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது. (நெருங்கி - கடிந்து).

கூற்று விளக்கம்

தலைவியைக் குறியிடத்தில் காணாது தலைவன் மீளும்போது தன் நெஞ்சை நோக்கி, 'இனித் தலைவி காண்பதற்கு அரியவளாவாள்' என்று கூறியது.

குணகடல் திரையது பறைதபு நாரை
திண்தேர்ப் பொறையன் தொண்டி முன்துறை
அயிரை ஆர்இரைக்கு அணவந் தாஅங்குச்
சேயள் அரியோள் படர்தி;
நோயை நெஞ்சே! நோய்ப்பா லோயே.

தெளிவுரை

நெஞ்சமே! பறக்கும் வலிமையினை இழந்துவிட்ட கிழட்டு நாரை ஒன்று கிழக்குக்கடலின் அலையருகே இருக்கிறது. அது மேற்குக் கடற்கரையிலுள்ள சேர மன்னனது தொண்டிப் பட்டினக் கடல் துறையில் உள்ள அயிரை மீனை இரையாகப் பெற விரும்பி, தன் தலையை மேலே தூக்கி அண்ணாந்து நின்றது. அதுபோல, நமக்கு வெகுதொலைவில் உள்ளவளும், அடைதற்கு அரியவளாய் இருப்பவளுமான தலைவியினைப் பெறுதற்கு நீயும் முயல்கிறாய்! தீவினை கொண்ட நீ இனித் துன்பத்தால் வாட வேண்டியதுதான்.

கருத்து

'நெஞ்சே! இனித் தலைவியை நாம் பெற இயலாது; நீ வருந்த வேண்டியதுதான்.'

விளக்கம்

தலைவியை இனி நாம் அடைய இயலாது வருந்த வேண்டியது தான். கிழக்குக்கடற்கரையிலுள்ள முதுநாரை, தான் முன்னர் உண்டின்புற்ற நினைவாலே, மேற்குக்கடலில் தொண்டித் துறையிலுள்ள அயிரையை அவாவித் தலையை மேலே தூக்கிப் பார்க்கும்; (முதுமை, பறக்க இயலாமை ஆகியவற்றின் காரணமாய்). அவ்வாறு உண்ண முடியாதாதலின் வருந்தித் துயருற்றிருக்கும்; அவ்வாறே தலைவியும் நம்மால் செல்ல இயலாத இடத்திலும், தானே வந்து நம்மை அடைதற்கு இயலாத நிலையிலும் உள்ளாள். அவளை நீ நினைந்து ஏங்குவதேயன்றி அடைய இயலாது.

சொற்பொருள்

1. குணக்கு - கிழக்கு; திரையது - அலையோரத்தில் அமர்ந்திருக்கும் (திரை - அலை); பறைதபு - பறப்பதற்கு இயலாத (தபு - தப்பிய).
2. பொறையன் - சேரன்; தொண்டி - தொண்டிப்பட்டினம்; துறை - கடல் துறை.
3. அயிரை - அயிரை மீன்; ஆர் - அருமையான; இரை - உணவு; அணவந்தாஅங்கு - தலையை மேலே தூக்கிப் பார்த்தாற்போல.

4. சேயள் - தொலைவில் இருப்பவள்; அரியள் - கிடைத்தற்கு அரியவள்; படர்தி - பெறுதற்கு நினைக்கிறாய்.
5. நோயை - (இதனால் நீ) வருந்துகின்றாய்; நோய் - துன்பம், வருத்தம்; பால் - ஊழ்வினை.

தலைவன் கூற்று

அகநானூறு 322 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டுப் போகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவுக்குறியின்கண் தலைவன் தான் இன்ன குறிகளைச் செய்வேன் எனக் கூறியிருந்தான். ஆனால், அக்குறிகள், அவன் வருமுன்னரே இயற்கையில் நிகழ்ந்துவிட்டமையால், அவற்றைக் கேட்டு அங்கு வந்த தலைவியும் தோழியும் தலைவனைக் காணாது இல்லம் திரும்பினர். பின்னர் வந்த தலைவன், குறிகளை எழுப்பவே, அவையும் முன்னர்க் கேட்ட இயற்கைக் குறிகள் போன்றன போலும் எனக் கருதிய தலைவியும் தோழியும் வாராது போகவே, ஏமாற்றமடைந்த தலைவன் தன் ஊர் திரும்பியபோது தன் நெஞ்சிற்குக் கூறியது.

வயங்குவெயில் ஞெமியப் பாஅய், மின்னுவசிபு
மயங்குதுளி பொழிந்த பானாட் கங்குல்,
ஆராக் காமம் அடூஉநின்று அலைப்ப,
இறுவரை வீழ்நரின் நடுங்கி, தெறுவரப்
5 பாம்புஎறி கோலின் தமியை வைகித்
தேம்புதி கொல்லோ? நெஞ்சே! உரும்இசைக்
களிறுகண் கூடிய வாள்மயங்கு ஞாட்பின்,
ஒளிறுவேல் தானைக் கடுந்தேர்த் திதியன்
வருபுனல் இழிதரு மரம்பயில் இறும்பில்,

பிறைஉறழ் மருப்பின், கடுங்கண் பன்றிக்
குறைஆர் கொடுவரி குழுமும் சாரல்,
அறைஉறு தீம்தேன் குறவர் அறுப்ப,
முயலுநர் முற்றா ஏற்றுஅரு நெடுஞ்சிமை,
புகல்அரும் பொதியில் போலப்
பெறல்அருங் குரையள்,எம் அணங்கி யோளே!

தெளிவுரை

என் நெஞ்சமே! திதியன் என்பான் இடியென முழங்கும் களிறுகள் மிகுக் கொண்டவன். வேற்படையினையும், விரைந் தோடும் தேரினையும் உடையவன். அவனது பொதியில் மலை, தத்தி வீழும் அருவியினையும் மரங்கள் செறிந்த காட்டினையும் கொண்டது; அதன் பக்கமலைச்சாரலில் பிறைமதி போன்ற கொம்பினையும் அஞ்சாத தன்மையினையும் கொண்ட பன்றி யின் இறைச்சித்துண்டினைத் தின்ற புலிகள் கூடி முழங்கிக் கொண்டிருக்கும்; இனிய தேனடைகளை அறுத்தெடுக்க முயலும் குறவர்கள் சென்றடைய இயலாததும் ஏறுதற்கு அரியதுமான உயர்ந்த உச்சிகளைக் கொண்டது. அன்ன தன்மை வாய்ந்த புகுதற்கு அரிய பொதியில் மலையினைப் போல, நம்மை இவ்வாறு வருத்திய நம் காதலி நம்மால் பெறுதற்கு அரியவள்.

ஒளி விளங்கும் ஞாயிறு மறையவே வானில் மேகம் பரந்தது; மின்னல் பிளந்திட மிக்க மழை பெய்தது; நள்ளிரவில் அடங்காக் காமம் உள்ளத்தே அலை மோத, மலையுச்சியினின்றும் வீழ்வார் போல நடுங்கி, கோலால் அடியுண்ட பாம்பினைப் போல வருந்தி, வேறு துணையின்றி, கிடைத்தற்கு அரியவளை நினைந்து வாட்டமுறுவாயோ?

கருத்து

‘நெஞ்சே! நம்மை வருத்திய காதலி பொதியில் மலையைப் போலப் பெறுதற்கு அரியவள். அதனை உணராது நள்ளிரவில், காமம் வருத்தி அலைத்திட, நடுங்கி, வேறு துணையின்றி வாடுவையோ?’ எனத் தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறுகிறான்.

சொற்பொருள்

1. வயங்கு வெயில் - ஒளி விளங்கும் கதிரவன்; ஞெமிய - மறைய; பாஅய் - பரவி; மின்னு - மின்னல்; வசிபு - பிளத்தல்.
2. மயங்குதுளி - மிக்க மழை.
3. ஆரா - அடங்காத; அடூஉ - வருத்தி; அலைப்ப - அலைமோத.
4. இறுவரை - மலை உச்சி; வீழ்நரின் - வீழ்பவர்போல; தெறுவர - அச்சமுண்டாக.
5. தமியை வைகி - தனியே இருந்து.
6. தேம்புதி கொல்லோ? - வருத்தம் அடைவாயோ?; உரும் - இடி.
7. ஞாட்பு - போர்.
8. தானை - படை; கடுந்தேர் - விரைந்து செல்லும் தேர்.
9. வருபுனல் - அருவி; இழிதரு - தத்தி வீழும்; இறும்பு - குறுங்காடு.
10. பிறைஉறழ் - பிறைமதி போன்ற.
11. குறை - இறைச்சித்துண்டு; ஆர் - தின்று; குழுமும் - கூடி முழங்கும்.
12. அறை - உச்சிப்பாறை; தீம்தேன் - இனிய தேனடை.
13. முற்றா - முற்றிலுமாய்; ஏற்றுஅரு - ஏறுதற்கு அரிய.
14. புகல்அரும் - புகுதற்கரிய; பொதியில் - பொதிய மலை.
15. பெறல் அருங்குரையள் - பெறுதற்கு அரியவள்.

தலைவன் கூற்று

அகநானூறு 372 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டுப் போகாநின்ற தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

இரவு நேரத்தில் வரும்போது தன் வருகையை அறிவிப்பதற்குச் சில குறிகளைச் செய்வதாய்த் தலைவன் கூறிச் சென்றான்; ஒருநாள் அவன் வருமுன்னரே அக்குறிகள் இயற்கையாகவே நிகழ்ந்துவிட்டன; அவற்றைக் கேட்ட தலைவியும் தோழியும் தலைவன் வந்துள்ளான் எனக் கருதிக் குறியிடத்துக்கு வந்தனர்; தலைவனைக் காணாது ஏமாற்றம் அடைந்து

இல்லம் திரும்பினர்; பின்னர் வந்த தலைவன் செய்த குறிகளையும் இயற்கை நிகழ்வுகள் என எண்ணிய அம்மகளிர் வாராது போகவே, ஏமாற்றம் அடைந்த தலைவன் மீண்டு போகும்போது தன் நெஞ்சிற்குக் கூறியது.

அருந்தெறல் மரபின் கடவுள் காப்ப,
பெருந்தேன் தூங்கும் நாடுகாண் நனந்தலை,
அணங்குடை வரைப்பின், பாழி ஆங்கண்,
வேள்முது மாக்கள் வியல்நகர்க் கரந்த
அருங்கல வெறுக்கையின் அரியோள் பண்புநினைந்து,
வருந்தினம் மாதோ எனினும்,அஃது ஒல்லாய்,
இரும்பணைத் தொடுத்த பலர்ஆடு ஊசல்
ஊர்ந்துஇழி கயிற்றின், செலவர வருந்தி,
நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி,
கடுமுனை அலைத்த கொடுவில் ஆடவர்,
ஆகொள் பூசலின் பாடுசிறந்து எறியும்,
பெருந்துடி வள்பின் வீங்குபு நெகிழா,
மேய்மணி இழந்த பாம்பின், நீநனி
தேம்பினை வாழி,என் நெஞ்சே! வேந்தர்
கோண்தணி எயிலின் காப்புச் சிறந்து,
ஈண்டுஅருங் குரையள்நம் அணங்கி யோளே.

தெளிவுரை

நெஞ்சே! அகன்ற இடம் கொண்ட பாழி மலை, அச்சம் பொருந்திய பக்க மலையைக் கொண்டது. அழிக்கவல்ல ஆற்றல் கொண்ட பெரிய கடவுளால் காக்கப்படுதலால் பெரிய தேன் கூடுகள் அங்குத் தொங்குகின்றன; நாடு முழுமையும் காண்பதற்கு உரிய உயர்ந்த உச்சியைக் கொண்ட அம்மலையில் பழங்குடியினரான வேளிர் குடியினர் வாழ்ந்தனர். அவர், தம் அகன்ற ஊர்களில் மறைத்து வைத்த அரிய அணிகலன்களாகிய செல்வத்தைப் போல, நம் தலைவி, பெறுதற்கு அரியவள். அவள் தரும் இன்பத்தை நினைந்து இன்னல் மிகுந்த இரவில் வந்து நாம் வீணாய் வருந்தினோம். அவள் அருமையினை நான் உனக்கு அறிவுறுத்தியும் நீ அதனை ஏற்றுக்கொள்ளாது உள்ளாய்.

பெரிய கிளையில் கட்டப்பெற்றுப் பலரும் ஆடும் ஊஞ்சலின் கயிறு ஏறியும் இறங்கியும் வரும். அதுபோல நீயும் சென்றும் திரும்பியும் அலைந்து வருந்தினாய்.

கூரிய வேலினையுடைய அஞ்சி என்பவன் நீண்ட வழிகளைக் கொண்ட குதிரைமலைக்குத் தலைவன்; வளைந்த வில்லைக் கொண்ட அவன் வீரர்கள் பகைவரின் பசுக்கூட்டங்களைக் கவருவர். அப்போரில் ஒலி மிகும்படியாய் அடிக்கப்படும் பெரிய உடுக்கையின் வாரைப்போல, நெஞ்சே! நீ செறிந்தும் நெகிழ்ந்தும் துன்புற்றனை; இரை மேய்வதற்காக உமிழ்ந்துவைத்த மணியை இழந்த நல்ல பாம்பைப் போல் மிகவும் வாடினை.

நம்மை வருத்திய காதலி, பகைவேந்தரின் பகை தணிதற்குக் காரணமான வலிவான மதிலைப் போல மிகுந்த காவலைக் கொண்டவள்; அவளை அடைவது அரியதாகும்.

கருத்து

'என் நெஞ்சமே! பெறுதற்கு அரியவளாய் இருப்பவளான தலைவி தரும் இன்பத்தை நினைந்து நாம் வீணே வருத்தமடைகிறோம் என்று நான் அறிவுறுத்தியும், நீ அதனை ஏற்கவில்லை. அவள்பொருட்டுச் சென்றும் வந்தும் காணாது வருந்தி நீ மிகவும் வாடுகின்றாய். நம்மை வருத்திய காதலி அடைதற்கு அரிய காவலைக்கொண்டிருப்பவள் என்பதை அறிக' எனத் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொன்னான்.

குறிப்பு

பாழி மலையில் உள்ள, 'வேள்முது மாக்கள் வியல்நகர்க் கரந்த அருங்கல வெறுக்கை' என்பது, அந்நாளில் அணிகலன்களை மண்ணில் அடையாள மிட்டுப் புதைத்துப் பாதுகாக்கும் வழக்கம் இருந்தது என்பதை உணர்த்துகிறது.

சொற்பொருள்

1. அருந்தெறல் - அழிக்கவல்ல ஆற்றல்.
2. தேன் - தேன் கூடுகள்; தூங்கும் - தொங்கும்.
3. பாழி - பாழி மலை.
4. வேள் - வேளிர்; கரந்த - மறைத்து வைத்த.
5. வெறுக்கை - செல்வம்.
6. ஒல்லாய் - பொறுத்துக்கொள்ளமாட்டாய்.

7. இரும்பணை - பெரிய கிளையில்; ஊசல் - ஊஞ்சல்.
8. ஊர்ந்து இழி - ஏறியும் இறங்கியும்.
9. குதிரை - குதிரை மலை.
10. கடுமுனை - கடுமையான போர்முனை; அலைத்த - வருத்திய.
11. ஆ கொள் பூசல் - பகைவர் பசுக்கூட்டத்தைக் கவர்ந்து வருதலால் நிகழும் போர்; பாடு சிறந்து எறியும் - மிகுந்த ஒலியினை எழுப்பும்.
12. துடி - உடுக்கை; வள்பு - வார்; வீங்குபு நெகிழா - செறிந்தும் நெகிழ்ந்தும்.
13. மேய்மணி இழந்த - இரை மேயும் போது இழந்த மணி.
14. தேம்பினை - துன்புற்றனை.
15. கோண் தணி - பகைவேந்தரின் பகை தணிய; எயில் - மதில்.
16. அருங்குரையள் - அரியவள்; அணங்கியோள் - வருத்தியவள்.

தலைவன் கூற்று

அகநானூறு 258 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டுப் பதிப்பெயர்ந்த தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தின்போது பறவை முதலியவற்றால் இரவுக்குறியில் இயற்கையாய் ஏற்பட்ட ஒலிகளைக் கேட்டு இரவுக்குறி என நம்பி வந்து தலைவனைக் காணாது தலைவி திரும்பினாள். அதன்பின் வந்த தலைவன் தலைவியின் கூட்டம் பெறாது வருந்தி மீளும்போது தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.

நன்னன் உதியன் அருங்கடிப் பாழி,
தொல்முதிர் வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் அருமைநன்கு அறிந்தும், அன்னோள்
துன்னலம் மாதோ எனினும்,அஃது ஒல்லாய்–
தண்மழை தவழும் தாழ்நீர் நனந்தலைக்
கடுங்காற்று எடுக்கும் நெடும்பெருங் குன்றத்து,

மாய இருள்அளை மாய்கல் போல,
மாய்கதில், வாழிய, நெஞ்சே! நாளும்
மெல்இயல் குறுமகள் நல்அகம் நசைஇ,
அரவுஇரை தேரும் அஞ்சுவரு சிறுநெறி,
இரவின் எய்தியும் பெறாஅய், அருள்வரப்
புல்லென் கண்ணை புலம்புகொண்டு உலகத்து
உள்ளோர்க்கு எல்லாம் பெருநகை யாக,
காமம் கைம்மிக உறுதர,
ஆனா அரும்படர் தலைத்தந் தோயே!

தெளிவுரை

என் நெஞ்சே! நீ வாழ்க!

நன்னன் உதியன் என்பானது அரிய காவலைக் கொண்ட பாழிச்சிலம்பில் தொன்மை மிக்க வேளிர்கள் பாதுகாத்து வைத்திருந்த பொன்னைக்காட்டிலும் நம் தலைவி அடைதற்கு அரியவள் என்பதை நீ நன்கறிவாய். அவளை நாம் நெருங்கவும் இயலாது எனக் கூறினும் நீ ஏற்க மறுக்கின்றாய்.

மென்மைத்தன்மை வாய்ந்த இளையவளாம் எம் தலைவியின் அழகிய மார்பகத்தை நாள்தோறும் பொருந்த விரும்புகின்றாய்; இரை தேடும் பாம்புகள் திரியும் அச்சம் நிறைந்த குறுகிய சுர வழியில், இரவு நேரத்தில் சென்று நீ காத்திருந்தும் உன்னால் அவளைப் பெற இயலவில்லை. கண்டார்க்கு இரக்கம் தோன்றும்படி நீ பொலிவிழந்த கண்களுடன் தனிமையில் இருக்கின்றாய்; உலகத்து மக்கட்கெல்லாம் ஏளனச்சிரிப்பு உண்டாகும்படி என் காமம் கரை கடந்து பெருகிற்று. அதனால் எனக்கு அரிய துன்பத்தை உண்டாக்கிவிட்டாய்.

குளிர்ச்சி பொருந்திய மேகங்கள் தவழ்ந்து விளையாடும் அருவிகள் வீழ்கின்ற அகன்ற இடத்தில் கடுங்காற்று சுழன்று அடிக்கும் மலைச்சாரலில் தலை சுற்றும் இருள் செறிந்த குகையில் ஒளியிழந்து மறைந்து கிடக்கும் மணிபோல நீயும் புகழிழந்து மாய்க.

கருத்து

"நெஞ்சே! தலைவி அடைதற்கு அரியவள்; நாம் அவளை நெருங்க இயலாது என்று நான் சொல்லியும் நீ கேட்கவில்லை. நாள்தோறும் அவள் மார்பைப் பொருந்த விரும்பி, இரவில் வந்தும் நீ அவளைப் பெற இயலவில்லை. அதனால் உலகோர் இகழ்ந்து சிரிக்க, அடக்க இயலாத காமத்தால் அரிய துன்பத்தை நானடையச் செய்துவிட்டாய். ஆதலின், இருள் குகையில் ஒளி மறைந்து கிடக்கும் மணிபோல நீ மறைந்தொழிக" என்று தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறினான்.

குறிப்பு

1. நன்னன், வேளிர் குலத் தலைவன்; சேரனோடு கொண்ட தொடர்பால் இவன் உதியன் என்னும் பெயர் கொண்டான். அவனது காப்பு மிகுந்த பாழி என்னும் மலையில் வேளிர்கள் பொன்னைப் பாதுகாத்து வைத்தனர்.
2. வேளிர்கள் பாழியில் பொன்னைக் காத்து வைத்ததுபோல, தலைவியை அவள் வீட்டார் பிறர் அணுகாது பாதுகாத்து வருகின்றனர் என்பது சிறப்புக் குறிப்பு.

சொற்பொருள்

1. அருங்கடி - அரிய காவல்; பாழி - நன்னனின் மலை.
2. ஓம்பினர் வைத்த - பாதுகாத்து வைத்த.
3. அன்னோள் - தலைவி.
4. துன்னலம் - நெருங்க மாட்டோம்; ஒல்லாய் - உடன்பட (ஏற்க) மறுக்கிறாய்.
5. மழை - மேகம்; தாழ்நீர் - அருவிநீர்.
6. எடுக்கும் - சுழன்றடிக்கும்.
7. மாய இருள் - மயக்கத்தைத் தரும் இருள்; அளை - குகை; மாய்கல் - ஒளியின்றி மறைந்து கிடக்கும் மணி.
9. மெல்இயல் - மென்மைத் தன்மை; அகம் - மார்பு; நசைஇ - விரும்பி.
10. அரவு - பாம்பு; தேரும் - தேடும்.
12. புல்லென் கண் - பொலிவிழந்த கண்; புலம்பு - தனிமை.
13. பெருநகை - ஏளனச் சிரிப்பு.
14. கைம்மிக - அளவு கடக்க.
15. தலைத் தந்தோய் - என்னிடத்தில் உண்டாக்கிவிட்டாய்.

தலைவன் கூற்று

அகநானூறு 212 **பரணர்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்டு நீங்கும் தலைமகன் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தின்போது இரவுக்குறியிடத்தில் பறவை முதலியவற்றால் ஏற்பட்ட குறிகளை நம்பி வந்து, தலைவனைக் காணாது தலைவி திரும்பினாள். அதன்பின் வந்த தலைவன் தலைவியின் கூட்டம் பெறாது வருந்தி மீளும்போது தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.

தாஇல் நன்பொன் தைஇய பாவை
விண்தவழ் இளவெயில் கொண்டுநின் றன்ன,
மிகுகவின் எய்திய, தொகுகுரல் ஐம்பால்,
கிளைஅரில் நாணல் கிழங்குமணற்கு ஈன்ற
முளைஎ ரன்ன முள்எயிற்றுத் துவர்வாய்,
நயவன் தைவரும் செவ்வழி நல்யாழ்
இசைஒர்த் தன்ன இன்தீம் கிளவி,
அணங்குசால் அரிவையை நசைஇ, பெருங்களிற்று
இனம்படி நீரில் கலங்கிய பொழுதில்,
பெறல்அருங் குரையள் என்னாய், வைகலும்,
இன்னா அருஞ்சுரம் நீந்தி, நீயே
என்னை இன்னற் படுத்தனை; மின்னுவசிபு
உரவுக்கார் கடுப்ப மறலி மைந்துற்று,
விரவுமொழிக் கட்டூர் வேண்டுவழிக் கொளீஇ,
படைநிலா இலங்கும் கடல்மருள் தானை
மட்டுஅவிழ் தெரியல் மறப்போர்க் குட்டுவன்
பொருமுரண் பெறாஅது விலங்குசினம் சிறந்து,
செருச்செய் முன்பொடு முந்நீர் முற்றி,
ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய
நீர்மாண் எஃகம் நிறத்துச்சென்று அழுந்தக்
கூர்மதன் அழியரோ நெஞ்சே! ஆனாது

எளியள் அல்லோள் கருதி,
விளியா எவ்வம் தலைத்தந் தோயே.

தெளிவுரை

நெஞ்சே! நம் தலைவி, மாற்றுக்குறையாத பொன்னால் இயற்றப்பெற்ற பாவை. அவள் வானில் நிலவும் இளவெயிலைத் தன்மேல் போர்த்துக்கொண்டு ஒளி திகழ நிற்பதைப் போன்ற பேரழகு வாய்ந்தவள்; திரண்ட கொத்தான கூந்தலைக் கொண்டவள்; நாணற்கிழங்கு மணலிடத்து ஈன்ற முளையை ஒத்த முள் போன்ற கூர்மையான பற்களையும், சிவந்த வாயினையும் பெற்றவள்; யாழின் இசை நயம் அறிந்தவள்; அதன் நரம்புகளைத் தடவி எழுப்பும் செவ்வழிப்பண்ணின் இசையைக் கேட்டாற்போன்ற மிகவும் இனிய சொற்களைப் பேசுபவள்; தெய்வத்தன்மை பொருந்தியவள்; அத்தகைய பெண்ணை விரும்பி, பெரிய ஆண்யானைக் கூட்டம் விழுந்து கலக்கிய நீரைப் போல நீ கலக்கமுற்றாய்; அதுபொழுது, இவள் பெறுதற்கு அரியவள் என்று எண்ணாது, நாள்தோறும் துன்பம் தரும் கடத்தற்கரிய வழியைக் கடந்து வந்து என்னைத் துன்பத்துள் ஆழ்த்திவிட்டாய்.

அரியவளாய அவளை விடாது எண்ணி, நீங்காத துன்பத்தை எனக்குத் தந்ததும் நீதான்.

குட்டுவன், ஒளி வீசும் படைக்கலன்களையும், கடலைப் போன்ற சேனையினையும் கொண்டவன்; தேன் சிந்தும் மாலையை அணிந்தவன்; மிக்க வீரத்துடன் போர் புரியும் வன்மையைப் பெற்றவன்; மின்னலால் வானைப் பிளந்து வலிமை கொண்டு ஆர்த்தெழும் மேகத்தைப் போன்று, போர் எனில் விருப்பங்கொண்டு பகைத்தெழும் தன்மை வாய்ந்தவன்; தன்னோடு போர் செய்யும் பகைவரை இந்நிலவுலகில் காணாதவன்; பல மொழிகள் பேசும் வீரர்கள் கொண்ட பாசறையைத் தான் விரும்பும் இடங்களில் அமைத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவன்; பொங்கிச் சினந்தெழுந்து போர் ஆற்றும் வலிமையுடன் ஓங்கியெழும் அலைகள் கொண்ட பெருங்கடலை முற்றுகையிட்டு, அதன் நடுவே வாழ்ந்த பகைவர்க்கு அரணாய் அமைந்திருந்த கடலின் வலிமை கெடச்

செய்த குட்டுவனின் மாண்புற்ற வேல் உன் மார்பில் பாய்ந்து அழுந்திட மிகுந்த உன் செருக்கு அழிந்தொழிந்து போகுக!

கருத்து

'நெஞ்சே! தலைவி பெறுதற்கு அரியவள் என்று கருதாமல், நாள்தோறும் அரிய வழியில் நடந்து வரச்செய்து என்னைத் துன்பப்படுத்திவிட்டாய். அவளை ஓயாமல் நினைந்து எனக்குத் தீராத துன்பத்தைச் சேர்த்துள்ள நீ, குட்டுவன் வேற்படை மார்பிலே தைத்து அழுந்த, உன் மிக்க செருக்கு அழியப்பெறுக' எனத் தலைவன் தன் நெஞ்சிடம் வருந்திக் கூறுகிறான்.

விளக்கம்

"நெஞ்சே! அரிவையை விரும்பி, இவள் பெறுதற்கு அரியவள் என்று கருதாமல், நாள்தோறும் துன்ப மிக்க அரிய வழியைக் கடந்துவரச் செய்து என்னைத் துன்பப்படுத்திவிட்டாய். அரியவளாகிய இவளை ஓயாமல் நினைத்துத் தீராத துன்பத்தை எனக்குச் சேர்த்துள்ள நீ, குட்டுவன் வேற்படை மார்பிலே தைத்து அழுந்த, உனது மிக்க செருக்கு அழியப்பெறுக" என்று தலைவன் தன் நெஞ்சொடு வருந்திப் பேசுகிறான்.

சொற்பொருள்

1. தாஇல் - குற்றம் இல்லாத; தைஇய - இயற்றப்பெற்ற.
2. கொண்டு - தன்மேற்கொண்டு.
3. கவின் - அழகு; தொகுகுரல் - திரண்ட கொத்து; ஐம்பால் - கூந்தல்.
4. கிளை அரில் - கிளைத்த தூறு; மணற்கு - மணலிடத்தில்.
5. துவர் வாய் - செவ்வாய்.
6. நயவன் - யாழின் இசை நயம் தெரிந்து பாடுபவன்; தைவரும் - தடவும்; செவ்வழி - செவ்வழி என்னும் பண்.
7. இசை ஓர்த்து அன்ன - இசையைக் கேட்டதுபோலும்; கிளவி - பேச்சு.
8. அணங்கு சால் - தெய்வத்தன்மை பொருந்திய; நசைஇ - விரும்பி.
9. இனம் - கூட்டம்; படி நீர் - நீராடப் படிகின்ற நீர்.
10. பெறல் அருங்குரையள் - பெறுதற்கு அரியவள்; என்னாய் - என்று எண்ணாது; வைகலும் - நாள்தோறும்.
11. அருஞ்சுரம் - அரிய காடு; நீந்தி - கடந்து.
12. மின்னு - மின்னல்; வசிபு - பிளந்து.
13. உரவுக்கார் - வலிமை வாய்ந்த மேகம்; மறலி - பகைத்தெழுந்து.

14. விரவு மொழி - பல மொழியும் கலந்த; கட்டூர் - பாசறை; கொளீஇ - அமைத்துக்கொண்டு.
15. படை நிலா இலங்கும் - படைக்கலன்களின் ஒளி வீசும்.
16. மட்டு - தேன்; அவிழ் - சிந்தும்; தெரியல் - மாலை.
17. விலங்கு சினம் - பொங்குகின்ற சினம்.
18. செரு - போர்; முன்பு - வலிமை; முந்நீர் - கடல்; முற்றி - வளைத்து, முற்றுகையிட்டு.
19. பௌவம் - கடல்.
20. எஃகம் - வேல்; நிறம் - மார்பு.
21. மதன் - செருக்கு.
22. எளியள் அல்லோள் - கிடைத்தற்கு எளிமை அல்லாதவள் (அரியவள்).
23. விளியா - நீங்காத; எவ்வம் - துன்பம்.

தலைவன் கூற்று

அகநானூறு 342 **மதுரைக் கணக்காயனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்ட தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைக் குறித்த இடத்தில் அடையப்பெறாது தவறிய தலைவன், தலைவியின் அருமை குறித்துத் தன் நெஞ்சிற்குக் கூறியது.

ஒறுப்ப ஓவலை; நிறுப்ப நில்லலை;
புணர்ந்தோர் போலப் போற்றுமதி! நினக்குயான்
கிளைஞன் அல்லெனோ? நெஞ்சே!– தெனாஅது
வெல்போர்க் கவுரியர் நல்நாட்டு உள்ளதை
மண்கொள் புற்றத்து அருப்புஉழை திறப்பின்
ஆகொள் மூதூர்க் கள்வர் பெருமகன்,
ஏவல் இளையர் தலைவன், மேவார்
அருங்குறும்பு எறிந்த ஆற்றலொடு, பருந்துபடப்

பல்செருக் கடந்த செல்உறழ் தடக்கை,
கெடாஅ நல்இசைத் தென்னன், தொடாஅ
நீர்இழி மருங்கில் கல்அளைக் கரந்தஅவ்
வரையர மகளிரின் அரியள்,
அவ்வரி அல்குல் அணையாக் காலே!

தெளிவுரை

நெஞ்சே! மண்புற்றுகள் கொண்ட காட்டரணின் இடத்தை உடைத்து உள் நுழைய வழி திறந்தவன்; அவ்வரணுள் இருக்கும் பகைவர் பசுக்களைக் கவர்ந்து வரும் பழைய ஊரினராய கள்வர் களுக்கு முதல்வன்; ஏவல் இளைஞர் பலருக்கும் தலைவன்; பகைவரின் அரிய அரண்களை அழித்த வலிமையாளன்; பருந்துகள் சூழும்படியாகப் போர்கள் பலவற்றை வஞ்சியாது எதிர் நின்று பகைவரை வென்றவன்; இடியினை ஒத்த பகைவரை அழிக்கின்ற கைகளைக் கொண்ட பெருமை பெற்றவன்; என்றும் கெடாத நல்ல புகழினைப் பெற்றவன்; இத்தகைய பல சிறப்பு களுக்கு உரியவன், பாண்டியன்.

தென் திசையில் உள்ள பகை வெல்லும் அப்பாண்டியனின் நாட்டில் அருவி வீழ்வதும், இயற்கையாய் அமைந்த பொய்கை யினைக் கொண்டதுமான மலையில் உள்ள குகையில் மறைந் திருக்கும் வரையர மகளிர்போன்றவளான நம் தலைவி நம்மால் அடைதற்கு அரியவள்; அழகிய வரி நிறைந்த அல்குலைக் கொண்ட அவள் நம்மைக் கூடாதபோது காண்பதற்கும் அரியவள் ஆவாள்.

'அவளை நினையாதே' என்று வன்சொற்களால் உன்னை இடித்துரைத்தாலும் அவளைப்பற்றி நினைப்பதைக் கைவிட மறுக்கின்றாய்; இன்சொல் கூறித் தடுத்தாலும் அவளிடம் போகாமல் இருக்கவும் மறுக்கின்றாய்; நான் உன்னோடு உறவு கொண்டவன் அல்லனோ? நான் கூறுவதனைக் கேட்டு உள்ளம் ஒன்றுபட்ட நண்பரைப் போல நட.

கருத்து

"நெஞ்சே! தலைவி அரியவள்; அவள் நம்மைப்பற்றி நினையாதபோது நீ அவளைப்பற்றி நினைக்காதே என்று நான் வன்சொல் கூறிக்

கண்டித்தாலும் நான் சொல்வதை நீ கேட்பதில்லை; இன்சொல் கூறி நிறுத்தினாலும் நிற்பதில்லை. உனக்கு நான் உறவினன் அல்லனோ? ஆதலால், உள்ளம் ஒன்றுபட்ட நண்பரைப் போல நான் சொல்கின்றபடி நடந்துகொள்" என்று தலைவன் தன் நெஞ்சினைக் கெஞ்சிக் கேட்கிறான்.

சொற்பொருள்

1. ஒறுப்ப - இடித்துக் கூற; ஓவலை - ஒழியாய்; நிறுப்ப - தடுத்து நிறுத்த; நில்லலை - நில்லாய்.
2. புணர்ந்தோர் - உள்ளம் ஒன்றுபட்ட நண்பர்; போற்று - நான் சொல்லுகின்றபடி நட.
3. கிளைஞன் - உறவினன்; தெனாஅது - தெற்கில்.
4. கவுரியர் - பாண்டியர்.
5. மண்கொள் புற்றத்து - மண்ணினாலாகிய புற்றினை; அருப்பு - காட்டரண்.
6. ஆ - பசு; கொள் - கவர்ந்து வரும்.
7. ஏவல் இளையர் - ஏவுதலைச் செய்யும் வீரர்; மேவார் - பகைவர்.
8. குறும்பு - அரண்; எறிந்த - அழித்த; பருந்துபட - பருந்துகள் வந்து கூட.
9. செரு - போர்; கடந்த - வென்ற; செல்உறழ் - இடியினை ஒத்த.
10. இசை - புகழ்; தென்னன் - பாண்டியன்; தொடாஅ - தோண்டப்படாத, இயற்கையாய் அமைந்த.
11. நீர்இழி - அருவி; மருங்கு - பொய்கை; அளை - குகை.
12. வரைஅர மகளிர் - மலையில் வாழும் தெய்வப் பெண்கள்.
13. அவ்வரி - அழகிய வரி; அணையாக்கால் - அணையாதபோது.

தலைவன் கூற்று

அகநானூறு 338 **மதுரைக் கணக்காயனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

அல்லகுறிப்பட்ட தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

களவொழுக்கத்தில் இரவுக்குறியின்கண் தலைவன் வரும் முன்பே, பறவை எழுதல் போன்ற இயற்கைக்குறியினைத் தலைவன் செய்த குறியாய்க் கருதி அங்கு வந்த தலைவியும் தோழியும் ஏமாற்றம் அடைந்து வீடு திரும்பினர்; பின்னர் வந்த தலைவன் குறி செய்தும் அவர் வராமையின் ஏமாற்றம் அடைந்து, தன் நெஞ்சினை நோக்கி நொந்து கூறியது.

குன்றுஓங்கு வைப்பின் நாடுமீக் கூறும்
மறம்கெழு தானை அரச ருள்ளும்,
அறம்கடைப் பிடித்த செங்கோ லுடன்,அமர்
மறம்சாய்த்து எழுந்த வலன்உயர் திணிதோள்
பலர்புகழ் திருவின், பசும்பூண் பாண்டியன்
அணங்குடை உயர்நிலைப் பொருப்பின் கவாஅன்,
சினைஒள் காந்தள் நாறும் நறுநுதல்,
துணைஈர் ஒதி மாஅ யோள்வயின்,
நுண்கோல் அவிர்தொடி வண்புறம் சுற்ற
முயங்கல் இயையாது ஆயினும், என்றும்,
வயவுஉறு நெஞ்சத்து உயவுத் துணையாக,
ஒன்னார் தேஎம் பாழ்பட நூறும்
துன்அருந் துப்பின் வென்வேற் பொறையன்
அகல்இருங் கானத்துக் கொல்லி போல,
தவாஅ லியரோ, நட்பே! அவள்வயின்
அறாஅ லியரோ, தூதே பொறாஅர்
விண்பெறக் கழித்த திண்பிடி ஒள்வாள்,
புனிற்றுஆன் தரவின், இளையர் பெருமகன்,
தொகுபோர்ச் சோழன், பொருள்மலி பாக்கத்து,
வழங்கல் ஆனாப் பெருந்துறை
முழங்குஇரு முந்நீர்த் திரையினும் பலவே!

தெளிவுரை

நெஞ்சமே! மலைகள் மிக்கு விளங்குகின்ற இவ்வுலகத்தில் உலகம் மேலாகப் புகழ்ந்து கூறும் வீரம் செறிந்த படையினைக் கொண்ட அரசர் சிலர் உள்ளனர். அவருள் அறம் வழுவாது செங்கோல் செலுத்துகிறவன் பசும்பூண் பாண்டியன் ஒருவன். அவன், பகைவரது போர் வலிமையைக் கெடுத்த சிறப்பினையும் கொண்டவன்.

தெய்வம் வாழும் அவனது பொதிய மலைச்சாரலில் தழைத்து வளர்ந்த சுாந்தள் செடியில் ஒளி பொருந்திய மலர் பூத்திருக்கும். அதுபோல மணங்கமழும் நெற்றியினையும், அளவொத்து நீண்ட நெய்ப்பினைக் கொண்ட கூந்தலினையும், மாமை நிறத்தினையும் கொண்டவள், நம் தலைவி. செறிந்த அவள் வளையல்கள் நம் வளமான முதுகினைச் சுற்றிக்கொள்ள அவள் தரும் முயக்கம் நமக்குக் கிட்டாது போயிற்று.

அம்முயக்கம் கிட்டாது போயினும், பகைவர் நாடு பாழாகுமாறு அழிக்கவல்ல வலிமையினையும், வெற்றி தரும் வேலினையும் கொண்ட சேர மன்னனது அகன்ற காட்டினில் உள்ள கொல்லிமலைபோல, எஞ்ஞான்றும் வேட்கையுற்ற நம் உள்ளத்துக்கு உசாத்துணையாய் அவளிடம் நாம் கொண்டுள்ள நட்புக் காலங்காலமாய் நின்று நிலைக்கட்டும்.

பகைவர் விண்ணுலகுடையுமாறு உறையினின்று உருவிய, திண்ணிய பிடியினைக் கொண்ட ஒளி பொருந்திய வாளினைக் கொண்டவர், வெட்சி வீரர். அவர்கள் பகைவர் நாட்டிற்குச் சென்று அண்மையில் ஈன்ற பசுக்களைக் கவர்ந்து வருவர். அத்தகைய வெட்சி வீரருக்குத் தலைவன், சோழ மன்னன். போர்கள் பலவற்றில் வெற்றி கொள்ளும் அச்சோழனின் பெரிய கடல்துறையில் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள் மிகுந்து கிடக்கும். அத்துறையுள் புகுந்த கடல்அலைகள் மீள முடியாது முழங்கிக்கொண்டிருக்கும். அக்கடலலைகளைப் போல நம் தலைவியிடத்தில் செல்லும் நம் தூதுகளும் பலகாலும் பலவாய் அமையட்டும்.

கருத்து

"நெஞ்சே! தலைவியோடு புணர்ச்சியாகிய தழுவுதல் கொள்ள இயலா தாயினும் எப்பொழுதும் ஆசையுற்ற நெஞ்சத்திற்குப் பேச்சுத்துணையாக அமைந்த நட்பேனும் கெடாது நிலைக்கட்டும். கடல் அலைகளினும் பலவாக அவளிடம் நாம் விடும் தூது அமையட்டும்" என்று தலைவன் தன் காதல் தன்மை (அன்புடைமை) புலப்படத் தன் நெஞ்சிற்குக் கூறினான்.

குறிப்பு

அவளிடத்தில் அனுப்புகின்ற தூது தொடர்ந்து சென்றுகொண் டிருக்கட்டும். (பலமுறை தூது அனுப்பினால் அவளை அடைதல் கூடும் என்பது குறிப்பு.)

சொற்பொருள்

1. வைப்பில் - உலகத்தில்; மீக்கூறும் - மேன்மையாய்ச் சொல்லும்.
3-4. அமர் மறம் சாய்த்து - பகைவரது போர் செய்யும் வன்மையைக் கெடுத்து; வலன் உயர் திணிதோள் - வெற்றி மிக்க திண்ணிய தோள்.
6. பொருப்பு - மலை; கவாஅன் - பக்க மலை.
7. சினை ஒள் - கிளைத்த ஒளி பொருந்திய.
8. துணைஈர்ஓதி - அளவொத்த குளிர்ச்சி பொருந்திய கூந்தல்.
9. நுண்கோல் அவிர்தொடி - நுண்ணிதாய்த் திரண்டு விளங்கும் வளையல்; வண்புறம் சுற்றல் - வளமை பொருந்திய முதுகினைச் சுற்றிக்கொள்ளுதல்.
10. முயங்கல் - தழுவுதல்.
11. வயவுஉறு நெஞ்சத்து - வேட்கையுறும் நெஞ்சிற்கு.
12. ஒன்னார் - பகைவர்; நூறும் - அழிக்கும்.
13. துன்அருந் துப்பின் - பகைவரால் கிட்டுதற்கரிய வலிமையுடன்.
15. தவாஅலியரோ - கெடாது நிலை பெறுக.
16. அறாஅலியரோ - (தூது) ஒழியாது செல்லட்டும்; பொறாஅர் - பகைவர்.
17. விண் பெற - விண்ணுலகை எய்துமாறு; கழித்த - உருவிய; திண்பிடி - திண்ணிய பிடியினைக் கொண்ட.
18. புனிற்றுஆன் தரவின் - அண்மையில் ஈன்ற பசுக்களைக் கவர்ந்து வரும் வெற்றி வீரர்களுக்கு.

19. பொருள் மலி - பொருள் நிறைந்த.
20. வழங்கல் ஆனா பெருந்துறை (திரை) - துறையுள் புகுந்து மீள முடியாத அலைகள்.
21. முந்நீர் - கடல்; திரையினும் பலவே - அலைகளினும் பலவாய் இருக் கட்டும்.

தோழி கூற்று

கலித்தொகை 50 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

புணர்ந்த பின் அவன் வயின் வணங்கற்கண் தோழி கூறியது. அது தோழியிற்கூட்டம் நிகழ்ந்த பின் முற்காலத்துப் பணிந்து பின்நின்றோனைத் தோழி தானே பணிந்துதொழுகுவதாம்.

கூற்று விளக்கம்

தோழியின் துணைகொண்டு, தலைவன் தலைவியைச் சந்தித்துக் கூடினான். தோழி அவனைப் பணிந்து கூறுகின்றாள். அதாவது தோழி முன்பு தலைவியின் நட்பைக் கூட்டுவிக்கவேண்டித் தன்னைப் பணிந்து வேண்டிக் கொண்ட தலைவனை, இப்பொழுது தானே வணங்க வேண்டிய கடமை வந்துற்றது ஆதலின் வணங்குகின்றாள் என்பதாம்.

வாங்குகோல் நெல்லொடு வாங்கி, வருவைகல்
மூங்கில் மிசைந்த முழுந்தாள் இரும்பிடி
தூங்குஇலை வாழை நளிபுக்கு, ஞாங்கர்
வருடை மட மறி ஊர்வு இடைத் துஞ்சும்
5. இருள்தூங்கு சோலை, இலங்குநீர், வெற்ப!
அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த
உரவுவில் மேல்அசைத்த கையை, ஓராங்கு
நிரைவளை முன்கைஎன் தோழியை நோக்கி
படி கிளி பாயும் பசுங் குரல்ஏனல்
10. கடிதல் மறப்பித்தாய் ஆயின், இனிநீ
நெடிதுஉள்ளல் ஒம்புதல் வேண்டும்; இவளே

பல்கோள் பலவின் பயிர்ப்புஉறு தீம்கனி
அல்குஅறைக் கொண்டுஊண் அமலைச் சிறுகுடி
நல்கூர்ந்தார் செல்வ மகள்.
15. நீயே, வளியின் இகல்மிகும் தேரும், களிறும்
தளியின் சிறந்தனை வந்த புலவர்க்கு
அளியொடு கைதூ வலை

அதனால

கடுமா கடவுறூஉம் கோல்போல், எனைத்தும்
20 கொடுமைஇலை யாவது அறிந்தும், அடுப்பல்
வழைவளர் சாரல் வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போல, பாராட்டி
உழையின் பிரியின், பிரியும்
இழைஅணி அல்குல்என் தோழியது கவினே.

தெளிவுரை

தாமாகவே முற்றி வளைந்து நிற்கும் மூங்கிலை நெல்லுடன் வளைத்துத் தின்றது முழந்தாளையுடைய கரிய பெண்யானை; நெருங்கிய இலைகளுடன் வாழைமரங்கள் செறிந்து வளர்ந் திருந்த தோட்டத்துள் புகுந்து சென்றது; அங்கே வருடைமான் குட்டிகள் திரிகின்ற இடத்தில், ஞாயிறு தோன்றும் வைகறைப் பொழுதில் துயில் கொள்ளும். இத்தகைய இருள் சூழ்ந்த சோலைகளையும் ஒளிவீசும் அருவிகளையும் கொண்ட மலை நாட்டுத் தலைவனே!

பாம்பின் படத்திலே தோன்றும் பொறி போன்ற புள்ளி களையும், பகைவரை வருத்தும் ஆற்றலினையும் கொண்ட வலிமைமிக்க வில்லின்மேல் வைத்த கையை உடையவனாய் வந்து நின்றாய்; ஒன்று போன்ற வளையல்களை வரிசையாக அணிந்த முன்கைகளையுடைய என் தலைவியை அவட்குக் காமக்குறிப்பு உண்டாகும்வண்ணம் நோக்கினாய்; பசுமை நிறைந்த கதிர்களைக் கொண்ட தினைப்புனத்தில் கதிர்களில் படிந்து கொத்தும் கிளிகளை ஓட்டும் பணியை மறக்கச் செய்து அவளை உன் வசமாக்கி விட்டாய். இனி நீ இவளை இடை விடாது நெடிது நினைத்தலும் பாதுகாத்தலும் வேண்டும்.

பல குலைகளையுடைய பலா மரத்தின் பிசினைக் கொண்ட இடத்தே, இனிய பழங்கள் பாறைகளிடத்தே வீழ்ந்து கிடக்கும். அவற்றை எடுத்து உண்ணும் உணவாய்க் கொள்வர் கானக் குறவர். அவர்தம் சிறிய குடியில் நெடுங்காலம் பிள்ளைப் பேறின்றிப் பின்னர்ப் பிறந்த செல்வ மகள் இவள். ஆதலின் இவள் நின்னைப் பிரிதல் ஆற்றாள்.

நீயோ, காற்றிலும் விரைந்து செல்லும் யானையையும் கொண்டவன். உன்னை நாடிவரும் புலவர்க்கு மேகம் பொழிதலைப்போல் கை ஓயாமல் பரிசில் வழங்கிப் புகழ் பெற்றவன். ஆகையால், சுரபுன்னை வளரும் மலைச்சாரலில் வருடைமான் கன்றினை வளர்ப்பவர்போல நீ இவளைப் பிரியாது அருகிருந்து பேண வேண்டும்.

நீ இவளைச் சிறிது நேரம் பிரிந்தாலும், மேகலையணிந்த அல்குலையுடைய என் தோழியாகிய தலைவியின் அழகு அவளைவிட்டு நீங்கும். குதிரையினை மேலும் விரைந்து செல்லத் தூண்டுத்தும் தாற்றுக்கோல் போன்ற இயல்பினன் அல்லன் நீ என்பதை அறிந்துள்ளேன். அதனால்தான் என் தோழியாகிய தலைவியை உன்னிடம் ஒப்படைக்கின்றேன். (அவளைப் பேணிப் பாராட்டிக் காக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன் எனத் தோழி தலைவனுக்குக் கூறினாள்.)

கருத்து

இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பின்பு தலைவியைக் கண்டு மகிழ எண்ணிய தலைவன் உயிர்த்தோழியின் உதவியை நாடித் தலைவியைக் குறியிடத்துச் சேர்க்குமாறு தோழியைப் பணிந்து வேண்டினான். பாங்கியிற்கூட்டம் நிகழ்ந்தபின், முன் தன்னைப் பணிந்த தலைவனைத் தோழி தலைவிக்காகப் பணிந்து, தலைவியின் தன்மை உணர்த்தித் தலைவிக்கு எத்தகைய துன்பமும் நேராதவாறு பாதுகாத்தல் தலைவனின் கடமை என்பதை உணர்த்துகிறாள்.

உள்ளுறை உவமம்

மூங்கிலை உண்ட பெண்யானை தலைவனை நுகர்ந்த தலைவியாகவும், அந்த யானை வாழைத்தோட்டம் புகுந்து பழங்களை உண்டமை தலைவன் தலைவியை மணந்தபின் அவள்

இல்லத்தில் அவளை நுகரப்போகும் தன்மையாகவும், புலி முதலியன இன்றி வருடைமான் குட்டிகள் திரியுமிடத்தில் பெண்யானை துயிலுதல் அலர் தூற்றுவாரின்றித் தலைவன் சுற்றத்தினருடன் தலைவி இல்லறம் நடத்துதலாகவும் உள்ளுறை உவமம் கொள்க.

சொற்பொருள்

1. வாங்கு - வளைந்த; வாங்கி - இழுத்து; வருவைகல் - ஞாயிறு தோன்றும் வைகறைப் பொழுது.
2. மிசைந்த - உண்ட, தின்ற; இரும் - கரிய.
3. தூங்கு - நெருங்கிய; நளி - செறிவு; ஞாங்கர் - அங்கே.
4. வருடை - ஒருவகை மான்; மறி - குட்டி; ஊர்வு - திரிகின்ற; துஞ்சும் - தூங்கும், துயில் கொள்ளும்.
5. இருள் தூங்கு - இருள் சூழ்ந்த; இலங்கு நீர் - ஒளி வீசும் அருவி; வெற்பன் - மலைநாட்டுத் தலைவன்.
6. அரவு - பாம்பு; அணங்கும் - வருத்தும்; புணர்ந்த - ஒன்று சேர்ந்த.
7. உரவு வில் - வலிமைமிக்க வில்; அசைத்த - வைத்த, ஓராங்கு - ஒன்று போன்ற.
8. நிரை - வரிசை.
9. படி - படியும்; பாயும் - தாவும்; பசுங்குரல் - பசுமை நிறைந்த கதிர்; ஏனல் - தினை.
10. கடிதல் - ஓட்டுதல், விரட்டுதல்.
11. நெடிது உள்ளல் - நீண்டு நினைத்தல், எப்பொழுதும் நினைத்திருத்தல்; ஓம்புதல் - பாதுகாத்தல்.
12. பல்கோள் - பல குலைகளையுடைய; பலவு - பலா மரம்; பயிர்ப்பு - பிசின்; தீம் - இனிய.
13. அல்குஅறை - பாறை; ஊன் - உணவு; அமறு - சோறு.
14. நல்கூர்ந்தார் - வறுமையுற்றவர், இல்லாதவர்.
15. வளி - காற்று; இகல் - வலிமை, வேகம்; களிறு - ஆண்யானை.
16. தளி - மேகம்.
17. அளி - கொடை; கைதூவலை - கை ஓயமாட்டாய்.
19. கடுமா - விரைந்து செல்லும் குதிரை; கடவுதல் - செலுத்துதல்; கோல் - தாற்றுக் கோல்.
20. அடுப்பல் - கொடுத்தல், சேர்த்தல்.
21. வழை - சுரபுன்னை மரம்.
22. குழவி - குழந்தை.
23. பிரியும் - வேறுபடும்.
24. இழை - அணிகலன்; அணி - அணிந்த; கவின் - அழகு.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல்களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
9 788183 797672

Vol-2
ISBN: 978-81-8379-769-6
9 788183 797696